# உரை விளக்கு



தமிழண்ணல்

# உரை
# விளக்கு



# உரை விளக்கு

தமிழண்ணல்

விழிகள்
பதிப்பகம்
8/எம் 139, 7ஆம் குறுக்குத் தெரு
திருவள்ளுவர் நகர்
திருவான்மியூர் விரிவு, சென்னை 41

<u>நூல் விவரக் குறிப்பு</u>

உரை விளக்கு

ஆசிரியர்: தமிழண்ணல்

முதற்பதிப்பு: 2011

பக்கங்கள்: 184

அச்சிட்டோர்:
பிரிண்டெக் இந்தியா, சென்னை - 5

வெளியீடு:
விழிகள் பதிப்பகம், சென்னை - 41

**விலை: ரூ. 120**

# முன்னுரை

விளக்கு பிற பொருள்களைப் புலப்படுத்த உதவுவது, அவ் விளக்கு வகைகளிலும் எண்ணிறந்தன உள; எத்தனையோ அழகழகானவை உள.

விளக்கு பிற பொருள்களையெல்லாம் விளக்கி நிற்பதோடு, தன்னையும் விளக்கி நிற்பது.

இருளினிடையே எந்த இடத்தில் விளக்கு இருக்கிறது என எவ்வாறு தெரிந்துகொள்கிறோம்? அவ்விளக்கின் ஒளிவீசும் அழகை எவ்விதம் கண்டு மகிழ்கிறோம்? அவ்விளக்கே அவற்றையும் உணர்த்துகிறது.

தொன்றுதொட்டு இலக்கண இலக்கியத் தோத்திர சாத்திர நூல்களுக்கு எழுதப்பட்டு வந்துள்ள உரைகள் அவை எவ்வெந் நூற்பொருளைப் புலப்படுத்த எழுந்தனவோ அவற்றை நன்கு விளக்கி நிற்கின்றன. அவை எவ்வாறு பொருள் விளக்கம் செய்கின்றன என்ற உண்மையைத்தான் நாம் இதுகாறும் கண்டு வந்தோம். மூலநூலை விளக்கும் முறையைப் போற்றிவந்தோம்.

இப்போது அவ்வுரைகள் தாமும் தம்மளவில் சிறந்த வெளியீட்டுத் திறமமைந்தவைகளாக, திறனாயும் வன்மை உடையவைகளாக, ஆராய்ச்சி, நெறி முறையோடு கூடியவைகளாக விளங்கி வருவதை வரன்முறையாக அறிதல் வேண்டும். விளக்கால் பிறிதொன்றை அறிந்துகொள்ளும் நாம், அவ்விளக்கின் அழகையும் தன்மையையும் ஆற்றலையும் விளங்கிக் கொள்ளுதலும் தக்கதே அன்றோ?

இவ்வுரையாசிரியர்களிடம் எல்லோர்க்கும் பொதுவான உரை மரபுகளும் அவரவர்க்கே உரியன எனச் சார்த்தி உணரத் தக்க தனிச் சிறப்புக்களும் உள. இன்றைய நிலையில், தொன்றுதொட்டு வளர்ந்து வந்துள்ள இலக்கண நூல்களை எழுதிய ஆசிரியர்கள் சிறந்த ஆராய்ச்சியறிஞர்களாகத் தென்படுகின்றனர். அவர்களுக்கு அடுத்து

அந் நூல்களுக்கும் பிற இலக்கியங்கட்கும் உரை எழுதியவர்கள் நல்ல, எடுத்துக்காட்டான ஆராய்ச்சியாளர்களாகக் காணப்படுகின்றனர்.

தமிழ் உரையின் தோற்றமும் வளர்ச்சியும் பலராலும் ஆராய்ந்து உரைக்கப்பட்டுள்ளன. தமிழ் இலக்கிய வரலாற்றில் "உரை நூற் காலம்" என்றே ஒன்று குறிக்கப்படுகிறது. கி.பி. எட்டாம் நூற்றாண்டு தொடங்கிப் பதினைந்தாம் நூற்றாண்டு வரையிலான இடைக்காலத்தில் பழந்தமிழ் நூல்களுக்கெல்லாம் உரையெழுதப்பட்டு வந்திருக்கிறது. நல்லவேளையாக இவ்வுரையாசிரியர்கள் மேனாட்டார் வருகைக்கு முன்பே தோன்றி, வாழ்ந்து உரை வரைந்து போயினர். இன்றேல், 'தமிழர் கண்ட ஆராய்ச்சி நெறிமுறைகள்' என்றே ஒன்றைச் சொல்ல வாய்ப்பில்லாமல் போயிருக்கும். இதுவும் மேனாட்டார் தாக்கத்தின் விளைவே என விவாதிக்கப் பலர் முன்வந்து இருப்பர். எதிர் மறுத்துக் கூறுவார், குறுகிய மனப்பான்மையினர் எனப் புறக்கணிக்கப்பட்டிருப்பர்.

நற்காலமாகத் தமிழ் 'ஆராய்ச்சியாளர்கள்' என முன்னைய உரையாசிரியர்களை இனங்காட்ட, ஐயத்திற்கிடமில்லாத அடிப்படை இருக்கிறது.

**உரையாசிரியர்கள் ஆராய்ச்சியாளர்களே**

உரையாசிரியர்கள் சில ஆய்வு நெறிமுறைகளை, இங்குள்ள மரபின்படி வரையறுத்தும் விளக்கியும் அவற்றை அணுப்பிசகாமல் பின்பற்றியும் வந்துள்ளனர். மேனாட்டார் எழுதி வைத்துள்ள ஆராய்ச்சி நெறிமுறை (Research Methodoloy) நூல்களைக் கற்றபிறகு, இவ்வுரை யாசிரியர்களை அணுகுங்காலை, இவர்கள் பின்பற்றிவந்துள்ள முறைகள் தமிழ் மரபுக்கு ஒத்தவையாகவும் அம் மேலை நெறிகளுக்கு இணையானவையாகவும் சீர்மை மிக்கவையாகவும் காணப்பட்டுக் கற்பாரை வியப்பிலாழ்த்தின. அவர்கள் மேலை நாட்டில் இத்தகைய முறைமைகள் முழுமையாக வளர்ச்சி பெறுமுன்பே தாமாகச் சில நெறி முறைகளை இவண் வகுத்துக்கொண்டு தம் உரைகளை எழுதினர். அவை, இன்று ஒப்பீட்டு முறையில் நோக்குங்கால் அம்மேலை நெறிகட்குப் பெரிதும் இணையானவையாயும் ஏற்றம் உடையவையாயும் தோற்றின. எனவே நம் உரையாசிரியர்கள் பலவகையிலும் சிறந்த ஆராய்ச்சி அறிஞர்களாகவும் (Researchers), ஆராய்ச்சி வழிகாட்டி களாகவும் (Research Guides) காட்சியளித்தனர். இக் 'கருதுகோளே' இந் நூலின் தோற்றத்திற்கு மூலகாரணமாகும்.

**ஆய்வு வரையறை**

இங்கு, கீழ்க்கண்ட உரைகளை மட்டும் எடுத்துக் கொண்டு உரைத்திறன் ஆய்வு செய்யப்படுகிறது. அந்நூல்களுள்ளும் தேவை யான பகுதிகள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட்டு முன் மாதிரியாய்வாக (Sample Survey) மேற்கொள்ளப்படுகிறது. முழு உண்மையை ஓரளவு கோடிட்டுக் காட்ட மட்டுமே இஃது உதவும். இங்குக் கூறப்படுவன பல 'நம் உரைகளின் திறனை இங்ஙனமெல்லாம் மதிப்பிடலாம்' எனக் காட்டும் கருத்துரைகளேயாம். இவற்றை நன்கு பற்றிக்கொண்டு, தனித்தனி உரைகளை மேன்மேலும் ஆராய்ந்து வந்தால், இறுதியில் தமிழர் கண்ட, தமிழ் மரபுவழி வந்த ஓர் ஆராய்ச்சி நெறிமுறை பற்றி உலகிற்கு உணர்த்தலாம்.

**ஆய்வுக்குட்படும் உரை நூல்கள்**

இந் நூலில் கீழ்க்கண்ட உரைகளிலிருந்து தேவையான பகுதிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன:

1) இறையனார் அகப்பொருள் உரை, 2) இளம்பூரணரின் தொல்காப்பிய உரை, 3) பேராசிரியரின் தொல்காப்பியப் பொருளதிகார உரை, 4) நச்சினார்க்கினியரின் தொல்காப்பிய உரை (இலக்கணம்) பத்துப்பாட்டு உரை (இலக்கியம்), கலித்தொகை உரை (இலக்கியம்), 5) சேனாவரையரின் தொல்காப்பியச் சொல்லதிகார உரை, 6) புறநானூற்றுப் பழைய உரை, 7) பரிமேலழகரின் திருக்குறள் உரை, 8) அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகார உரை.

**நூலின் நோக்கமும் கருத்து அமைப்பும்**

மேலை நாட்டாரின் ஆராய்ச்சி நெறிமுறைகளை முதன்மையாக மனத்தில் வைத்துக் கொண்டு, உரையாசிரியர்களின் உரை மரபுத் திறன்களை மதிப்பிடும் போக்கு இந்நூலிற் காணப்படும். இன்றைய மனநிலையில் நம் உரையாசிரியர்களும் சிறந்த ஆராய்ச்சியறிஞர் களாவர் என்பதை நிறுவ இம்முறை தேவைப்படுவதாயிற்று.

**உ.வே. சாமிநாதையரே முன்னோடியாவார்**

உ.வே. சாமிநாதையரவர்கள் பழைய உரையாசிரியர்களின் உரை மரபுகளைத் தமிழ் நூல் முறைப்படி ஆராய்ந்து பல குறிப்புக்களை நல்கியுள்ளார். அவை உரையாசிரியர்கள் மூலநூலின் பொருளை உலகிற்கு உணர்த்தக் கையாண்ட பற்பல புலப்பாட்டு உத்திகளில் அழுத்தம் வைத்து, அவற்றை விளக்குகின்றன.

தாம் பழைய உரையுடன் பதிப்பித்த நூல்களின் முன்னுரை களில், அவ்வவ்வுரையின் திறம் பற்றி அவர் நன்கு விளக்க முயல்கின்றார். மூலநூலை விளக்க வந்தனவே உரைகள்; அவ் வுரைகள் தாமும் பல நலன்கள் வாய்த்துச் செறிவும் நெறி முறையும் உடையனவாய்க் காட்சி தருகின்றன. சிறந்த பதிப்பு முன்னோடியான ஐயரவர்கள் அவ்வுரைகளின் திறங்களையும் கண்டு, உணர்ந்து, திறனாய்வு நோக்கில் எடுத்தெழுதிக் காட்ட முற்படுகின்றார்.

1903இல் 'எட்டுத்தொகையுள் மூன்றாவதாகிய **ஐங்குறுநூறும் பழையவுரையும்**' நூலைப் பதிப்பித்தபொழுது, "இந்நூலின் பழைய உரை பதவுரையுமன்று; பொழிப்புரையுமன்று; அகத்திணை நுல்களுக்கேயுரிய உள்ளுறையுவமம் இறைச்சிப் பொருள் முதலியவற்றைப் பெரும்பாலும் நலமுறவிளக்கிச் சிலசில இடத்து மட்டும் திரிசொற்களின் பொருளைப் புலப்படுத்திச் சிறுபான்மை இலக்கணக் குறிப்பையும் சொன்முடிபு பொருள்முடிபுகளையும் பெற்றுள்ளது.... கிடைத்த வரையிற் பாடல்களின் பொருள்களைத் தெரிந்துகொள்வதற்கு இவ்வுரை மிகச் சிறந்த கருவியாகவுள்ளது. இந்நூல் போலவே நடையாலும் பொருள் நுணுக்கத்தாலும் இவ்வுரையும் மிகப் பாராட்டாற்பாலது'' என்று ஐயரவர்கள், முகவுரையில் குறிப்பிடுகிறார்.

1904இல் 'எட்டுத் தொகையுள் நான்காவதாகிய **பதிற்றுப் பத்து மூலமும் பழையவுரையும்**' என்ற நூலைப் பதிப்பித்த பொழுது, ''இந்நூலின் உரை இன்றியமையாத இடங்களிற் பதப் பொருளை இனிது விளக்கி ஆங்காங்குச் சொன்னயம் பொருணயங்களையும் சொன்முடிபு பொருள் முடிபுகளையும் உரிய இடங்களில் இலக்கணக் குறிப்புக்களையும் நன்கு புலப்படுத்திப் பழைய செய்திகள் சிலவற்றைத் தெரிவித்து ஒவ்வொரு செய்யுளின் பின்னும் அமைந்துள்ள துறை, வண்ணம், தூக்கு இவற்றை விளக்க வேண்டிய இடங்களில் விளக்கிச் செய்யுட்களுடைய பெயர்களின் காரணங்களை அங்கங்கே தெரிவித்து மிகச் செவ்விதாக அமைந்து உள்ளது. இவ்வுரை இல்லையாயின், இந்நூற் பொருளை இக் காலத்தில் அறிந்து கொள்ளுதல் மிக அரிது" என்று, அதன் முகவுரையில் அவர் விளக்குவதைக் காண்கிறோம்.

இவ்வாறே பரிபாடல், புறப்பொருள் வெண்பாமாலை ஆகியவற்றைப் பழையவுரைகளுடன் பதிப்பித்த ஞான்று, அவ்வவ் வுரைகளின் திறங்களை முகவுரைகளில் ஐயரவர்கள் மறவாமல் குறிப்பிட்டுச் செல்கின்றார். சிலப்பதிகாரப் பதிப்பில் அரும்பதவுரை,

அடியார்க்கு நல்லார் உரை பற்றியும் சீவகசிந்தாமணிப் பதிப்பிலும் பத்துப்பாட்டுப் பதிப்பிலும் நச்சினார்க்கினியர் உரை பற்றியும் ஐயரவர்கள் குறிப்பிடும் செய்திகள் அவ்வுரைகளின் தன்மைகளை ஒருவாறு விளக்குவன.

**புறநானூற்றின் உரையியல்பு**

புறநானூற்றில் அதன் பழைய உரைபற்றி **'உரையின் இயல்பு'** என்ற தலைப்பில், ஏறத்தாழப் பன்னிரண்டு பக்க அளவில் தமிழ்த்தாத்தா தரும் திறனாய்வுரை இத்தகைய உரை நல ஆய்வுக்கு வழிகாட்டும் தன்மையது எனலாம். அவ்வுரையாசிரியரின் பெயர் முதலிய வரலாறுகள் கிடைக்கவில்லையெனினும், அவர் கல்வி கேள்விகளான் நிறைந்த பேராற்றலுடையவர் என்பதை ஐயரவர்கள் பல்வேறு சான்றுகளால் நிறுவ முயல்கின்றார். "ஆற்றொழுக்காகச் செய்யுளிற் சொற்கிடக்கை அமைங்கவாறே பொருள் கூறிச் செல்லுதலும் எளியநடையில் உரை வரைதலும் பிறரைக் கண்டியாமல் அவர்கள் கூறும் பலதிறப்பட்ட பொருள் வேறுபாடுகளையும் எடுத்துக் கூறுவதும் இன்றியமையாதவற்றை மட்டும் சுருக்கமாக உரைப்பதும் விளங்கும் பொருட்டு வினை முடிவு காட்டுதலும் இவ்வுரையாசிரியருடைய சிறப்பியல்புகள்'' என்று குறிப்பிடும்போது உரையாசிரியர்களின் தனித்திறனை ஆராயும் ஐயரவர்களின் மனப்பாங்கு புலனாகிறது.

மேலும் புறநானூற்றுப் பழையவுரையாசிரியரின் உரை மரபுகளாக 23 கூறுகளை எடுத்துக்காட்டி, அவை ஒவ்வொன்றுக்கும் உரையினுள் இருந்தே தக்க சான்றுகள் காட்டி விளக்குவது, ஐயரவர்களின் நுண்ணிய ஆய்வுத்திறனுக்குச் சான்று பகர்கிறது. உரை மரபுகளைக் காண்பதற்கு அஃதோர் முன்னோடியாக இருத்தலின், அக்கூறுகளை இங்கே அவர் தந்துள்ள வரிசைப்படி காண்பது நலமாகும்.

1. சொற்பெய்துரைத்தல் - உரையிடையே காரணங் காட்டும் தொடர்களைப் பெய்து உரை விளக்குதல். "அப்பிறை, பதினெண் கணனும் ஏத்தவும் படுமே'' (க, வா) என்ற விடத்து, 'அப்பிறைதான் பெரியோன் சூடுதலால் பதினெண் கணங்களாலும் புகழவும்படும்' என்று உரை கூறப்பட்டுள்ளது. பெரியோன் சூடுதலால் புகழப்படுவ தாயிற்று எனச் சொற்பெய்து, காரணங்காட்டி எழுதும் அழகு கருதத்தக்கது.

இங்ஙனம் பெய்துரைக்கும் முறையில் சிலவிடங்களில் தாம் அங்ஙனம் கூட்டியுரைத்தமைக்குரிய காரணத்தையும் உரையாசிரியர் தருவதாக ஐயரவர்கள் எடுத்துக் காட்டு கின்றார்: "நின் மதனுடை முழவுத்தோள் ஓச்சித் தண்ணென, வீசியோயே" (50) என்பதில் வீசியோயே என்பதற்கு 'சாமரத்தாற் குளிர வீசினாய்' என்று உரைவகுத்துவிட்டு முழவுத்தோள் ஓச்சி யெனவும் தண்ணென வீசியோயெனவும் கூறியவாற்றால் சாமரை என்பது பெற்றாம்' என்று அதற்குரிய காரணமும் காட்டினார்."

இவ்வாறு ஐயரவர்கள் பற்பல காட்டுகள் தந்து ஒவ்வொரு கூறையும் விளக்குதலைப் புறநானூற்றுப் பதிப்பில் காண்கின்றோம்.

2. **மாறிக் கூட்டுதல்** - பாட்டிலுள்ள சொற்களை இடம் மாற்றிக் கொண்டுகூட்டிப் பொருள் தெளிவுபடுத்துதல்.

3. **பழஞ்செய்யுட் பகுதியை உரைநடையாக உரைத்தல்** - உரை எழுதுமிடத்துப் பழஞ்செய்யுட் பகுதிகளை உரைநடை வடிவில் எழுதி விளக்குதல். இது மேற்கோள் காட்டுதல் போன்றது.

4. **சொன்னடை** - இவ்வுரையாசிரியர் 'கைவிடும் பரிசு', 'தூங்கும் பரிசு' எனப் பரிசு என்ற சொல்லையும் 'எங்களுள் வைத்தும்', 'இரண்டினும் வைத்து' என வைத்து என்ற சொல்லையும் அடிக்கடி ஆள்வர். அஃது இவர்தம் சொன்னடையாகும்.

5. **மாறுபாடு நீக்கல்** - செய்யுளில் கூறப்பட்ட பொருள் சில வகைகளில் மாறுபாடாகத் தோற்றுவதற்கு இடமிருப்பின் அம்மாறுபாடு நீங்க, இன்ன காரணத்தால் இங்ஙனம் கூறப்பட்டதென்று தெளிவுறுத்துவது இவர் இயல்பு.

6. **சொல் வருவித்துரைத்தல்** - அங்கங்கே துறைப் பொருளோடு பொருந்தும் பொருட்டும் பொருள் முடிபின் பொருட்டும் ஒருசொல் வருவித்து முடித்தல்.

7. **வகுத்துக் கூறல்** - செய்யுளில் கூறப்படும் பொருள்களை இன்னவற்றைச் சார்ந்தனவென்று வகுத்து எளிதிலறியும்படி கூறுதல்.

8. கூற்று விளக்கல் - யார் கூற்று, யாரிடம் கூறியது எனக் கூற்றினை விளக்குதல்.

9. குறிப்பாலறிந்த பொருள் - அகப்பொருட் செய்யுட்களுக்கு உரைவகுக்கும் உரையாசிரியர்கள் உள்ளுறை யுவமமாகவும் இறைச்சிப் பொருளாகவும் அறிந்துகூறும் பொருளைப் போன்று பாடலில் காணப்படும் இன்ன சொற்களின் குறிப்பினால் இன்னபொருள் தோற்றுகின்ற தென்றும், இன்ன நயம் புலப்படுகின்றதென்றும் எழுதிச் செல்லுதல்.

10. வரலாற்றுச் செய்திகள் - சில இடங்களில் வரலாற்றுச் செய்திகள் சிலவற்றைக் கூறிச் செல்லுதல்.

11. கருத்துரைத்தல் - இங்ஙனம் கூறியதன் கருத்து இது வென்று பல அரிய செய்திகளைக் கூறுதல்.

சில இடங்களில் செய்யுட்களில் சொற்கிடந்தவாறே பதவுரையில் பொருள் கூறிவிட்டு இங்ஙனம் கூறினாரேனும் கருதியது இன்னதென்று தெளிவுறுத்துதல் இவர் உரை வகைகளில் ஒன்று.

12. நினைவுறுத்தல் - இவ்வாறு கூறியது இன்ன நினைவு பற்றி என்றெழுதுவது இவர் உரைத்திறங்களில் ஒன்று.

13. பயனுரைத்தல் - இது கருத்தென்றும் இது நினைவென்றும் கூறுவது போலவே இது பயனென்று சில இடங்களில் இவர் உரை வகுப்பர்.

14. பெறப்பட்டவை கூறுதல் - கூறப்பட்ட செய்திகளைக் கொண்டு இவற்றால் இன்னவை பெறப்பட்டன என்று வேறு சிலவற்றைக் கூறுவர்.

15. இன்னாமைக் குறிப்பு - நல்லிசைச் சான்றோர்களாகிய புலவர்கள் இன்னாதவற்றை இயன்றவரையில் மறைத்துக் குறிப்பாகப் புலப்படுத்தும் இயல்புடையவர்கள். அவ் வியல்பை இவ்வுரையாசிரியர் இடம் நோக்கி எடுத்துக் காட்டுவார்.

16. வழக்கு - சில இடங்களில் இன்ன உலக வழக்கைக் குறிக் கொண்டது இதுவென்றும் இச்சொல் இன்ன நாட்டவர் வழக்கென்றும் புலப்படுத்துவர்.

உழிஞை - கொற்றான், அது குடநாட்டார் வழக்கு (50); 'விரை வளர் கூந்தல் வரைவளியுளர வென்றது, கொண்டை மேற் காற்றடிக்க என்பதொரு வழக்குப் பற்றி நின்றது' (133); 'கிளி - குரலனையன் என்றது கிளியீடு வாய்த்தாற் போல்வன் என்னும் வழக்கைப் பற்றி நின்றது' (138); ஓசையென்றது ஆகுபெயரான் ஓசையையுடைய கறியை; இஃது ஒரு திசைச்சொல் (261).

17. மரபு - கடவுளர்களைக் குறிப்பிடும்போது மரபு பிறழாமல் உரை வகுக்கின்றார்.

18. உவமைகளை விளக்கல் - உவமைகள் வந்த இடங்களில் உவமையைப் பொதுத் தன்மையுடன் கூட்டியுரைத்து விளங்க வைப்பர். களிற்றை நாவாயோடும் திங்களோடும் உவமிக்கும் புறப்பாடலில் (13) 'களிற்றை நாவாயோடு உவமை எதிர்ப்படையைக் கிழித்தோடலும் திங்களோடு உவமை வாளோர் சூழத் தன் தலைமை தோன்றச் செல்லுதலுமாகக் கொள்க', என்று விளக்குகின்றார்.

19. வடசொல்லாட்சி - செந்தமிழ்ச் சொற்களையே பயன்படுத்துபவர் ஒரோவிடங்களில் வடசொற்களைக் கொண்டு பொருள் எழுதியுள்ளார்.

20. குறிப்புமொழி - அங்கங்கே நல்லிசைப் புலவர்கள் குறிப்பாகப் புலப்படுத்தியிருக்கும் பகுதிகளைச் சுட்டி, 'இது குறிப்புமொழி', 'இஃது இகழ்ச்சிக் குறிப்பு' என்று தெளிவுறுத்தலை இவர் உரையில் பல இடங்களில் காணலாம்.

21. இன்ன சிறப்பென்றுரைத்தல் - சில செய்யுட்களின்பின் இவற்றால் இன்ன சிறப்புக் கூறப்பட்டது என்று பகுத்துக் கூறுதல் இவர் உரை வகுப்பினுள் ஒன்று. 'இது கொடைச் சிறப்பும் வென்றிச் சிறப்பும் கூறியவாறு' (65, 130).

22. நயங்கள் - இலக்கிய நயங்கள் பலவற்றை எடுத்துக் காட்டுகிறார். இவருடைய உரையிலுள்ள நயங்கள் பலபடியாகப் பகுத்து அறிந்து இன்புறுதற்குரியன. சிலசில இடங்களில் இவர் அமைத்திருக்கும் உரை இவருடைய உலகியலறிவையும் பொருளியலறிவையும் கல்விச் சிறப்பையும் புலப்படுத்துகின்றன.

"எருத்து வவ்விய புலி" (4) என்பதற்கு, 'கழுத்தைக் கவ்வி உதிரம் உவற்றியுண்ட புலி' என்று விரித்துக்கூறும் உரை இவர் ஒவ்வொரு பொருளின் இயல்பையும் அறிந்து உரையெழுதும் திறலினரென்பதைப் புலப்படுத்துகின்றது (புலி உதிரத்தை உறிஞ்சிக் குடித்தல் இயல்பு).

23. இலக்கணக் குறிப்பு - அங்கங்கே இலக்கணக் குறிப்பு எழுதிச் செல்வார்; துறைப் பொருத்தம் காட்டுவார்; அணிகளைச் சுட்டிச் செல்வார்.

**புலப்பாட்டு நெறி**

இவை பலவும் மூலநூலைப் புலப்படுத்தும் நோக்கில் அமைந்த கூறுகளேயாம். உரையாசிரியர் திறனை உணர்த்துவன புலப்பாட்டுநெறி என்றால், மூலத்தை அவர் விளக்குவன புலப்படுத்து நெறி எனலாம். மேலே ஐயரவர்கள் எடுத்துக் காட்டியவற்றுள் சொன்னடை, மரபு, வடசொல்லாட்சி, பழஞ்செய்யுட் பகுதியை உரைநடையாக உரைத்தல் என்பன நான்குமே உரையாசிரியரின் நேரடியான புலப்பாட்டுநெறி பற்றியன. ஏனையவை விளக்கும் திறன் பற்றியன; புலப்படுத்தும் நெறிகள்.

**மூலத்துடன் தொடர்புடையன**

சொற் பெய்துரைத்தல், மாறிக் கூட்டுதல், சொல் வருவித் துரைத்தல், வகுத்துக்கூறல், இன்னாமைக் குறிப்புப் போல்வன மூலத்துடன் நெருங்கிய தொடர்புடையன.

**குறிப்புப் பொருள் தருவன**

குறிப்பாலறிந்த பொருள், கருத்துரைத்தல், நினைவுறுத்தல், பயனுரைத்தல், பெறப்பட்டவை கூறுதல், குறிப்பு மொழி என வருவன பலவும் பாட்டுக்குப் பொருள் உணருங்கால் உட்பொருளாகப் பிறிதொன்று பெறப்படுவதைப் பற்றியனவாகும்.

'குறிப்பாலறிந்த பொருள்' என்பது அகப்பாடலில் அமையும் உள்ளுறை, இறைச்சிபோல் புறப்பாடலில் அமையும் குறிப்புப் பொருளைப் பற்றியதாகும். 'கலை புலிப்பாற்பட்டெனச் சிறுமறி தழீஇய மடப்பிணை (பெண்மான்) பறந்தலையிலுள்ள வேளை வெண்பூக் கறிக்கும், என்பது, அவன் பகைவரைக் கொன்றவழி அவர் பெண்டிர் தம் இளம் புதல்வரை ஓம்புதற் பொருட்டு இறந்துபடாது அடகுதின்று உயிர்

வாழ்கின்றார் என்பதோர் பொருள் தோன்ற நின்றது' (23) என உரை ஆசிரியர் விளக்கம் தருகின்றார்.

*கருத்துரைத்தல்:* 'நீலமணிமிடற்று ஒருவன்போல மன்னுக' (91) என்று நெல்லிக்கனியுண்ட ஒள்வை, அதியமான் அஞ்சியை வாழ்த்திய போது "நீலமணிமிடற் றொருவன் போல வென்ற கருத்துச் சாதற்குக் காரணமாகிய நஞ்சுண்டும் நிலைபெற்றிருந்தாற் போல நீயும் சாவாதிருத்தல் வேண்டுமென்பதாம்'' என்று உட்கருத்து வைத்து வாழ்த்தியதாக விளக்கப்படுகிறது.

*நினைவுறுத்தல்:* பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழன்பால் அன்னத்தைத் தூதுவிடும்போது 'நின் இன்புறு பேடை அணியத் தன் நன்புறு நன்கலம் நல்குவன் நினக்கே' என்ற பகுதி இடம் பெறுகிறது. அதற்கு எழுதிய விசேடவுரையில், "பேடை அணிய நன்கலம் நல்குவன் என்றதனால் பயன் மறவாது போதல் வேண்டும் என்னும் நினை வாயிற்று" என்று உரையாசிரியர் குறிக்கின்றார்.

*பயனுரைத்தல்:* உறையூர் முதுகண்ணன் சாத்தனார் நலங் கிள்ளியை 'நின் பகைவர் அருளிலர், கொடாமை வல்லராகுக' என்று வாழ்த்துகிறார். இதன் பயன் யாது? உரையாசிரியர் "அருளிலர் கொடாமை வல்லராகுக வென்றதனாற் பயன் அவையுடையோர் தத்தம் பகைவரை வெல்வராதலால், பகையெதிர்ந்தோர் அவை இலராக வென்பதாம்" என்று விடுத்தார் என விளக்கம் தருதல் காணலாம்.

*பெறப்பட்டவை கூறுதல்:* "சந்தனப் புகை வேங்கைமிசைத் தவழும் பறம்பெனவே, இவை ஒழிய மரமின்மையும் பகைவர் சுடும் புகையின்மையும் கூறியவாறாயிற்று'' என்று (108) விளக்குவன இதிலடங்கும்.

*குறிப்பு மொழி:* பாரி மகளிர் தம் தந்தையின் பகைவராகிய வேந்தரை 'வென்றெறி முரசின் வேந்தர்'' (112) என்றதை 'ஈண்டு இகழ்ச்சிக் குறிப்பாய் நின்றது' என்பர், உரையாசிரியர்.

தொல்காப்பியர் குறிப்பில் புலப்படுத்தும் சொற்கள், தொடர்கள், பாடல்கள் பற்றி ஆங்காங்கு கூறியுள்ளார். எச்சம் பயன் போல்வன பல. அவற்றை இங்கு ஒப்புமைப்படுத்திப் பார்க்குமாறு, இவ்வுரை யாசிரியரின் விளக்கங்கள் அமைந்துள. ஐயரவர்கள் இவற்றிற்குப் பல்வேறு உதாரணங்கள் காட்டி எடுத்துத் தந்துள்ளார்.

**விளக்குவதற்குப் பயன்படுவன**

மாறுபாடு நீக்கல், கூற்று விளக்கல், வரலாற்றுச் செய்திகள் தருதல், உவமைகளை விளக்கல், இன்ன சிறப்பென்றுரைத்தல், நயங்கள், இலக்கணக்குறிப்பு யாவும் மூலநூலை விளக்குமுகத்தான் எழுந்த கூறுகளாகும். இன்னாமைக் குறிப்பு, வழக்கு என்பன மூல நூலாசிரியரின் இயல்பை விளக்குவனவாம்.

ஐயரவர்கள் காட்டியுள்ள இவைபோன்ற உரை மரபுகள் இன்னும் பலவுள. அவை அனைத்தையும் தொகுத்து, வகைப்படுத்தி மூலநூலை விளக்க வந்தனவற்றைப் புலப்படுத்தும் நெறி எனவும் அங்ஙனம் விளக்குமுகத்தான் உரையாசிரியர் கையாளும் வெளியீட்டுத்திகளைப் புலப்பாட்டு நெறி எனவும் குறிப்பிட்டுத் தனித்தனியே விளக்குதல் கூடும்.

**புலப்படுத்தும் நெறியா?**
**புலப்பாட்டுத் திறனா?**

இந்நூலின்கண் உரையாசிரியர்கள் மூல நூல்களை விளக்கிப் புலப்படுத்தும் முகத்தானமைந்த நெறிகள் பலவற்றைச் சுட்டிச் செல்ல நேரினும், அவ்வுரையாசிரியர்களின் சொந்த வெளியீட்டுத் திறன் களாகிய புலப்பாட்டு நெறிகளே முதன்மையாக விளக்கப்படுகின்றன. அவர்கள் தமக்கென ஒரு பாங்கு, ஒரு பாணி, ஒரு முறை வகுத்துக் கொண்டு எழுத முற்படுகிறார்கள் என்பதுதான் உட்கிடக்கை. இதனைக் கீழ்க்கண்ட பலமுறைகளின்படி வகைப்படுத்திக் கொள்ளப் படுகிறது.

## அமைப்புச் சார்புடையவை

**அமைப்பு**

உரைகள் பலவற்றில் ஓர் அமைப்பு உளது. எவ்வாறு தொடங்குவது, எவ்வாறு விளக்குவது, எவ்வாறு முடிப்பது என அவை திட்டமிட்டு எழுதப்பட்டுள்ளன. அஃதாவது அவற்றிற்கு முதல், இடை, கடை என்ற அல்லது எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என்ற ஒரு வடிவம் இருக்கிறது.

இலக்கண நூல்கள் தொகை, வகை, விரி என்ற பாங்கில் இலக்கணத்தை உணர்த்தும். முதலில் தொகுத்துச் சொல்லிப் பிறகு வகைப் படுத்திக்கொண்டு ஒவ்வொன்றாக விளக்குவதென்பது இம்முறை.

இஃதும் ஒரு வடிவமைப்பேயாகும். உரை நூல்களில் முற்கூறியவாறு தொடங்குதல், விளக்குதல், முடித்தல் என்ற முறை வைப்புப் பின்பற்றப்படுகிறது.

**இயைபு**

எதற்குப் பின் எதைச் சொல்லவேண்டும்? முதலில் எது இரண்டாவது எது மூன்றாவது எது என ஒரு முறைவைப்பில் சொல்வதும் முன் சொல்லியதற்கும் அடுத்து வருவதற்கும் ஒரு தொடர்பிருக்குமாறு சொல்வதுமே இயைபு எனப்படும். இவ்வியைபும் பெரிதும் நம் உரையாசிரியர்களால் பின்பற்றப்படுகிறது.

## அடிப்படையானவை

**சிக்கல் தேர்வு**

ஒரு சிக்கலைத் தேர்ந்து கொண்டு, அதை விடுவிக்குமாறு அமைவனவே ஆய்வுகள் எனப்படும். உள்ளதை விளக்குவன ஆய்வாகா; நடப்பதை விவரிப்பனவும் ஆய்வெனப்படா. ஆயினும் ஒரு செய்தியில் ஒரு கூறு விளங்கி மறுகூறு விளங்கா நிலையில் இருக்கும் போது அதனை விளக்குவனவும் ஒரு நூலின் காலம் நிறுவப்பட்டு அதனோடியைந்த பிறிதொரு நூலின் காலம் நிறுவப்படாதிருப்பின் அதை நிறுவுவனவும் இடைவெளியை நிரப்புவனவாதலின் ஆய்வு எனவே படும்.

நம் உரையாசிரியர்கள் பல்வேறு இடங்களில் சிக்கலைத் தேர்ந்துகொண்டு, அதனை விடுவிக்க முயலும் ஆராய்ச்சியாளர் களாகத் திகழ்கின்றனர். இதற்காக அவர்கள் கருதுகோள்களை வகுத்துக் கொள்ளுதலையும், தம் கருத்தை நிறுவச் சான்று மூலங்களைத் தொகுத்துத் தருதலையும் காண்கின்றோம்.

**உடன்படல், மறுத்தல்**

பிறர் கருத்தை உடன்படத்தக்கவிடத்து, உடன்பட்டும், மறுக்க வேண்டிய இடத்து மறுத்தும் உரைப்பது அவர் மரபாகும். இதுகாறும் கைக்கொள்ளப்பட்டு வந்த கருத்தினை ஏற்றல், புதுக்குதல், மாற்றுதல், மறுத்தல் என இவர்கள் கையாளும் கருத்துக்களே, புதிய கொள்கை களாகின்ற தகுதி பெறுகின்றன. இவ்வாறு இருக்கிற கொள்கைகளைப் புதுமைப்படுத்துவனவும் புதிய கொள்கைகளை வகுப்பனவும் ஆய்வே

யாகும். இம் முறைகளையும் நம் உரையாசிரியர்களிடம் காண்கின்றோம். இதற்காகச் சான்று காட்டுதல் (Documentation), மேற்கோள் சுட்டுதல் (Quotation) தேவைப்படும். அவற்றை வேண்டியவிடத்து, வேண்டியாங்கு பயன்படுத்துதல் ஓர் ஆய்வாளனின் கடமையாகும்.

## வெளியீட்டுத் தொடர்புடையவை

### சொற்பொருள் தருதல்

சொல்லுக்குப் பொருள் தருதல் என்பது நம் உரையாசிரியர்களின் மிகச் சிறந்த மரபாகும். அகராதிப் பொருள்போல அமையாமல் இடம் நோக்கிய பொருளாக அவை அமைவன. இச் சொற்பொருள் தருதலிலேயே பன்னிரண்டிற்கு மேற்பட்ட முறைகளை அவர்கள் கையாள்கின்றனர். ஒரு சிறந்த ஆய்வாளனுக்கு அவை மிக்க பயனுடையவையாகும்.

### இலக்கணம் கூறுதல்

மூலநூலை விளக்குமுகத்தான் தனிச்சொற்களுக்கு இலக்கணம் கூறுவர். ஒரு சொல்லுக்குப் பொருள் கொண்ட முறைக்கான காரணத்தை அது விளக்கும். சில சமயம் தொடருக்கும் இலக்கணம் கூறுவர். மூல நூலிலுள்ள அணிநலன்களை எடுத்துக் காட்டுவர்.

உ.வே. சாமிநாதையரவர்கள் தாம் பதிப்பித்த உரையுடன் கூடிய நூல்கள்தோறும், உரையாசிரியர் சுட்டிய இலக்கணக் குறிப்புக்களை அட்டவணையாகத் தருவார்.

தமிழ் ஆய்வாளனுக்குத் தேவைப்படக் கூடிய தனிச்சிறப்புக் கூறு இதுவாகும்.

### உவமை காட்டுதல்

நம் உரையாசிரியர்கள் கருத்து விளக்கத்திற்காகத்தானே உரைகளை எழுதியுள்ளனர். உவமைகள் கருத்து விளக்கத்திற்கென்றே அமைந்தன அல்லவா? எனவே, உரை நூல்களில் உவமைகள் மிகுதியாக ஆளப்பட்டிருத்தலில் வியப்பில்லை. உரையாசிரியர்களின் உவமைகளைத் தொகுத்தாலே தனிப் பட்டியலாகும். அவை பொருத்தமுடையவாதலைக் கண்டறிதலும் அவ்வுவமைகளை ஒன்றுடன் ஒன்று

ஒப்பிட்டுப் பார்த்தலும் அவை உரையாசிரியர்களின் பல்வகைத் திறங்களையும் அனுபவங்களையும் விளக்குதலை உய்த்துணர்தலும் சிறந்த ஆய்வாகும்.

**கலைச் சொல்லாக்கம்**

இலக்கியக் கலைச்சொற்கள் பலவற்றை ஆக்கித் தந்த பெருமை இலக்கண நூலாசிரியர்களையும் உரையாசிரியர்களையும் சாரும். உரையாசிரியர்களே முன்னவர்களிலும் கலைச்சொற்களுக்கு நல்ல வடிவமைப்புத் தந்தவராவர். மேலும் அக் கலைச் சொற்களை அவர்கள் விளக்கும் திறமும் ஆய்வாளர்களுக்கு ஏற்புடையதாகும்.

## வெளிப்பாட்டுத் திறனடங்கியவை

**விவாத முறையும் ஆய்வுநடையும்**

வினாவிடைப் பாங்கில் அமைவனவாதலின் இவ்வுரைகள் விவாத வடிவினவாகக் காணப்படும். ஒன்றைக் கேட்டுக்கொண்டு பதிலிறுக்கு முகத்தான் இவை தொடங்கும். இடையிலும் தடை விடைகள் விரவி வரும். இதனால் ஒருவகை ஆய்வுநடைப் பாங்கை நாம் இவற்றி லிருந்து கற்றுக் கொள்ளலாம்.

**சில நடையியல்புகள்**

நம் உரைகளில் சில தனித்தன்மை வாய்ந்த நடையியல்புகள் காணப்படுகின்றன. வைணவ சமய ஈட்டு உரைகளின் நடைப் பாங்கு தனியியல்புடையது. இறையனாரகப்பொருள் உரைப் போக்கிற்கும் இளம்பூரணர் உரைப் போக்கிற்கும் வேறுபாடு உண்டு.

இந் நடையியல்புகளில் சில ஆய்வுரைகளில் எங்ஙனம் பயன்படும் என்பது காணத்தகும்.

## ஆய்வுநெறி வழிப்பட்டவை

பகுத்தாய்தல் (Analytical), உய்த்துணர்தல் (Deduction), பொதுநீர்மை காணுதல் (Generalisation) அல்லது விதியுணர் முறை (Inductive), தருக்கமுறை என இவ்வாறு அடிப்படையாய்வு நெறிகளை உரையாசிரியர்கள் பின்பற்றியுள்ளமையை ஆங்காங்கு கண்டுணர்தல் கூடும்.

## மரபுவழி வந்தவை

இலக்கண நூல்கள் உரை வகைகளையும் அவை ஒவ் வொன்றன் இலக்கணத்தையும் சுட்டுகின்றன. உரையின் தோற்றத் தையும் வளர்ச்சியையும் வரலாற்று நோக்கில் அறியும்போது, அவற்றில் சில உரைநடை மரபுகள் வெளிப்படுகின்றன. இலக்கண நூல்கள் 32 உத்திகள் எனக் குறிப்பிடுவனவற்றில் சில உரையோடும் தொடர்பு உடையவை.

இவையெல்லாம் ஆய்வு நெறிமுறையோடும் ஒப்பிட்டு நோக்கத் தக்கனவாகும்.

## மொழிச் செப்பம்

பொதுவாகத் தமிழ்மொழியை நாம் எவ்வாறு கையாள வேண்டும் என்பதற்கு, நம் உரையாசிரியர்கள் மிகச்சிறந்த வழிகாட்டிகளாவர். நம் ஆய்வேடுகளில் காணப்படும் மொழிக்கேடுகளை, உரையாசிரியர்களின் மொழிச் செப்பத்துடன் ஒப்பிட்டுக் காட்டினால் இன்றைய ஆய்வாளர் களின் மொழிப் புறக்கணிப்புப் போக்கு நீங்கக்கூடும்.

மேலே கண்டவற்றிற்கு, முற்கூறிய உரைகளிலிருந்து சான்றுகள் காட்டி விளக்கப்பெறும். எனவே இந்நூல் முழுவதும் கற்பார்க்கு உரையின் சிறப்பும் உரையாசிரியரின் மேன்மையும் புலனாகும். அவர்களின் உரை மரபுகள் பல்வேறு கோணங்களில் உணர்த்தப்படும். ஆராய்ச்சிப் பட்டம் பெறும் அவாவும் அவசியமும் பெருகிவரும் இக்காலத்தே, இவ்விதமான நூல்கள் ஆராய்ச்சியறிஞர்கட்கு நம் மரபு களைக் கோடிட்டுக் காட்டுவனவாய் அமையும்.

மேலைநாட்டார் நமக்குப் புதுவதாகத் தந்த ஆராய்ச்சி நெறி முறைகளையெல்லாம் கற்போம்; பயன்படுத்துவோம். அதே சமயம் நம்மிடம் வளர்ந்துவந்த ஆராய்ச்சி நெறிமுறைகளையும் கண்டறிவோம். இவை இரண்டையும் ஒப்பிட்டும் உறழ்ந்தும் கற்று நம் திறமையை வளர்த்துக் கொள்வோம். அப்போதுதான் பிறருக்கு வழிகாட்டத்தக்க ஆராய்ச்சியாளர்களாக நாம் வளர்தல் கூடும்.

## உள்ளே...


| | |
|---|---|
| 0 21 | அமைப்பும் இயையும் |
| 042 | சிக்கல் தீர்வும் கொள்கை ஆக்கமும் |
| 096 | சொல்லும் பொருளும் |
| 126 | உவமையும் நயமும் |
| 148 | மரபும் திறனும் |
| 169 | நடையும் மொழியும் |

1

# அமைப்பும் இயையும்

**இளம்பூரணர்**

இளம்பூரணர் சூத்திரத்திற்கு உரையெழுதும்போது பயன்படுத்தும் உரைப்பகுதிகளைப் பின்வருமாறு கூறுபடுத்தலாம்: 1) முன்னுரை, 2) பதப்பொருள் அல்லது பொழிப்புரை, 3) வரலாறு (காட்டு), 4) விளக்கவுரை (முன்னைய கருத்தை மேலும் விளக்குதல், இலக்கணக் குறிப்புக் காட்டி அதற்கேற்ப விளக்குதல், சொல்லுக்கு இடம் நோக்கிய சிறப்புப் பொருள் தந்து விளக்குதல், வேறு கருத்தைக் கூறி ஏற்றல் அல்லது மறுத்தல், உவமை காட்டி விளக்குதல் போல்வன இதிலடங்கும்).

**ஓர் எடுத்துக்காட்டு**

*காலம் உலகம் உயிரே உடம்பே*
*பால்வரை தெய்வம் வினையே பூதம்*
*ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉம்*
*ஆயீ ரைந்தொடு பிறவும் அன்ன*
*ஆவயின் வரூஉம் கிளவி எல்லாம்*
*பால்பிரிந் திசையா உயர்திணை மேன.*

*(தொல். சொல். 58)*

**1. முன்னுரை**

இச்சூத்திரம் என் நுதலிற்றோ எனின், இதுவும் உயர்திணையான் முடியாது, அஃறிணையான் முடியும் என்பது உணர்த்துதல் நுதலிற்று (முன்னுரையிலேயே கருத்துரையும் இருக்கக் காணலாம்).

**2. உரை**

காலம், உலகம் என்றித் தொடக்கத்தனவும் உயர்திணை எனினும் உயர்திணைப் பால் பிரிந்து இசையா, அஃறிணையான் இசைக்கும் என்றவாறு.

(சுருக்கமான பொழிப்புரை இது. சிறிய நூற்பாக்களுக்கு முழுவது மாகப் பொழிப்புரை தருவார். சில நீண்ட நூற்பாக்களுக்குப் பொழிப்புச் சுருக்கம் தருவதுடன் அருந்தொடர்களை விளக்கி நூற்பாப் பொருளை மனங்கொளச் செய்வார். எளிதிற் பொருள் விளங்குவனவற்றிற்குப் பொருள் எழுதாது 'சூத்திரத்தானே பொருள் விளங்கும்' என விட்டுவிடுவார். இரண்டு மூன்று நூற்பாக்கட்கு ஒருசேரவும் விளக்கம் கூறுவார். எனவே உரை யெழுதவேண்டியதற்கு, வேண்டிய அளவுமட்டும் உரையெழுது வார் என்பதாகும்).

**3. வரலாறு**

(இவர் உதாரணத்தை வரலாறு (வரல்+ஆறு) என்றும் குறிப்பிடுவார்)

| | |
|---|---|
| *இவற்குக் காலம் ஆயிற்று* | *காலம்* |
| *உலகம் பசித்தது* | *உலகம்* |
| *உயிர் போயிற்று* | *உயிர்* |
| *உடம்பு நன்று* | *உடம்பு* |
| *இவற்குத் தெய்வம் ஆயிற்று* | *தெய்வம்* |
| *இவ் வினை நன்று* | *வினை* |
| *இவனைப் பூதம் புடைத்தது* | *பூதம்* |
| *ஞாயிறு எழுந்தது* | *ஞாயிறு* |
| *திங்கள் எழுந்தது* | *திங்கள்* |
| *சொல் நன்று* | *சொல்* |

என வரும்.

**4. விளக்கவுரை**

பிறவும் என்றதனால், 'வெள்ளி எழுந்தது, செவ்வாய் எழுந்தது' என்பன கொள்க.

இச் சூத்திரந் தெய்வஞ்சுட்டிய பொருள் அஃறிணையான் முடிபேற்றல் கூறினார் என்ப ஒரு திறத்தார். அற்றன்று, ஈண்டுத் தெய்வமும் உள, மக்களும் உளர்.

இனி, மேற் சூத்திரம் 'முன்னத்தான் உணரப்படும்' என்றவாறு கூறினார். இச் சூத்திரம் உயர்திணைப் பொருளே அஃறிணை முடிபு ஏற்பனவற்றிற்குக் கூறினார் என்பது.

உலகம் என்பது உலகத்தார் மேற்று; உடம்பு என்பது உடம் புடையார் மேற்று என்பது.

● ● ●

உரை என்பதை இதன் பொருள் எனத் தொடங்குதலும் வரலாறு எனபதை எடுத்துக்காட்டு எனக் குறித்தலும் உண்டு. உரையை 'இதன் பொழிப்பு' எனத் தொடங்கலும் உண்டு. (தொல். சொல். 421)

சில நூற்பாக்களுக்கு இவர் முன்னுரை, உரை, வரலாற்றோடு நிறுத்திக்கொள்வார். 'வரலாறு' வேண்டாவிடத்து மற்ற மூன்றுமே அமைந்து காணப்படும். உரை வேண்டாவிடத்து அதை விட்டு விடுவார். (தொல். சொல். 420)

தொல்காப்பியம், சொல்லதிகாரம், பெயரியலில் 173, 174, 175, 176 ஆகிய நான்கு நூற்பாக்களையும் ஒருசேரக் கூட்டி "இவை இயற்பெயர் முதலாகிய நான்கன் விரி பதினான்கும் இது என உணர்த்தியவாறு" என முன்னுரை மட்டுமே வரைந்து விட்டு விடுவர். பிறகு அடுத்துவரும் தனித்தனி நூற்பாக்களிலேதான் அவற்றிற்கு விளக்கமும் காட்டும் தரப்படுகின்றன.

இவ்வாற்றால் நோக்கின் இளம்பூரணர் சூத்திரவுரையில் ஓர் அமைப்பு இல்லை போலும் எனவே தோற்றும். தொல்காப்பியச் சொல்லதிகாரப் பதிப்பில், பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி, தாம் எழுதிய ஆராய்ச்சி முன்னுரையின்கண் இதனைக் கீழ்வருமாறு விளக்குவார்: "இவர்தம் உரை ஒரு நெறியில் இல்லாது பலவாறாக உள்ளது. என் நுதலிற்றோ எனின் என்று தொடங்கிப் பல நூற்பாக்களுக்கு உரை கூறுவர்; சிலவற்றிற்கு அந்நெறியைக் கைவிடுவர். பல நூற்பாக்

களுக்குக் கருத்து, பதப்பொருள், காட்டு, விளககம் என முறையே விரித்துச் செல்வர்; சில நூற்பாக்களுக்குக் கருத்து மட்டுமே கூறி விடுப்பதும், சில நூற்பாக்களுக்கு வரலாறு மட்டுமே காட்டி முடிப்பதும் சில நூற்பாக்களுக்கு ஒரு பகுதி விளக்கந்தந்து ஒரு பகுதிக்கு விளக்கந் தாராது வாளாவிடுப்பதும் உண்டு. ஒவ்வொரு நூற்பாவிற்கும் தனித் தனியே உரைவகுத்துப் போதலே இவர்தம் இயல்பு. அங்ஙனமின்றி ஒரோவழி உரை இயைபு நோக்கி ஒன்றாக உரைக்கப்பட்டது என ஓரிரு நூற்பாக்களைக் கூட்டி உரை எழுதுதலும் உண்டு."(1)

நெறிமுறை (Methodology) என்பது என்ன? வேண்டாவிடத்தும் வலிந்து சில முறைகளைப் புகுத்துவதால், ஆராய்ச்சி நெறியாகி விடுமா? சில ஆய்வுகட்கு மேற்கோள்கள், அடிக்குறிப்புகள் மிகுதியாகத் தேவைப்படும்; சிலவகை ஆய்வுகளில் அவற்றிற்கு அதிக இடமிராது. எல்லா ஆய்வுகளிலுமே கூடுதலான அடிக்குறிப்புகளை எதிர்பார்த்து, அதனால் சிலர் வேண்டா இடத்தும் அடிக்குறிப்புகளை நிரப்பி எழுதி, இப்போது 'அடிக்குறிப்பிடுதலே ஆராய்ச்சிக்கு அழகு' என்பதுபோல் ஆகிவிட்டது. இளம்பூரணர் இத்தகைய 'போலி' ஆய்வாளர் அல்லர். அவர் உரை கூறுமிடத்து நான்கு திறங்களை (கருத்து, பதப்பொருள், காட்டு, விளக்கம்) வெளிப்படுத்த மனங் கொண்டார்; அவற்றைக் கூறும் வரிசைமுறையிலும் பிறழ்ந்தாரில்லை. ஆயின் அவற்றில் தேவையான வற்றைத் தேவையான இடத்தில் பெய்தெழுதுதலும் வேண்டாவிடத்து அவ்வுறுப்பை மட்டும் விடுத்தலும் அவர் மரபு. "நான் நான்கு கூறுகளைக் கூற எண்ணியுள்ளேன். எனவே பொருள் தெளிவான சூத்திரத்திற்கும் பொருள் கூறியே தீருவேன், வரலாறு வேண்டாவிடத்தும் எதையாவது தந்தே தீருவேன், இல்லையென்றால் என் நெறிமுறை என்னாவது?" என்று அவர் அடம் பிடித்திருப்பாரேயானால், இக்காலக் 'கண்மூடி' ஆய்வாளர் சிலரின் வரிசையில் சேர்ந்திருப்பார். ஆனால் நன்கு உற்றுநோக்குவார்க்கு, அவரே சிறந்த ஆய்வு நெறியாளராகத் தோற்றுவார். அவர் பொருள் தெளிவு என உரை கூறாது விட்ட இடங்கள் சில இன்று விளங்கவில்லையேயென்றால் அஃது அவர் குறையன்று. பிறர் மனத்தில் ஆய்வுக் கருத்தைப் பதியுமாறு கூறுவதற்கே ஆய்வுநெறிமுறை பயன்பட வேண்டும். அல்லாமல் 'ஆய்வு நெறிமுறைக்காக அந்நெறிமுறை அவசியம்' என வற்புறுத்துவது பயனற்றதாகும்.

---

1. தொல். சொல். (கு. சுந்தரமூர்த்தி பதிப்பு) கழகம், சென்னை, 1963. பக். 16.

**புறநானூற்றுப் பழைய உரையாசிரியர்**

இவரிடம் ஒரு தனி இயல்பு காணப்படுகிறது. ஒரு புறப்பாடல் முடிந்ததும் திணை துறை குறிப்பிடல், கொளு வரைதல், பொழிப்புரை தருதல் ஆகியவற்றுக்குப் பிறகு விளக்கவுரை தருமுன் தேவைப்படும் இடங்களில் கொண்டுகூட்டி வினை முடிபு காட்டிச் செல்வார்.

*பாணர் தாமரை மலையவும் புலவர்*
*பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்*
*அறனோ மற்றிது விறன்மாண் குடுமி*
*இன்னா வாகப் பிறர்மண்கொண்டு*
*இனிய செய்திநின் ஆர்வலர் முகத்தே. (12)*

இப் பாடலில் மேற்கண்ட முறைப்படி உரையமையக் காணலாம். இடையே "குடுமி! பிறர்மண் இன்னாவாகக் கொண்டு மலையவும் பண்ணவும் நின் ஆர்வலர் முகத்து இனிய செய்வை; இது நினக்கு அறனோ? சொல்லுவாயாக எனக் கூட்டி வினை முடிவு செய்க" என்ற பகுதி இடம்பெறுகிறது.

இங்ஙனம் பாடல் முழுவதற்குமாகக் கொண்டுகூட்டி வினை முடிபு செய்யுங்கால் பாடலை, உரைநடைப் போக்கிற்கேற்ப வாக்கியமாக வடிவப்படுத்திக் காட்டும் பாங்கு புலனாகிறது. அதனால் பாட்டுப் பொருள் எளிதில் மனத்திற்காகிறது. இதற்கு அடுத்ததாகிய, உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடிய, புறநானூற்று 13ஆம் பாடலின் உரையில், "களிற்று மிசையோனாகிய இவன் யாரென்குவையாயின், நாடுகிழவோன்; இவன் களிறு மதம்பட்டது; அதனால், இவன் நோயின்றிப் பெயர்கவெனக் கூட்டி வினைமுடிபு செய்க", என்று இப்பகுதி காணப்படுகிறது. இதனால் பாடலின் கருத்தும், பாடிய புலவர் அதைச் சொல்லியுள்ள முறையும் சட்டகம்போல மனத்தில் பதிகின்றன.

பாடல் முழுவதையும் கொண்டுகூட்டிக் காட்டாமல், பாடல் அமைப்பே கிடந்தவாறு பொருளுணர்த்திவிடுமாயின், அங்கு இவர் கொண்டுகூட்டிக் காட்டாது விடுப்பர். சில சமயம் பாடலிடையே சில அடிகளில் மட்டும் மாறிக் கூட்டிப் பொருளுணர வேண்டுமேல் அதனை மட்டும் சுட்டிச் செல்வர். புறநானூற்று 18ஆம் பாடலில்,

*நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்*
*உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே*
*உண்டி முதற்றே உணவின் பிண்டம்*
*(அடி : 18-20)*

இதற்கு உரையாசிரியர், "உணவின் பிண்டம் உண்டி முதற்றா கலான் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என மாறிக் கூட்டுக" என எழுதிக் காட்டுவார். புறநானூற்றுரையாசிரியர் இயல்பின்படி திணை துறைக் குறிப்பு, கொளு (யார் யாரைப் பாடியது என்பது), பொழிப்புரை, வினைமுடிபு, விசேடவுரை என்பன உரை வரிசையாகும். இவரும் வினைமுடிபு, விசேடவுரை ஆகியவற்றை ஒன்றிரண்டு இடங்களில் விட்டு விடுகிறார் எனில் அவை ஆண்டு அத்துணை தேவைப்படவில்லை என்பதே கருத்தாகும்.

**நச்சினார்க்கினியரின் கலித்தொகை உரை**

கலித்தொகை ஓரளவு அடிவரையறை மிகுதியுடைய பாடல்களைக் கொண்டதாகும். பாட்டின் துறையை - கூற்றினை விரிவாகத் தருதல், கலியின் ஒவ்வோர் உறுப்புக்கும் தனித்தனியே பொழிப்புரை தருதல், ஒவ்வோர் உறுப்பின் இறுதியில் பொழிப்புரைக்குப் பிறகு விளக்கவுரை தேவைப்படுமேல் தருதல், மெய்ப்பாடு கூறல், பாட்டின் யாப்பமைதி கூறல் என்பன இதில் காணப்படும் உரைக் கூறுகளாகும்.

முதலிலுள்ள துறைக் கூற்று விளக்கம் கலித்தொகையில் சிறப் பாகவும் விளக்கமாகவும் அமைகிறது.

பிற அகநூல்களில் 'செலவழுங்குவித்தது' எனச் சுருக்கமாகக் காணப்படும் துறையை, பாலைக்கலியில் (கலி. 6), "இது தலைவன் செலவுக் குறிப்பறிந்து நீர் செல்லுங் கடுஞ்சுரத்துத் துன்பத்திற்குத் துணையாக எம்மையும் உடன் கொண்டு சென்மின் எனத் தலைவி கூறியது" என விரிவாகத் தரப்பட்டுள்ளது.

'தலைவன் வரவுணர்ந்து தோழி தலைவிக்குக் கூறியது' எனற் பாலதைக் கலியில், "இஃது இளவேனிற் காலத்து வருவல், அத்துணையும் ஆற்றியிரு என்று மண் நசையால் வேந்தன் சென்றவழி, முன்பனிக் காலமும் பின்பனிக் காலமும் வந்து வருத்தலின் ஆற்றாத தலைவியைத் தோழி வருவரென வற்புறுப்பவும், வன்புறை எதிரழிந்தவழித் தலைவன் யாம் குறித்த பருவம் வருந்துணையும் ஆற்றியிராள் எனப் பின்பனிக்

காலத்து வருகின்ற வரவுணர்ந்து தோழி கழி உவகையாற் கூறியது" (கலி 31) என மிக விரிவாகத் தரப்படுகிறது.

"இது வரையாது வந்து ஒழுகுந் தலைவற்குத் தோழி தலைவி யாற்றாமையும் இவ்வொழுக்கம் புறத்தார் அறியப்படுகின்றமையும் கூறி வரைவுகடாயது" எனச் (கலி. 48) சுருக்கமாகவும்;

"இது 'முன்னிலை அறனெனப் படுதலென்றிருவகைப் புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்' என்னும் விதி பற்றித் தமர் வரைவு மறுத்துழித் தோழி தாயர்க்கு அறத்தொடு நிற்ப, அவள் நற்றாய்க்கு அறத்தொடு நிற்ப, அவள் தன்னையர் முதலியோர்க்கு அறத்தொடு நிற்ப, அவரும் ஒருவாற்றான் உடன்பட்டமை தோழி தலைவிக்குக் கூறித் தானும் அவளும் வரைவு கடிதின் முடிதற் பொருட்டு வரையுறை தெய்வத்திற்குக் குரவையாட அவன் வரைய வருகின்றமை தோழி தலைவிக்கு உரைத்தது" எனத் (கலி. 39) தொல்காப்பிய விதி கூறி, பின்னைய வளர்ச்சிப் போக்கையும் உணர்த்துமாறு விரிவாகவும்;

தொல்காப்பிய விதி கூறி, அதன் விளக்கம் கூறிப் பல்வேறு பகுதிகளை ஒப்பிட்டும் உறழ்ந்தும் விளக்கி ஏறத்தாழ ஒருபக்க அளவில் துறைக் கூற்று விளக்கம் (கலி. 142) தந்தும் இப் பகுதி சிறப்புற அமைவதைப் பல பாடல்களில் காணலாம்.

இவ்வுரையில் 'மெய்ப்பாடு கூறல்' என்ற பகுதி ஈற்றயலாக அமைகிறது. நச்சினார்க்கினியர் தொல்காப்பியத்திற்கும் உரை எழுதியவ ராதலின், அதில் கூறப்பட்டுள்ள மெய்ப்பாடுகளுடன் பொருத்திக் காட்டுவார் போலக் கலித்தொகையிலுள்ள 150 பாடல்களுக்கும் இக் குறிப்பைத் தருகின்றார். சிலவற்றை இவண் காண்போம்:

**கலி. 1**

கலித்தொகை முதற்பாட்டுக் கடவுள் வாழ்த்து, அதனிறுதியில் 'இப் பாட்டுப் பல மெய்ப்பாடுகளும் தோற்றுவித்து நின்றதேனும், அவை உரைப்பில் பெருகுமாதலின், முடிந்த பொருளாற் பிறந்த மெய்யப்பாடே கூறுதும்; அது தன்கட் தோன்றிய ஆக்கம் பற்றிய மருட்கையாம்" என இனியர் திறம்பட எழுதுகின்றார்.

**கலி. 2**

தாழிசைகளின் முடிவில்: "பழியொடு வருவன செய்யலாகாதெனத் தோழி விலக்கலின் அசைவென்னும் மெய்ப்பாடு தோன்றிற்று"

சுரிதகமும் முடிந்தபின்: "இச் சுரிதகத்தால் தலைவற்கு உண்டாகிய அருள் என்னும் மெய்ப்பாட்டால், தலைவிக்குப் புணர்வென்னும் உவகை பிறந்தது"

**கலி. 26**

இதனால் தலைவிக்குப் புணர்வாகிய உவகை தோன்றிற்று.

**கலி. 92**

இதனால் தலைவற்குக் கனவு முதற்றோன்றிப் பின்னர் விரைவு தோன்றிற்று.

**கலி. 93**

இதனால் தலைவிக்கு இழிவும் தலைவற்கு அசைவும் பிறந்தன.

இங்ஙனம் அமையும் இக்கூறு பெரிதும் ஈற்றயலாகவும், மிகச் சிலவிடத்து மட்டும் இடையிலும் இடம்பெறுகின்றமை, அதன் பயன்பாடு கருதியேயாம். தொல்காப்பியர் குறிப்பிடும் பல்வகை மெய்ப்பாடுகளும் இங்கு சுட்டப்படுகின்றன. ஒரே பாடலில் பல மெய்ப்பாடு அமையுமிடத்து, அவற்றையும் சுட்டி, இறுதியாக எஞ்சிநிற்கும் தலைமை மெய்ப் பாட்டையும் சுட்டுகிறார்.

150 கலித்தொகைப் பாடல்களின் உரை முடிவிலும் நச்சினார்க் கினியர், அக்கலியின் யாப்பமைதியைச் சுட்டாது முடிப்பதில்லை. தொல் காப்பியத்தில் குறிக்கப்பட்ட கலிப்பா இலக்கணங்களைப் பொருத்திக்காட்டி அவர் இப்பகுதியை மிக விரிவாகத் தருதலும் உண்டு. கீழ்வரும் நான்கு காட்டுகள் போதும் எனலாம்; மேலும் அறிய விரும்புவார் கலித் தொகையைப் புரட்டிப் பார்க்கலாம்.

**கலி. 1**

"இது நான்கு உறுப்பான் வந்ததேனும் தேவபாணியான் வருதலின் முதனிலை ஒத்தாழிசையாகாது. "ஏனையொன்றே, தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே" என்பதனால், தேவர்ப் பராயிற்றேனும் வண்ணக முமாகாது, எண்ணும் சின்னமும் இழத்தலின். ஆகலின், இஃது எண்ணிடையிட்டுச் சின்னங்குன்றிய கொச்சக ஒரு போகாயிற்று.

சீர்வகைக் கலிக்கு "விராய தளையும் ஒரூஉ நிலையின்றே" என்பதனால், தளை விரவி வரப்பெறும் என்றலிற் செல்லுமென

நேரீற்றியற்சீர் வந்தது; "கலித்தளை அடிவயின் நேரீற்றியற்சீர் - நிலைக்குரித்தன்றே தெரியுர்மோர்க்கே" என்ற விதி கட்டளைக்கலிக் காதலின்."

**கலி. 95**

"இது பல கொச்சகங்களும் வருதலின் கலிவெண்பா உறுப்பின் வேறுபட்டு வந்த கொச்சகக்கலி."

**கலி. 96**

'இது சொற்சீரடி பெற்று ஐஞ்சீரடுக்கி வந்த கலிவெண்பா."

**கலி. 105**

"இது தரவும் தனிச் சொல்லும் ஐஞ்சீரடி பலவும் விராய் முடுகு வண்ணம் அடியிறந்தோடிய கொச்சகவெண்பாவும் கொச்சகமும் இரண்டு நெடுவெண்பாட்டும் "வெண்பாட்டீற்றடி முச்சீர்த் தாகும்' என்றதனான் இடையீற்று முச்சீரடி வந்த நெடு வெண் பாட்டும் ஐஞ்சீரடி பெற்ற குறுவெண்பாட்டும் ஐஞ்சீரடி முடுகியலோடு தொடர்ந்த கொச்சக வெண்பாவும் நெடுவெண் பாட்டும் ஓரடியான் ஒன்றும் குறுவெண் பாட்டும் தனிச்சொல்லும் இரண்டு நெடுவெண் பாட்டும் தனிச் சொல்லும் சுரிதகமும் பெற்று வந்த கொச்சகம்."

இவ்வாறு நம் உரையாசிரியர்கள் ஒருசில கூறுகளைத் தத்தமக்கு ஏற்ப வகுத்தமைத்துக் கொண்டு, அவற்றைப் பாடல் தோறும் குறிப்பிட்ட இடத்தில் வைத்து விளக்குகின்றனர். அவர்கட்கு இவ்விக் கூறுகளை விளக்கவேண்டும் என்றும் இந்த வரிசையில் கூறவேண்டும் என்றும் சிந்தனையிருந்தமை மறுக்கவொண்ணாது. ஆயின் ஏதேனும் இடம் மாற்றமோ, ஒரு கூறினை விடுத்தலோ அமைகின்றதெனின் அதுவும் தக்க காரணங்கருதியே அமைகின்றது.

பேராசிரியர் 'என்னுதலிற்றோ எனின்' என்ற நடையைக் கைவிட்டு, ஒவ்வொரு நூற்பாவிற்கு அடியிலும் 'இது இன்னது கூறுகின்றது' என்றாற் போன்ற நடையைக் கையாள்கின்றார். இயல் தொடக்கம், தலைச் சூத்திரம் போன்றவற்றில் 'என்ன பெயர்த்தோ எனின்' எனவும் 'இத்தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ' எனவும் கூறித் தொடங்குதலின் பழைய மரபிலும் இவருக்குப் பிடிப்புண்மை புலப்படும்.

**இயைபு**

மேனாட்டார் ஆய்வேடுகளில் இவ்வியைபை (Sequence) மிகவும் வற்புறுத்துகின்றனர். ஒரு பத்திக்கும் மறு பத்திக்கும் கூட இயைபிருக்க வேண்டும். முதற் பத்தியின் (Paragraph) இறுதி வாக்கியம் அடுத்த பத்திக்குத் தோற்றுவாய் போல அமைய வேண்டும்; அடுத்த பத்தியின் முதல் வாக்கியம் முன்பத்தியின் தொடர்ச்சி போல இருக்க வேண்டும். பத்திகள் சற்றும் தொடர்பின்றி அடுத்தடுத்து அமையின் பொருட் தொடர்ச்சி விளங்காது போகும்.

இது போலவே ஓரியலுக்கும் அடுத்த இயலுக்கும் இயைபு வேண்டும். முன் இயலின் முடிவும் அடுத்த இயலின் தொடக்கமும் சங்கிலிப் பிணைப்புப் போலப் பொருளுணர்ச்சியால் தொடர்புற்றுக் காணப்பட வேண்டும். ஓரதிகாரத்துப் பல இயல்கள் அமையுமேல், அவற்றின் வைப்பு முறைக்கு ஒரு காரணம் வேண்டும். முதலில் என்ன என்ன தலைப்புக்களில் எழுதுவதென வரையறைப்படுத்திக் கொள்ள வேண்டும். பிறகு அவற்றை எதற்குப் பிறகு எதை வைப்பதென நன்கு சிந்தித்து வரிசைப்படுத்த வேண்டும். ஓராய்வேட்டின் 'உள்ளுறை' என்ற முன்பகுதியைப் பார்க்கும்போதே ஓர் அழகுணர்ச்சியும் பொருள் உணர்ச்சியும் கலந்த சீர்மை புலப்பட வேண்டும். ஓராய்வாளனை அழைத்து "உன் ஆய்வுத் தலைப்பை எங்ஙனம் வகைதொகைப் படுத்திக் கொள்வாய்? எவ்வெத் தலைப்புகளில் ஆராயப் போகின்றாய்? ஒரு முன் மாதிரி உள்ளுறை எழுதிக் காட்டு" எனக் கேட்டால் உண்மை விளங்கி விடும். அவ்வாய்வாளனுக்கு ஆய்வு நோக்கும் ஆய்வுணர்வும் உள்ளனவா என்பதை, அவன் எழுதித்தரும் உள்ளுறை இனம் காட்டிவிடும்.

இவ் வைப்புமுறை, இயைபு என்பனபற்றி உரையாசிரியர்களிடம் கண்டு அறிதல் இயலாது. சுருக்கமாக எழுதப்பட்ட அவ்வுரைகள் நீண்ட ஆய்வுரைகள் அல்ல. மேலும் மூலநூலாசிரியனின் இயல்வைப்பு, நூற்பா வைப்புகளுக்கு ஏற்பவே உரையாசிரியன் எழுத முடியுமே தவிர அவன் தானாக இவ்வைப்புமுறைகளை மாற்றி, இயைபுபடுத்த முடியாது. ஆதலால் நம் உரையாசிரியர்கள் தாம் உரையெழுதிய மூல நூல்களில் அமைந்துள்ள வைப்புமுறைகளையும் அவற்றிடையேயுள்ள இயைபுகளையும் எடுத்துக்காட்டிய பகுதிகளை நினைவுகூர்ந்தாலே, அஃது நம் உரையறிஞர் போற்றிய நெறிமுறைக்குத் தக்க சான்றாகும்.

**இளம்பூரணர்**

உரையாசிரியர்கள் எழுதும் இயல் முன்னுரைகளிலேயே இவ் வியைபு பற்றிய குறிப்பும் காணப்படும். தொல்காப்பிய முதல் உரை யாசிரியர் என இன்று அறியப்படும் இளம்பூரணர் எழுத்ததிகாரத்தில் சில இயல்கட்குத் தரும் விளக்கத்தை ஈண்டுக் காண்போம்:

**1. நூன்மரபு**

இவ்வோத்து என்னுதலிற்றோவெனின், அதுவும் அதன் பெயர் உரைப்பவே அடங்கும். இவ்வதிகாரத்தால் சொல்லப்படும் எழுத்திலக் கணத்தினை ஓராற்றால் தொகுத்து உணர்த்துதலின் நூன்மரபு என்னும் பெயர்த்து, இதனுட்கூறுகின்ற இலக்கணம் மொழியிடை நின்ற எழுத்திற் கன்றித் தனிநின்ற எழுத்திற்கென உணர்க.

**2. மொழி மரபு**

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், மொழிகளுக்கு எழுத்தான் வரும் மரபு உணர்த்தினமையின் மொழிமரபு எனப்பட்டது. இதனுள் கூறுகின்றது தனிநின்ற எழுத்திற்கு அன்றி மொழியிடை நின்ற எழுத்திற்கு எனவுணர்க.

**3. பிறப்பியல்**

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், எழுத்துக்களது பிறப்பு உணர்த்தினமையின் பிறிப்பியல் என்னும் பெயர்த்து. இதனை நூன் மரபின் பின்னே வைக்கவெனின், சார்பிற்றோற்றத்து எழுத்தும் தனி மெய்யும் மொழிமரபிடை உணர்த்திப் பிறப்பு உணர்த்த வேண்டுதலின், மொழிமரபின் பின்னதாயிற்று.

**4. புணரியல்**

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், மொழிகள் (மேற் செய்கையோத்துக்களுள்) புணர்தற்குரிய கருவியின் இயல்பு கூறினமையின் புணரியல் எனப்பட்டது. மேல் மொழிமரபிற் கூறிய மொழிகள் புணருமாறு உணர்த்தினமையின் மொழிமரபினோடு இயை புடைத்தாயிற்று.

இங்ஙனம் அனைத்து இயல்கட்கும் இயைபுகாட்டும் முறைமை சிந்திக்கத்தக்கது. வேறு வகையாக அடுக்கலாகாதா என்று கேட்பதில் பொருளில்லை. பிறிதொரு வகையாக அமைப்பினும், காரணம் கருதி

அங்ஙனம் அமைத்து, அதனால் பயனும் கூடுதல் எனில் ஏற்றுக் கொள்ளத் தக்கதேயாம். இன்றைய நிலையில் இப்போதுள்ள அமைப்பே சிறப்புடையதென்பது கருத்து.

இனி, நுன்மரபையும் மொழிமரபையும் தனிநின்ற எழுத்தின திலக்கணம் எனவும் மொழியிடை நின்ற எழுத்தினதிலக்கணம் எனவும் கொண்டு அடுத்தடுத்து வைத்தமைக்கு இயைபு காட்டிய இளம்பூரணர் மேலும் ஒருபடி இதுபற்றிச் சிந்தித்துரைக்கின்றார். நுன்மரபின் இறுதியில் சுட்டு, வினாவெழுத்துப் பற்றிய சூத்திரங்களுக்குப் பிறகு "இக் குறிகளையும் முன் குறிலென்றும் நெடிலென்றும் கூறிய வழியே கூறுகவெனின், இவை சொல் நிலைமையிற் பெறும் குறியாகலின், ஆண்டு வையாது மொழி மரபினைச் சார வைத்தார் என்க" என்று குறிப்பிடுகிறார். அஃதாவது நூன்மரபின் இறுதி மொழிமரபின் தோற்று வாயாதலை அங்ஙனம் உணர்த்துகிறார். மொழிமரபில் தனிமொழிக் குற்றியலிகரமும் புணர்மொழிக் குற்றியலிகரமும் என இவ்வாறு கூறுங்கால், அம்முன் பகுதி நூன்மரபோடு இயைபுடைமையும் உணர்த்தப்படுகிறது. மேலும் அளபெடை முடியவுள்ள முதல் ஒன்பது நூற்பாக்களுக்குப் பிறகு, "இத்துணையும் நூன் மரபின் ஒழிபு" என்கின்றார், இளம்பூரணர். இங்ஙனம் இயல்களின் இறுதியும் முதலும் தொடர்புடையவாதலை ஆங்காங்கே உணர்த்திப்போகும் உரையாசிரியர்கள் வைப்புமுறையும் இயைபும் பற்றி எவ்வளவு நுட்பமாகச் சிந்தித்திருந்தனர் என்பது கருதுதற்குரியதாகும்.

**சேனாவரையர்**

தொல்காப்பியர் எதனையும் வைப்புமுறை தவறாதெழுதுகின்றவர் என உரையாசிரியர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். வைப்பு முறையில் எதுவும் மாற்றமிருக்குமேல் அதற்கான காரணத்தையும் அவர்கள் கண்டு எழுத முற்பட்டனர்.

மேலைநாட்டினர் ஒரு துணைநூற்பட்டியல் என்றாலும் அருஞ்சொல் வரிசை என்றாலும் அகர வரிசைப்படியே எழுதுவதை நெறிமுறையெனக் கொண்டனர். அகராதித் தோற்றத்தின் அடிப்படையே அதுவாகும். இஃது இன்று கற்ற நெறியன்று. தொல்காப்பியர் காலந்தொட்டுத் தமிழ் அறிஞர் பின்பற்றிவரும் நெறியாகும்.

இந்நூற்பாவில் குற்றியலிகரம் (இ), குற்றியலுகரம் (உ) ஆய்தம் என்று சார்பெழுத்துக்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. உண்மையில்

குற்றியலுகரத்தை விளங்கிக்கொண்ட பிறகே குற்றியலிகரத்தை விளங்கிக் கொள்ளுதல் எளிதாகிறது; குற்றியலுகரமே பெரிதும் குற்றியலிகரமாக மாறுகிறது; மொழி வழக்காற்றிலும் குற்றியலுகரமே மிகுதி எனினும் தொல்காப்பியர் அகர வரிசைப்படியான முதல் இடத்தை 'இகரத்திற்கு'த் தருகிறார்; குற்றியலுகரத்தை முதலில் வைக்கவில்லை.

வேறு சில இடங்களில் தொல்காப்பியர் இவ் அகரவரிசை முறையில் மாறும்போது, சேனாவரையர் காரணம் காட்டுகின்றார்.

*ஒன்றறி கிளவி தறட ஊர்ந்த*
*குன்றிய லுகரத் திறுதியாகும்* [1]

*(தொல். சொல். 8)*

அகர வரிசைப்படி ட, த, ற என வருதல் வேண்டும். இதற்குச் சேனாவரையர் "கிடக்கை முறையாற் கூறாது த, ற, ட எனச் சிறப்பு முறையாற் கூறினார்", எனக் காரணம் காட்ட முயல்கின்றமை அறியத் தக்கது. காலமுணர்த்தலில் 'து' சிறந்து நிற்பதால் பிறவற்றிலும் முன்னதாகக் கூறப்பட்டது என்பது ஏற்கக்கூடிய காரணமாகவுளது.

*கு ஐ ஆன்என வரூஉம் இறுதி*
*அவ்வொடு சிவணும் செய்யு ளுள்ளே* [2]

*(தொல். சொல். 108)*

ஐ-இரண்டாம் வேற்றுமை உருபு, ஆன்-மூன்றாம் வேற்றுமை உருபு, கு-நான்காம் வேற்றுமை உருபு. இங்கு அம்முறைப்படி ஐ, ஆன், கு என்றுதான் கூறவேண்டும். தொல்காப்பியரோ கு, ஐ, ஆன் எனக்'கு' - என்பதை முன்பு கொண்டு வைக்கிறார். இதற்குச் சேனாவரையர் பொருத்தமான காரணம் காட்டுகிறார்: "குகரமும் ஐகாரமும் ஈறுகெட அகரத்தொடு சிவணலுடைமையான், ஐ, ஆன், கு என

---

2. 1. த, ற, ட ஊர்ந்த குற்றியலுகரம் : து, று, டு, வந்தது-து. போயிற்று-று, குறுந்தாட்டு-டு. ஒன்றன்பால் வினைமுற்று விகுதிகள்.

2. 'ஆசிரியற்க', கு-க்+உ, ஈறுகெட்டு 'அ' சேரவே ஆசிரியற்கு என்பது ஆசிரியற்க என வரும்.

'காவலோன', காவலோன்+ஐ, ஐ கெட, அ சேரக் காவலோன என ஆகும்.

'புள்ளியற் கலிமா உடைமையான', உடைமையான்+அ= உடைமையான.

முறையிற் கூறாது கு, ஐ என அவற்றை இயைய வைததார். இயைய வைக்கின்றவர் ஐகாரம் முன்வைக்கவெனின், முறை அதுவாயினும் செய்யுளின்பம் நோக்கிக் குகரம் முன்வைத்தாரெனப்து."

*முன்னிலை, வியங்கோள், வினையெஞ்சு கிளவி*
*இன்மை செப்பல், வேறென் கிளவி,*
*செய்ம்மன செய்யும் செய்த என்னும்*
*அம்முறை நின்ற ஆயெண் கிளவியும்*
*திரிபுவேறு படூஉம் செய்திய வாகி*
*இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமைய* [3]

*(தொல். சொல். 222)*

"முற்றாதலும் பலவாய்பட்டாற் பயின்று வருதலுமுடைமையான் முன்னிலை வினையை முன்வைத்தார். ஏவற்பொருண்மை முன்னிலை வினைக்கண்ணும் உண்மையின் பொருள் இயைபுடைத்தாகலானும், இடங்குறித்து முற்றாய் வருதல் ஒப்புமையானும் அதன்பின் வியங்கோள் வைத்தார். அதன்பின் முற்றாதல் ஒப்புமையான் இன்மைசெப்பல், வேறென்கிளவி செய்ம்மன என்பனவற்றை வைத்தன் முறைமை யாயினும் முற்றின்கண் வினையெச்சமுண்மையானும் ஈற்றுப் பன்மை யொடு பயின்று வருதலானும் வினையெச்சம் வைத்தார். இன்மை பற்றி வரும் வினையெச்சமும் உண்மையான், அதனோடியைய இன்மை செப்பல் வைத்தார். வினைக்குறிப்பாதல் ஒப்புமையானும் செய்ம் மனவிற் பயிற்சியுடைமையானும் அதன்பின் வேறென்கிளவி வைத்தார். முற்றாதல் ஒப்புமையான் அதன்பின் செய்ம்மன வைத்தார். முற்றாம் நிலைமையுமுடைத்தாகலின் அதன்பின் செய்யுமென்பது வைத்தார். பெயரெச்சமாதல் ஒப்புமையான், அதன்பின் செய்தவென்பது வைத்தார். இவ்வாறியைபு பற்றி வைத்தமையான் 'அம்முறை நின்ற' வென்றார்." இவ்வாறு சேனாவரையர் மேற்கண்ட நூற்பாவிலுள்ள முறை வைப்புக்குக் காரணம் காட்டுகின்றார். தொல்காப்பியரும் 'அம் முறை நின்ற ஆயெண்கிளவியும்' என்று வரிசையாய் அமைதல் பற்றிச் சுட்டிச் சொல்வதால்தான், சேனாவரையர் அதற்கான காரணங்களைக் கண்டு பிடிக்க முயல்கின்றாராதல் வேண்டும். இக் காரணங்கள் பொருத்த

---

3. நீ வருகிறாய் - மனிதனையும் உணர்த்தும்; மாட்டை நோக்கிக் கூறும்போது அதையுணர்த்தும், அவன் வரவில்லை; மாடு வரவில்லை. பா வேறு; பாவலன் வேறு.

முடையவைதானா? இவை தொல்காப்பியரே கருதியவையா? சேனா வரையர் தாமாகக் கற்பித்துக் கூறுபவையா? என்று இன்னோரன்ன கேள்விகள் இங்கு ஆராயப்படவில்லை. தாம் சொல்லவரும் செய்தியை ஒரு நெறிமுறைக்குட்படுத்தி, வரிசைப்படுத்திச் சொல்ல வேண்டும் என்ற எண்ணம் அவர்கட்கு இருந்தது என்பதே அறியத்தக்கது.

**பேராசிரியர்**

உரையாசிரியர்கள் இவ்வியைபு பற்றி நூற்பா முன்னுரை, இயல் விளக்கம் போன்ற இடங்களிலெல்லாம் நேர்முகமாகவும் போகிற போக்கிலும் சுட்டிச்செல்லுமிடங்கள் நூற்றுக்கணக்கில் உள. பேராசிரியர் மெய்ப்பாட்டியலில் இவ்வைப்புமுறையும் இயைபும் பற்றி ஆழமாகச் சிந்திக்கின்ற இடம் ஒன்றுண்டு. அழுத்தம் வைத்துக் கூறுகிற இடங்கள் மனத்தில் பதியுமாதலின் அவை மட்டும் இங்குக் காட்டப்படுகின்றன.

*நகையே அழுகை இளிவரல் மருட்கை*
*அச்சம் பெருமிதம் வெகுளி உவகைஎன்று*
*அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப.*

*(தொல். மெய்ப். 3)*

மெய்ப்பாடுகள் எட்டனையும் இங்ஙனம் வைத்ததற்குப் பேராசிரியர் தக்க காரணங்கள் தேடிக் கூறுகிறார். "மற்று நகையை முன்வைத்த தென்னையெனின் 'பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருட்கும்' இவை என்னும் இயைபில்லனவல்ல என்றற்கு, விளையாட்டுப் பொருட் டாகிய நகையை முன் வைத்தான் என்பது. அதற்கு மறுதலையாகிய அழுகையை அதன்பின் வைத்தான். இளிவரல் அதன்பின் வைத்தான். அழுகையும் இளிவரலோடு இயைபுடைமையின், தானிளிவந்து பிறிதோர் பொருளை வியக்குமாதலின் இளிவரலின்பின் வியப்பு வைத்தான். வியப்புப் பற்றியும் அச்சம் பிறத்தலின் அச்சத்தை அதன்பின் வைத்தான். அச்சத்தின் மறுதலையாகிய வீரத்தை அதன் பின் வைத்தான். அவ்வீரத்தின் பயனாகிப் பிறர்க்கு வரும் வெகுளியை அதன்பின்னே வைத்தான். வெகுளிக்கு மறுதலையாகலானும் எல்லா வற்றினும் ஈண்டு ஓதுதற்குச் சிறந்ததாகலானும் முதற்கண் ஓதிய நகைக்கு இயைபுடைத்தாகலானும் உவகையை அவ்வீற்றுக்கண் வைத்தான் என்பது." "இவ்வெட்டனுள் முதனின்ற நான்கும் முற் கூறுதற்கும் இறுதி நின்ற நான்கும் பிற்கூறுதற்கும் காரணம் வருகின்ற சூத்திரங்களானும் பெறுதும்."

இங்ஙனம் மனம் ஏற்குமாறு தக்க காரணங்கள் காட்டி வைப்பு முறை கூறுதலில் பேராசிரியர் வல்லவராய் இருக்கிறார். மேலும் இயைபு கூறுதலின் பயனாகப் பொருள் விளக்கமுறுமாறு செய்வதில் அவருக்குள்ள நுண்மாண் நுழைபுலமும் கருதத்தக்கதாகும். தொல் காப்பியப் பொருளதிகாரத்தில் இயல்களின் வைப்புக்கு அவர் கூறும் விளக்கங்கள், அவ்வப்பொருள் பற்றிய தெளிவையும் ஏற்படுத்துகின்றன. பொருளியலின் இறுதியில் 'காட்டலாகாப் பொருள்' எனக் கூறப்படுவன வற்றோடு, மெய்ப்பாடு பற்றிய மனக்குறிப்பு இயைபுடையதாகலின் மெய்ப்பாட்டியல் முன்னைய இயல்களோடு இயைபுடையதென்பது பேராசிரியர் கருத்தாகும். "மேலோத்தினோடு இவ்வோத்தினிடை இயை பென்னையோவெனின் மேலை ஓத்துக்களுட் கூறப்படும் ஒழுகலாற் றிற்கும் காட்டலாகாப் பொருள் என்றவற்றிற்கும் எல்லாம் பொதுவாகிய மனக்குறிப்பு இதுவாகலின் இவற்றை வேறு கொண்டு ஓரினமாக்கி மெய்ப்பாட்டியலென வேறோரோத்தாக வைத்தமையானே எல்லாவற் றோடும் இயைபுடைத்தென்பது", என்ற அவர் கூற்றால் இஃது உணரப்படும். அடுத்த உவமவியலின் தொடக்கத்தில், 'மற்றிது, மேல் எவ்வோத்தினோடு இயைபுடைத்தோவெனின் மேற் பொருள்புலப்பாடு கூறிய மெய்ப்பாட்டியலோடு இயைபுடைத்து; என்னை? உவமத்தாலும் பொருள் புலப்பாடே கூறுகின்றானாதலின். எங்ஙனமோவெனின், 'ஆபோலும் ஆமா' என்றக்கால் ஆமா கண்டறியாதான் காட்டுட் சென்ற வழி அதனைக் கண்டால் ஆபோலும் என்னும் உவமையே பற்றி ஆமா இதுவென்று அறியுமாகலான் என்பது", என அவர் தரும் விளக்கம் இயைபை உணர்த்துமுகத்தான் மெய்ப்பாடு, உவமை ஆகியவற்றின் அடிப்படையையும் தெளிவுறுத்துகிறது. மெய்ப்பாடு, உவமை என்பன செய்யுளுள் பொருள் புலப்பாடு பற்றியன; அவை நுண்பொருளாய் மனக்குறிப்பால் உணரற்பாலன; முன்னர்க் கூறப்பட்ட அகம் புறம் பற்றிய அனைத்திற்கும் இயைபுடையன என்றினைய செய்திகள் இவ்வியைபு பற்றிய விளக்கங்களாற் கிடைக்கின்றன.

இன்றைய ஆய்வாளர் இவ்வாறு இயல்களிடையே இயைபு அமைதலையோ, ஓரியலின் உட்தலைப்புக்களிடையே இயைபு அமைதலையோ சுட்டிக் கூறி விளக்கிப் போதல் வேண்டும் என்ற இன்றியமையாமை இன்று. தேவைப்படுமேல் ஒரோவிடத்து இயைபைச் சுட்டிக் காட்டலாம். மற்றபடி, இயல்களில் உட்பகுப்புக்களிடையேயும் இயல்களிடையேயும் வைப்பு முறையும் இயைபும் தக்க அடிப்படையில்

அமையுமாறு எழுதிப்போதல் வேண்டும் என்ற உணர்வையே இவை ஊட்டுகின்றன.

**பரிமேலழகர்**

திருவள்ளுவர் 'செலச் சொல்லவேண்டும்', 'திறனறிந்து சொல்ல வேண்டும்', 'வெல்லுஞ்சொல் இன்மையறிந்து சொல்ல வேண்டும்', 'நிரந்து இனிது சொல்லவேண்டும்' என்ற கருத்துக்களை உடையவர். எதனையும் வரன்முறைப்படுத்தி நிரலே சொல்லவந்த அவருக்கு உரை யெழுதிய பரிமேலழகர், திருக்குறளில் பால்வைப்பு, இயல்வைப்புகட்கு முறைமை காட்டுவதுடன், அதிகார முறைமையையும் தவறாது கூறிச் செல்கின்றார். ஓரதிகாரத்துள் இடம்பெறும் பத்துக் குறள்களும் இன்ன இன்ன கருத்தைக் கூறுதற்கமைந்தன என அவர் காட்டும் கருத்துரைகள் அதிகார அமைப்பை விளக்குவன. மணக்குடவர் இக்குறள் இக் கருத்தைக் கூறுகிறது என முடிப்புரை கூறுவதுண்டு. ஏனைய உரை யாசிரியர்கள் குறளுக்கு விளக்கம் கூறுவதோடமைவர். பரிமேலழகரின் இத் தனிப்போக்குக் குறள்நெறியோடு ஒன்றிய உணர்வால் வெளிப் பட்டதாகும்.

அறத்தை அதன் 'பொதுவியல்பு பற்றிய இல்லறம் துறவறம் என இருவகை நிலையால் கூறப்பட்டது' எனக்கூறி, "அவற்றுள் இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற நெறிக்கணின்று அதற்குத் துணையாகிய கற்புடை மனைவியோடும் செய்யப்படுவதாகலின், அதனை முதற்கட் கூறுவான் தொடங்கி எடுத்துக்கொண்ட இலக்கியமினிது முடித்தற்பொருட்டுக் கடவுள் வாழ்த்துக் கூறுகின்றார்" எனப் பழமேலழகர் விளக்குகின்றார். இங்ஙனம் இல்லறவியலுக்குத் தோற்றுவாய் செய்து, கடவுள் வாழ்த்துக்குக் காரணம் கூறும் பரிமேலழகர், இயல்கள்தோறும் அவற்றை விளக்குவதுடன் அவற்றிடையேயுள்ள இயைபையும் கூறிச் செல்கின்றார்.

அதிகாரமுறைமை பற்றி அவர் தரும் விளக்கங்கள் காரண காரியப் பண்பைக் காட்டுவன; அதிகாரப் பொருளைத் தெளிபுபடுத்துவன, கீழ்வரும் ஒரு சில காட்டுகளால் அவற்றின் சீர்மையை அறியலாம்.

**அதி. 5. இல்வாழ்க்கை**

அஃதாவது, இல்லாளோடு கூடிவாழ்தலினது சிறப்பு, இன்னிலை அறஞ்செய்தற்குரிய இருவகைநிலையுள் முதலாதலின், இஃது அறன் வலியுறுத்தலின் பின் வைக்கப்பட்டது.

**அதி. 6. வாழ்க்கைத் துணைநலம்**

அஃதாவது, அவ்வில்வாழ்க்கைக்குத் துணையாகிய இல்லாளது நன்மை. அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

சிலபோது அதிகாரப்பொருளை விரிவாகவும் விளக்க முற்படு கின்றார். 'அன்புடைமை' என்ற அதிகாரத் தொடக்கத்தில் அன்பின் இன்றியமையாமை பற்றி நீண்ட விளக்கம் தருகின்றார்.

**அதி. 8. அன்புடைமை**

அஃதாவது, அவ் வாழ்க்கைக்குத் துணையும் புதல்வரும் முதலிய தொடர்புடையார்கட் காதலுடையனாதல், அதிகார முறைமையும் இதனானே விளங்கும். இல்லறம் இனிது நடத்தலும் பிறவுயிர்கள்மேல் அருள்பிறத்தலும் அன்பின் பயனாகலின் இது வேண்டப்பட்டது. வாழ்க்கைத் துணைமேல் அன்பில்வழி இல்லறமினிது நடவாமை, "அறவோர்க் களித்தலும் அந்தணரோம்பலும், துறவோர்க்கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின், விருந்தெதிர் கோடலும் இழந்தவென்னை" என்பதனாலும் அதனால் அருள்பிறத்தல், "அருள் என்னும் அன்பீன் குழவி" என்பதனானும் அறிக.

பரிமேலழகர் அதிகாரப் பொருளை விளக்குதல் பெரிதும் அவ் வதிகாரத்தில் இடம்பெறும் குறட்கருத்துக்களுக்கு இயைபுடையதாய் இருக்கும். வைப்புமுறைக்குக் காட்டும் காரணங்கள் அவ்விடத்துப் பெரிதும் பொருந்துவனவாகவும் சிலவிடத்து அரிதின் முயன்று கூறப் படுவனவாகவும் மற்றும் சிலவிடத்து வலிந்து கூறப்படுவனவாகவும் காணப்படும். எவ்வாறாயினும் திருக்குறள் முழுவதும் பால்களிடை யேயும் இயல்களிடையேயும் இயைபிருக்கிறதெனவும் அதிகாரங்கள் ஒரு முறைமை கருதியே வரிசைப்படுத்தப்பட்டுள்ளன எனவும் அதிகாரத்துள் குறள்கள் வகைதொகைப்படுத்தியே கூறப்பட்டுள்ளன எனவும் இவ்வாற்றால் அவ்வறநூல் ஒரு முழுமையான வடிவமைப்புடையதெனவும் கற்பார் உணரமுடிகின்றது. கட்டமைப்பு ஒருமைப்பாட்டை இஃது எடுத்துக் காட்டுகிறது.

**அதி. 23. ஈகை**

அஃதாவது வறியராய் ஏற்றார்க்கு மாற்றாது கொடுத்தல். இது மறுமை நோக்கியதாகலின் இம்மை நோக்கிய ஒப்புரவறிதலின்பின் வைக்கப்பட்டது.

**அதி. 24. புகழ்**

அஃதாவது, இல்வாழ்க்கை முதல் ஈகையீறாகச் சொல்லப்பட்ட இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப் பயனாகி இவ்வுலகின்கண் நிகழ்ந்து இறவாது நிற்கும் கீர்த்தி. இது, பெரும்பான்மையும் ஈதல்பற்றி வருதலின், அதன்பின் வைக்கப்பட்டது.

இங்கெல்லாம் அதிகார வைப்புமுறை மிகவும் பொருட் பொருத்த மாயிருப்பது கண்கூடு. கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை போன்ற அதிகாரங்களிலும் நட்புப் பற்றிய அதிகாரங்களிலும் பரிமேலழகர் கூறும் அதிகார முறைமைக்கான காரணங்கள் படித்துணரத்தக்கன. இவை சில வெறும் பதப்பொருள்போல அமையாது, கொள்கை விளக்கங் களாகவே அமைந்து, குறள் கூறவந்த செய்தியை (Message) நமக்கு அறிவிக்கின்றன. அவையெல்லாம் தனி ஆராய்ச்சிக்குரியனவெனினும், ஈண்டு அவற்றின் பயன்பாட்டையறிந்து நிரல்படக் கூறலின் திறனை வளர்த்துக் கொள்ளுதற்கு இவை உதவுமெனலாம்.

'புகழ்' என்ற அதிகாரத்துப் பத்துக் குறள்களும் எவ்வெக் கருத்தைக் கூறுதற்காக எழுதப்பட்டுள்ளன என்பதைப் பரிமேலழகர் வகைதொகைப்படுத்திக் காட்டுகின்றார். முதல் மூன்று குறள்கள் முடிந்ததும் "இவை மூன்று பாட்டானும் புகழது சிறப்புக் கூறப்பட்டது" என்று முடிக்கின்றார். அடுத்த இரண்டு குறள்களின் இறுதியில் "இவை யிரண்டு பாட்டானும் புகழுடையாரெய்தும் மேன்மை கூறப்பட்டது" என்ற குறிப்புளது. இதுபோன்ற முடிப்புரைகள் நமக்கு உணர்த்தும் உண்மை யாது?

ஒரு கருத்தைக் கூறுவதற்குப் பத்துக் குறள்கள் ஏன்? ஒவ்வொரு குறளும் ஏதோ ஒரு கருத்தை மேலும் விளக்கத் தேவை என உணர்ந்தே பாடப்பட்டுள்ளது. ஓரதிகாரம் பல பிரிவுகளாக நின்று – உட் தலைப்புக்களில் சொல்லவந்த கருத்தை விளக்குகிறது. ஒரு கட்டுரையைப் பல உட்பகுதிகளாகப் பகுத்துக்கொண்டு எழுதுவது போன்றது இது. இப்புகழ் அதிகாரத்தின் பத்துக் குறள்களைப்பற்றியும் பரிமேலழகர் தரும் கருத்துரையின் அடிப்படையில் கீழ்வருமாறு பகுக்கலாம்:

| | | |
|---|---|---|
| *புகழது சிறப்பு* | : | மூன்று பாட்டு |
| *புகழுடையார் எய்தும் மேன்மை* | : | இரண்டு பாட்டு |
| *புகழில்லாரது தாழ்வு* | : | நான்கு பாட்டு |

*புகழுடையார் மேன்மையும்*

*புகழிலார் தாழ்வும்* : ஒரு பாட்டு

இதனைப் போலப் பல்வேறு அதிகாரங்கட்கும், குறள்களின் கருத்து அடிப்படையில் பரிமேலழகர் வகைப்படுத்திக் கூறுவனவற்றை எடுத்தெழுதினால், அவ்வதிகாரங்கள் எத்தகைய பொருளமைதி யுடையன; எவ்வாறு தாம் கூறவந்த செய்திகளைப் பகுத்தோதுகின்றன என்ற உண்மை புலப்படும்.

*வாய்மை*

*மெய்ம்மை, பொய்ம்மைகளின்*

*இலக்கணம்* : இரண்டு பாட்டு

*பொய் கூறலாகாது* : ஒரு பாட்டு

*வாய்மை கூறலின் இம்மைப்*

*பயன்* : ஒரு பாட்டு

*மறுமைப் பயனது மிகுதி* : மூன்று பாட்டு

*வாய்மையறத்தின் தலைமை* : மூன்று பாட்டு

இவ்வாறு பரிமேலழகர் அதிகாரக் கருத்துக்கள் பகுத்தோதப்பட்டு உள்ளமையைத் தமக்கேயுரிய தனிப்பாணியில் விளக்கிச் செல்கின்றார். ஒரு கருத்தைப் பற்றி நன்கு சிந்தித்து, வரன்முறைப்படுத்திக் கொண்டு எழுதத் தொடங்கவேண்டும்; இயல்களை வரிசைப்படுத்தி இயைபுபட வைத்துக் கொண்டு, ஒவ்வொன்றாக விளக்க வேண்டும். ஒரு பெருந் தலைப்பு, பல உட்தலைப்பு எனப் பகுத்துக்கொண்டு கருத்துக்களை வெளியிட வேண்டும். இந்நெறிமுறைகளைத் திருவள்ளுவர் பின்பற்றி உள்ளார் என்பதைப் பரிமேலழகர் எடுத்துக்காட்டும்பொழுது, அஃது அவ்விருவரது திறத்தையும் நமக்கு உணர்த்துவதாய் உளது.

இங்ஙனம் ஓர் ஆய்வுரை என்பது முழுமையுடையதாய், ஒருமைப் பண்புடன், கட்டுக்கோப்புப் பெற்று விளங்க வேண்டும். அதன் உட் பகுதிகள் அனைத்திற்கும் - உள்ளுறை எல்லாவற்றிற்கும் ஒரு வரிசை முறையும் இயைபும் இருக்க வேண்டும். அவ்வமைப்பையும் இயை பையும் முன்னைய இலக்கணிகள், இலக்கியப் படைப்பாளிகள், நீதி நூலாசிரியர்கள் யாவரும் பின்பற்றியுள்ளனர். நீதிநூல்கள் கருத்துக் கருவூலங்கள் ஆதலாலும் இலக்கண நூல்கள் ஆய்வேடுகள்

போன்றனவாதலாலும் அவற்றில் இவ்வமைப்பும் இயைபும் மேலோங்கிக் காணப்படும். உரையாசிரியர்கட்கு இவைபற்றிய சிந்தனை இருந்ததால், உரைதோறும் இவ்விளக்கங்களை மறவாது தருகின்றனர். இன்றைய ஆய்வாளர்கள் போற்றும் இவ்வடிப்படை நெறிகள் உலகநூல்கள் அனைத்திலும் செவ்வியற் காலந்தொட்டுப் பின்பற்றப்பட்டு வந்துள்ள உயரிய நெறிகளேயென்பதும் தமிழிலும் அந்நெறிகள் அழுத்தமாகப் பின்பற்றப்பட்டு வந்துள்ளன என்பதும் மேலே கண்ட சான்று விளக்கங் களால் உறுதிப்படும்.

2

# சிக்கல் தீர்வும் கொள்கை ஆக்கமும்

ஆராய்ச்சி என்பது எதற்காக? மனிதன் எப்பொழுதும் உண்மையைத் தேடும் நாட்டமுடையவனாய் இருக்கிறான். உண்மை தேடும் முயற்சியே ஆய்வாகும். இதில் சிக்கல் உள்ள இடங்களைத் தேடுதலும் ஐயம் உள்ள இடங்களை அறிதலும் அவைபற்றிக் கேள்விகள் பலவற்றை எழுப்புதலும் அவற்றிற்கு விடைகாண முயலுதலுமே ஆய்வாகும்.

புதிய கொள்கைகளைப் படைத்தலும் பழையவற்றிற்குப் புதிய விளக்கம் தருதலும் முன்னர் விளக்காத கோணத்தில் விளக்குதலும் ஆய்வு வட்டத்திற்குள் வரும். சான்று மூலங்களைத் தொகுத்து, அவற்றிடையே பொதுநீர்மை காணுதலும், சில விதிமுறைகளை வகுத்தலும் இதிலடங்கும்.

ஒரு மொழியில் ஒரு நூலின் காலம் நிறுவப்படாமலே உளது; ஒரு காப்பியத்தின் தோற்றம் விளக்கப்படாமலே உளது என இவ்வாறு இடைவெளியாய் உள்ளனவும் நிரப்பப்பட வேண்டும்.

ஆராய்ச்சி எங்கே தூண்டப்படுகிறது? ஆய்வுக்களம் எங்கே உருவாகிறது? தீர்வு காணவேண்டியவை இவை என எவ்வாறு தேடிக் கண்டுபிடிப்பது? சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதினும், சிக்கலுள்ள இடங்களைக் கண்டுபிடிப்பதே ஆய்வாகும் என்பர் சிலர். ஒரு மொழியின் இலக்கிய, இலக்கணத் துறைகள் சார்ந்த கருத்தரங்குகளிலும் மாநாடு களிலும் அல்லது மாநாட்டு நிகழ்ச்சிப் பதிவுகள், கருத்தரங்கவுரைத் தொகுப்புக்கள், புலமையிதழ்கள் போன்றவற்றிலும் ஆராய்ச்சி மூலங்கள் அகப்படும் என்பர்.

எனவே ஆராய்ச்சி உலகில் சிக்கல் உள்ள இடங்களைத் தேர்தலும் கொள்கை உருவாக்கங்களைப் படைத்தலும் இன்றியமை யாதனவாகும். இதற்கு நம் உரையாசிரியர்கள் இரு வகையில் உதவுகின்றனர். தாமே அத்தகையவற்றைத் தேடி, ஆராய்ந்து தீர்வு காண முயல்கின்றனர், அல்லது அத்தகைய இடங்களை இனங்காட்டிச் செல்கின்றனர். தமிழ் ஆராய்ச்சிக்கான மூலங்களை நல்குதலில், உரை நூல்களுக்குப் பேரிடம் உண்டு. அது மட்டுமன்றி, உரையாசிரியர்கள் முன்மாதிரிகாட்டி ஆய்வு செய்து சிறந்த ஆய்வு வழிகாட்டிகளாகவும் விளங்குகின்றனர். அதனால்தான், இன்றைய தமிழ் ஆய்வாளர்கள் உரையாசிரியர்களின் உரைகளைப் படித்துப் பழகிப் பயிற்சிபெற வேண்டும் என வற்புறுத்தப்படுகிறது. மேனாட்டு ஆய்வுநெறிகளைக் கற்றால்மட்டும் போதாது? அஃது ஒரு பகுதியைத்தான் நிறைவு செய்கிறது. தமிழ் ஆய்வாளனின் சீர்மை, இம் மறுபகுதியை மனங்கொள்வதில் இருக்கிறது. தமிழ் மரபுப்படி ஆய்வை மேற்கொள்ள, தமிழிலுள்ள ஆய்வுக்களங்களை நினைவுகொள்ள இஃது உதவுகின்றது.

**நெடுநல்வாடை அகமா? புறமா?**

நக்கீரர் பெருமான் நெடுநல்வாடையைப் பாடும்பொழுது அகப் பாடலாகவே பாடினாலும், அஃது பாண்டியன் நெடுஞ்செழியனைப் பற்றியதே என்பதையும் குறிப்பால் உணர்த்த எண்ணினார். இதில் தம் தனித்திறனை வெளிப்படுத்தி அந் நீண்ட பாடலில் பாண்டியனின் அரண் மனையை வருணித்து, அம் மன்னன் பாண்டியனே என்பதை உணர்த்த ஒரு சிறுகுறிப்பையும் பெய்து பாடிச்சென்றார். இதனால் புலவர்க்கிடையே இப் பாடல் அகமாகுமா என்ற கேள்வி பிறந்தது.

நச்சினார்க்கினியர் இதற்கு உரையெழுதுமிடத்துத் தாமும் இச் சிக்கலுள் அகப்பட்டுக்கொண்டமையை நமக்கு உணர்த்தித் தம்மாலும் விடுவிக்க முடியாது போலவும் எதிர்வரும் ஆய்வாளர்கள் இதுபற்றிச் சிந்திக்கட்டும் என்பது போலவும் மாறுபட்ட பல கருத்துக்களை இப் பாடலின் முற்பகுதியுரையிலும் இறுதியிலும் தந்து செல்கிறார்.

“இப் பாட்டினுள், ‘கூதிர்நின்றன்றாற் போதே’ எனவும் ‘கூதிர்ப் பானாள்’ எனவும் கூறுகின்றாராகலின், இது ‘வாகை தானே பாலையது புறனே’ எனப் பாலைக்குப் புறனாகக் கூறிய வாகைத்திணையாய் அதனுள் ‘கூதிர் வேனில் என்றிரு பாசறைக் காதலின் ஒன்றிக்கண்ணிய மரபினும்’ எனக்கூறிய கூதிர்ப் பாசறையேயாயிற்று”, என்று முதற்கண்

இனியர் மொழிகின்றார். இதன்படி வாகைத்திணையும் கூதிர்ப்பாசறைத் துறையும் என்று இப்பபாட்டினைக் கொள்ள வேண்டும்.

அடுத்து இவர், "தலைவனைப் பிரிந்திருந்து வருந்துந் தலைவிக்கு ஒரு பொழுது ஓரூழிபோல நெடிதாகிய வாடையாய்ப் பாலையாகிய உரிப் பொருளுணர்த்திற்று. அகத்தொடுங்கிப் போகம் நுகர்வார்க்குச் சிறந்த காலமாயினும் அரசன் போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறானாய் அப்போகத்தில் மனமற்று வேற்றுப் புலத்துப் போந்திருக்கின்ற இருப் பாகலின் அவற்கு நல்லதாகிய வாடையிற்று. எனவே காமத்திடத்து வெற்றியெய்தலின் வாகைத்திணையாயிற்று. இப்பாட்டுச் சுட்டி ஒருவர்ப் பெயர் கொள்ளாமையின் அகப்பொருளாமேனும் 'வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகம்' என விரித்துரைக்கின்றார். இதனால் இது அகப் பொருளே பாடுகிறதென்றாலும் அடையாளப்பூக் கூறப்பட்டமையால் புறமெனப்பட்டது எனவும் அகத்தில் பாலை உரிப்பொருள் அமைந்துளது எனவும் அரசனுக்கு அகம் சார்ந்த நிலையிலும் வாகைத்திணையே யாகும் எனவும் நச்சினார்க்கினியர் கருதுகின்றார் என இதனாலறியலாம்.

இனி உரையின் முடிவில் இனியர், "இப்பாட்டுத் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மண்ணாசையால் சென்று பொருதலின், இப்போர் வஞ்சியாகலின் வஞ்சிக்குக் கொற்றவை நிலை யுண்மையின், கொற்றவையை வெற்றிப் பொருட்டுப் பரவுதல் கூறினார்; அது பாலைத்திணைக்கு ஏற்றலின்", என்று குறிப்பிடுகின்றார். இதன்படி வஞ்சித் திணையும் கொற்றவை நிலைத் துறையுமாக வேண்டும். கொற்றவையைப் பரவுதல் பாலைத் திணைக்கும் ஏற்றதென ஒரு சமாதானம் கூறிக்கொள்கிறார்.

ஆக, நச்சினார்க்கினியர் என்னதான் கருதுகிறார்? தொடங்கும் போது ஒன்று, முடிக்கும்போது ஒன்று கூறுகிறாரே?

| ***திணை*** | ***துறை*** |
|---|---|
| *வாகை* | *கூதிர்ப் பாசறை* |
| *பாலை* | *தலைவி பிரிவில் வருந்துதல்* |
| *வஞ்சி* | *கொற்றவைநிலை* |

இனியர் மிகவும் குழம்பிப்போய், இப்பாடலின் திணை, துறைகளை வரையறுக்கமாட்டாமல் தடுமாறுகிறார். ஏனெனில் வஞ்சிக்குரிய கூறு, கொற்றவை பரவுதல், தலைவி பிரிவுவருத்தம், கூதிர் வருணனை,

வாகைக்கான கூறு என யாவும் இவ்வொரு பாடலில் காணப்படுவதாக அவர் கருதுகிறார். இந் நெடுநல் வாடையின் திணையாய்பு இன்றளவும் நடைபெற்று வரவே செய்கிறது. ஓராய்வாளன் முடிபுகளைப்பற்றிக் கவலைப்படுதல் கூடாது. அதற்காக ஆபத்தான சிக்கலுள்ள இடங்களை விட்டு விலகக்கூடாது. அதனால்தான் ஒரு சிக்கலுக்கு முடிவு கூறு கிறோமா என்று பார்ப்பதைப்போல, அச்சிக்கலை முறைப்படி அணுக முயல்கிறோமா என்பதையும் மேனாட்டார் கவனிக்கின்றனர். ஓர் ஆய்வாளர் குறிப்பிட்ட ஒரு கேள்வியில், கொண்டு செல்லும் முடிபு நமக்கு உடன்பாடாகாமல் போகலாம்; அதற்கு அவர் முறையான நெறிவழி ஆய்ந்து சென்றுள்ளாரா என்பதைக் கொண்டே நாம் அவரை மதிப்பீடு செய்ய வேண்டும். "ஒருவர் ஓர் ஆய்வேட்டில் எடுத்த முடிவு, மற்றொருவரின் ஆய்வுரையில் அடிக்குறிப்பில் மறுக்கப்பட்டுப் போதல் கூடும்" என்பர் மேனாட்டார். நாம் ஒரு சிலவற்றிலேயே முடிந்த முடிபு களைக் காணுதல் கூடும்; பலவற்றில் முடிபுகளை நோக்கி முன்னேறக் கூடுமே தவிர அடித்துப்பேசி முடித்துவிட முடியாது.

எனவேதான் சிக்கலுண்மையைச் சுட்டிச்சென்ற இனியர் சிறந்த ஆய்வுக் களத்தை நல்கியவராக மதிக்கப்படுகிறார்.

**அகம் புறமும் அறம் பொருள் இன்பமும்**

உரையாசிரியர்கள் கூறிய முடிபுகள் சரியா என்பது பற்றியோ, அவர்களின் கால உணர்வுகட்கு ஏற்ப அவர்கள் எழுப்பிய கேள்விகள் சரியா என்பது பற்றியோ நமக்கு இவண் அக்கறையில்லை. சிக்கலுள்ள அல்லது புலனாக்கவேண்டிய இடங்களைத் தேர்தல், அவை பற்றிய இருளை விலக்கி அறிவொளி பாய்ச்சுதல், ஆய்வு நோக்கத்தோடு அணுகுதல் ஆகிய பழக்கங்களைப் பெறுமுகத்தான் நாம் இப்பகுதி களைத் தனித்தெடுத்துத் திரும்பப் பார்க்கிறோம். 'வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்' என்பதுபோல இவை ஆய்வுச் சிந்தனைப் பழக்கத்தை ஏற்படுத்தும்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு உரை எழுதுமுன், முன்னுரை எழுதத் தொடங்கிய இளம்பூரணருக்கு ஓர் ஐயப்பாடு தோன்றியது. அகம், புறம் யாதென அவர் விளக்கினார். உடனே நூலால் அடையத் தக்கன அறம் பொருள் இன்பம் வீடு என்பன அன்றே; இவை அகம் புறம் என்பவற்றில் அடங்குமா? என ஒரு கேள்வியை எழுப்பிக் கொண்டார். அகத்தினுள்ளும் புறத்தினுள்ளும் அறம் பொருள் இன்பம்

வீடு நான்கும் கூறப்படுவதாக, ஒருவாறு வலிந்து அடக்கிக் கூறுகின்றார். அவர் கூற்று வருமாறு:

"அகப்பொருளாவது போகநுகர்ச்சியாகலான் அதனான் ஆய பயன் தானே அறிதலின் அகம் என்றார்.

புறப்பொருளாவது மறஞ்செய்தலும் அறஞ்செய்தலும் ஆகலான் அவற்றான் ஆய பயன் பிறர்க்குப் புலனாகலின் புறம் என்றார்.

அஃதற்றாக அறம் பொருள் இன்பம் வீடு என உலகத்தோரும் சமயத்தோரும் கூறுகின்ற பொருள் யாதனுள் அடங்குமெனின் அவையும் உரிப்பொருளினுள் அடங்கும். என்னை?"

என்று மேற்கண்டவாறு பூரணர் ஒரு கேள்வியை எழுப்பிக் கொள்கின்றார். வாகைத்திணையுள் கூறப்படும் ஒருசிலவற்றால் *அறமும் வீடும்* அடங்கின எனவும் வெட்சி முதல் தும்பை ஈறாகவும் வாகையுள் ஒரு பகுதியும் காஞ்சியிற் கூறப்படும் நிலையாமையும் பாடாண் பகுதியும் ஆகியவை ***பொருளில்*** அடங்கும் எனவும் அகத்திணை இயல் முதலியவற்றால் இன்பப் பகுதி கூறப்பட்டது எனவும் அவர் விடையும் பகர்கின்றார். மேலும் ஒரு வினா எழுகிறது, "அங்ஙன மேல் அறம்பொருள் இரண்டும் சங்கநூல்களுள் விரித்துக் கூறப் படாமல் காதலும் வீரமுமே பாடப்படுகின்றனவே, அது பொருந்துமா?" என்பதே அவ்வினா. அதற்கும் பூரணர் தம்மாலியன்றவாறு விடை சொன்ன முயலுதல் காண்க: "அஃதேல் பிற நூலாசிரியர் விரித்துக் கூறினாற்போல, அறமும் பொருளும் விரித்துக் கூறாதது என்னையோ வெனின், உலகத்தில் நூல்செய்வார் செய்கின்றது அறிவிலாதாரை அறிவு கொளுத்த வேண்டியன்றே; யாதானும் விரித்தோதிய பொருளைத் தாமும் விரித்தோதுவாராயின், ஓதுகின்றதனால் பயன் இன்றாமாதலால், முன்னூலாசிரியர் விரித்துக் கூறின பொருளைத் தொகுத்துக் கூறலும் தொகுத்துக் கூறின பொருளை விரித்துக் கூறலும் நூல் செய்வார் செய்யும் மரபென்றுணர்க. அஃதேல் இந்நூலகத்து விரித்துக் கூறிய பொருள் யாதெனின் காமப்பகுதியும் வீரப்பகுதியும் என்க."

இக்கூற்று, இன்றைய நிலையில் முற்றிலும் ஏற்கத்தக்கதாகுமா என்பது கருதத்தக்கதாயினும், இப்படி ஒரு கேள்வி தொன்றுதொட்டுக் கேட்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை அறிதல் பயனுடையதாகுமன்றோ?

'களவியல்' எனத் தொடங்கும்போதே தொல்காப்பியருக்கு ஒரு தயக்கம் ஏற்படுகிறது. களவு என்ற சொல்லால் நம் நூல் அறம்

பொருள் இன்பம் என்ற குறிக்கோள்களைவிட்டு விலகிப் போகின்றது என யாரும் எண்ணக்கூடுமோ என அவர் ஐயுறுகின்றார். அதனால் களவியலைத் தொடங்கும்போதே அவர் அவ் ஐயத்தை அகற்ற முயல்கின்றார்.

*இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு*
*அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்*
*காமக் கூட்டம் காணுங் காலை*
*மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்*
*துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே*

*(தொல். சொல். களவு. 1)*

காமக் கூட்டமாகிய 'களவு' அறம் பொருள் இன்ப வழிப்பட்டதே எனத் தொல்காப்பியரே அரண் செய்து கொள்கிறார். இதனுரைக்கண் இளம்பூரணர், "இதனாற் சொல்லியது ஈண்டுக்களவென் றோதப் படுகின்ற ஒழுக்கம் அறம் பயவாத புறநெறியன்று" என முடித்தலும் காணலாம்.

இதனை அடியொட்டி, இறையனார் அகப்பொருள் உரையாசிரியர் நீண்ட விளக்கம் தந்து, 'களவியலை' முறைமையானதென நிறுவ முயல்கின்றார். சமயங்களின் ஆட்சி மிக ஓங்கிய இடைக்காலத்தில், சங்ககால அகத்திணைக் கோட்பாடுகளை களவு போன்றவற்றை, நியாயப்படுத்தவும் உலகம் ஏற்குமாறு செய்யவும் அறிஞர்கள் மேற் கொண்ட முயற்சிகளை இவ்வுரைகள் விளக்குகின்றன. "களவு என்ற சொற்கேட்டு உடனே தீதென்ற முடிவுக்கு வரக்கூடாது; களவு, காமம் முதலியன நல்லனவாகும் இடமும் உண்டு. நஞ்சுண்டு சாக நினைத் தவளைக் காப்பாற்ற அந்நஞ்சைத் திருடிக்கொண்டு போய்க் கொட்டி விடுதல் நல்லதன்றோ? அதுபோலக் காமமும் நன்மை பயக்கும் இடங்கள் உள."

"இனித் தலையாயினார் காமம் தீதெனத் தாமே உணர்ந்து நீங்குவர். இடையாயினார் அதன் தீமைகளைக் கேட்டு விலகுவர். கடையாயினார் அதனாலும் நீங்கார். அவர்க்கு அதில் ஆசைகாட்டியே, பிறகு அதனின் நீங்கச் செய்ய வேண்டும்." இவ்வாறு காரண காரிய இயைபுபடக் களவும் நன்றே என விவாதிக்கும் இடம் சிறப்புடைய தாகலின், அப்பகுதி முழுவதும் கீழே தரப்படுகிறது.

"என்னை? இது களவியலன்றே, இது கற்க வீடுபேறு பயக்குமாறு என்னை? களவு கொலை காமம் இணைவிழைச்சு என்பனவன்றோ சமயத்தாரானும் உலகத்தாரானும் கடியப்பட்டன. அவற்றுள் ஒன்றன் றாலோ இஃதெனின், அற்றன்று. களவு என்னும் சொற்கேட்டுக் களவு தீதென்பதூஉம் அன்று; மற்று அவை நல்ல ஆமாறும் உண்டு. என்னை? ஒரு பெண்டாட்டி தமரொடு கலாய்த்து நஞ்சுண்டு சாவல் என்னும் உள்ளத்தளாய் நஞ்சு கூட்டி வைத்து, விலக்குவாரை இல்லாத போழ்து உண்பல் என்று நின்றவிடத்து, அருளுடையானொருவன் அதனைக் கண்டு, இவள் இதனை உண்டு சாவாமற் கொண்டுபோய் உகுப்பன் என்று அவளைக் காணாமே கொண்டுபோய் உகுத்திட்டான்; அவளும் சனநீக்கத்துக்கண் நஞ்சுண்டு சாவான் சென்றாள்; அது காணாளாய்ச் சாக்காடு நீங்கினாள். அவன் அக்களவினான் அவளை உய்யக் கொண்டமையின் நல்லூழில் செல்லும் என்பது. மற்றும் இது போல்வன களவாகா, நன்மை பயக்கும் என்பது.

இனிக் காமம் நன்றாமாறும் உண்டு. சுவர்க்கத்தின்கண் சென்று போகந்துய்ப்பல் என்றும் உத்தரகுருவின்கண் சென்று போகந்துய்ப்பல் என்றும் நன்ஞானம் கற்று வீடுபெறுவல் என்றும் தெய்வத்தை வழிபடுவல் என்றும் எழுந்த காமம் கண்டாயன்றே? மேன்மக்களானும் புகழப்பட்டு மறுமைக்கும் உறுதிபயக்கும் ஆதலின், இக்காமம் பெரிதும் உறுதியுடைத்து என்பது.

உறுதி உடைத்தாமாறு:

அறுவகைப்பட்ட பாசாண்டிகளும் இணைவிழைச்சுத் தீதென்ப. அஃது உண்டாமிடத்துச் சுற்றத்தொடர்ச்சி உண்டாம். உண்டாகவே கொலையே களவே வெகுளியே செருக்கே மானமே என்று இத் தொடக்கத்துக் குற்றம் நிகழும் என்பது. அது கேட்கவே, தலையாயினார் அதன்கணின்று நீங்குவர்.

இனி, இடையாயினார் பெண் என்பது [1]எற்புச் சட்டகம், முடைக் குரம்பை, புழுப்பிண்டம், பைம்மறியா நோக்கப் பருந்தார்க்கும் தகை மைத்து; ஐயும் பித்தும் வளியும் குடரும் கொழுவும் புரளியும் நரம்பும்

---

2. எற்பு - எலும்பு. முடைநாற்றம் வீசும் கூடு. புழு நெளியும் பிண்டம், பையை உட்புறம் வெளிப்புறமாய் மறித்துப் போடுவதுபோல, உடம்பினுள்ளிருப்பவற்றை நோக்கினால் பருந்துகள் தின்பதற்கு ஆரவாரிக்கும் தன்மையது. வாயு, பித்தம் முதலியன கொண்ட உடல் ஒரு பொருளன்று.

மூத்திரபுரீடங்களும் என்று இவற்றது இயைபு பொருளன்று; பொருளாயின் பூவே சாந்தே பாகே எண்ணெயே அணிகலனே என்றிவற்றால் புனைய வேண்டா தான் இயல்பாகவே நன்றாயின் என்று அதன் அசுபத் தன்மை உரைப்பக் கேட்டு நீங்குவர்.

கடையாயினார் எத்திறத்தானும் நீங்கார்; என்னை பல் பிறப்பிடை ஆணும் பெண்ணுமாய்ப் பயின்று, போகந்துய்த்து வருகின்றமையின், அவர்க்கு இது காட்டப்பட்டது. என்னை? 'பேதையைக் காதல் காட்டிக் கைவிடுக்க' என்பதனால் அவன் தாழப்பட்ட இணைவிழைச்சினுள்ளே மிக்கதொன்று காட்டப்பட்டது. எஞ்ஞான்றும் மூப்புப் பிணி சாக்காடு இல்லது, நிச்ச நிரப்பு இடும்பை இல்லது; இவனும் பதினாறாட்டைப் பிராயத்தானாய் இவளும் பன்னீராட்டைப் பிராயத்தாளாய், ஒத்த பண்பும் ஒத்த நலனும் ஒத்த அன்பும் ஒத்த செல்வமும் ஒத்த கல்வியும் உடையாராய்ப் பிறிதொன்றிற்கு ஊனமின்றிப் போகந் துய்ப்பர் என்று காட்டப்பட்டது என்பது, என்போலவோஎனின் [2]கடுத்தின்னாதானைக் கட்டி பூசிக் கடுத்தீற்றியவாறு போலவும், கலங்கற்சின்னீர் தெருளாமை யான் உண்பானை, அறிவுடையான் ஒருவன் பேய்த்தேரைக் காட்டி 'உதுக் காணாய், நல்லதொரு நீர் தோன்றுகின்றது, அந்நீர் பருகாய், இச்சேற்றுநீர் பருகி என் செய்தி!' என்று கொண்டுபோய் நன்னீர் காட்டி ஊட்டியது போலவும், தான் ஒழுகாநின்றதோர் இணைவிழைச்சினுள்ளே மிக்கதோர் ஒழுக்கம் காட்டினான். காட்டவே கண்டு 'இது பெறுமாறு என்னை கொல்லோ?' என்னும்; எனவே மக்கட் பாட்டினானும் வலியானும் வனப்பானும் பொருளானும் பெறலாவதன்று, தவஞ் செய்தால் பெறல் ஆம்;

*என்னை? 'வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்*
*ஈண்டு முயலப் படும்;* என்பவாகலான் என்பது.

அதுகேட்டு இனி யானும் தவம் செய்து இதனைப் பெறுவல் என்று அதன் மாட்டு வேட்கையால் தவஞ்செய்யும்; செய்யா நின்றானைப் 'பாவீ, இதன் படித்ததோ வீடுபேற்றின்பம்?' என்று வீடுபேற்றின்பத்தை விரித்து உரைக்கும். அதுதான் பிறப்புப் பிணி மூப்புச் சாக்காட்டு அவலக் கவலைக் கையாற்றின் நீங்கி மணியினது ஒளியும் மலரினது நாற்றமும் சந்தனத்தது தட்பமும்போல, உள்நின்று எழுதரும் ஒரு

---

2. கடு - கசப்பு மருந்து. கட்டி - வெல்லக்கட்டி, தீற்றியவாறு - மேற்பூசி உண்ண வைப்பது.

பேரின்ப வெள்ளத்தது என்பது கேட்டு, அதனைவிட்டு, வீடுபேற்றின் கண்ணே அவாவி நின்று தவமும் ஞானமும் புரிந்து வீடு பெறுவானாம் என்பது, அவனை வஞ்சித்துக் கொண்டுசென்று, நன்னெறிக்கண் நிறீஇ-யினமையின் களவியல் என்னும் குறிபெற்றது."

'களவும் ஏற்புடையதே என நிறுவ, இவ்வுரையாசிரியர் எடுத்துக் கொண்ட முயற்சி பெரியதாகும். இவற்றையெல்லாம் தெரிந்து கொள்ளுதலால் பயன் என்ன?

'களவு' என்பது உண்மையிலேயே இழிந்ததாகக் கருதப்படும் களவுதான். சமூகமானுடவியல் கற்றார் இதை நன்கறிவர். மாந்தன் தொடக்க காலத்தில் காட்டுமிரண்டிபோல்-பழங்குடி மக்களாய் வாழ்ந்த போது தான் விரும்பிய பெண்ணைக் களவில் திருடிக்கொண்டு – தூக்கிக் கொண்டு போய்விடுவான். பிறகு அப்பெண் அவனுடன்தான் வாழ்வாள். திருடிக்கொண்டு போவதே அன்றைய திருமணம். மனிதன் நாகரிகம் அடைய அடைய விரும்பியவளை அழைத்துக்கொண்டு போக வேண்டும்; மனமொன்றிய பிறகு உடன்போக வேண்டும் என்ற நியதிகள் ஏற்பட்டன; சில சடங்குகள் புகுத்தப்பட்டன.

களவை ஏற்கத்தக்கதாக வாழ்விலும் இலக்கியத்திலும் கைக் கொண்ட பிறகும் அச்சொல் சான்றோர்களுக்குத் தயக்கத்தைத் தந்திருக்கிறது. தொல்காப்பியரே காமக்கூட்டம், காமப்புணர்ச்சி, மறை என்ற சொற்களால் களவைக் குறிக்க முயலுகின்றமை காண்கிறோம். இடைக்காலத்துச் சமயவுணர்வால், களவும் வீடுபேற்றை நல்கும் என விளக்கம் தரவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

இங்ஙனம் சமூகமானுடவியல், உளவியல் போன்றவற்றுடன் தொடர்புபடுத்தி ஆராய விரும்புவார்க்கு இக் குறிப்புகள் பெரிதும் பயன்படும்.

**அகப்பொருள் பற்றிய புனைவு**
**உள்ளதா? இல்லதா?**

கல்வி, ஒழுக்கம், உரு, திரு போன்றவற்றால் ஒப்புமையுடைய இருவர் கண்டு காதல்கொண்டதாகவும் களவு நிகழ்த்திக் கற்புப் பூண்டு இல்லறம் ஏற்றதாகவும் கூறுவன எல்லாம் முழுக்க முழுக்கக் கற்பனையே; உலகியலில் காணாதன என்பது இறையனாரகப்பொருள் உரையாசிரியர் கருத்தாகும். வடமொழியிற் கூறப்படும் எண்வகை மணங்களும் உலகில் நடப்பன என்றும் அவர் கூறுகிறார்; "அவ் வெட்டும்

உலகியலில் உள்ளன; இஃது அன்னதன்று; இல்லது இனியது நல்லது என்று புலவரால் நாட்டப்பட்டதோர் ஒழுக்கமாதலின் இதனை உலக வழக்கத்தினோடு இயையான் என்பது." இதனை இவ்வுரையாசிரியர் மீட்டும்மீட்டும் தம் உரையில் வற்புறுத்துகிறார்.

தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியருக்கு இஃது உடன்பாடன்று. இதனை அவர் இரண்டு இடங்களில் மறுத்துக் கூறுகிறார். இவை இன்று மேனாட்டர் கூறும் நடப்பியல், புனைவியல் ஆகியவற்றோடு உடன்வைத்துச் சிந்திக்கத்தக்கனவாய் உள்ளன. முதற்கண் இனியர் அகத்திணையியல் மூன்றாம் சூத்திரவுரையில், "இஃது இல்லதெனப்படாது உலகியலேயாம். உலகியலின்றேல் ஆகாயப்பூ நாறிற்றென்றுழி அது சூடக் கருதுவாருமின்றி மயங்கக்கூறினான் என்று உலகம் இழித்திடப்படுதலின் இதுவும் இழித்திடப்படும்" என்று பொருத்தமுற விளக்கிக் கூறுகின்றார்.

மேலும் அவர் இதனை நாடக வழக்கெனக் கொண்டதற்கான காரணத்தையும் எடுத்துச் சொல்கின்றார்; "இச் செய்யுள் வழக்கினை நாடக வழக்கென மேற்கூறினார் எவ்விடத்தும் எக்காலத்தும் ஒப்ப நிகழும் உலகியல் போலாது, உள்ளோன் தலைவனாக இல்லது புணர்த்தல் முதலாகப் புனைந்துரை வகையாற் கூறும் நாடக இலக்கணம் போல யாதானுமொரோவழி ஒரு சாரார் மாட்டு உலகியலான் நிகழும் ஒழுக்கத் தினை எல்லார்க்கும் பொதுவாக்கி இடமும் காலமும் நியமித்துச் செய்யுட் செய்த ஒப்புமை நோக்கி, மற்று இல்லோன் தலைவனாக இல்லது புணர்க்கும் நாடக வழக்குப்போல் ஈண்டுக் கொள்ளாமை 'நாடக வழக்கு' என்னும் சூத்திரத்துட் கூறுதும்."

'நாடக வழக்கினும்...' என்னும் சூத்திரத்திற்கு உரையெழுதுமிடத்து (தொல். பொருள். அகத்.53) நச்சினார்க்கினியர், 'நாடக வழக்கு' என்பதைப் 'புனைந்துரை வகை' என விளக்குகின்றார். மேலும் அதைத் தெளிவுபடுத்துமிடத்து, முற்கூறிய இறையனார் அகப்பொருள் உரையை விரிவாகத் தக்க காரணம் காட்டி மறுக்கின்றார்; "புனைந்துரை வகையால் கூறுபவென்றலின் புலவர் இல்லனவும் கூறுபவாலோவெனின், உலகத் தோர்க்கு நன்மை பயத்தற்கு நல்லோர்க்குள்ளனவற்றை ஒழிந்தோர் அறிந்தொழுகுதல் அறமெனக் கருதி, அந்நல்லோர்க்குள்ளவற்றில் சிறிது இல்லனவும் கூறுதலன்றி, யாண்டும் எஞ்ஞான்றும் இல்லன கூறார் என்றற்கு அன்றே நாடகமென்னாது வழக்கென்பாராயிற்றென்பது."

புணர்ச்சி, உலகிற்குப் பொதுவாயினும் குறிஞ்சியில் உயர்ந்தோர் மாட்டுப் புணர்ச்சி நிகழும் என்று முதல்கருவரி என வரையறுப்பது நாடக வழக்காகும் என்று இனியர் தெளிவுறுத்துகின்றார்.

இங்கு நாடக வழக்கென்பது இல்லதென ஆகாது என மீண்டும் அவர் வற்புறுத்தும் அருமை சிந்திக்கத்தக்கதாகும்: "இப் புலநெறி வழக்கினை இல்லது இனியது, புலவரால் நாட்டப்பட்டதென்னாமோ எனின், இல்லதென்று கேட்டோர்க்கு மெய்ப்பாடு பிறந்து இன்பம் செய்யா தாகலானும் உடன் கூறிய உலகியல் வழக்கத்தினை ஒழித்தல் வேண்டு மாகலானும் அது பொருந்தாது. அல்லதூஉம் அங்ஙனம் கொண்ட இறையனார் களவியலுள்ளும் 'வேந்துவினை இயற்கை பார்ப்பார்க் குரித்தே', 'அரசரல்லா ஏனையோர்க்கும் புரைவதென்ப ஓரிடத்தான' எனவும் 'வேந்தற்குற்றுழிப் பொருட்பிணிப் பிரிவென்று ஆங்கவ்விரண்டும் இழிந்தோர்க்குரிய' எனவும் நான்கு வருணமும் கூறி நால்வகைத் தலை மக்களையும் உணர்த்தலின் இல்லதென்பது தொல்லாசிரியர் தமிழ் வழக்கன்றென மறுக்க. இக்கருத்தானே மேலும் 'மக்கள் நுதலிய அகனைந்திணையும்' என்பர்."

சங்க இலக்கியத்தின் அகப்பாடல்கள் உலக வழக்கத்தை ஒட்டிப் பிறந்தன அல்ல அவை என்றுமே இல்லாதன, இனியன என்பதாலும் நல்லன என்பதாலும் புலவரால் முற்றிலும் கற்பனையாகப் படைக்கப் பட்டன என்பது ஒரு குழுவினர் கருத்தாகும். மறு குழுவினர் உலகத்து உயர்ந்தோரிடம் காணப்படும் இவ்வழக்காறு எல்லோர்க்கும் நன்மை பயக்கும் என்பதால் பொதுமைப்படுத்தி நாடக வழக்குப்படப் படைக்கப் படுகின்றது என்று கருதுகின்றனர். இக் கருத்து மோதலால் பல உண்மைகள் புலனாக வழியுளது. இறையனாரகப்பொருள் உரை யாசிரியர் தொடங்கிவைத்த இதனை நச்சினார்க்கினியர் தம் மறுப்புரை யால் விரிவுபடுத்தினார். மேலும் இது தொடர்ந்து தடைவிடைகளால் ஆராயப்பட்டிருந்தால் தமிழில் திறனாய்வுத் துறை வளர்ந்திருக்கும்.

தொல்காப்பியர் 'மக்கள் நுதலிய அகன் ஐந்திணை' (1000) என்றதுடன் 'உயர்ந்தோர் கிளவியும் வழக்கொடு புணர்தலின், வழக்கு வழிப் படுத்தல் செய்யுட்குக்கடனே' (1163) என்றும் கூறுகின்றார். இவை உலகத்தில் அரிதில் காணப்படும் பண்புடைய மேன்மக்களைப் பற்றியனவே என்பதை அவர் பலவிடத்தும் உணர்த்திச் செல்கிறார் (966-972). மேலைநாட்டார் முன்மாதிரியைப் போற்றும் மூலநலவியல் அல்லது குறிக்கோளியல் (Idealism), நடப்பியல் (Realism), புனைவியல்

(Romanticism) போன்றவை சங்க இலக்கியத்து அமைந்துள்ள திறம் யாது? சங்கப் பாடல்களின் செவ்வியற் பண்புகள் யாவை? என ஆராய்வார்க்கு முற்காட்டிய ஆய்வுகள் நல்ல தோற்றுவாயாதலை அறிக. நம் முன்னோர் எங்ஙனம் ஆய்வுக்களங்களை வகுத்துச் சென்றனர் என்பதே நாம் இவற்றால் அறியத்தக்கதாகும்.

**அணியா? பொருளுறுப்பா?**

தொல்காப்பியர் உவமவியல் என ஒன்று வகுத்தாரே தவிர அணியியல் என ஒன்றை வகுக்கவில்லை. ஏன்? அவருக்கு அலங் காரம் பற்றித் தெரியாதா? வண்ணம், வனப்பு, பொருள்கோள், கூற்று, துறைகளில் எல்லாம் பல்வேறு அணிகளைப் பொதிந்துவைத்த அவர், தனியே அணியியல் என ஓரியல் அமைக்காத காரணம் என்ன?

செய்யுளியலில் அதன் உறுப்புக்களாக 34 கூறுகளை வரிசைப் படுத்திக் கூறும் அவர், அதில் ஒன்றாக உவமையைச் சொல்லாதது ஏன்? கூற்று என்பதையே செய்யுளுறுப்பாக்கி, உவமையை அதைச் சிறப்பிக்க வரும் பண்பாக்கும் அவர் கருத்துச் சிந்தித்தற்குரியதாகும்.

தமிழர்களுக்கு அணியிலக்கணம் பற்றி எதுவுமே தெரியாது; தண்டி ஆசிரியர் எழுதிய தண்டியலங்காரம் தமிழில் வெளிவந்த பிறகே அவர்கள் அலங்காரம் அல்லது அணி என்றால் யாதெனத் தெரிந்து கொண்டனர். இவ்வாறு விவாதிப்பவர்கள் இருக்கிறார்கள்; விவாதிக்க இடமிருக்கிறது.

தொல்காப்பியர்க்கு அணியிலக்கணம் பற்றித் தெரிந்திருந்தும் அதை அவர் ஏற்கவில்லை. அக் கருத்துச் சரியா, தவறா? என்பது வேறு. அவர் வேண்டுமென்றே அதை விட்டுவிட்டார்.

தமிழர் கண்ட இலக்கியக் கோட்பாட்டில் 'அணிக்கு' எனத் தனி யிடமில்லை. இது பற்றிய சிந்தனையைப் பேராசிரியர் முதன்முதல் கிளர்கின்றார். உவமவியலுக்கு உரையெழுதி முடிக்கும்போது இதுபற்றிய வினாவைத் தொடுக்கின்றார்.

"இனி இவ்வோத்தினிற் கூறுகின்ற உவமங்களுட் சிலவற்றையும் சொல்லதிகாரத்தினுள்ளும் செய்யுளியலுள்ளும் சொல்லுகின்றன. சில பொருள்களையும் வாங்கிக்கொண்டு, மற்று அவை செய்யுட்கண்ணே அணியாமென இக்காலத்தாசிரியர் நூல் செய்தாருமுளர், அவை

ஒருதலையாகச் செய்யுட்கு அணியென்று இலக்கணம் கூறப்படா. என்னை?"

இங்ஙனம் கேட்டுக்கொண்டு, பேராசிரியர் ஆறு காரணம் காட்டி 'அணி' எனத் தனிக் கோட்பாடு வகுத்தல் தவறெனக்கூறி, அணிக் கோட்பாட்டாளரை மறுக்கின்றார். அவற்றை ஒவ்வொன்றாகப் பேராசிரியர் கூற்றிலேயே காண்பது, அன்னார் தம் உரைநடையையும் சிந்தனையையும் ஒருசேர அறிய உதவும்.

1. "வல்லார் செய்யின் அணியாகியும் அல்லார் செய்யின் அணியன்றாகியும் வரும், தாங்காட்டிய இலக்கணத்திற் சிதையா வழியுமென்பது, என்னை?

*நாயகர்க்கு நாய்கள்போல் நட்பிற் பிறழாது*
*கூஉய்க் குழாஅம் உடன்கொட்கும் - ஆய்படை*
*பன்றி அனையர் பகைவேந்தர் ஆங்கவர்*
*சென்றெவன் செய்வர் செரு*

என்றவழி, நாய்போலும் நட்புடையர் படையாளர் என்பது வினையுவமம்; பன்றியனையர் பகைவேந்தர் என்பது நாய்க்குப் பகையாகிய பன்றி போல என்பது வேற்றுவேந்தர் பகைவராதலால் அவ்வுவமை விலக்கரிது. அன்றாமாயினும் அஃதணியெனப்படாது உவமைதான் உயர்ந்த தின்மையின் அது குற்றமன்றோ எனின்?

*பேரூர் அட்ட கள்ளிற்கு*
*ஓரில் கோயில் தேருமால் நின்னே*

*(புறம். 306)*

[பேரூர்க்கு எனக் காய்ச்சிய கள்ளை முகக்க, ஒரு வீட்டிலுள்ள ஒரேயொரு கள் முகக்கும் பாத்திரத்தை (கோய்) எல்லோரும் தேடுவதுபோல என்பது பொருள்.]

என்பது குற்றமன்றாகலின் அதுவும் குற்றமன்றெனப்படும். இனிப் பொன்மாலையும் பூமாலையும் போலப் பொலிவுசெய்தலின் இதுவும் குற்றமாகாது மேலதே குற்றமென்பது, அற்றன்று இன்ன சொல்லும் இன்ன பொருளுமுடையன பொன்மாலையெனவும் பூமாலையெனவும் வரையறுத்துக் கூறலன்மையின் அதனானும் அதனைக் குற்றமென்று இலக்கணத்தார் கூறின் நிரம்பாது."

பேராசிரியர் கூறும் இம் முதற் காரணத்தை ஒருமுறைக்கு இரு முறை படித்தால் அக்கால மொழிநடை, சிறிது சிதைவுபட்ட நிலையில் கிடைத்திருப்பது புலனாகும். மேலும் பேராசிரியர் சொல்லவந்தது என்ன என்பதும் தெளிவுபடும். பதவியும் வலிமையும் உடையவர்கள் சொன்னால் அழகாயிருக்கிறது, அணியிருக்கிறது என உலகம் போற்றும். மற்றவர் களிடம் அழகு அமையினும் உலகம் அதை ஏற்பதில்லை. "ஒரு தலைவனிடம் நாய்கள் போல் பிறழாத அன்புடைய படைகள், கூவிச் சுழன்று நிற்கும் பகைவேந்தரோ பன்றி போன்றவர் ஆவர். இந் நிலையில் அப்படை சென்று போர் செய்ய என்ன இருக்கிறது?" இப் பாடலில் பகைவர் பன்றி எனவும் வீரர் நாய் எனவும் உவமை சொல்லப் பட்டிருப்பது முறையன்று. உயர்ந்ததையே உவமை கூற வேண்டும். புறநானூற்றில் கள்முகக்கும் பாத்திரத்தைத் தேடுவது போல, நின்னை உன் பகைவன் தேடுகிறான் என்பதும் இழிந்த உவமையே. ஆனால் புறநானூற்றுவமை பொன் மாலை அன்றாயினும் பூமாலைபோல அழகு செய்வது; இழிவுடையதன்று. ஆயினும் பொன்மாலை எது, பூமாலை எது என விவாதிப்பதில் இடர்ப்பாடு வரும். எனவே 'அணி' எனச் சுட்டுவதில் மிகுந்த கருத்து வேற்றுமைக்கு இடமுளது. ஒருவர் அணி என்று சொல்வதை மற்றவர் அணியன்று என்று மறுத்து விடலாம். எவர் சொல்வது அணி என்பதிலும் எது அணி என்பதிலும் கருத்து வேறுபாடு வரும்.

2. "அல்லதூஉம் பொருளதிகாரத்துள் பொருட்பகுதிகளெல்லாம் செய்யுட்கு அணியாகலான்; அவை 'பாடலுட் பயின்றவை' எனப்பட்டன என்றதனான் அவையெல்லாம் தொகுத்து அணி எனக் கூறாது, வேறு சிலவற்றை வரைந்து அணியெனக் கூறுதல் பயமில் கூற்றாம் என்பது."

பொருளதிகாரத்தில் பாடலில் அமையும் பொருட்பகுதிகள் யாவும் கூறுப்படுகின்றன. அவையெல்லாம் பாட்டை அழகு செய்யும் அணிகள் தாம். எனவே, ஏதோ சிலவற்றைமட்டும் தொகுத்து அணியெனக் கூறி மற்றவற்றை விட்டுவிடுவது பயனற்ற கூற்றாகும்.

3. "இனி இரண்டு பொருளெண்ணி, அவற்றை வினைப்படுக்குங் கால் ஒருங்கென்பதோர் சொற்பெய்தல் செய்யுட்கு அணி என்ப, பிறவும் இன்னோரன்ன பலவும் செய்யுட்கணியாமென்பது அவர் கருத்து. ஒருங்கே என்பதேயன்றி மூன்று தாழிசையுள் மூன்று பொருள் கூறி எனவாங்கு என்பதொரு சொல்லான் முடிந்த வழியும் எனவாங்கு

என்பதோர் மொழியில் எனவென்பது ஓரலங்காரம் எனல் வேண்டு மாகலான் அவ்வாறு வரையறுத்துக் கூறுதல் அமையாதென்பது. பிறவும் அன்ன."

ஒப்புமைக்கூட்ட அணி என்பது ஒப்புமையுடைய பொருள்களை ஒருசேர எண்ணி, அவற்றை ஒருங்கே என முடித்து வினைப்படுப்ப தென்பர். இவ்வாறே குறிப்பால் உணர்த்துவது குறிப்பணி, நுட்பமாய்ப் புலப்படுத்துவது நுட்ப அணி என்றெல்லாம் வகைப்படுத்துவர். மூன்று தாழிசையுள் கூறியவற்றை என வாங்கு என முடிப்பதும் இதுபோல அணி எனல் வேண்டும். எனவே, அழகாகவும் அமைப்பாகவும் கூறுவனவெல்லாம் அணியாகிவிடும். இங்ஙனம் நோக்குங்கால் பாடல்கள் எல்லாமே பொருள்தரும் முறைமையால் அணியுடையனவே என்று கொள்ள நேரும். இதுதான் அணியென வரையறுத்துக் கூறல் இயலாது. ஒவ்வொரு பாடலிலும் அது பொருளை வெளிப்படுத்தும் முறையில் ஓரணி இருக்கவே செய்கிறது. சிலவற்றை மட்டும் அணியென வரையறுப்பதால் பயன் என்ன?

4. "இனி, அவற்றைப் பொருளுறுப்பென்பதல்லது, அணி என்பவாயின் சாத்தனையும் சாத்தனால் அணியப்பட்ட முடியும் தொடியும் முதலாயவற்றையும் வேறுகண்டாற்போல அவ்வணியும் செய்யுளின் வேறாகல் வேண்டும் என்பது."

பொருள்தருதற்கு எனப் பாட்டிலமைந்த உறுப்பே தவிர, எதனையும் அணி எனலாகாது. சாத்தன் அணிந்த முடி, தொடி போன்ற அணிகலன்கள் சாத்தனின் வேறானவை; அவனை விட்டுப் பிரிக்கக் கூடியவை. செய்யுளுள் அணியோ பிரிக்கவொண்ணாதது. எனவே, அது பொருளுறுப்பாகுமே தவிர அணியாகாது.

5. "இனிச் செய்யுட்கு அணிசெய்யும் பொருட்படையெல்லாம் கூறாது சிலவே கூறி ஒழியின் அது குன்றக் கூறலாம் என்பது. அவை யாவையெனின்,

*அகனமர் கேள்வன் அகற்சி தீர்த்தற்கு*
*மகனொடு புகுந்த மகவுநிலை எனாஅ*
*மறுக்குங் காலை மறுத்துரை மொழியாது*
*குறிப்புவேறு கொளீஇய குறிப்புநிலை எனாப்*

புலவிக் கண்ணும் போக்கின் கண்ணும்
அழுதலும் அழாஅதலும் உயங்கலும் என்றாங்கு
இருவகைப் பட்ட மங்கல மெனாஅப்
புலம்புறு காலை அறிவொடு படாது
புலம்புகொள வந்த செய்வினை எனாஅ
இன்னோ ரன்ன பலபொருட் பகுதி
நன்னெறிப் புலவர் நாட்டல்வகை யுடைய

என்றோர் சூத்திரஞ்செய்யின் அவையும் அலங்காரமெனப்படும் என்பது."

இஃது அணியிலக்கணம் செய்வாரைக் கேலி செய்வதுபோல உளது. பாடல்களுள் இடம்பெறும் பொருட்பகுதியெல்லாமே அணியாந் தன்மை பெற்றிருக்கவும் ஒருசிலவற்றைமட்டும் அணியென வரைந்து கூறினால் பயனென்ன?

தலைவன் பிரிய எண்ணியபொழுது தலைவி மகனுடன் சென்று, எதிர் நின்று பெருமூச்சு விட்டு அதைத் தடுப்பது 'மகவுநிலை' எனும் அணியெனவும்;

தலைவன் பிரியக்கூடாது என்பதைக் குறிப்பால் புலப்படுத்துவது 'குறிப்புநிலை' எனும் அணியெனவும்;

தலைவி தலைவனுடன் புலந்தபொழுது கண்ணீர் சிந்தினாள் என்பது 'புலவியுள் அழுத மங்கலம்' எனவும்;

தலைவன் பிரிவை எண்ணியபோது அழுகைவர, அதை அவள் அடக்கிக் கொள்வது 'அழாதமங்கலம்' எனவும்;

தலைவன் பிரியப்புறப்படுகையில் தலைவி வருந்துவது அறிவொடு படாது புலம்புகொள வந்த செய்வினை எனவும் இங்ஙனமே ஒவ்வொரு பாடலுக்கும் அணி சொல்லவேண்டி வரும். கவிதை என்பது அணி நலம் பொருந்தியதேயாகும்; அணியில்லாதது கவிதையாகாது. மேலை நாட்டாரும் இங்ஙனம் விவாதிப்பர். அங்ஙனமேல் ஒரு சிலவற்றை மட்டும் அணியென விதந்து பேசுவதால் பயன் என்ன?

பேராசிரியர் மேலே கூறியவற்றை அணியென்று நிறுவுவதற்காக எழுதவில்லை. இவ்வாறும் அணி கூறினால் தடுக்க முடியுமா என்பதே அவர் கேள்வி.

6. "இனி ஆநந்தவுவமையென்பன சில குற்றம் அகத்தியனார் செய்தாரெனக் கூறுபவாகலின் அவையிற்றை எவ்வாறு கோடுமெனின், அவைகள்தாம் அகத்துள்ளும் பிற சான்றோர் செய்யுளுள்ளும் வருதலின் குற்றமாகா. அகத்தியனாரால் செய்யப்பட்ட மூன்று தமிழினும் அடங்காமை, வேறு ஆனந்தவோத்தென்பது ஒன்று செய்தாராயின், அகத்தியமும் தொல்காப்பியமும் நூலாக வந்த சான்றோர் செய்யுட் குற்றம் வேறுபடாவென்பது. அஃதேல் செய்யுட்கு இவை அணி என்பதூஉம் இவை குற்றமென்பதூஉம் மூன்றதிகாரத்துள்ளும் இவ்வாசிரியர் யாண்டும் கூறாரோவெனின், செய்யுளியலில் முப்பத்து நான்குறுப்புக்கூறி அவற்றதியைபு நல்லிசைப் புலவர் செய்யுளுறுப் பெனவும் அவை தொடர்ந்த தொடர்நிலை எண்வகையான் தொடர் நிலைச் செய்யுட்கு வனப்பெனவும் பகுத்தோதிய இலக்கணத்தில் பிறழ்ந்தவை எல்லாம் குற்றமென்பதும் கொள்ள வைத்தான் என்பது."

அணி கூறுவதுபோல், பாடலில் அமையும் 'தோஷம்' அல்லது குற்றம் பற்றிக் கூறுதலும் வடநூன் மரபிலுளது. 'ஆனந்தவுவமை' என்பது பாட்டுடைத்தலைவனுக்குக் கேடு பயக்கும் தீத்திறனுடைய உவமையாகும். இவை பற்றித் தொல்காப்பியர் கூறவில்லை. ஒருசிலர் அங்ஙனம் கூறியுள்ளவற்றைத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் ஏற்க வில்லை. ஆயின் குற்றம் பற்றியே தொல்காப்பியர் பேசவில்லையா என்றால் தொல்காப்பியர் கூறியாங்கு 26 செய்யுளுறுப்புக்களும் 8 வனப்புக்களும் அமைவன நலமுடையன எனவும் அங்ஙனம் பகுத் தோதிய இலக்கணத்தில் பிறழ்ந்தவை குற்றமுடையன எனவும் கொள்ளப்பட்டன என்று பேராசிரியர் விளக்குகின்றார்.

அணியிலக்கணம் என்ற ஒன்று தேவையில்லை எனக் கருதும் இக் கோட்பாடு நீளநினைதற்குரியது. பேராசிரியர் இங்ஙனம் எழுதுகிறார் என்றால், அவர் தொல்காப்பியரை நன்கு உணர்ந்து பின்பற்றுதலே காரணம். தொல்காப்பியர் 34 செய்யுளுறுப்புக்களைக் கூறுமிடத்தும் அணியைக் கூறவில்லை. உவமையைக்கூட அவ்வுறுப்புக்களில் ஒன்றாகச் சுட்டவில்லை. மெய்ப்பாட்டை 'நன்னயப் பொருள்கோள்' எனவும் (1221), 'உய்த்துணர்வின்றித் தலைவரு பொருளான் மெய்ப்பட முடிப்பது' எனவும் (1460) தொல்காப்பியர் குறிப்பர். அதுபோல உவமை யானும் 'பொருள் புலப்பாடே' உணர்த்தப்படுகிறதென்பது பேராசிரியர் கருத்தாகும். உவமை பற்றிய இளம்பூரணரின் முழுவிளக்கம் மிகவும் சிறப்பானது. "புலன் அல்லாதன புலனாக்குதலும்

அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயத்தலும் ஆம்." இதிலிருந்து உவமையை அலங்காரம்-அணி என்று கோடலில் இளம்பூரணருக்கு இசைவுண்டு என அறியலாம். ஆயினும் பொருள் புலப்பாட்டையே இவரும் முதலில் கூறுகிறார். எனவே தமிழர்கள் அணியுட்பட யாவற்றையும் பொருள் புலப்பாட்டு நெறியாகக் கொண்டார்களே தவிர, வேறுபிரித்து 'அலங்காரம்' எனத் தனித் துறையாகச் சுட்டவில்லை. தொல்காப்பியரே செய்யுளுறுப்பு என்றும் 'வண்ணம்' என்றும் 'வனப்பு' என்றும் குறிப்பனவற்றிலிருந்து, இவற்றின் வேறாய் 'அணி' என ஒன்று கொண்டிலர் எனத் தெளிவாகிறது. வனப்பு என்பது உடலழகு, வண்ணம் என்பது உடற்கட்டு. இவ்விரு கூறுகளும் இவற்றின் வேறாய் அணி என ஒன்று கொள்ளாமையைத்தானே நமக்கு அறிவுறுத்து கின்றன.

எனவே இவ்வாறு பல கோணங்களில் ஆழச் சிந்திப்பதற்கு இவ்வணியிலக்கணக் கோட்பாடு இடந்தருதல் காணலாம். இதனால் இன்று வளர்ந்தமைந்துவிட்ட 'அணிக் கோட்பாட்டைப் புறக்கணிக்க வேண்டும் என்பதன்று கருத்து. தொல்காப்பியரின் கருத்து யாது என அறியவும் அத்தகைய கருத்துடையார் மேலை இலக்கியத்தும் காணப் படுவதால் அவருடன் ஒப்பிட்டுண்மையறியவும் அத்தகையதொரு கருத்துக் குழுவால் (School of Thought) இலக்கியம் பற்றிய நீர்மை எங்ஙனம் தெளிவுறுகிறதெனக் காணவும் இவ்வடிப்படையாய்வு பயன்படும். உரையாசிரியர்கள் உலகச் சிந்தனையாளர்களிடையே வைத்தெண்ணத்தக்க ஆய்வுக் களங்களையும் புலப்படுத்திச் சென்றனர் என்பதை விளக்கவே இப்பகுதி இங்கு எடுத்துக்காட்டப்பட்டது.

**பரிமேலழகர் பயன்படுத்திய நெறி**

பரிமேலழகர், திருக்குறளுக்குப் பரிப்பெருமாள், பரிதியார், மணக் குடவர், காளிங்கர் போன்ற பிற உரையாசிரியர்கள் எல்லாம் உரை யெழுதியபின் தோன்றியவர். எனவே அவருக்குத் தமக்கு முற்பட்ட அனைத்து உரைகளையும் கற்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவற்றுள் நிறையுடையனவற்றையெல்லாம் எடுத்துக்கொண்டார்; குறையுடையன வற்றைத் தள்ளிவிட்டார். அதனால் பெரிதும் செம்மையுடையதாகத் தம் உரையைப் படைக்க அவரால் முடிந்தது.

இன்று ஓராய்வாளனுக்குச் சொல்லப்படும் பண்பு இதுவேயாகும். ஒரு தலைப்பை அல்லது பொருளை எடுத்துக்கொண்டால், அப்பொருள்

பற்றி அதுவரை ஏற்பட்டுள்ள வளர்ச்சியை அவன் கணித்தறிய வேண்டும். அது பற்றி வெளிவந்த நூல்களையெல்லாம் கற்க வேண்டும். எல்லாவற்றையும் மனத்தில் வாங்கிக் கொண்டு, மேலும் வளர்ச்சிநிலை காணும் போக்கில், அனைத்தையும் தொகுத்தும் செம்மைசெய்தும் வளர்த்தும் புதியன கண்டும் திருத்தமுறத் தன் ஆய்வு நூலைப் படைக்க வேண்டும். இந் நெறிமுறை முழுவதும் பின்பற்றிய 'பேராய்வாளராகப்' பரிமேலழகர் காட்சி தருகின்றார்.

பால், இயல், அதிகாரந்தோறும் முன்னுரை எழுதும் மாண்பைப் பரிமேலழகர், மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதியார்போன்றோரிட மிருந்து பெறுகின்றார். அவர்கள் எழுதியது போல் இவரும் எழுது கின்றார். அவர்களை அப்படியே கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றி அதே வாசகங்களையே எழுதுகின்றார் என்பதன்று. அம்முறை சிறந்த தென ஏற்றுக்கொள்கிறார். பின் தமக்குரிய கருத்தின்படியே சீரிய விளக்கம் தருகிறார். சிலவிடத்துப் பிற உரைகளோடு இயைந்தும் சிலவிடத்து இயையாமலும் அவற்றினும் தெளிவாகவும் செம்மை யாகவும் இவர் தரும் விளக்கங்கள் அமையும்.

அதிகார வைப்புமுறை பற்றிய வழக்கத்தைப் பரிமேலழகர், பரிப் பெருமாள், மணக்குடவர் போன்றாரிடமிருந்து பெறுகின்றார். மேலும் காளிங்கர் பத்தாவது குறளின் இறுதியில், வரும் அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்கின்றார். பரிமேலழகர் அதிகாரத் தொடக்கத்தில் அதை அமைக்கிறார். ஓரதிகாரத்துட் குறள் வைப்புமுறை பற்றிக் கருத்துக் கூறுதலை மணக்குடவரிடமிருந்து அறிகின்றார்.

புதுமையாகவும் இடம் நோக்கியும் சொற்பொருள்தரும் மரபு காளிங்கரிடம் காணப்படுவதுபோல் பரிமேலழகரிடமும் காணப்படுகிறது.

பரிப்பெருமாள் மணக்குடவரைப் பின்பற்றியுள்ளார் என்பர். மணக்குடவரைப் பெரிதும் பின்பற்றி, அவரை வழிகாட்டி போலவே கொண்டு உரையெழுதிய பான்மையைப் பரிமேலழகரிடமும் காணலாம். பொள்ளாமணிபோல் மணக்குடவரிடம் காணப்படும் உரைவிளக்கமே பட்டை தீட்டிய வைரமாய்ப் பரிமேலழகரிடம் காணப்படுகிறது. "பரிமேலழகர் தமக்குமுன் தோன்றிய ஒன்பது உரைகளையும் கற்கும் வாய்ப்புப் பெற்றார். எல்லா உரைகளிலும் உள்ள நல்ல இயல்புகளை அறிந்தார். ஒவ்வொரு உரையிலும் காணப்பட்ட குறை நிறைகளை உணர்ந்தார். இதன் பயனால் நல்லனவற்றை மேற்கொண்டு குற்றங்

குறைகளை நீக்கி சிறந்த உரைகாணும் வாய்ப்பு உண்டாயிற்று", என்று மு.வை. அரவிந்தன் குறிப்பதும் காணலாம்.[1] மரபும் தனித்திறனும் எஃதுது பற்றிச் சிந்திப்பார்க்கும் பரிமேலழகர் திறன் பயன்பாடுடையதாகும். ஏனெனில் முன்னைய அனைத்தையும் கற்று, அதற்கு மேலும் வெளிப் படுத்தக்கூடியவனே ஒளிவீசித் திகழ முடியும் என்பதை அவர் மெய்ப்பிக் கின்றார்.

**ஆய்வுக் களம்**

உரையாசிரியர்கள் தடைவிடைகளான் தரும் கருத்தை நிறுவ முயலும் இடங்களில் எல்லாம் ஓர் ஆய்வுக்கதிர் பிறக்கின்றது எனலாம். இன்று மரபு இலக்கண ஆய்வும் மொழியியலாய்வும் சிறப்பதற்கு இவ்வாய்வுச் சுடர்களே பெரிதும் தளம் அமைத்துக் கொடுக்கின்றன எனில் மிகையாகாது. அதுபோல் தொல்காப்பியப் பொருளதிகார உரையாலும் இலக்கிய உரைகளாலும் தமிழில் இலக்கியத் திறனாய்வுக் களம் வளர்ந்திருக்க வேண்டும். தமிழ் இலக்கியவுரைகள் விளங்கிக் கொள்வதற்கே என்ற அளவோடு தமிழ்ப்புலவர்கள் நின்றுவிட்டனர். சிலப்பதிகாரம் அரும்பதவுரையும் அடியார்க்குநல்லார் உரையும் தமிழர் களின் இசை நாடகப் புலமையை விரிவாக விளக்குகின்றன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு தமிழில் இசை, நாடக ஆய்வுகள் பல்கியிருக்க வேண்டும். ஆனால், இங்கு இசை, நாடகப் புலமையுடையோர் அயன் மொழியாளர்போல் ஆயினர். தமிழ்ப் புலவர்களோ அத்திசை நோக்கித் தொழுது வெளியேறிவிட்டனர். ஆபத்தான இடங்களில் நுழையாதே என்பதுபோல் ஆன்றவிந்தடங்கி விட்டனர்.

உரைகள் எவ்வாறு ஆய்வுக்களங்களை அமைத்துத் தருகின்றன என்பதற்குச் சில சான்றுகளை இங்குக் காண்போம்.

**சிலம்பின் தலைவி**

சிலப்பதிகாரம் மங்கல வாழ்த்துப் பாடலில் கண்ணகி முதலில் அறிமுகப்படுத்தப்படுகிறாள்; பிறகு கோவலன் அறிமுகப்படுத்தப்படு கின்றான். தன்னிகரில்லாத் தலைவனைக் கொண்டு காப்பியங்கள் புனையப்படும். ஆனால் சிலம்பில் கண்ணகியே தலைவியாய் அமைந்து காப்பியத்திற்கு அடித்தளமாகிறாள். இதை "கண்ணகியை முற்கூறினார், பத்தினியை ஏத்துதல் உட்கோளாகலான்" என்று கூறி, அடியார்க்குநல்லார் மேற்கொண்டு கருதுவார்க்கு ஏற்ற தோற்றுவாய் செய்கின்றார்.

---

1. உரையாசிரியர்கள். ப. 320.

**திணை என்பது எது?**

திணை முல்லை, குறிஞ்சி முதலிய நிலங்களைக் குறித்துப் பிறகு அங்கு நிகழும் ஒழுக்கத்தைக் குறித்ததா? முதலில் ஒழுக்கத்தைக் குறித்துப் பிறகு நிலத்திற்கு ஆயிற்றா? இவ்வாய்வு இன்றுவரை நடைபெற்று வருகிறது. இறையனார் அகப்பொருளில் முதற் சூத்திர வுரையில், "இனி ஒழுக்கத்தினைத் திணை என்பாரும் நிலத்தினைத் திணை என்பாரும் என இரு பகுதியர் ஆசிரியர். அது பொருந்தாது; ஒழுக்கமே திணை எனப்படும். குறிஞ்சியாகிய ஒழுக்கம் நிகழ்ந்த நிலமும் குறிஞ்சி எனப்பட்டது; என்னை, விளக்காகிய சுடர் இருந்த இடனும் விளக்கு எனப்பட்டது போல என்பது", என்று இதுபற்றி ஒரு வினா விடையைத் தொடங்குகின்றார். அதற்கு மேலும் ஐந்திணை என்பதை ஐந்துதிணை, ஐந்து இணை எனப் பிரிக்கலாம் என இருவகையாகக் காட்டிச்செல்வது வேடிக்கையாகவுள்ளது.

**முல்லை, குறிஞ்சி என்பவற்றின் பொருள் யாது?**

முல்லை, குறிஞ்சி என்பன மலர்களின் பெயர்களா? நிலத்தின் பெயர்களா? ஒழுக்கத்தின் பெயர்களா? அவற்றையுணர்த்தும் பாடல் களின் பெயர்களா? இக் கேள்விகட்கு விடை தேடும் முகத்தான் இளம்பூரணர் ஓர் ஆய்வைத் தொடங்கிவைக்கின்றார். "முல்லை குறிஞ்சி என்பன இடுகுறியோ, காரணக்குறியோ எனின் ஏகதேச காரணம்பற்றி முதலாசிரியர் இட்டதோர் குறி என்று கொள்ளப்படும். என்னை காரணம் எனின், "நெல்லோடு, நாழி கொண்ட நறுவீ முல்லை, அரும்பவிழ் அலரி தூஉய்" என்றமையால், காடுறை உலகிற்கு முல்லைப்பூ சிறந்தது ஆகலானும் 'கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு, பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே' என்றவழி மைவரை உலகிற்குக் குறிஞ்சிப்பூ சிறந்ததாகலானும்........இந் நிலங்களை இவ்வாறு குறி யிட்டார் என்று கொள்ளப்படும்." (தொல். அகத். 5)

நச்சினார்க்கினியர் இவை ஒழுக்கங்களை உணர்த்திப் பிறகே கருவையும் நிலத்தையும் உணர்த்தலாயின என்று கருதினார். "எனவே முல்லை என்ற சொற்குப் பொருள் இருத்தலாயிற்று........புணர்தற் பொருட்டாகிய குறிஞ்சி........மருதமென்றது ஊடியும் கூடியும் போகம் நுகர்தல்........நெய்தல் இரக்கமாம்........இனி, இவ்வாறன்றி முல்லை முதலிய பூவாற் பெயர்பெற்றன இவ்வொழுக்கங்களெனின், அவ்வந் நிலங்கட்கு ஏனைப் பூக்களும் உரியவாகலின் அவற்றால் பெயர்

கூறலும் உரியவெனக் கடாயினார்க்கு விடையின்மை உணர்க.'' இங்ஙனம் கூறியவற்றுள் எது முறையென்பதன்று இங்கு கேள்வி. உரையாசிரியர்கள் எங்ஙனமெல்லாம் நம் சிந்தனையைத் தூண்டு கின்றனர் என்பது நினைவுகூரத்தக்கது.

**எழுத்து: அருவா, உருவா?**

எழுத்து, வெளிப்பட்டு ஒலிக்கும் எழுத்து ஒலியெழுத்து; எழுதப் படும் எழுத்து வரிவடிவ எழுத்து. ஒலியெழுத்திற்கு உருவுண்டா? அல்லது அஃது அருவமா? நச்சினார்க்கினியர் இதற்கு விடைகூற முயல்கின்றார். "இவ் வெழுத்தெனப்பட்ட ஓசையை அருவென்பார் அறியாதார். அதனை உருவென்றே கோடும். அது செறிப்பச் சேறலானும் செறிப்ப வருதலானும் இடையெறியப் படுதலானும் செவிக் கட்சென்று உறுதலானும் இன்ப துன்பத்தை ஆக்குதலானும் உருவும் உருவும் கூடிப் பிறத்தலானும் தலையும் மிடறும் நெஞ்சும் என்னும் மூன்றிடத்தும் நிலைபெற்றுப் பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் உறப் பிறக்கும் என்றமையானும் உருவேயாம். அருவே யாயின் இவ்விடத்திற் கூறியன இன்மை உணர்க. அல்லதூஉம் வன்மை மென்மை இடைமை என்று ஓதினமையாலும் உணர்க. உடம்பொடு புணர்த்தல் என்னும் இலக்கணத்தான் இவ்வோசை உருவாதல் நிலைபெற்றதென்று உணர்க. அதற்குக் காரணமும் முன்னர்க் கூறினாம்.

இவ்வெழுத்துக்களின் உருவிற்கு வடிவு கூறாரலராயினார், அது முப்பத்திரண்டு வடிவினுள் இன்ன எழுத்திற்கு இவ் வடிவெனப் பிறர்க்கு உணர்த்துதற்கு அரிதென்பது கருதி. அவ்வடிவு ஆராயுமிடத்துப் பெற்ற வடிவே தமக்கு வடிவாம், குழலகத்தில் கூறின் குழல்வடிவும் குடத்தகத்தில் கூறின் குடவடிவும் வெள்ளிடையில் கூறின் எல்லாத்திசையும் நீர்த் தரங்கமும்போல" (தொல். நூன்மரபு. 1).

இங்ஙனம் நுட்பமாய் உணர்ந்து கூறுமிடங்கள் மொழி யாராய்ச்சிக்கு அடிப்படையாய் உதவுவன மேலும் பற்பலவுள.

**எழுத்தின் அடிப்படை இலக்கணம்**

ஓர் எழுத்தாம் தன்மை எதனால் உருவாகிறது? குற்றியலிகரம், குற்றியலுகரம் தனி எழுத்துக்களாகுமா? நச்சினார்க்கினியர் இதை

ஆராய்கிறார். "சந்தனக்கோல் குறுகினால் பிரப்பங்கோலாகாது. அதுபோல உயிரது குறுக்கமும் உயிரேயாம். இவற்றைப் புணர்ச்சி வேற்றுமையும் பொருள் வேற்றுமையும் பற்றி வேறு ஓர் எழுத்தாக வேண்டினார்."

'காது' என (பற்று) ஏவினால் முற்றியலுகரம்; காது (செவி) என்றால் குற்றியலுகரம். 'கட்டு' என ஏவும்போது முற்றியலுகரம்; சுட்டி ஒரு கட்டைக் குறிக்கும்போது குற்றியலுகரம். "கட்டு கட்டு" சீக்கிரம் கட்டு என அடுக்கி ஏவும்போது ஒற்று இடையில் மிகாது, புத்தகக் கட்டுக் கட்டு - முன்னது குற்றியலுகரம்; எனவே இடையில் ஒற்று மிகுந்தது. முத்து + யாது=முத்தியாது; குற்றியலிகரம். முத்தி (என்பது) யாது: முற்றியலிகரம். இங்ஙனம் புணர்ச்சி வேற்றுமையும் பொருள் வேற்றுமையும் உடைமையான் இ, உ க்களைக் குற்றியலிகரம் குற்றியலுகரம் என்பவற்றுடன் வேறுவேறாகக் கொள்ளுதல் தவிர்க்க வொண்ணாது.

இதிலிருந்து பொருள் வேற்றுமையும் புணர்ச்சி வேற்றுமையும் தருவனவே தனி எழுத்தாம் தன்மையுடையன என ஓர் அடிப்படை இலக்கணத்தையே நச்சினார்க்கினியர் தந்து விளக்குவது புலனாகிறது.

**திணை பகுத்தறியும் அடிப்படை**

அகப்பாடல் ஒன்றை, ஏழு திணையுள் இன்ன திணையென எங்ஙனம் பகுப்பது? ஒரு பாடலில் முதல் கரு உரி என மூன்றும் அமையும். அவற்றுள் சில திணை மயங்கியும் வரும். நிலம் மட்டுமே மயங்கி வாராது என்பார் தொல்காப்பியர். அவ்வாறாயின் ஓர் அகப் பாடலை எடுத்துக்கொண்டு, அதன் திணையைக் கண்டுபிடிப்பது எவ்வாறு? தொல்காப்பியர் அதற்குரிய வழியை வெளிப்படையாகச் சொல்லவில்லை. இளம்பூரணரே இலக்கணம் வகுப்பதுபோல் இதற்கு ஒரு வழி சொல்கிறார்: "யாதானும் ஒரு செய்யுட்கண் முதற்பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளும் வரின் முதற்பொருளால் திணை யாகும் என்பதூஉம் முதற்பொருள் ஒழிய ஏனைய இரண்டும் வரின் கருப்பொருளால் திணையாகும் என்பதூஉம் உரிப்பொருள் தானே வரின் அதனால் திணையாகும் என்பதூஉம் ஆம்" (தொல். அகத். 3). அகப்பாடல்கள் அனைத்திலும் ஏற்றிப்பார்க்கத்தக்க ஓர் அடிப்படைக் கோட்பாடு இது.

ஓர் ஆய்வாளன் என்பவன் தன் ஆய்வுரையால், இத்தகைய ஒருசில கோட்பாடுகளையேனும் வகுக்குமளவு ஆராய்ந்து ஏடெழுத வேண்டுமென்பர். தமிழ் உரையாசிரியர்கள் பலருக்கு இவ்விலக்கணம் பெரிதும் பொருந்தும்.

**பெயர் சுட்டா மரபு**

'மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும், சுட்டி ஒருவர்ப் பெயர் கொளப் பெறாஅர்' (தொல். அகத். 54) என்ற நூற்பாவிற்கு உரை யெழுதிய நச்சினார்க்கினியர், இப் பெயர் கூறா மரபை வைத்துக் கைக்கிளை, பெருந்திணைகளைப் பெயர் சுட்டியும் சுட்டாதும் வருமென விரித்து அகம், அகப்புறம் என்ற மரபையும் உருவாக்குகிறார்.

மேலும் அவர் வெள்ளிவீதியார், ஆதிமந்தியார் பாடல்களை எடுத்துக்காட்டி (குறுந். 27, 31) "இவை தத்தம் பெயர்கூறின் புறமா மென்றஞ்சி வாளாது கூறினார். ஆதிமந்தி தன்பெயராலும் காதலனாகிய ஆட்டனத்தி பெயராலும் கூறின் காஞ்சிப்பாற்படும்" என்று விளக்கம் தருகின்றார். வெள்ளிவீதியார் வாழ்விலும் ஆதிமந்தி வாழ்விலும் காதல் அவலம் நேர்ந்தமையை அகப்பாடல்களால் (அகநானூறு, 147, 236) அறியலாம் எனவும் அவர் குறிப்பிடுகின்றார். பெயர் சுட்டி அவலத்தைப் பாடினால் நிலையாமை பற்றிய காஞ்சித்திணைப்பாற் படுமெனவும் சுட்டிக் காட்டுகின்றார். பத்துப்பாட்டுள் ஒன்றாகிய நெடுநல்வாடையில் 'வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்' என அடையாளப்பூ கூறினமை யால் அஃது புறமாகும் என்ற ஐயத்தைக் கிளப்பியவரும் இவரே. இங்ஙனம் ஆய்வுக்கான இழைகள் உரையாசிரியர்களால் எடுத்துத் தரப்படுகின்றன.

இங்ஙனமே எண்ணிப்பார்த்தால் நூற்றுக்கணக்கில் தொகுக் கலாம். இவற்றுட் பல இதுகாறும் மேன்மேலும் சிந்திக்கப்பட்டுள்ளன. இனியும் சிந்தித்தற்குரியன எத்தனையோ உள. மூல நூலாசிரியர் சொல்லாது விடுத்தவற்றை நிரப்புதல்; சொன்னவற்றிற்குத் தக்க உதாரணம் காட்டி நிறுவுதல்; தத்தம் காலஅளவு ஏற்பட்டுள்ள வளர்ச்சிப் படிகளை வெளிப்படுத்துதல்; உரையாசிரியர்களாகிய தம்மிடையேயுள்ள கருத்து வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டி ஏற்றும், மறுத்தும், பிறிதொரு வழிகாட்டியும் செல்லுதல் என இவ்வாறு ஓர் ஆராய்ச்சியாளன் செய்ய வேண்டிய கடமைகளையெல்லாம் இவ்வுரையாசிரியர்கள் செய்து வந்துள்ளனர்.

**உடன்படல், மறுத்தல்**

ஆய்வாளனுக்குத் தெளிவான சிந்தனை வேண்டும். எதைப் பற்றியும் ஐயமும் பிழைபாடும் நீங்கிய அறிவு வேண்டும். ஐயமுள்ள விடத்தில் ஏதேனும் ஒன்றின்பால் துணியும் தெளிவு வேண்டும். நூலாசிரியர்கள் இவற்றை எழுவகை மதமென விரித்தோதுவர். மதம் என்பது கோட்பாடு. ஒருவர்தம் கருத்துக் கோட்பாடே, அவர்தம் ஆய்வுச் சிந்தனை (thesis) ஆகும். அவ்வாங்கிலச் சொற்குப் பொருள் அதுவே. எனவே எழுவகை மதம் என நம் முன்னோர் பேசியவை, ஆய்வேட்டோடு நெருங்கிய தொடர்புடையவையாகும். 'மதம்' என்ற சொல் கோட்பாடு என்ற பொருளில் இங்கு ஆளப்படுகிது. அல்லாது 'மதங்கொள்ளுதல்' என்பது வேண்டற்பாலதன்று. அஃதுடையாரை அணுகுதல் இயலாது; கூடாது.

*எழுவகை மதமே உடன்படல், மறுத்தல்,*
*பிறர்தம் மதமேற் கொண்டு களைவே,*
*தாஅன் நாட்டித் தனாது நிறுப்பே,*
*இருவர் மாறுகோள் ஒருதலை துணிவே,*
*பிறர்நூல் குற்றம் காட்டல் ஏனைப்*
*பிறிதொடு படாஅன் தன்மதம் கொளலே.*

*(நன். 11)*

பிறர் கருத்தை ஏற்றல், மறுத்தல், ஒருபுடை ஒத்து ஒருபுடை ஒவ்வாமை, தான் ஒன்றைப் புதிதாக நாட்டி அதை நிலைநிறுத்துதல், இருவர் மாறுபட்ட ஒன்றில் ஒரு பக்கம் துணிதல், பிறர் நூல் குற்றத்தைத் தயக்கமின்றி எடுத்துக்காட்டல், பிறர் கோட்பாட்டை ஏற்காமல் தன் கோட் பாட்டையே நிறுவுதல் என இவ்வாறு இலக்கண உரைகளில் மதம் வகைப்படுத்தப்படுகிறது. இவை அனைத்தும் உடன்படல், மறுத்தல் ஆகிய இரண்டிலும் அடங்கிவிடும். உரையாசிரியர்கள் பிறர் கருத்தை மிக நாகரிகமாக மறுப்பர்; துணிவோடு கடிதாக மறுத்தலும் உண்டு. தமக்கென ஒரு கொள்கை வழியைத் தோற்றுவித்துக்கொண்டு இறுதி வரை அதை நிலைநிறுத்துவர். இம் முறைகள்தான் ஆராய்ச்சி நெறியைப் பெருக்குவதற்கு வழியாகும். அவ்வகையிலும் நம் உரையாசிரியர்கள் செயற்படுவதைச் சில சான்றுகளால் காண்போம்.

புறநானூற்று உரையாசிரியர் 'பிறரைக் கண்டியாமல் அவர்கள் கூறும் பலதிறப்பட்ட பொருள் வேறுபாடுகளை எடுத்துக் கூறுவார்' என உ.வே. சா. அவர்கள் எடுத்துரைக்கின்றார். [1]

"எயிற்கதவிடாஅக் கயிறு பிணிக்கொண்டவென இயைத்துரைப் பாரும் உளர்" (புறம். 3).

"இனி அம்பு தைத்த யானையை வெட்டிப்படுத்தல் மறத்திற்கு இழிபு என்று பெண்டிர் இரங்கியழுதலின், கூற்றுக் கண்டு நாணிக் கண்ணோடியதென்று உரைப்பாரும் உளர்" (புறம். 19).

"பணை முயலும் யானைபோல ஒருதலை ஒசிய ஒற்றி' என்று பாடம் ஓதி, அம் மல்லன் முற்கூறாயினும் பிற்கூறாயினும் ஒரு தலை முறிய மோதி என்று உரைப்பாரும் உளர்" (புறம். 80).

"யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய ........" எனச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் வாழ்த்தும் புறப்பாடலுக்குத் (173) தாம் ஓர் உரை கூறி, வேறு ஓர் உரை கூறினும் அமையும் என இரண்டாம் உரையொன்றும் தருகின்றார். மேலும் 'பக்கப் பாணரை நோக்கிக் கூறியவாறாக உரைப்பாரும் உளர்' என இரண்டாம் உரை யையும், "மற்றும் மற்றும் வினவும் தெற்றென என்று பாடமோதுவாரும் உளர்" எனப் பாடமோதி மூன்றாவதாகக் கூறப்படும் உரை ஒன்றையும் அவர் சுட்டுகின்றார். யாரையும் இவர் மறுத்துரைக்கவில்லை. ஒருசில பாடல்களுக்குத் தாமாகவே வினைமுடிபை மாற்றிக் கூட்டி 'இவ்வாறு கூறினும் அமையும்' என எழுதுகின்றார். ஒரு பாடலுக்கு இங்ஙனம் ஒன்றற்கு மேற்பட்ட விளக்கம் அமைதல் இயல்பே என அவர் கருதினா ராதல் வேண்டும்.

**பரிமேலழகர்**

மற்ற பலருடைய உரைகளையும் கற்றுத் தெளிந்து தம் உரையை முற்றவுணர்ந்து எழுதினாராதலின், யாண்டும் வன்மையாகப் பிறர் கருத்தை மறுத்துரைத்திலர். ஆயினும் ஏற்கத் தகுந்த பிறர் கருத்துக் களுக்கு உரிய மதிப்புக் கொடுக்கின்றார். பிறர் கருத்திற்கும் தம் கருத்திற்கும் அடிப்படையான சிறு வேறுபாடேயுளதாயினும், அக் கருத்தை அயலவர் கருத்தாகவே குறித்துச் செல்லும் பண்பாளர் அவர். மற்றவருடைய கருத்தையும் தம் கருத்துப்போலத் தோன்றுமாறு சொல்லிக்

---

1. புறநானூறு, உ.வே.சா. பதிப்பு, சென்னை, 1956. ப. 91.

கொண்டு போகும் 'மரியாதைக்குரிய' ஆய்வாளரின் பண்பாட்டை அவரிடம் காணல் அரிது.

*நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்*
*வான்இன்று அமையாது ஒழுக்கு*

*(குறள். 20)*

எவ்வகையில் உயர்ந்தவர்க்கும் நீரையின்றி உலகியல் அமை யாதாயின் அந்நீர் எப்பொழுதும் ஒழுகும் இடையறா ஒழுக்கும் வானை யின்றி அமையாது என்பது பரிமேலழகர் உரை. மழை பெய்யாவிட்டால் மக்கள் பல குற்றங்கள் செய்து வாழவும் துணிவர். மழை பெய்தால் உலகில் ஒழுக்கம் நிலைபெறும். இவ்வாறு பொருள்கொள்ள இடம் இருப்பதால் அதுவே சரியென்றும் தோற்றுகிறது. அதனால் பரிமேலழகர், "இதனை நீரையின்றியமையாது உலகாயின் எத்திறத் தார்க்கும் மழையையின்றி ஒழுக்கம் நிரம்பாதென உரைப்பாரும் உளர்", எனத் தழுவும் நோக்கோடு பிறர் கருத்தை எடுத்துரைக்கிறார்.

*இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல்*
*குலன் உடையான் கண்ணே உள*

*(குறள். 223)*

இலன் என்று இரப்பான் கூறும் சொல்லைத் தான் சொல்லாமை, அதனைத் தன்னிடம் சொன்னார்க்கு ஈதல் ஆகிய இரண்டும் குடிப் பிறந்தாரிடமே உள எனப் பொருள்கூறுவர் பரிமேலழகர்.

இங்கு உரையாமை, ஈதல் என இரண்டாக்கி, உள என்ற பன்மை முடிவிற்கு ஏற்ப, இலக்கணம் தவறாமல் பொருள் கூறப்பட்டுள்ளது. 'உரையாது கொடுத்தல் குலனுடையானிடமே உளது' என்றல்லவா முடிய வேண்டும்? இலக்கணம் மாறாமல் உரை எழுதும் இயல்பால் பரிமேலழகர் உரை 'இலக்கண உரை' எனவும் போற்றப்பட்டது என்பர். இத்தகைய இடங்களை அறிந்தால் அதன் நுட்பம் புலப்படும். பிறர் உரைகள் பலவற்றையும் கற்ற பரிமேலழகர், அவற்றுள் ஏற்கத்தக்க மூன்று கருத்துக்களை விளக்கவுரையில் குறிப்பிடுகின்றார். "இனி 'இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல்' என்பதற்கு அவ்விளிவரவை ஒருவன் தனக்குச் சொல்வதற்கு முன்னே அவன் குறிப்பறிந்து கொடுத்தல் எனவும், அதனைப் பின்னும் பிறனொருவன்பாற் சென்று அவன் உரையாவகையால் கொர்டுத்தல் எனவும், யான் இதுபொழுது பொருளுடையேன் அல்லேன் எனக் கரப்பார் சொல்லும் இளிவரவைச்

சொல்லாது கொடுத்தல் எனவும் உரைப்பாரும் உளர். அவர் ஈதல் என்பதனைப் பொருட்பன்மை பற்றி வந்த பன்மையாக உரைப்பர்", என்பது பரிமேலழகர் உரை. ஈதல்கள் என்று பலபொருளையும் கொடுத்தல் பற்றிப் பன்மையாகக் கொண்டால், அவருரையும் பொருந்துவதே என்பார்போலவும் தாம் அதை ஏற்காமல் வேறு உரை சொன்னதற்குக் காரணம் குறளில் வரும் பன்மை முடிபே என்பார் போலவும் பரிமேலழகர் எழுதிச் செல்கின்றார்.

'அறம் பொருள் இன்பம் உயிரச்சம்' எனத் தொடங்கும் குறளின் (501) விளக்கவுரையில், "இவ் வடநூற் பொருண்மையை உட்கொண்டு இவரோதியது அறியாது பிறரெல்லாம் இதனை உயிர்எச்சம் எனப் பாடந்திரித்துத் தத்தமக்குத் தோன்றியவாறே உரைத்தார்", எனப் பரிமேலழகர் மறுப்புரை கூறுவதைக் காண்கிறோம்.

*காலாழ் களரின் நரியடும் கண்ணஞ்சா*
*வேலாள் முகத்த களிறு*

*(குறள். 500)*

'வேலாட்களைக் கோத்த கோட்டவுமாய்' எனப் பொருள்படும் தொடரில் இவர் பாடவேறுபாடு காட்டுவர். மணக்குடவர் 'வேலாழ்' என்று பாடம் ஓதுகிறார். அதற்குப் பரிமேலழகர், "வேலாழ் முகத்த வென்று பாடமோதுவாருமுளர். வேற்படை குளித்த முகத்தவாயின், அதுவும் நரியடுதற்கு ஏதுவாய் முடிதலின் அது பாடமன்மையறிக," என மறுப்பர்.

தனிச்சொல் முதல் குறள் வரை ஒவ்வொன்றும் இடம் நோக்கி, அதிகாரத்திற்கு ஏற்பப் பொருள் உணரப்படவேண்டும் என்பது பரிமேலழகர் கோட்பாடு. ஒரு குறளை எங்கு வைத்துப் பார்த்தாலும் பொதுவாகப் பொருள்தரவல்லது எனக் கொண்டு, அதகாரத் தொடர்பின்றி அவர் உரை வரையவில்லை.

*புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை*
*அகத்துறுப்பு அன்பி லவர்க்கு*

*(குறள். 79)*

"யாக்கை யகத்து நின்று இல்லறத்திற்குறுப்பாகிய அன்புடைய ரல்லாதார்க்கு, ஏனைய புறவுறுப்புக்களாகிய இடம் பொருள் ஏவல் செய்வார் முதலிய உறுப்புக்கள் எல்லாம் அவ்வறஞ்செய்தற்கு என்ன உதவியைச் செய்யும்" என்பது பரிமேலழகர் உரை.

"யாக்கையிற் கண் முதலிய உறுப்புகள் எல்லாம் என்ன பயனைச் செய்யும், மனத்தின்கண் உறுப்பாகிய அன்பிலாதார்க்கு என்று உரைப் பாரும் உளர்" என்று பிறர் உரையை எடுத்தெழுதிப் பரிமேலழகர், "அதற்கு இல்லறத்தோடு யாதும் இயைபில்லாமை அறிக" என மனம் கொள்ளும் மறுப்பொன்றும் எழுதுகின்றார். இங்ஙனம் பிறர் கருத்துக் களுக்கு உரிய மதிப்புக் கொடுத்துப் பெயர் சுட்டாமல் பொருந்திய காரணங்காட்டி நாகரிகமாக மறுக்கும் பண்பைப் பரிமேலழகரிடம் காண்கின்றோம்.

**இறையனார் அகப்பொருள் உரை**

வாய்மொழியாகவே வழங்கிவந்த உரை. அக்காலத்து இதுபோலும் பலவுரைகள் பல அறிஞர்களாலும் பலவிடத்தும் வாய்மொழியாக மாணாக்கர்கட்குப் பாடம் உரைக்கப்பட்டனவாதல் வேண்டும். அதனால் அவ்வுரையில் அடிக்கடி 'இனி, ஒருசாரார் சொல்வது', 'என்ப ஒருதிறத்தார்', 'இனி ஒருசாரார் உரைக்குமாறு' என்ற சொன்னடையைக் காண கின்றோம். அவ்வுரைகள் சிலவிடத்து முழுவதும் விரிவாகக் கூறிவிட்டு மறுப்புரை கூறும் பாங்கு இவ்வுரையின் தனியியல்பு என்றும் கூறலாம். இரண்டாம் சூத்திரவுரையில் இவ்வாறு பிறர் உரை ஒன்று ஒருபக்க அளவில் தரப்பட்டுள்ளது. பல்வேறு இடங்களில் இவ்வாறு பிறர் கருத்தாகச் சுருக்கியும் விரிவாகவும் தந்து செல்கின்றார்.

இயற்கைப்புணர்ச்சிக்குப்பின் பாங்கற்கூட்டம் நிகழாது தோழியிற் கூட்டம் நிகழும் என 'ஒரு சாரார்' சொன்னதை, இவர் மறுக்கும் தன்மை குறிப்பிடத்தக்கது: 'இனி ஒரு சாரார் சொல்லுவது: புணர்ந்தபின்றை என்பது இயற்கைப்புணர்ச்சி புணர்ந்தபின்றை என்றவாறு; 'ஆங்ஙனம் ஒழுகாது' என்பது பாங்கனானும் தமியாளை எதிர்ப்பட்டானும் புணராது தோழியை இரந்து பின்னிற்றற்கண்ணே முயலும் என்பாரும் உளர். அது பொருந்தாது. என்னை காரணம் எனின் தன் பாங்கன் தனக்குச் சிறந்த துணை, அவள் பாங்காய தோழி சிறக்குமாறு உண்டோ என்பதனான். அப்பொழுது அவளை நினையான், தன் பாங்கன் தனையே நினைக்கும் என்பது" (சூ.5). இங்ஙனம் முதற்கண் பாங்கற் கூட்டமே நிகழும் என வற்புறுத்தக் காண்கிறோம்.

*தன்னுட் குறிப்பினை அருகும் தோழிக்கு*
*முன்னுறு புணர்ச்சியின் அருகலும் உண்டே*

*(சூ. 11)*

இதற்கு மூன்று உரைகள் பிறர் கூறுவனவாகத் தரப்படுகின்றன. இரண்டை ஏற்று ஒன்றை மறுத்துவிடுகிறார் உரையாசிரியர்.

குறைநயப்புக் கூறப்பட்ட தலைமகள் இன்ன தன்மையளாயினாள் என்று உணர்த்தப்பட்டது எனவும் தோழி தன் உள்ளத்துக் குறிப்பினைச் சார்த்தும்போது இயற்கைப் புணர்ச்சிக்குப் பிற்பட்ட தனது தன்மையைத் தலைவி தோழிக்குச் சார்த்தலும் உடையள் எனவும் இச் சூத்திரப் பொருளை இறையனாரகப்பொருள் உரை முதற்கண் தருகிறது.

"என்பது என் சொல்லியவாறோ எனின் அறியநிற்றலும் உடையள், அறியாமை நிற்றலும் உடையள் என்றவாறு."

அஃதாவது தலைமகனின் குறையுற்றுநிற்கும் இளிவரவை மறைத்தும் அவன் வாராமையால் தனக்கு ஏற்பட்ட ஆற்றாமையைப் புலப்படுத்தியும் தலைவி விளங்குவாள் என உரையாசிரியர் கருதியதாகத் தெரிகிறது.

பின்னர்ப் பிறர் உரைகளைக் குறிப்பிடுகின்றார்: "இனி ஒரு திறத்தார் வேண்டுவது; சொல் நிகழ்தலுமுண்டு, சொல் நிகழாமையும் உண்டு என்பது."

இயற்கைப் புணர்ச்சிக்குப்பின் தலைவனைச் சந்திக்கப் பெறாமையால் அவன் இறந்துபட்டானோ, என்ன ஆயினானோ எனத் தலைவி ஆற்றாது கிடப்பாளாம். அத்தலைவனுக்காகத் தோழி வந்து குறை நயப்புக் கூறியவழி, அவன் தன்மை நினைத்து உயிரோடு இருப்பதை அறியவே மனம் மகிழ்ந்து ஆடிப் பாடுவாளாம் - அதுவே சொன்னிகழ்தல். ஆயினும் அவனைக் காணாமல் பட்ட துன்பத்தை எண்ணும்போது சொற்பிறவாது நிற்பாளாம். இங்கு சொல் நிகழ்தற்கு உதாரணச் செய்யுள் காட்டுகிறார் உரையாசிரியர்.

அடுத்து மற்றொரு உரையை மிகவிரிவாகத் தருகின்றார்: "இனி ஒருசாரார் சொல்லுவது; இயற்கைப்புணர்ச்சி புணர்ந்ததற்கு இடை யின்றியே இற்செறிக்கப்பட்ட தலைமகள் தோழிக்கு அறத்தொடு நிற்குமாறு உணர்த்துதல் நுதலிற்று என்ப."

"அவர் கூறும் பொருளாமாறு: தன்னுட் குறிப்பினை அருகும் தோழிக்கு என்பது - தன்கண் வேறுபாட்டை அறிதலுறும் தோழிக்கு என்றவாறு; முன்னுறு புணர்ச்சியின் அருகலும் உண்டு என்பது முன்னுறு புணர்ச்சி காரணமாகச் சார்தலும் உண்டு என்றவாறு."

பின்னர் இக் கருத்தை மறுப்பதற்காக அறத்தொடு நிற்றலை இங்கு சொல்லவேண்டுவதில்லை. பின்னே அதைச் சுட்டுமிடம் உளது என விளக்கிவிட்டுத் தம் உரையே உரையென நிறுவ முயல்கின்றார்: "ஒருவர்க்கு ஒருசொற் சொல்லியவிடத்து அச்சொல் சொல்லப்பட்டார் இன்ன நீர்மையர் ஆயினார் என்பது சொல்லவேண்டுமன்றே, மேற் சூத்திரத்துள் தோழி தலைமகளைக் குறையுறும் என்றார். இச் சூத்திரத்துள் 'குறையுறப்பட்ட தலைமகள் இன்ன நிலைமையள் ஆயினாள்' என்பது சொல்ல வேண்டும். அதனான் மேலதே உரை."

மூன்றாவதாகவும் ஓர் உரையுண்டென்கிறார்: "இவ்வகை குறை நயப்புக் கூறப்பட்ட தலைமகள் தலைமகனைக் காணல் உணர்வினளாம். அக் குறிப்பு உணர்ந்த தோழி தலைமகள் குறை நேர்ந்தாள் என்பது தலைமகற்கு அறியநிற்கும் என்பாரும் உளர். அதற்குச் செய்யுள்" எனச் சுட்டி உதாரணச் செய்யுட்களும் தரப்படுகின்றன.

இங்ஙனம் பல்வேறு உரைகள் வழங்கிவந்தமையை, இவ்வுரைக் குறிப்புக்களால் உணர்கின்றோம். இவற்றால் அறியலாகும் சில உண்மைகளை நாம் சற்றே சிந்தித்தல் வேண்டும். இடைக்காலத்தில் சங்ககாலப் பொருள் இலக்கணம்பற்றிய நூல்கள் கிடைக்காமல் போயுள்ளன. அதனால் அவ்விலக்கியம் பற்றிய ஐயப்பாடுகள், ஆராய்ச்சிகள் நிரம்ப நடந்துள்ளன. கருத்து வேறுபாடுகள் கணக்கின்றித் தோன்றியுள்ளன. எது உண்மையான கருத்து என்று அறிவதில் புலவர் களிடையே போட்டியும் குழப்பமும் ஏற்பட்டு, உண்மையைத் தேடி ஆர்வம் கொண்டு அலைந்துள்ளனர்.

அடுத்து, பல்வேறு குழுக்களாகப் பிரிந்து பல்வேறு கருத்துடையார் தத்தம் கருத்தே உண்மையானது என விவாதித்துள்ளனர். ஒருவர் பொருளிலக்கணத்தைப் பாடம் சொல்வாரேல், அவர் உரைப்பனவற்றை அவர் மாணவர் ஏற்று இங்ஙனமே ஒரு கால்வழி தோற்றும். பிறிதொருவர் பாடம் சொல்லுமிடத்தும் அங்குள்ள மாணவர் கற்று வருதலான் பிறிதொரு கால்வழி தோன்றி வளரும். எனவேதான் ஒரே மூலநூலுக்குப் பல்வேறு உரைவழிகள் தோன்றி வந்துள்ளன. தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் உரையெழுதியுள்ளாரேல் அவர் ஒரு கால்வழியைச் சேர்ந்தவர்; பேராசிரியர் பிறிதொரு பரம்பரைவழி வந்தவர். ஒருவர் பாடஞ்சொல்லி, கேட்ட மாணாக்கர் தம் மாணாக்கருக்குச் சொல்லி இப்படியே வருகிறது உரை. தந்தை, மகன், பெயரன் எனவரூஉம் குடும்பக் கால்வழி போன்றது இது. ஆங்கிலத்தில் 'கருத்துப் பள்ளிகள்'

(School of Thought) என்பர் அன்றோ?' அதற்கு ஏற்பவே, இங்கும் பாடம் சொல்லும் முறைமையால்தான் பல்வேறு 'பள்ளிகள்' தோன்றி, வளர்ந்து வந்துள்ளன. 'பிரதி பேதம்' என்பதை, 'என்றும் பாடம்' எனக் குறிக்கின்றோம் அன்றோ? ஒருசாரார் தம் பள்ளியில் படிக்குங்கால் அங்ஙனம் பாடம் கொண்டனர் என்பது கருத்து. இறையனார் அகப் பொருள் உரையில் 'இனி, ஒருசாரார் சொல்வது', 'இனி ஒருதிறத்தார் உரைப்பது' என வரும் தொடர்களும் இதையே குறிக்கின்றன.

'இறையனார் களவியல் நூல்', பாண்டியன் பொருளதிகாரம் பெற அவாவியதால், இறைவனே எழுதி அருளியது என்ற கதை இடைக் காலத்தில் பொருளிலக்கணம் மறைவுற்று அறியப்படாமல் கிடந்ததைச் சுட்டுவதேயாம். பிறகு பொருளுக்கு உரை கூறுவாரும் பலராகி, உண்மையறியப்படாதிருந்ததையும் இறையனாரகப்பொருளுரையே கதைவடிவில் தருகிறது. இவ்வுரை நக்கீரர் எழுதியது எனவும், முருகப் பெருமானே உருத்திரசன்மனாக வந்து இவ்வுரையே சிறந்தது என உலகிற்கு உணர்த்தினான் எனவும் வழங்கும் கதை குறிப்பிடத்தக்கது. உரைநடையின் அழகுக்காகவும், அது கூறும் செய்திக்காகவும் அப் பகுதியை ஈண்டுக் காண்போம்:

பாண்டிய மன்னன் "சங்கத்தாரைக் கூவுவித்து 'நம் பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச்செய்த பொருளதிகாரம், இதனைக் கொண்டுபோந்து பொருள் காண்மின்' என அவர்கள் அதனைக் கொண்டுபோந்து கல்மாப்பலகை ஏறியிருந்து ஆராய்வுழி, எல்லாரும் தாந்தாம் உரைத்த உரையே நல்லதென்று சில நாளெல்லாம் சென்றன.

செல்ல, "நாம் இங்ஙனம் எத்துணை உரைப்பினும் ஒருதலைப் படாது. நாம் அரசனுழைச் சென்று நமக்கோர் காரணிகனைத் தரல் வேண்டும் என்று கொண்டுபோந்து, அவனாற் பொருளெனப்பட்டது பொருளாய், அன்றெனப்பட்டது அன்றாய் ஒழியக் காண்டும்" என்று, எல்லாரும் ஒருப்பட்டு, அரசனுழைச் சென்றார். அரசனும் எதிர்சென்று 'என்னை நூற்குப் பொருள் கண்டீரோ?' என 'அது காணுமாறு எமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டும்' எனப் 'போமின் நுமக்கோர் காரணிகனை யான் எங்ஙனம் நாடுவேன். நீயிர் நாற்பத்தொன்பதின்மர் ஆயிற்று. நுமக்கு நிகராவார் ஒருவர் இன்மையின் அன்றே' என்று அரசன் சொல்லப் போந்து, கல்மாப் பலகை ஏறியிருந்து 'அரசனும் இது சொல்லினான், யாம் காரணிகனைப் பெறுமாறு என்னை கொல்' என்று சிந்திப்புழி, சூத்திரம் செய்தான் ஆலவாயில் அவிர்சடைக் கடவுளன்றே,

அவனையே காரணிகனையும் தரல்வேண்டும் எனச் சென்று வரங்கிடத்தும் என்று வரங்கிடப்ப, இடையாமத்து, 'இவ்வூர் உப்பூரி குடிகிழார் மகனாவான் உருத்திரசன்மன் என்பான், பைங்கண்ணன், புன்மயிரன், ஐயாட்டைப் பிராயத்தான் ஒரு மூங்கைப்பிள்ளை உளன்; அவனை அன்னன் என்று இகழாது கொண்டுபோந்து ஆசனத்தின்மேல் இரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருள் உரைத்தால் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்கும் மெய்யாயின உரைகேட்டவிடத்து; மெய்யல்லா உரைகேட்ட விடத்து வாளா இருக்கும்; அவன் குமார தெய்வம், அங்கோர் சாபத்தினால் தோன்றினான்' என முக்கால் இசைத்த குரல் எல்லார்க்கும் உடன்பாடா யிற்று; ஆக எழுந்திருந்து தேவர் குலத்தை வலங்கொண்டு போந்து உப்பூரி குடிகிழாருழைச் சங்கமெல்லாம் சென்று, இவ்வார்த்தை எல்லாம் சொல்லி, 'ஐயனாவான் உருத்திரசன்மனைத் தரல் வேண்டும்' என்று வேண்டிக் கொடுபோந்து, வெளியது உடீஇ, வெண்பூச் சூட்டி, வெண் சாந்து அணிந்து, கல்மாப் பலகை ஏற்றிக் கீழிருந்து, சூத்திரப் பொருள் உரைப்ப, எல்லாரும் முறையே பொருளுரைப்பக் கேட்டு வாளா இருந்து மதுரை மருதன் இளநாகனார் உரைத்தவிடத்து ஒரோவிடத்துக் கண்ணீர் வார்ந்து, மெய்ம்மயிர் நிறுத்தி, பின்னர்க் கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரைத்தவிடத்துப் பதந்தொறும் கண்ணீர் வார்ந்து, மெய்ம் மயிர் சிலிர்ப்ப இருந்தான். இருப்ப, ஆர்ப்பெடுத்து, 'மெய்யுரை பெற்றாம் இந்நூற்கு' என்றார்.

"அதனால் உப்பூரிகுடிகிழார் மகனாவான் உருத்திரசன்மனாவான் செய்தது இந்நூற்கு உரை என்பாரும் உளர். அவர் செய்திலர், மெய்யுரை கேட்டார் என்க. மதுரை ஆலவாயிற் பெருமான் அடிகளாற் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனாரால் உரை கண்டு குமாரசுவாமியால் கேட்கப்பட்டது என்க."

மேலே கண்ட இறையனார் களவியல் உரைப்பகுதியால் உய்த் துணரத்தக்கன பலவுள. முதற்கண் இறைவன் பெயரைச் சொல்லிக் களவியல் நூலைப் பலரும் ஏற்கச்செய்யவேண்டிய சூழ்நிலை இருந்துளது. சமயவுணர்வு மேலோங்கியதாலேதான் இப்பொருளிலக்கணம் மறக்கப் பட்டுப் போயிருந்தது. 'களவு' என்றாலே அருவருப்பும் தோன்றியுளது. அதனால்தான் இவ்வுரைக்கண் 'களவும் ஏற்கக்கூடியதே' என நீண்ட விளக்கம் தரப்படுகிறது. பலரும் மறுத்த ஒன்றை ஏற்கவைத்த சிறப்பி னாலேதான் இந்நூற்கும் 'களவியல்' என்று பெயர் வந்ததாதல் வேண்டும்.

இரண்டாவதாக 'எல்லாரும் முறையே பொருளுரைப்ப' என்றமையால் பல்வேறு உரைகள் வழங்கப்பட்டு வந்தமை தெளிவு. இவ்வுரையே பரம்பரை பரம்பரையாக உரைக்கப்பட்டுவந்த வரலாறு கூறப்படுகிறது: "இனி உரை நடந்து வந்தவாறு சொல்லுதும், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் தம் மகனார் கீரங்கொற்றனார்க்கு உரைத்தார்;

*அவர் தேனூர்கிழார்க்கு உரைத்தார்*
*அவர் படியங்கொற்றனார்க்கு உரைத்தார்*
*அவர் செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனார்க்கு உரைத்தார்*
*அவர் மணலூர் ஆசிரியர் புளியங்காய்ப் பெருஞ்சேந்தனார்க்கு உரைத்தார்*
*அவர் செல்லூர் ஆசிரியர் ஆண்டைப் பெருங்குமாரனார்க்கு உரைத்தார்*
*அவர் திருக்குன்றத்து ஆசிரியர்க்கு உரைத்தார்*
*அவர் மாதளவனார் இளநாகனார்க்கு உரைத்தார்*
*அவர் முசிறியாசிரியர் நீலகண்டனார்க்கு உரைத்தார்*

இங்ஙனம் வருகின்றது உரை."

இந்த ஓர் உரையே இவ்வாறு பத்துத் தலைமுறையாகக் கூறப் பட்டு வந்தது என்றால், 'எல்லாரும் உரைத்த உரைகள்' எவ்வாறு கூறப் பட்டு வந்திருக்க வேண்டும். 'உரைத்தார், உரைத்தார்' என்பதிலிருந்து, 'உரை' வந்த வரலாறு புலனாகிறதல்லவா? எல்லாவுரைகளும் ஒருசேர எண்ணப்படின் குழப்பமே மிஞ்சும். அதனால் எது சிறந்த உரை என்று தேறவேண்டிய நிலைமை ஏற்பட்டது. 'சிவபெருமானே அனுப்பி, முருகனே ஏற்றுக்கொண்டது' என்ற கதையால் இவ்வுரையும் புலவரிடையே நிலை பெறுவதாயிற்று.

இவ்வுரையாசிரியரே இச்செய்திகளையெல்லாம் காலப்பழமையால் கேள்விப்பட்டே இங்ஙனம் கதைபோல எழுதுகிறார் என்பது பெறப் படுகிறது. மருதனிளநாகனார் உரைக்கு அடுத்தஇடம் தருகிறது கதை. சிலர் உண்மையறியாமல் உருத்திரசன்மன் கூறியதே இவ்வுரை யெனவும் கூறி வந்துள்ளனர். எனவே பொருளிலக்கணமும் அதன் உரையும் நிலைபெறத் தெய்வ அருள் தேவைப்பட்ட காலம் இதுவென அறிகின்றோம்.

இறையனார் அகப்பொருளுரைக்கு அடுத்ததாகத் தொன்மை மிக்கதாகிய இளம்பூரணர் உரையிலும் பிறபல உரைகள் கூறப்பட்டு வருகின்றமை சுட்டப்படுதலே பெரும்பான்மையாகவுளது. ஒருசில இடங்களில் மட்டுமே மறுப்புரைக்கப்படுகிறது. தொல்காப்பியச் சொல்லதிகார இளம்பூரணத்தில் 'இதுவும் ஒருசார் ஆசிரியன் உரை' என்றும் 'இனி ஒருவன் சொல்லுவது' என்றும் (நூ.18); 'இதுவும் ஒருசார் ஆசிரியர் உரைப்ப', 'இனி ஒருமை எண்ணின் பொது என்ப ஒருவர் என்பது' என்றும் (நூ.44); 'இதுவும் ஒருசார் ஆசிரியன் உரைப்பது', என்றும் (நூ.57); 'இனி ஒரு கருத்து', என்றும் (நூ.684) இதுபோலக் குறிக்கப்படுமிடங்கள் பலவாகும்.

*உவமத் தொகையே உவம இயல (நூ. 408)*

என்ற நூற்பாவிற்கு உவமையுருபு தொக்குநின்றதாயினும் அவ்வுருபு விரிந்து நின்றாற்போலவே பொருள்படும் என்று இளம்பூரணர் பொருள் கூறுவர். ஆனால் 'துடிநடு' என்றால் 'துடியை ஒக்கும் நடு' (இடை) என வேற்றுமையுருபும் உடன்வருகிறது. எனவே இதனை வேற்றுமைத்தொகை என்றும் கூறலாமன்றோ என்ற ஐயம் எழுகிறது. இங்கு இளம்பூரணர் "அதற்கு ஒரு சாரார் சொல்லுவது; துடிநடு என்புழி உவமஉருபும் வேற்றுமையுருபும் என இரண்டும் தொக்கவேனும் துடி போலும் நடு எனத் தொகைக்கு உவமப்பொருளே சிறப்புடைத்தாகலின் அது தொகை என்பது; ஐகார உருபு அவ்வுவம உருபினை நோக்கி வந்தது என்ப; என்னை. துடியை நடுவாகக் கொள்ளாதாகலின் என்பது. இனி, அதற்கு மெய்யுரை வல்லோர்வாய்க் கேட்டுணர்க" என எழுதுதல், 'தான்' என்ற செருக்கின்றி, ஆய்வின்கண் உண்மைநாடலே குறிக்கோள் என்ற மனப்பான்மையை வெளிப்படுத்துகிறது.

ஆற்றுப்படைப் பாடலில் ஒருமையில் விளித்துப் (பொருந) பன்மையில் வினை முடிபு கொடுப்பதை (சென்மின்) இலக்கணத் திற்குள் அமைக எனத் தொல்காப்பியர் வரையறைப்படுத்துகிறார் (நூ. 455). பிற சில இடங்களிலும் இங்ஙனம் வருதலை அமைக என இந்நூற்பாவான் ஏற்பர் உரையாசிரியர்கள். இங்கு இளம்பூரணர், "என்ப ஒரு திறத்தார், அற்றன்று. (அவ்வாறு) வேண்டுமென்பர் முன்னை உரைப்பார்; பிறவும் இவ்வாறு வருவன போற்றியுணரப்படும் என்றவாறு", எனப் பிறரை மென்மையாக மறுத்தும் போற்றியும் கூறுதல் கருதத் தக்கதாகும்.

**பேராசிரியம்**

பிறர் கருத்தை வன்மையாக மறுப்பதில் குறிப்பிடத்தக்கவர்கள் பேராசிரியர், சேனாவரையர், சிவஞானமுனிவர் போல்வார் ஆவர்.

'மெய்பெறு மரபின்' எனத் தொடங்கும் தொடைவகை எண்ணிக்கை பற்றிய செய்யுளியல் நூற்பாவில் (413) பேராசிரியர் மறுப்புரை கூறும் முறை எடுத்துக்காட்டத்தக்கதாகும்: "இனி இக்காலத்துள்ள ஆசிரியருள் ஒரு சாரார் 'தொண்டுதலையிட்ட பத்துக்குறை எழுநூற்றென்றும்" எனப் பாடம் திரிப்பாரும் இன்னொரு சாரார் 'எழுநூற்றொன்றும்' எனப் பாடம் திரிப்பாரும் உளர். ஒரு பகுதியார் ஒன்றும் என்பது முற்றுவினை என்ப. 'மெய்பெறு மரபின் தொடைவகை......பத்துக்குறை எழுநூறு' என்னும் எண்ணினோடு ஒன்றும் எனக் கூட்டுப. பதின்மூவாயிரத்தறுநூற்றுத் தொண்ணூற்று ஒன்பது என்பது அவர் கருத்து. ஒன்றும் என்பதனை எண்ணுப்பெயர் முற்றும்மையடுத்த தென்பாரும் அதுவே கூறுப; அவர் அறியார். அவ்வாறு சூத்திரம் செய்வது ஆசிரியர் கருத்தன்று. அல்லதூஉம் 'ஒன்பஃதென்ப உணர்ந்திசினோரே' என்பது பழம் பாட மாகலானும் அஃதமையாதென்பது. அவ்வாறு கொள்வார்க்குத் தொடை பதின்மூவாயிரத்தறுநூற்றுத் தொண்ணூற்றொன்பதாகலும் பிழைக்கு மென்று மறுக்க..." இவ்வாறு பல்வேறு உரைவழிகள் சுட்டப்படுகின்றன. அங்ஙனம் கூறுவாரை 'இக் காலத்துள்ள ஆசிரியருள் ஒருசாரார்' என்கின்றார் பேராசிரியர். பாடம் சொல்லும் ஆசிரியர்களையே சுட்டு கின்றார் என்பது இதனால் போதரும். நாம் இக்காலத்துள்ளார் பலர் போதிய அறிவுடையராயிலர் என வருத்தப்படுவது போலவே, பேராசிரியரும் தம் காலத்தாசிரியர்கள் மீது வருத்தப்பட்டுப் பாடம் திரிப்பதைக் கண்டிக்கிறார். பல்வேறு உரைகள் உளவேனும் அவற்றுள் ஒன்று தெளிய வேண்டும் என்ற நாட்டத்தையும் பேராசிரியர் உரையில் காணலாம்.

கலிப்பா வகை கூறும் செய்யுளியல் சூத்திரத்தில் (442) பரி பாடலையும் கலிப்பாவிற்குள் அடக்குவாரைக் கடிகின்றார் பேராசிரியர்; "இனி பரிபாடலும் கலிப்பாவினுள் அடங்குமென்பாரும் உளர். கலியும் பரிபாடலும் என எட்டுத்தொகையுள் இரண்டுதொகை தம்மின் வேறாகலின் அவ்வாறு கூறுவார் செய்யுள் அறியாதார் என்பது."

இரண்டு கருத்துக்கள் உளதாயவிடத்து, அவற்றுள் எது வலுவுடைய கருத்தென்றும் எது வலுவற்றதென்றும் கூறுதலும் ஒருவகை மறுப்பே

யாகும். இந்நாகரிக நடையையும் பேராசிரியரிடம் காண்கிறோம். 'கிழவோட்குவமம் ஈரிடத் துரித்தே' (உவம.29). இதற்கு மருதமும் நெய்தலும் என உரையெழுதும் பேராசிரியர், "இனிக் கிழவோட்குவமம் பிரிவிடத்துரித்தென்பது பாடமாக உரைப்பாரும் உளர். யாதானுமொரு நிலத்ததாயினும் பிரிந்திருந்தவிடத்து உள்ளுறை உவமம் கூறப்பெறும் கிழத்தி என்பது கருத்து. 'பெருந்தண் வாடையின் முந்து வந்தனனே' என்பது பிரிவன்றாகலின், ஈரிடம் என்றலே வலிதென்பது," என்று மற்றையோர் கருத்தை மறுப்பர்.

பேராசிரியர், வஞ்சிப்பாவில் கலிப்பா பிறக்கும் என்பாரைத் "தலை குலுக்கி வலியச் சொல்லினும் தன் சீரின்மையின் (அங்ஙனம் பிறவாது என) மறுக்க" என்றுரைப்பது புதுமையான மறுப்பாகவுளது. (செய் 420)

**சேனாவரையம்**

சேனாவரையர் பிறர் உரைகளை மறுக்குமிடங்களே மிகுதி; உடன்படுமிடங்கள் "குறைவென்றே கூறவேண்டும். அத்துடன் வன்மை யாகவும் மறுப்பர். பெரும்பாலும் உரையாசிரியரை மறுக்கும் இவர் 'அவர் உரை போலியுரை' என்பர். 'அவர்க்கு அது கருத்தன்று' என்றும், 'ஆசிரியர்க்கு (தொல்காப்பியர்க்கு) அது கருத்தன்றாதலின் அவர்க்கும் அது கருத்தன்றாம்' என்றும் இவ்வாறு தம் மறுப்புரைகளைச் சேனா வரையர் முடிப்பர்.

சொல்லதிகாரம்-கிளவியாக்கம் முதல் நூற்பாவில் 'ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே' என்னுமிடத்து, ஆயிரு திணையின் மேலும் சொற்கள் நிகழும் எனச் சேனாவரையர் உரையெழுதினார். "சொல் நிகழ்ச்சிக்குப் பொருள் இடமாகலின், ஆயிருதிணையின்கண் என ஏழாவது விரிக்க, இன் சாரியை வேற்றுமையுருபு பற்றியும் பற்றாதும் நிற்கும் என்று உரையாசிரியர் இரண்டாவது விரித்தாரால் எனின் 'சாரியை உள்வழிச் சாரியை கெடுதலும், சாரியை உள்வழித் தன்னுருபு நிலையலும்' (எழு. 157) என்று இரண்டாவதற்குத் திரிபு ஓதினமையாலும் 'செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்' (சொல். 28) என்புழியும் பிராண்டும் எல்லாம் ஏழாவது விரித்தற்கேற்பப் பொரு ளுரைத்தமையானும் அவ்வுரை போலியுரை என்க", என்று இளம் பூரணர் உரையை அவர் மறுக்கின்றமை காண்க.

'பெண்மை சுட்டிய' எனத் தொடங்கும் நூற்பாவின் (4) இறுதியில் "சுட்டிய என்பது செய்யிய என்னும் வினையெச்சம் என்றும் ஆண்மை

திரிதல் சொற்கு இன்மையின் பெயர் நிலைக்கிளவி என்பது ஆகுபெய ராய்ப் பொருண்மேல் நின்றதென்றும் உரையாசிரியர் கூறினாரால் எனின், ஆண்மை திரிதல் பெண்மைத் தன்மை எய்துதற் பொருட்டன்றிப் பேடிக்கும் இயல்பாகலின் பெண்மை சுட்டவேண்டி ஆண்மை திரிந்த என்றல் பொருந்தாமையானும், பொருளே கூறலற்றாராயின் ஆசிரியர் பேடியும் தெய்வமும் என்று தாம் கருதிய பொருள் இனிது விளங்கச் சுருங்கிய வாய்பாட்டால் சூத்திரிப்பாராகலானும் அவர்க்கது கருத்தன்மை யான் உரையாசிரியர்க்கும் அது கருத்தன்றென்க", என உரையாசிரியரை மறுப்பதில் மதிப்புடை மாண்பு வெளிப்படுகிறது. 'உரையாசிரியர் பிறர் மதம் உணர்த்திய கூறினார் என்பது' எனவும் (நூ. 17), 'அது போலியுரை என்க' எனவும் (நூ. 114), 'அவர்க்கது கருத்தன்மை அறிக' எனவும் (நூ. 161), 'அஃதுரையாசிரியர் கருத்தன்மை அவ்வுரையான் விளங்கும்' (நூ. 182) எனவும் "சிற்றறிவினார்க்கும் புலனாம்; அதனால் அஃதவர்க்குக் கருத்தன்மை சொல்லவேண்டுமோ என்பது", என்றும் (291) வருகின்ற மறுப்புரை நடைப்போக்குகள் சேனாவரை யரிடம் காணப்படுகின்றன. இங்ஙனம் சேனாவரையர் மட்டுமே 'உரையாசிரியர்' என இளம்பூரணரைப் பெயர்சுட்டி மறுக்கிறார். இங்ஙனம் பெயர்சுட்டிக் கூறுமிடங்களைவிட, ஒரு கருத்தை ஏற்பதாயினும் மறுப்பதாயினும் பெயர்சுட்டாமல் போதலே பெரும்பான்மை. உரை யாசிரியர்கள் ஒருவரை ஒருவர் உடன்பட்டும் மறுத்தும் கூறுகின்றவற்றில் எது சரி, எது தவறு எனக் காண்பது தனி ஆராய்ச்சி. இங்கு மறுப்புக் கூறும் பாங்கும் நடையும் உத்தியும் பற்றியே சிந்திக்கவேண்டும். செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப் பொழில் போன்றவற்றில் மறுப்புரை ஆராய்ச்சிகள் பல வெளிவந்துள்ளன.

**உரையாசிரியர்கள்**
**வடநூன் முறைகளைக் கடன் பெற்றனரா?**

உரையாசிரியர்கள் இடைக்காலத்தில் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தனர். அதுபோழ்து சமயம் சிறந்தோங்கியிருந்தது. வடமொழிக்குச் செல்வாக்கு மிகுதி. எனவே இவ்வுரைகள் எல்லாம் வடமொழிக்குக் கடன்பட்டிருக்கும்; வடமொழிச் செல்வாக்கால் வளர்ந்திருக்கும் என ஒரு சாரார் யூகமாகக் கூறுகின்றனர். ஒரு வேடிக்கை என்னவெனில் இவர்கள் வடமொழியறிவற்றவர்கள். இருப்பினும் தமிழில் உரையாசிரியர்கள் எவ்வாறு இங்ஙனம் சிறந்தோங்கியிருக்கமுடியும் என்பதே இவர்களின் ஐயப்பாடு.

தமிழும் வடமொழியும் நன்கு கற்ற இருமொழியறிஞர்கள் பெருகி னாலன்றி, ஒருவரை ஒருவர் ஐயப்படும் இச் 'சிறுமை' நீண்டுகொண்டு தான் இருக்கும். ஒரு கருத்தை 'யூகமாகவே' முடிவுசெய்வது ஆய்வாளனின் பண்பாகாது.

இடைக்காலத்தில் வடமொழிச் செல்வாக்கால் தமிழும் தமிழ் இலக்கியமும் மறக்கப்பட்டு மீண்டும் அவை நினைக்கப்பட்ட 'மறுமலர்ச்சி யாலே'தான் இவ்வுரைகள் பல்கிப் பெருகின. பாலி, வடமொழி போன்ற வற்றோடு போட்டியிட்டுத் தமிழ் மீண்டும் செல்வாக்குப் பெற்ற மன வுணர்வு, தமிழ்மரபைப் பேணவே முற்பட்டது. வடமொழிச் செல்வாக்கு என்பது கருத்துக் கலந்துரையாடல்போல் தமிழ் வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் கிடைத்த உதவியாகும். அதிலும் வடமொழியோடு கலந்து வளருங்கால் ஏற்பன ஏற்றுக் கடிவன கடிந்தே தமிழ் வளர்ந்து வந்திருக்கிறது.

இங்கு காணப்பட்ட பொதுப் பாரம்பரியத்தின் எதிரொலிகள் பல வற்றைத் தமிழிலும் காண்கிறோம்; வடமொழியிலும் காண்கிறோம். வடமொழியறிஞர்கள் பலர் தென்னகத்தில் வாழ்ந்துள்ளனர். நிலம் ஒன்று; மொழிகள் இரண்டு. அந் நிலத்து மக்களின் சமூக விளைவு களாகிய கலை, இலக்கியம் போல்வன அவ்வம் மொழி மரபிற்கேற்பவே வளர்க்கப்பட்டுள்ளன. இதனால் சொல்லொற்றுமையும் பெயரொற்று மையும் கருத்தொற்றுமையும் கண்டவிடத்தெல்லாம் இதனை அங்கிருந்து கடன்பட்டனர் என விவாதிப்பது எங்ஙனம் பொருந்தும்?

செய்யுளியலில் தொல்காப்பியர் நூல்யாப்பிற்கு இலக்கணம் கூறுமிடத்து, "உள் நின்று அகன்ற உரையொடு பொருந்தி" (1422) அந்நூல் தன் கருத்தை நுண்ணிதின் விளக்கவேண்டும் என்று குறித்துள்ளார். அவ்வுரை யாது? நூல் தோன்றும்போதே உரையும் தோன்றியது. எவ்வாறு? நூல் என்பது சட்டவிதிகள் போல் மொழி வழக்காற்று வரன்முறைகளை 'ஆடிநிழலின்' அடக்கிக் கூறுகிறது. அன்றே பாடமோதிய ஆசிரியன் நூற்பாவைச் சொல்லியபின், வாய் மொழியாக உரைகூறி விளக்கினன். நூல் சூத்திரங்கள் - நூற்பாக்கள் கொண்டது. ஏட்டில் எழுதப்பட்டிருக்கும்; மன ஏட்டிலும் மாணவர்களால் பதிக்கப்பட்டிருக்கும். அது பாடநூல் (Text Book) போன்றது. உரை பிறகு அதை விளக்கிக் கூறப்பட்டதாகும். நூல் ஒன்றாக இருக்கும்; உரைகள் பலவாக இருக்கும். ஏன்? பல்வேறு ஆசிரியர்கள் பல்வேறு இடங்களில் பாடமோதியிருப்பர் அல்லவா? முதலில் தொடங்கும்போது உரைவேற்றுமையின்றியே சொல்லப்பட்டு வந்திருக்கும். காலம் செல்லச்

செல்ல மூலநூலின் கருத்தை உணரமாட்டாமையால், தம்கால வளர்ச்சி மூலத்தில் காணப்படாமையால், உரை சொல்லி வந்தோர் தத்தம் கருத்தையும் கலந்துரைக்கும் வாய்ப்பிருந்தமையால் இவ்வுரைகள் வேறுபடலாயின. பிற்காலத்தில் பல்வேறு கருத்துப்பள்ளிகள் (School of Thought) ஏற்பட, இஃது ஏதுவாயிற்று. எனவே காலம் காலமாய் ஒரு மரபுவழி தந்தை மகன் பெயரன் என்ற குடும்பக் கால்வழிபோல வந்ததாகலின் இதில் மரபுச் செல்வாக்கு மிகுதியாக இருந்திருக்க வேண்டும் அன்றோ?

முன்னே 'இறையனார் அகப்பொருள் உரையில்' எல்லாரும் உரை கூறினார் எனவும் தத்தம் உரையே சிறந்தது என்று கூறினார் எனவும் வரும் குறிப்புகளும் முன்னைய உரைகளாகிய இறையனார் களவியலுரையுள்ளும் இளம்பூரணத்துள்ளும் 'ஒரு சாரார் உரைப்ப', 'ஒரு திறத்தார் உரைப்ப' எனவரும் நடைப் போக்குகளும் இறையனார் களவியல் உரை நக்கீரர் முதல் நீலகண்டனார் வரை பத்துத் தலை முறைகளாகக் கூறப்பட்டு வந்தது என்ற குறிப்பும் உரைகள் தொன்று தொட்டு நடந்துவந்த வரலாற்றை நமக்கு உணர்த்துகின்றன அன்றோ?

உரையாசிரியர்களுள்ளும் தமிழை நன்கு கற்றுத் தமிழ் மரபைக் கொண்டுமட்டும் எழுதியவர்கள் என்றும் வடமொழி ஒப்பீட்டறிவால் தமிழில் சிற்சில மாற்றங்கள் விளைவிக்க முயன்றவர்கள் என்றும் வடமொழிக்கே ஆட்பட்டு தமிழ் மரபோடு முரணி எழுதியவர்கள் என்றும் பலதிறத்தார்பற்றிக் கூறக் கேட்டிருக்கிறோம் அன்றோ?

வடமொழியிலும் உரையெழுதும் மரபுண்டு. நூல் தோன்றும் போதே உரையும் தோன்றியுளது. தொனியாலோகம் (தொனி விளக்கு) எனப்படும் நூலில் ஆலோகம் என்பது விளக்கு எனப் பொருள்படும். பிறகு அதற்கு 'லோசனம்' (கண்) எனவும் உரை தோன்றிற்று. இங்ஙனம் உரைகட்கே பெயரிடும் மரபு உண்டு. கி.பி. 9ஆம் நூற்றாண்டில் தோன்றிய தொனியாலோகத்திற்குப் பிறகே அங்கு உரையின் செல்வாக்கு மலர்கிறது. வடமொழி உரை மரபுகளில் தருக்க வாதங்கள், உடன்படலும் மறுத்தலுமாகிய கருத்து விவாதங்கள் மிகுதி. தமிழிற்போல அல்லாமல் ஒருவர் மற்றொருவர் கருத்தை முழுவதுமாக மறுப்பர்; அடிப்படைகளையே மறுப்பர். தம் கருத்தொன்றே சிறந்தது என நிலைநாட்டுவர். தமிழில் இப் போக்கினை நோக்கிய வளர்ச்சியைக் காணலாம். ஆனால் இங்கு யாரும் அந்த அளவு தனித்தனிக் கோட் பாட்டாளராகப் பிரிந்து நிற்கவில்லை.

வடமொழியுரையாசிரியர்களிடம் காணும் புலமைப் போட்டிக்கும் தமிழிலுள்ள உரையாசிரியர்களின் புலமைப் போட்டிக்கும் வேறுபாடு உண்டு. பரிமேலழகரே வடமொழிக் கருத்தைத் தழுவி எழுதும் மனப் போக்குடையவராயினும், அக் கருத்துக்களை மறுத்துத் தமிழ்நூற் கருத்துக்களைக் கூறிச் செல்லும் இடங்களும் ஒருசில திருக்குறள்களில் உள. வடநூற் கருத்தைப் பின்பற்றியமையால் சேனாவரையர், மிக வன்மையாக அவர் உரையாசிரியரையும் பிறரையும் மறுத்திருப்பினும், இன்றைய ஆய்வாளர்களால் மறுக்கப்படும் இடங்கள் பலவுள. எனவே தொன்றுதொட்டு வரும் மரபுச் செல்வாக்கு - அடிமரமாம் ஆலமரம் உள்ள இடத்தே, பிறமொழிச் செல்வாக்கு என்ற பருவமாறுதல் பெரும் விளைவை ஏற்படுத்திவிட முடியாது. மீண்டும் பருவம் மாறும்போது அம்மரம் முன்புபோல் தளிர்க்கும், பூக்கும், செழிக்கும். அடிமரம் இல்லாவிடத்து அடித்த ஆடிக்காற்றென வடமொழியைக் கருதி, இங்கு சிறியதோர் தொடரிலும் வடமொழிச் செல்வாக்கைக் காணும் அறிஞர் களுக்கு எவ்வாறு புத்தி கற்பிப்பது என்று தோற்றவில்லை. இவர்கட்கு வடமொழி அறிவு இல்லாததால், நல்லகாலம், வடமொழியை இவர்கள் கெடுக்கவோ, பாழ்படுத்தவோ இயலவில்லை. தமிழ்மொழி பற்றிய புலமை இவர்களிடம் ஆழமாக அமைந்திலது. ஒருபோது கற்றவற்றை வைத்தே 'வாணிகம்' செய்துவரும் இவர்கள், தமிழை அரை குறையாக அறிந்திருப்பதால், தமிழைக் கெடுக்க, தமிழில் குழப்பமேற்படுத்த நிறையவே வாய்ப்புளது. அதனை அவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்கின்றனர். தாங்கள் அறிவியல் சார்ந்த நடுநிலையாளர்கள் எனவும், பரந்த மனத்தினர் எனவும் பறைசாற்றிப் பிழைக்கின்றனர்.

வடமொழிபால் - அதுவும் நம்மொழியே எனப் பற்றும் பாசமும் கொள்வாரையும் அம்மொழிமீது வெறுப்பும் அருவருப்பும் கொள்ளுமாறு இவ்வரைகுறைகள் செய்துவிடுகின்றன.

தனிப்பாடல் திரட்டில் வருவதுபோல்,

*குட்டுதற்கோ பிள்ளைப்பாண்டியன் ஈங்கில்லை;*
*குறும்பி அளவாக் காதைக் குடைந்து தோண்டி*
*எட்டினமட்டறுப்பதற்கோ வில்லி இல்லை*
*இரண்டொன்றா மயிரைமுடிந்து இறங்கப்போட்டு*
*வெட்டுதற்குக் கவிஒட்டக் கூத்தன் இல்லை*

என்றுதான் பாடத் தோன்றுகிறது. தமிழில் 'உரைமரபு' என்பது தொன்று தொட்டு வருவது. தொல்காப்பியர் செய்யுளியலில் 'பாவின்று எழுந்த கிளவி' (1429) என்றது இவ்வுரை மரபையே என்பர். இறையனார் களவியலுரை கூறும் கதைச் செய்திகளாலும், தொன்றுதொட்டு வரும் விவாத மரபுகளாலும் தமிழர்கள் கண்ட அறிவுத்தடங்களில் இஃதும் ஒன்றே என்ற உண்மை புலனாகும்.

**சான்றுப் பதிவு**

ஆய்வாளன் என்பவன் ஒவ்வொரு சொல்லையும் தொடரையும் சிந்தித்து, நிறுத்துப் பார்த்து, வேண்டாத அல்லது மாறான எதுவுமின்றித் தன் கூற்றுக்களை எழுதிச் செல்லவேண்டும். பொது மேடைப்பேச்சு வேறு; பொதுக்கட்டுரை எழுதுதல் வேறு; ஆய்வுரை எழுதுவது வேறு. காரணமில்லாத, அடிப்படையற்ற கருத்துரைகள், தொடர்கள் எதுவுமே இடம் பெறலாகாது. 'தமிழ் மொழி இனிமை உடையதென்பது உலகறிந்த செய்தியாகும்' என்றாற்போல எழுதிவிடுதல் கூடாது. 'யாருக்கும் தாய்மொழி இனிமையுடையதே' என அதை மறுப்பர். 'தமிழ் மொழியில் காணப்படும் உயிரும் மெய்யுமாகிய எழுத்தொலிகளையும் அவை இணைந்து சொல்லாமாற்றையும் உய்த்துணர்வார்க்கு அம் மொழியின் இனிமை புலனாகாமல் போகாது', என எழுதினால் தமிழில் ஏதோ தனித்தன்மை உளதென்ற காரண காரிய உணர்வை ஏற்படுத்தும். மறுப்பாரும் காரண காரியம் காட்டவேண்டிவரும். மேலும், 'ஆய்வாளனின் ஒவ்வொரு கூற்றும் ஒரு சான்றினால் உறுதிப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும்' என்பர் மேனாட்டார் (Every statement should be supported by a document). அச்சான்றைத் தேவைப்படுமேல் அவன் வெளிப்படக் கூறலாம்; கூறாமலும் அவ்வுணர்வு தொனிக்க எழுதலாம். அடிக் குறிப்பிடுதல் என்பது இச் சான்றினை எங்கிருந்து எடுத்தோமென இடம் சுட்ட அமைவதாகும். இச் சான்றுப் பதிவு (Documentation) ஏன்? ஓர் ஆய்வாளன் தானாகத் தற்சார்புணர்வால் ஒன்றைக் கூறாமல் தக்க சான்றோடுதான் கூறுகின்றான் என்பதை உலகிற்கு உணர்த்தவும்; தன் புலமையை வெளிப்படுத்தவும்; அதுபோன்ற இடங்கள் பிற எவையுள என்பதைப் பிற ஆய்வாளர்களுக்கு உணர்த்தவும்; மேன்மேலும் இவ் வாய்வு வளரவுமே இத்தகைய சான்றுப்பதிவுகளை அமைக்கின்றான் என்பர்.

நம் முந்தைய ஆய்வாளர்களாகிய உரையாசிரியர்களிடமும் இந்நெறி காணப்படுகிறது. பரிமேலழகரிடம் இந்நெறி மிக அழுத்த

மாகக் காணப்படுகிறது. அதற்குக் காரணம் திருக்குறள் போலவே, பரிமேலழகர் உரையும் வேண்டாத சொல் ஒன்றுகூட இன்றித் திட்ட வட்டமாக எழுதப்பட்டது என்பதனால் பெறப்படும். தம் கருத்துக்கள் பல வற்றை நிறுவுதற்குப் பரிமேலழகர் முற்கால, இடைக்கால இலக்கண இலக்கிய நீதி நூல்களிலிருந்து சான்றுகள் காட்டுகிறார். இக் காலத்தே நாம் இத்தகைய இடங்களில் நூலாசிரியன், நூல், பதிப்பித்த இடம், ஆண்டு, பக்க எண் யாவும் தரவேண்டும் என எதிர்பார்க்கிறோம். முன்னாள் உரையாசிரியர்கள் மிக அருகியே ஆசிரியன் பெயர் குறிப்பர்; நூற்பெயர்களைப் பலவிடத்தும் சுட்டுவர்; இடம் சுட்டார், பரிமேலழகர் பிறர் கூற்றாகக் கூறுவாரேயன்றி ஆசிரியன் நூல் எதனையும் குறிப்ப தில்லை. அக் காலத்தில் தொடரைச் சொன்ன அளவில், பிற தொடர்பு உடைய யாவும் நினைவு வருமாறு கல்விநிலை இருந்ததால் இவை தேவைப்படாமல் போயின. இன்றைய பதிப்பாசிரியர்கள் இத்தகைய இடங்களில் இன்று அடைப்புக் குறிக்குள் இடம் சுட்டியுள்ளமை புதிய பதிப்பு முறையின் பயனாகும்.

**இளம்பூரணர்**

முல்லை முதலிய மலர்களின் பெயர்கள் அவ்வந்நிலங்கட்கு ஆகி வந்ததை உணர்த்த வந்த இளம்பூரணர் சான்று காட்ட வேண்டிய வரானார். இங்ஙனம் தேவைப்படுமிடத்தில் சான்று காட்டுவதே நெறி யாகும்; தேவைப்படாதவிடத்தும் காட்டுவது மிகையாகும். 'மாயோன் மேய' - என்று தொடங்கும் பொருளதிகார நூற்பாவில் 'முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச் சொல்லிய முறையால் சொல்லவும் படுமே' என்ற அடிகள் இடம்பெறுகின்றன (அகத். 5). இங்கு இப் பெயர்கள் பற்றிச் சிந்திக்கும் இளம்பூரணர் கீழ்வருமாறு எழுதுகின்றனர்:

"முல்லை குறிஞ்சி என்பன இடுகுறியோ, காரணக்குறியோ எனின் ஏகதேச காரணம் பற்றி முதலாசிரியர் இட்டதோர் குறி என்று கொள்ளப் படும். என்னை காரணம் எனின்,

"நெல்லொடு, நாழிகொண்ட நறுவீ முல்லை, அரும்பவிழ் அலரி தூஉய்' (முல்லைப் 8-10) என்றமையால் காடுறை உலகிற்கு முல்லைப் பூ சிறந்ததாகலானும்;

"கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு, பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே' (குறு. 3) என்றவழி மைவரை உலகிற்குக் குறிஞ்சிப் பூ சிறந்ததாகலானும்;

'இறாஅல் அருந்திய சிறுசிரல் மருதின், தாழ்சினை உறங்கும் தண்துறை ஊர்' (அகம். 286) என்றவழி தீம்புனல் உலகிற்கு மருது சிறந்தமையானும்;

"பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல், இனமீன் இருங்கழி ஓதம் மல்கு தொறும், கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்' (குறு.9) என்ற வழிப் பெருமணல் உலகிற்கு நெய்தல் சிறந்தமையானும் இந் நிலங்களை இவ்வாறு குறிப்பிட்டார் என்று கொள்ளப்படும்."

"பாலை என்பதற்கு நிலம் இன்றேனும், வேனிற்காலம் பற்றி வருதலின் அக்காலத்துத் தளிரும் சினையும் வாடுதலின்றி நிற்பது பாலை என்பதோர் மரம் உண்டாகலின், அச்சிறப்பு நோக்கிப் பாலை என்று குறிப்பிட்டார்."

இங்ஙனம் இளம்பூரணர் முல்லைப்பூச் சிறப்பால் முல்லை நிலம் பெயர் பெற்றது என இவ்வாறு கூறுமிடத்துச் சான்றோர் செய்யுட்களை மேற்கோள் காட்டுகிறார். அவ்வத்திணைப் பாடல்களில், நிலவருண னையில் இப் பூக்கள் சிறப்பான இடம்பெறுதலே தக்க சான்றாகிறது. பாலை உலகியலால் அறியப்படுதலின், மிகுதியான சான்றுகள் இருக்கவும் காட்டாராயினார். இவ்வாறு உரையாசிரியர்கள் சான்றுப் பதிவு செய்யு மிடங்களையும் அங்குள்ள இன்றியமையாமை, பொருத்தம் பற்றிய காரணங்களையும் கண்டறிதல் பயன்பாடுடையதாகும்.

**பரிமேலழகர்**

'அறத்தான் வருவதே இன்பம்' என்ற தொடரில் (39). 'இல்லறத் தோடு பொருந்தி வருவதே இன்பமாவது' என உரையெழுதிய பரிமேலழகர், "ஆன் உருபு ஈண்டு உடனிகழ்ச்சிக்கண் வந்தது, 'தூங்கு கையான் ஓங்கு நடைய' என்புழிப்போல" என நிறுவுகின்றார். புறநானூற்று (22) அடி உருபின் பொருள் கோடலுக்கு உதவுகிறது.

அன்புடைமை அதிகார முகவுரையில், "இல்லறம் இனிது நடத்தலும் பிறவுயிர்கள் மேல் அருள் பிறத்தலும் அன்பின் பயனாகலின் இது வேண்டப்பட்டது. வாழ்க்கைத்துணைமேல் அன்பில் வழி இல்லறமினிது நடவாமை 'அறவோர்க்கு அளித்தலும் அந்தணரோம்பலும், துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர்" சிறப்பின், விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை' என்பதனானும் (சிலம்பு - கொலைக்களம். 71-73) அதனால் அருள் பிறத்தல் 'அருள் என்னும் அன்பீன் குழவி' (குறள் 257)

என்பதனானும் அறிக," என எழுதுவர் பரிமேலழகர். அன்பிற்கு இல்லறத்தோடு தொடர்புண்மையை நிறுவவும் அன்பின் முதிர்ச்சியே அருளென்பதை நிலைநாட்டவும் இச்சான்றுகள் பயன்படுகின்றன.

*என்பி லதனை வெயில்போலக் காயுமே*
*அன்பி லதனை அறம்*

*(குறள் 77)*

என்னுமிடத்து அறக்கடவுள் காயுமென வருதலை, "இவ்வாறு 'அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றம்' (நான்மணிக். 83) எனப் பிறரும் கூறினார்," எனக்காட்டி உறுதிப்படுத்துகிறார்.

*சொல்லுக சொல்லின் பயனுடைய சொல்லற்க*
*சொல்லிற் பயனிலாச் சொல்*

*(குறள் 200)*

இதில் 'சொல்லின்' என்பது ஒரு முறை வந்தால்போதும். நுட்பமாய் இதை உணரும் பரிமேலழகர் "சொல்லின் என்பது இருவழியும் மிகையாயினும், சொற்பொருட் பின்வருநிலை என்னும் அணி நோக்கி வந்தது, "வைகலும் வைகல் வரக்கண்டும் என்பது போல", எனத் தக்க சான்று காட்டிக் குற்றமில்லை என உறுதி செய்கின்றார்.

*வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி*
*தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது*

*(குறள் 377)*

இதில் வகுத்தான் வகுத்த வகையல்லால் துய்த்தல் அரிது என்பதற்கு 'தெய்வம் வகுத்த வகையானல்லது நுகர்தலுண்டாகாது' என உரையெழுதிய பரிமேலழகர் தெய்வம் என்பதை 'வகுத்தான்' என உயர் திணை ஆண்பால் ஆகக் கூறுதல் எவ்வாறு எனச் சிந்திக்கிறார். 'இசைத்தலும் உரிய வேறிடத்தான' (தொல். சொல். கிளவி. 59) என்பதனான் 'உயர்திணையாயிற்று', எனத் தொல்காப்பியச் சான்று காட்டி அது முறையே என நிறுவுகின்றார்.

இவ்வாறே பரிமேலழகர் சான்றுப்பதிவு செய்து கருத்தை நிறுவு மிடங்களைக் காண்பாரும் ஏனைய உரையாசிரியர்கள் வேண்டுமிடங் களில் சான்றுகாட்டிப் போதலைக் கற்பாரும் தமிழ் உரையாசிரியர்களிடம்

– இன்று பெருவழக்காக இருப்பது போன்று – தக்க சான்றுகளைக் காட்டித் தம் கருத்தை நிறுவவேண்டும் என்ற உணர்விருந்ததை மறுக்க மாட்டார்கள் எனலாம். அவற்றை இடம் சுட்டிப் பதிவு செய்தலில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, முன்பு அவ்வுரைகளில் காணாததாகும்.

**மேற்கோள் ஆட்சி**

ஒரு கருத்தை மேலும் விளக்குவதற்கும், தான் கூறிய கருத்தைத் தெளிவுபடுத்துவதற்கும் தொகைகளாக உள்ளவற்றை விரித்து விளக்குவதற்கும் ஒன்றை நிறுவுவதற்கும் மேற்கோள் தேவைப்படும். சான்றுப் பதிவும் ஒருவகை மேற்கோளாதலை இதனால் உணரலாம். மேற்கோள்கள் அளவின்றிப் போதல் கூடாதென்றும், மிகச் சுருக்கமாகத் தேவைப்படும் அளவு மட்டும் இடத்தில்மட்டும் தரவேண்டுமென்றும், பிறமொழி மேற்கோள்களை அடிக்குறிப்பில் சுட்டி, அவற்றின் மொழி பெயர்ப்பையே கட்டுரையிடையே தரவேண்டும் என்றும் தேவையின்றி மேற்கோளுக்காக மேற்கோள் என ஆளுதல் கூடாதென்றும் ஆய்வறிஞர் கருதுவர்.

உரையாசிரியர்கள் மேற்கோள் ஆள்வது பற்றிய குறிப்பைத் தமிழ்த்தாத்தா சாமிநாதையரின் பதிப்புக்களில் காணலாம். இடம் விளங்கிய மேற்கோள் என்றும் இடம் விளங்கா மேற்கோள் என்றும் அவர் பட்டியல்கள் தருவர். பத்துப்பாட்டு - நச்சினார்க்கினியர் பதிப்பில் இனியர் 83 நூல்களிலிருந்து மேற்கோள் காட்டியிருப்பதை அவர் பட்டியலிட்டுத் தந்துள்ளார். நூலின் இறுதியில் இடம் விளங்கா மேற்கோள்களின் அகராதி ஒன்றும் தந்துள்ளார்.

புறநானூற்றுப் பழையவுரைப் பதிப்பு முகவுரையில் தமிழ்த்தாத்தா, "இந்த நூலுரையாசியர் மேற்கோளாக எடுத்துக்காட்டிய நூல்கள் தொல்காப்பியம், கலித்தொகை, குறுந்தொகை, சீவக சிந்தாமணி, பெரும்பாணாற்றுப்படை என்பன", என்று குறிப்பிடுவார்.

**பரிமேலழகர்**

திருக்குறளுக்கு ஆறுமுக நாவலர் பதிப்பொன்றுளது.[1] அது பிழையற்ற நற்பதிப்பாகும்.

*எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*
*செய்ந்நன்றி கொன்ற மகற்கு*

*(குறள் 110)*

இதன் விளக்கவுரையில் பரிமேலழகர் "பெரியவறங்களைச் சிதைத்த லாவது ஆன் முலையறுத்தலும் மகளிர் கருவினைச் சிதைத்தலும் பார்ப்பார்த் தபுதலும் முதலிய பாதகங்களைச் செய்தல்," என்று குறிப்பிடுகின்றார். இது புறநானூற்றுப் பாடல் ஒன்றின் உரைநடை வடிவமாகும். பழங்காலத்தில் இங்ஙனம் மேற்கோள்களை, படிப்போர் உணருமாறு பெயர் குறியாமல் ஆள்வதும் பாடலை வசனநடையில் எழுதிப்போதலும் உண்டு. இதன் அடிக்குறிப்பில் ஆறுமுக நாவலர்: "புறநானூறு ங-ச, ஆன்முலை அறுத்த அறனிலோர்க்கும், மாணிழை மகளிர் கருச்சிதைத்தோர்க்கும், குரவர்த் தப்பிய கொடுமையோர்க்கும், வழுவாய் மருங்கிற் கழுவாயுமுளவே, நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன், செய்தி கொன்றார்க்கு உய்தி இல்லென்று, அறம்பாடின்றே ஆயிழைகணவ. கழுவாய் - பிராயச்சித்தம்". மேற்கண்ட மேற் கோளாட்சியாலும் ஆறுமுகநாவலரின் அடிக்குறிப்பாலும் புறநானூற்றுப் பாடலடிக்குப் பாடவேறுபாடிருந்தது புலனாகின்றது. 'பார்ப்பார்த் தப்பிய' என்ற பாடத்தைப் பரிமேலழகர் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார். அதனிலும் 'குரவர்த்தப்பிய' என்ற பாடம் வருணபேதம் நோக்காத சிறந்த பாடமாகவுள்ளது.

*எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்*
*பண்புடை மக்கட்பெறின்*

*(குறள் 62)*

எழுபிறப்புக்களை மேற்கோள் ஒன்று காட்டிப் பரிமேலழகர் விளக்கு கின்றார்: "பிறப்பேழாவன,

ஊர்வ *பதினொன்றாம் ஒன்பது* மானுடம்
நீர்,பறவை நாற்கால்*ஓர் பப்பத்துச்-சீரிய*

---

1. 'தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் அருளிச்செய்த தமிழ்வேதமாகிய திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும்' என்று நூற்பெயர் காணப்படுகிறது. இவை இராமநாதபுர சமஸ்தானம் ம.ா.ா.ஸ்ரீ பொன்னச்சாமித் தேவரவர்கள் வேண்டுகோளின்படி, யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரால் பலபிரதிரூபங்களைக்கொண்டு பரிசோதித்தது. மேற்படியூர் சதாசிவப் பிள்ளையால் சென்னப்பட்டணம் வித்தியாநு பாலனயந்திர சாலையில் அச்சிற்பதிக்கப்பட்டன. ஐந்தாம் பதிப்பு. சார்வரி ஹூ புரட்டாசி மீ". இவை முகப்புப் பக்கத்தில் காணப்படும் பதிப்புச்செய்தியாகும்.

*பந்தமாந் தேவர் பதினால்அயன் படைத்த*
*அந்தமில்சீர்த் தாவரம்நா லைந்து.*

இப்பாடல் எங்கிருந்து எடுக்கப்பட்டதென்பது தெரியவில்லை.

*செயற்பால செய்யாது இவறியான் செல்வம்*
*உயற்பால அன்றிக் கெடும்*

*(குறள் 437)*

"செயற்பால ஆவன அறம் பொருள் இன்பங்கள்." செல்வத்தால் அறம் செய்யலாம்; இன்பம் நுகரலாம். பொருளால் பொருள் செய்வது எப்படி? விளக்கவுரையில் இவ்வாறு ஒரு கேள்வியை எழுப்பிக் கொண்டு, சீவகசிந்தாமணியை மேற்கோள் காட்டித் தெளிவுறுத்துகிறார்: "பொருளால் பொருள் செய்தலாவது பெருக்குதல்; அது

*பொன்னின் ஆகும் பொருபடை அப்படை*
*தன்னின் ஆகும் தரணி தரணியில்*
*பின்னை ஆகும் பெரும்பொருள் அப்பொருள்*
*துன்னும் காலைத் துன்னாதன இல்லையே*

என்பதனான் அறிக.

இவ்வாறு மேற்கோள்கள் இடமறிந்து, மேலும் விளக்கம் கிடைத்தற் பொருட்டு ஆளப்படுகின்றன.

**சிலப்பதிகார உரைகள்**

சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியமாதலின் அதன்கண் மேற் கோள்கள் மிகுதி. அரங்கேற்றுகாதை ஒன்றில் மட்டும் அரும்பதவுரை யிலும் அடியார்க்குநல்லார் உரையிலும் இடம் பெறும் மேற்கோள்களைப் பற்றிக் காண்போம்.

அரும்பதவுரையில் இடம் சுட்டாது இசைநாடக நூல்களிலிருந்து சிறுசிறு மேற்கோள்கள் ஆளப்படுகின்றன. அடியார்க்கு நல்லாரும் பெயர்சுட்டியும் சுட்டாதும் பல மேற்கோள்களை ஆள்கின்றார்.

அவர் பெயர்சுட்டுவன:

பரத சேனாபதியார்
குணநூலுடையார்

சயந்த நூலுடையார்

மதிவாணனார்

செயிற்றியனார்

தாளவகையோத்து

சிகண்டியாரின் இசைநுணுக்கம்

சிற்பநூலாசிரியர்

நூல்

ஒரு பெண்ணை ஐந்தாம் ஆண்டில் நாட்டியம் பயில்விக்கத் தொடங்கி, ஏழாண்டு பயிற்சி தந்து பன்னிரண்டாம் ஆண்டில் அரங்கேற்றல் அக்கால வழக்கம்.

*தாதவிழ் புரிகுழல் மாதவி தன்னை*
*ஆடலும் பாடலும் அழகும் என்றிக்*
*கூறிய மூன்றின்ஒன்றுகுறை படாமல*
*ஏழாண் டியற்றியோர் ஈராறாண்டில்*
*சூழ்கழல் மன்னற்குக் காட்டல்வேண்டி*

*(அரங். 7-11)*

இதற்கு விளக்கவுரை எழுதவந்த அடியார்க்கு நல்லார், பரத சேனாபதியத்திலிருந்து மேற்கோள் காட்டுகின்றார்.

என்னை?

*பண்ணியம்வைத் தானைமுகன் பாதம் பணிந்துநாட்*
*புண்ணிய ஓரை புகன்றனகொண்(டு) - எண்ணியே*
*வண்டிருக்கும் கூந்தல் மடவரலை ஐயாண்டில்*
*தண்டியஞ்சேர் விப்பதே சால்பு*

எனவும்.

*வட்டணையும் தூசியும் மண்டலமும் பண்ணமைய*
*எட்டுடன் ஈரிரண்டாண்டு எய்தியபின் - கட்டளைய*
*கீதக் குறிப்பும் அலங்கார முங்கிளரச்*
*சோதித் தரங்கேறச் சூழ்*

எனவும்,

*நன்னர் விருப்புடையோள் நற்குணமும் மிக்குயர்ந்தோள்*
*சொன்னகுலத் தாலமைந்த தொன்மையளாய்ப்*
*- பன்னிரண்டாண்(டு)*
*ஏய்ந்ததற்பின் ஆடலுடன் பாடலழ கிம்மூன்றும்*
*வாய்ந்தஅரங் கேற்றல் வழக்கு*

எனவும், கூறினார் பரத சேனாபதியார்.

இத்தகையனவும் எண்ணிக்கையாலமைந்தனவும் உரைநடையாலானவையுமாக மிகப்பல மேற்கோள்களை இந்நூலிற் காணலாம். "அவிநயம் என்றது பாவகம். அஃது இருபத்து நான்கு வகைத்து. வரலாறு-'' என்று தொடங்கி இருபத்து நான்கையும் குறிப்பிட்டு ஒவ்வொன்றாக விளக்கும் நூற்பாக்களும் தரப்படுகின்றன. அவை செயிற்றியத்திலிருந்து எடுக்கப்பட்டவை போல் தோற்றுகின்றன. சில அவிநயங்கள் பற்றிய இலக்கணம் காண்க:

*தெய்வம் உற்றோன் அவிநயம் செப்பின்*
*கைவிட் டெறிந்த கலக்கம் உடைமையும்*
*மடித்தெயிறு கௌவிய வாய்த்தொழில் உடைமையும்*
*துடித்த புருவமும் துளங்கிய நிலையும்*
*செய்ய முகமும் சேர்ந்த செருக்கும்*
*எய்தும் என்ப இயல்புணர்ந் தோரே*

*நாணம் உற்றோன் அவிநயம் நாடின்*
*இறைஞ்சிய தலையும் மறைந்த செய்கையும்*
*வாடிய முகமும் கோடிய உடம்பும்*
*கெட்ட ஒளியும் கீழ்க்கணோக்கமும்*
*ஒட்டினர் என்ம உணர்ந்திசி னோரே*

*தலைநோ வுற்றோன் அவிநயம்சாற்றின்*
*நிலைமை இன்றித்தலையாட் டுடைமையும்*
*கோடிய இருக்கையும் தளர்ந்த வேரொடு*
*பெருவிரல் இடுக்கிய நுதலும் வருந்தி*
*ஒடுங்கிய கண்ணொடு பிறவும்*
*திருந்தும் என்ப செந்நெறிப் புலவர்*

இதுபோல் செத்தோன் அவிநயம், மழைபெய்யப்பட்டோன் அவிநயம், உச்சிப்பொழுதின் வந்தோன் அவிநயம் என இருபத்து

நான்கு வகைகளும் காட்டப்படுகின்றன. உரையாசிரியர்களின் மேற்கோளாட்சி அவர்களின் பரந்துபட்ட ஆழமான புலமையையும் ஆய்வுரை நோக்கோடு அணுகி எழுதும் பாங்கையும் புலப்படுத்துகின்றன.

**உதாரணம் காட்டுதல்**

எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் என்பன அன்று மக்களிடையே வழங்கிய மொழிவழக்காற்றின் அடிப்படையில் எழுதப்பட்டன. பொருள் இலக்கணமும் பண்டைய சான்றோர் செய்யுட்களை அடிப்படையாக வைத்தே தொகுக்கப்பட்டது. தொல்காப்பியர் அனைய இலக்கணிகள் இத்தகைய தரவுகள் அல்லது சான்று மூலங்களை எல்லாம் முதற்கண் தொகுத்துக்கொண்டே, பிறகு இலக்கண வரையறைகளை அவற்றின் வழி வகுக்கலாயினர்.

'நுந்தை' என்ற ஒரு சொல்லில் மட்டும் மொழி முதற் குற்றிய லுகரம் வருவதாகத் தோன்றினும் ஒரு சொல்தானே என்று அதை அவர்களால் விட முடியவில்லை. இங்ஙனம் என ஓர் உயிருடன் மட்டும் 'ங'கரமெய் மொழி முதலாக வரினும், அது கருதியே இலக்கணத்தில் அதனைச் சேர்த்துக் கொண்டனர். ஓராய்வாளன் முதலில் தன் ஆய்வுகட்கான தரவுகளைத் தொகுக்கத் தொடங்குகிறான். எவ்வளவு சான்றுமூலங்கள் தொகுக்கப்படுகின்றனவோ அவ்வளவிற்கு அவன் ஆய்வு சிறக்கின்றது. நாட்டுப்பாடல் தொகுக்கின்றவன், நாட்டுப்புறக் கதைகளைத் தொகுக்கின்றவன், வட்டார வழக்குச்சொற்களைத் தொகுக்கின்றவன் யாவருக்கும் இது பொருந்தும். சங்க இலக்கியத்தில் உரிச்சொற்களின் பயன்பாட்டை அறியவோ, இடைச்சொற்களின் இடத்தைக் கண்டுகொள்ளவோ முயலும் ஓராய்வாளன் முதற்கண் பத்துப்பாட்டிலும், எட்டுத்தொகையிலும் உள்ள அனைத்து உரிச்சொற் களையும் அல்லது இடைச்சொற்களையும் தொகுத்துக் கொள்ள வேண்டும். நம் இலக்கணிகளும் இவ்வாறுதான் செயற்பட்டிருக்க வேண்டும்.

உரையாசிரியர்களின் நிலை வேறுமாதிரியாக அமைந்தது. இலக்கண நூல்களை வைத்துக்கொண்டு அவற்றிற்கு அடிப்படையான உதாரணங்களைக் காட்ட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தாமே தரவு களைத் தொகுத்து, பொதுநீர்மை கண்டும் உய்த்துணர்ந்தும் விதிகளை வகுப்பதற்குப் பதிலாக, அங்ஙனம் வகுக்கப்பட்ட நூல்களை வைத்துக் கொண்டு, அவை அவ்வாறு வகுக்கப்பட்டதற்கான அடிப்படைத் தரவுகள்

எவையாக இருக்குமெனத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. அஃதாவது தலைகீழ்ப்பாடமாக இருந்தது. காலவேறுபாட்டால், முன்னைய இலக்கண ஆசிரியர் காலத்தில் இல்லாமல் பிறகு ஏற்பட்ட மாற்றங்களை இலேசானும் புறனடையானும் திணிக்க வேண்டி யிருந்தது. சில சமயம் உதாரணம் கிடைக்காமல், தவறானவற்றைக் காட்டவோ, கிடைக்கவில்லையென விடவோ வேண்டிய சூழல் ஏற்பட்டது.

தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நூன்மரபில் மெய்ம்மயக்கம் கூறுமிடத்து, "அவற்றுள் லளஃகான் முன்னர் யவவும் தோன்றும்" (24) என்ற நூற்பாவிற்குக் கொல்யானை வெள்யாறு என இருமொழித் தொடர் களை உதாரணம் காட்டுவர். உண்மையில் மெய்ம்மயக்கத்திற்குத் தனிச்சொற்களையே காட்டவேண்டும். செல்வம், கள்வன், கல்யாணம் என்று காட்டலாம். கல்+யாணம் தமிழ்ச்சொல் அன்று என்பர். வெள் யானை வெள் யாறு தவிர ளகரத்திற்கு முன் யகரம் வருவதற்கு வேறு சான்று கிடைக்கவில்லை. எனவே நச்சினார்க்கினியர் தொடர்மொழி களைக் காட்டிவிட்டுப் பிறகு அவருக்கே மனநிறைவு இல்லாமையால், உதாரணங்கள் இறந்தனபோலும் என முடிக்கின்றார். "இவற்றுள் கொல் யானை என வினைத்தொகையும் வெள்யாறு எனப் பண்புத் தொகையும் நிலை மொழி, வருமொழி செய்வதற்கு இயையாமையின் 'மருவின் பாத்திய' என்று கூறுவராதலின் இவ்வாசிரியர் இவற்றை ஒருமொழியாகக் கொள்வரென்று உணர்க. இக்கருத்தானே மேலும் வினைத்தொகையும் பண்புத்தொகையும் ஒரு மொழியாகக்கொண்டு உதாரணம் காட்டுதும். அன்றி இவ்வாசிரியர் நூல்செய்கின்ற காலத்து வினைத்தொகைக் கண்ணும் பண்புத் தொகைக்கண்ணும் அன்றி ஒரு மொழிக்கண்ணே மயங்குவனவும் உளவாதலின், அவற்றைக்கண்டு இலக்கணம் கூறினார். அவை பின்னர் இறந்தனவென்று ஒழித்து உதாரணமில்லாதவற்றிற்கு உதாரணம் காட்டாமற் போதலே நன்றென்று கூறலும் ஒன்று." இங்ஙனம் எழுதிவிட்டு, இம்மெய்ம்மயக்கம் பற்றிய பிறிதொரு நூற்பாவான, "ஞ ந ம வ என்னும் புள்ளி முன்னர் யஃகான் நிற்றல் மெய்பெற்றன்றே" என்பதற்கு உதாரணம் காட்டாமல் விடுகின்றார் நச்சினார்க்கினியர். இளம்பூரணர் உரிஞ்யாது, பொருந்யாது என இருமொழித் தொடர்களை உதாரணம் காட்டுகின்றார். இனியர் அதை மறுக்கின்றார்.

"இங்ஙனம் ஆசிரியர் சூத்திரஞ்செய்தலின் அக்காலத்து ஒரு மொழியாக வழங்கிய சொற்கள் உளவென்பது பெற்றாம். அவை இக் காலத்து இறந்தன."

"இனி உரையாசிரியர் உரிஞ்யாது பொருந்யாது திரும்யாது தெவ் யாது என இருமொழிக்கண் வருவன உதாரணமாகக் காட்டினாரால் எனின், ஆசிரியர் ஒருமொழியாமாறு ஈண்டுக்கூறி. இருமொழி புணர்த் தற்குப் புணரியலென்று வேறோர் இயலும் கூறி. அதன்கண் 'மெய்யிறு சொன்முன் மெய்வரு வழியும்' என்று கூறினார். கூறியவழிப் பின்னும் 'உகரமொடு புணரும் புள்ளியிறுதி என்றும் பிறாண்டும் ஈறுகள் தோறும் எடுத்தோதிப் புணர்ப்பர்.' ஆதலின் ஈண்டு இருமொழிப் புணர்ச்சி காட்டின் கூறியது கூறல் என்னும் குற்றமாம். அதனால் அவை காட்டுதல் பொருந்தாமை உணர்க." இவ்வாறு கால வேறுபாட்டால் சான்றுமூலம் கிடைக்காதபோது, உதாரணம் காட்டாமல் விடப்படுகிறது.

வாராய், பாடாய் என்றால் வா பாடு என உடன்பாட்டுப் பொருளில் வரும் என்ற எச்சவியல் நூற்பாவின் (450) இறுதியில், நச்சினார்க்கினியர் "இங்ஙனம் மறைச்சொல் உடம்பாட்டுப் பொருளைப் படுத்தல் ஓசையாய் உணர்த்தி நிற்றல் சான்றோர் செய்யுளுள் பெரும்பான்மை என்று உணர்க. இனி, வழக்கினுள்ளும் இந்நாள் எம் இல்லத்து உண்ணாய், 'இப்பொழுது சொல்லாய்' என்றாற்போலப் பெரும்பான்மையும் வழங்கு மாறு உணர்க," எனக் குறிப்பிடுதலான், இத் தரவுகள் செய்யுளுள்ளும் உலக வழக்கினுள்ளும் தேர்ந்தெடுக்கப்பட்டன என்பது போதரும்.

சகரம், ஞகரம் போல்வன மொழிமுதலாகா எனத் தொல்காப்பியத் தால் அறியப்படினும் சகடம், சமர் எனவும் ஞழியிற்று, ஞமலி எனவும் அவை மொழிமுதலில் வருகின்றனவே எனின், அவற்றிற்கு இளம் பூரணர் மொழிமரபில் அமைதிகூற முற்படுகிறார்: "சகடம் எனவும் சையம் எனவும் விலக்கினவும் வருமால் எனின், அவற்றுள் ஆரியச் சிதைவில்லாதன 'கடிசொல் இல்லை' என்பதனாற் கொள்க." "ஞழியிற்று என்றாற் போல்வன விலக்கினவும் வருமாலெனின் அவை அழிவழக் கென்று மறுக்க."

மேலும் இளம்பூரணர் 'திரிபில்லன பெற்றவழிக் கண்டு கொள்க' (தொல். எழுத்து. 160); 'காலிற் பிரிவுக்கு உதாரணம் வந்துழிக் காண்க' (தொல். எழுத்து. 36); 'தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக்கொண்ட தற்குச் செய்யுள் வந்தவழிக் கண்டு கொள்க' (ஷை, 42) என இவ்வாறு காட்டுக் கிடைக்கப் பெறாமையைக் குறிப்பதுண்டு.

வரலாறு, காட்டு, எடுத்துக்காட்டு, உதாரணம் போன்ற சொற்களால் இவை குறிக்கப்படுகின்றன. தொல்காப்பியம் செய்யுளியலில் பிசியாப்பிற்கு

இளம்பூரணர் ‘அச்சுப்போலே பூப்பூக்கும் அமலே எனைக் காய் காய்க்கும்’ எனவும், பேராசிரியர் ‘பிறைகவ்வி மலை நடக்கும்’ எனவும் உலகவழக்கு விடுகதைகளைக் காட்டுகின்றனர். இலக்கண நூல்களுக்கு உரை எழுதுவதினும், இம் மெய்ம்மைகளைத் தேடுவதே கடுமையாகும். சிலபோது கிடைக்கும் மெய்ம்மைகட்கு ஏற்பச் சூத்திரப்பொருளைத் திரிக்கவேண்டிவரும். சான்றோர் செய்யுட்கள் எனப்படும் சங்கத்தொகைப் பாடல்கள் கிடைக்காதபோது இடைக்கால நூல்களையே மேற்கோளாகக் காட்ட நேர்ந்திருக்கிறது. சிலபோது இவ்வுரையாசிரியர்கள் தாமே செய்யுட் களை எழுதியும் உதாரணங்களைப் படைத்தும் எடுத்துக்காட்டியுள்ளனர். இவையெல்லாம் நீள நினைதற்குரியன.

3

# சொல்லும் பொருளும்

## உரையாசிரியர்கள் சொற்பொருள் தரும் மரபுகள்

உரையாசிரியர்களின் உரைமரபுகளில் குறிப்பிடத்தக்கன பொழிப்புரை தருதல், சொற்பொருளுரைத்தல், இலக்கணம் சுட்டுதல், உவமை காட்டுதல், சான்று குறித்தல், மேற்கோள் அமைத்தல், வினை முடிபு தொகுத்தல் என்பனவாகும். இவற்றுள் சொற்பொருளுரைத்தல் என்ற கூறு, அனைத்து உரையாசிரியர்களிடமும் சிறப்பான முறையில் காணப்படுகிறது. உரையாசிரியர்களின் நூற்புலமை, பல்துறையறிவு, வாழ்க்கையனுபவம் போன்றவற்றைக் காட்டுதற்கு இக்கூறு மிகவும் பயன்படுகிறது.

பதவுரை, பொழிப்புரை போன்றவற்றில் வரும் சொற்பொருளை விட்டுவிட்டு, விசேடவுரை எனப்படும் விளக்கவுரைப் பகுதியில் தனியே சுட்டப்படும் சொற்பொருள்களே இங்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இளம்பூரணர் தொல்காப்பியத்தில் சில நூற்பாக்களுக்கு உரை எழுதாமல், சொற்பொருள்மட்டும் தருவதுண்டு. அவற்றுள்ளும் சில இவண் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இச் சொற்பொருள் ஓரளவு தக்க இடம் நோக்கி, ஆங்காங்கு, தேவைப்படும் அளவு தொகுக்கப்பட்டன. எனவே இதனை ஒரு முன்மாதிரியாகக் கொள்ளுதல் தகுமேதவிர, முழுமையாகக் கொள்ளுதல் இயலாது. எனினும் தகுதிநோக்கித் தொகுக்கப்பட்டனவாதலின், முடிபுகளில் பெறும் மாறுதல்கள் ஏற்படாது எனலாம்.

## மேனாட்டார் மரபுகள்

மேனாட்டார் யாதொரு நூலாயினும், கலைச்சொற்களுக்கு விளக்கம் தந்தே கட்டுரைகளைத் தொடங்குவர். பொருளியல் நூலாயின்

'செல்வம்' (Wealth) என்ற சொற்பொருள் தொன்றுதொட்டு இன்றுவரை கருதப்பட்டு வந்தவாறு விளக்கப்படும். இன்று தமிழில் ஒப்பியல் ஆய்வு செய்பவர்கள் தொன்மம் (Myth), வரலாற்றுப்பழங்கதைகள் (Legends), நாட்டுப்புறக்கதைகள் (Folk tales) என்பனவற்றைப்பற்றி ஆயும்போது அவைபற்றி நன்கு விளக்கக் காணலாம். மித்து என்ற சொல்லின் வேர் முதற்கொண்டு காட்ட முனைவர். மித்து என்பதற்கும் மித்தாலஜி என்பதற்கும் மித்திகல் திறனாய்வு என்பதற்கும் வேறுபாடு காட்டுவர். இப்படிச் சொல்லாய்வு நிகழ்த்தியே, ஒப்பாய்வில் புகுவர். படிமம் (Symbol), உரு (Image), செவ்வியல் (Classicism), நடப்பியல் (Realism) போல்வனவற்றை ஆராய்வாரும் இந்நெறியையே பின்பற்றக் காணலாம். இவை மேனாட்டுத் தாக்கத்தால் தமிழர் பெற்றது எனக் கூறலாம். ஆயினும் உரையாசிரியர் பின்பற்றிய நெறிகளைக் கண்டறிந்தால் இஃது அவ்வாறொன்றும் புத்தம் புதுமை எனத் தோற்றாது.

**உரையாசிரியர்கள் பொருளுணர்த்தும் முறைகள்**

தமிழ் உரையாசிரியர்கள் சொற்பொருள் உணர்த்தும் முறைகளைக் கீழ்வருமாறு பகுக்கலாம். பொழிப்புரைக்குப்பிறகு விளக்கவுரையில் தனிச்சொற்குப் பொருள்தருதலின் இவை அவர்கள் மீள நினைத்து, இடம் நோக்கி, அழுத்தமுறக்கூறிய இடங்களாகும்.

1. அகராதிப் பொருள்
2. இடம் நோக்கிய பொருள்
3. கலைச்சொல் விளக்கம்
4. உவமை காட்டிப் பொருள் விளக்குதல்
5. தொகைகளை விரித்தல்
6. காரணம் சுட்டிப் பொருள் தருதல்
7. சான்று காட்டிப் பொருளை நிறுவுதல்
8. இலக்கணத்துடன் பொருத்திப் பொருள் கூறுதல்
9. உரைக்கு உரை கூறுதல்
10. தொடர்புடைய சொற்களுக்கு ஒப்பிட்டும் உறழ்ந்தும் பொருள் தரல்
11. தத்துவக் குறிப்பமைய உரை தரல்
12. புதுமை தோற்றப் பொருள் தருதல்

13. நுண்ணறிவு தோற்றப் பொருள் கூறுதல்
14. பலதுறை அறிவை வெளிப்படுத்துமாறு பொருள் கூறுதல்
15. மரபுவழிப் பொருள் தருதல்
16. தன் கருத்தினை ஏற்றிப் பொருள் சொல்லுதல்

இவை முடிந்தமுடிபான பகுப்புகள் அல்ல. ஒருசில ஒன்றின் ஒன்று மேவி வரும். சிறப்பு நோக்கித் தனிப்பகுப்பாக்கப்பட்டன. இங்கு உரைவிளக்கமன்று எடுத்துக்காட்ட நினைத்தது; சொல்லுக்குப் பொருளை வெளிப்படுத்தி உணர்த்த இவ்வுரையாசிரியர்கள் கையாண்ட உத்திகள், திறன்கள் யாவை என்பதே இங்கு நோக்குதற்குரியனவாகும்.

**1. அகராதிப் பொருள்**

சில இடங்களில் அரும் சொற்களுக்கு அகராதியில் காணப்படுவது போன்ற பொருள்மட்டும் தரப்படுகிறது. பெரும்பாலும் பொழிப்புரை, பதவுரையில்தான் அவ்வகராதிப் பொருள் அமையும். விளக்கவுரையில் சிற்சில இடங்களில்மட்டும் அருஞ்சொற்பொருள் இவ்வாறமைகிறது. அறிவன் என்றது கணியனை (இளம். தொல். அகத். 74). களவாவது பிறர்க்குரிய பொருளை மறையிற்கோடல் (இளம். தொல். கள. முன்னுரை). கரணம் - வதுவைச் சடங்கு (இளம். தொல். கற்பி. 140). அமல் - நெருங்கல் (இளம். தொல். அகத். 72). செற்றம் - பகைமை நெடுங்காலம் நிகழ்வது (நச். முருகு). கலி - ஒலி, புகழும் அரவமுமாம் (புறம். 52).

**2. இடம்நோக்கிய பொருள்**

உரையாசான் தரும் பொருள் பெரிதும் இடம்நோக்கியதாகவே இருக்கும். 'அதிகாரத்தான் வந்தது' என்பாரன்றோ? அதுபோல அமையும். கலைச்சொற்களின் பொருளும் இது போன்றதே. எனினும் கலைச்சொற்களல்லாத பிற சொற்களுக்கும் இடம்நோக்கிய பொருளுண் மையின் இது தனியே பிரித்துக் கூறப்பட்டது. தோற்றம், ஒழுக்கம், செலவு, அழித்தல், வெயில், வேட்கை போல்வனவற்றிற்கான அகராதிப் பொருள்களை நாம் அறிவோம். இயற்கைப் புணர்ச்சிக்குப் பிறகு தலைவிபால் ஏற்படும் மாற்றங்களைப் பற்றியும் களவுக்காதலைப் பற்றியும் புறங்கூறலால் அழிவு ஏற்படுவது பற்றியும் கூறுமிடங்களில் இச் சொற்கள் ஆளப்படும்போது தனிப்பொருள் பெறுகின்றன. தோற்றம்

– புணர்ச்சியான் வரும் பொற்பு, ஒழுக்கம் – ஆயத்தாரொடு வேண்டிய வாறு ஒழுகுதலன்றித் தன்னைப் பேணி ஒழுகுதல். செலவு – எத் திசையினும் சென்று விளையாடுவாள் ஒரு திசையை நோக்கிச் சேறல் (இளம். தொல். கள. 112). அழீஇ: அழித்தல் – ஒளியைக் கோறல் (புறங்கூறுவார் மற்றவர்களின் புகழைக் கொல்லுவர் (குறள் 182). வெயில்மறைக்கொண்ட மாலை வெண்குடை; வெயில் – பகைவரானும் கொடியோரானும் வரும் வெம்மை (புறம் 60). வேட்கை – யாதானும் ஒன்றைப் பெறல்வேண்டுமெனச் செல்லும் மனநிகழ்ச்சி (இயல்பான பொருள். இளம். தொல். பொருள். 243); ஒருவர் ஒருவரை இன்றியமை யாமை (இடம் நோக்கிய பொருள். இறை. அகப். 1).

**3. கலைச்சொல் விளக்கம்**

இலக்கியக் கலைச்சொற்கள் என்பன இலக்கியக் கோட்பாடுகளின் சாரத்தை உள்ளடக்கிய சிறுசிறு படிமங்கள். அவை குறிப்புப் பொருள் போல் உள்ளடங்கி நின்று வெளிப்படுகின்றன. கலைச்சொல்லை விளங்கிக் கொள்வதிலிருந்தே திறனாய்வு தொடங்குகிறது. அக் கலைச்சொற் களுக்கு அப்பொருள் கோட்பாட்டு வளர்ச்சிவழியாகவும் மரபுவழியாகவும் திறனாளியின் நுண்மாண் நுழைபுலத்தாலும் அமைகிறது. எனவே இக் கலைச்சொற்களைத் தனியே தொகுத்துப் பொருளறிதல், இலக்கியக் கல்விக்குப் பெருந்துணை புரியும். ஆங்கிலத்தில் 'இலக்கியக் கலைச் சொல் அகரவரிசை' (Dictionary of Literary terms) நூற்றுக்கணக்கில் – சிறிய கையரகாதி முதல் கலைக்களஞ்சியம் வரை – வெளி வந்துளது. தமிழிலும் அம்முயற்சி அரும்பி வருகிறது.

| | |
|---|---|
| சுவை | காணப்படு பொருளால் காண்போரகத்தின் வருவதோர் விகாரம் (இளம். மெய்ப். 245) |
| மெய்ப்பாடு | மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று. (இளம். மெய்ப். 245) |
| | மெய்ப்பாடு என்பது பொருட்பாடு; அஃதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோராற்றான் வெளிப் படுதல். (பேரா. மெய்ப். 249) |
| | முன்னது நேர்பொருள்; பின்னது கொள்கை விளக்கப் பொருள். |

| | |
|---|---|
| அகப்பொருள் | போக நுகர்ச்சியாகலான் அதனான் ஆன பயன் தானே அறிதலின் அகம் என்றார். |
| புறப்பொருள் | மறஞ்செய்தலும் அறஞ்செய்தலும் ஆகலான் அவற்றான் ஆய பயன் பிறர்க்குப் புலனாதலின் புறம் என்றார். (இளம். அகத். முன்). |
| அகம் | ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத் தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப் படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார். எனவே அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகமென்றது ஓர் ஆகுபெயர். |
| புறம் | இதனை ஒழிந்தன ஒத்த அன்புடையார் தாமேயன்றி எல்லார்க்கும் துய்த்துணரப்படுதலானும், இவை இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படுதலானும் அவை புறமெனவேபடும். (நச். அகத். 1) |
| கைக்கிளை | கைக்கிளை என்ற பொருண்மை யாதோ எனின் கை என்பது சிறுமைபற்றி வரும். அது தத்தம் குறிப்பில் பொருள் செய்வதோர் இடைச்சொல்; கிளை என்பது உறவு; பெருமையில்லாத தலைமக்கள் உறவு என்றவாறு. கைக்குடை, கையேடு, கைவாள், கை ஒலியல், கைவாய்க்கால் எனப் பெருமையில்லாத வற்றை வழங்குபவாகலின். |
| | கைக்கிளை - ஒருதலை வேட்கை. |
| பெருந்திணை | நடுவண் ஐந்திணையாகிய ஒத்த காமத்தின் மிக்கும் குறைந்தும் வருதலானும் எண்வகை மணத்தினும் பிரமம் பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வம் என்பன அத் திணைப்பாற்படுதலானும் இந்நான்கு மணமும் மேன்மக்கள் மாட்டு நிகழ்தலானும் இவை உலகினுள் பெருவழக்கு எனப் பயின்று வருதலானும் அது பெருந்திணை எனப்பட்டது. |
| | பெருந்திணை - ஒவ்வாக் கூட்டம். (இளம். அகத்.1) |

| | |
|---|---|
| நாடகவழக்கு | நாடகவழக்காவது சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக்கூறுதல். |
| உலகியல்வழக்கு | உலகியல் வழக்காவது உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒத்துவருவது. (இளம். அகத். 56) |
| உரிப்பொருள் | உரிப்பொருளாவது மக்கட்கு உரியபொருள். (இளம். அகத். முன்னுரை) |
| இரத்தல் | குறையுடையார் செய்யும் செய்கை செய்து ஒழுகுவது. |
| குறையுறுதல் | இக் குறை இன்றியமையான் என்பதுபடப் பசைந்து ஒழுகுதல். (இளம். அகத். 56) |

(சாதாரணச் சொற்களாகுங்கால் கொள்ளும் பொருளினும் இவை வேறுபடல் காண்க.)

தலைவன் குணம் நான்கு எனவும் தலைமகள் குணம் நான்கு எனவும் குறிப்பிடும் இறையனார் அகப்பொருள் உரையில் (சூ. 2) அவற்றிற்கான விளக்கம் வரையறையானது:

### தலைமகன் குணம்

| | |
|---|---|
| அறிவு | எப்பொருளாயினும் அப்பொருட்கண் நின்று அம் மெய்ம்மையை உணர்வது. |
| நிறை | காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகும் ஒழுக்கம். |
| ஓர்ப்பு | ஒரு பொருளை ஆராய்ந்து உணர்தல். |
| கடைப்பிடி | கொண்ட பொருள் மறவாமை. |

### தலைமகள் குணம்

| | |
|---|---|
| நாண் | பெண்டிர்க்கு இயல்பாக உள்ளதொரு தன்மை. |
| மடம் | கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை. |
| அச்சம் | பெண்மையின் தான் காணப்படாததொரு பொருள் கண்டவிடத்து அஞ்சுவது. |
| பயிர்ப்பு | பயிலாத பொருட்கண் அருவருத்து நிற்கும் நிலைமை. |

கலைச்சொற்களுக்குக் கூறப்படும் விளக்கங்கள் மூலநூலான தொல்காப்பியத்தை அடி ஒற்றியனவே என நிறுவ நிறையச் சான்றுகள் உள. மேலும் இவ்விளக்கங்கள் சங்கப் பாடல்களோடு பொருத்திப் பார்ப்பதற்கு மிகவும் ஏற்புடையனவாயுள்ளன. இடைக்காலத்தில் ஏற்பட்ட புதிய சிந்தனைகள் என்றில்லாமல் இவை தொல்காப்பியந்தொட்டுவரும் தொடர்ச்சியாயுள்ளன. ஏனெனில் நம் உரையாசிரியர்கள் மரபினின்றும் பெரிதும் விலகிச் செல்வதே இல்லை. அதை ஓர் ஒழுக்கம்போலவும் கற்புப்போலவும் கடைப்பிடித்ததால், பிறமொழியார்வம் மிக்குடையாரும் பிற விலக்கியக் கல்வியுடையாரும் இங்கு மேலோட்டமான சில விளக்கங் களில் புதுமைகாட்டும் போதும் இங்குள்ள அடிப்படையை விட்டு விலகிப்போவதே இல்லை. இவ்விளக்கங்களின் பொருட் சிறப்பை ஆராய்வது இவண் நோக்கமன்று. எனினும் கோட்பாட்டு விளக்கங்களை வரன்முறைப்படுத்தியும் சட்ட வாசகங்களைப்போல் தேர்ந்தெடுத்தும் பயனிலசொற் கலவாமலும் சுருக்கமாகவும் திட்டவட்டமாகவும் தரும் முறைமைகளைச் சிந்திக்கவே மேற்கண்ட பல எடுத்துக்காட்டுகள் தரப்படடன.

### 4. உவமைகாட்டிப் பொருள் விளக்குதல்

உவமைகாட்டி விளக்குவதென்பது உரையாசான்மார்க்குக் கைவந்த கலை. சொற்பொருள் தரும்போதும் உவமை காட்டிக் கூறுதல் ஒரு முறையாக அவர்களிடம் காணப்படுகிறது. 'இனிய உளவாக' என்ற குறளில் (100) 'இனிய கனிகள் என்றது ஔவையுண்ட நெல்லிக்கனி போல அமிழ்தானவற்றை' எனவும் 'இன்னாத காய்கள் என்றது காஞ்சிரங்காய்போல நஞ்சானவற்றை' எனவும் பரிமேலழகர் விளக்கவுரை தருகின்றார்.

புதுமை-யாதொன்றாயினும் எவ்விடத்திலும் எக்காலத்தினும் தோன்றாததோர் பொருள் தோன்றியவழி வியத்தல். அது கந்தருவர் அந்தரம் போவது கண்டு வியத்தல் போல்வன.

> சிறுமை-நுண்ணியன கண்டு வியத்தல். அது கடுகின்கட் பல துளைபோல்வன. (இளம். மெய்ப். 251)
>
> ஏர்-தளிரின்கண் தோன்றுவதோர் பொலிவுபோல எல்லா உறுப்பினும் ஒப்பக்கிடந்து கண்டார்க்கு இன்பத்தைத் தருவதோர் நிறவேறுபாடு.

சாயல - மென்மை. அது நாயும் பன்றியும் போலாது மயிலும் குயிலும் போல்வதோர் தன்மை. (இளம். மெய்ப். 243)

கொச்சகம் - ஒப்பினாகிய பெயர். ஓராடையுள் ஒருவழியடுக்கியது கொச்சகம் எனப்படும். அதுபோல ஒரு செய்யுளுள் பல குறள் அடுக்கப்படுவது கொச்சகமெனப்பட்டது. (பேரா. செய். 433)

**5. தொகைகளை விரித்தல்**

தொகைகளாகத் தொன்றுத்தொட்டுக் கூறப்பட்டு வருவனவற்றை அவை இவை என விரித்துக் கூறுதல் தொகைச்சொல் அகராதி எனப்படும்.

முந்நீர் - யாற்றுநீரும் ஊற்றுநீரும் மழைநீரும் உடைமை.

(புறம். 9)

முரசம் மூன்று - வீரமுரசும், நியாய முரசும், தியாக முரசும், மண முரசுடனே ஏனை இரண்டு முரசென்பாரும் உள்.

(புறம். 9)

முத்தீ - ஆகவனீயம், காருகபத்தியம், தென்திசை அங்கி.

(புறம். 2)

எழுபிறப்பு - தாவரம், ஊர்வன, பறப்பன, நீர்வாழ்வன, நாற்கால், மானுடம். தேவர்

(குறள் 62)

அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம் - ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்.

சிலவிடங்களில் தொகை கூறப்படவில்லையாயினும் தொகைப் படுத்த முயலுதலைக் காணலாம். அதன் வகைகளைக் காட்டும் பொருட் பகுதியாக இஃதமைகிறது.

அளவை - நிறுத்தளத்தல், பெய்தளத்தல், சார்த்தியளத்தல், நீட்டியளத்தல், தெளித்தளத்தல், தேங்கமுகந்தளத்தல், எண்ணி யளத்தல் என ஏழுவகைத்து. (நச். தொல். சொல். 7)

அடிசில் - உண்பன, தின்பன, பருகுவன, நக்குவன,
அணி - கவிப்பன, கட்டுவன, செறிப்பன, பூண்பன,

இயம் - கொட்டுவன, ஊதுவன, எழுப்புவன.

படை - எய்வன, எறிவன, வெட்டுவன, குத்துவன.

(சேனா. சொல். 46)

இறை - தந்தையர், ஆசிரியர், அரசர்.

(சேனா. சொல். 256)

**6. காரணம் காட்டிப் பொருள் தருதல்**

சிலசொற்கள் படிமப்பொருளுடையனவாயிருக்கின்றன, சில உட்பொருள் உடையவனவாயுள்ளன. அத்தகையவற்றிற்கு இன்ன காரணத்தால் இப்பொருளுடையதாகிறது எனச் சுட்டிச்சொல்லுதல் பரிமேலழகர் போன்ற உரையாசிரியர்களிடம் சிறப்பாகக் காணப்படும் மரபாகும்.

மக்களில் சிலரைப் பதர் என்று சொல்லுகின்றோம். ஏன்? பண்பின்மையாலா, அன்பின்மையாலா? 'மக்கட்பதடி' என்ற சொல்லுக்குப் (குறள். 196) பரிமேலழகர் 'அறிவென்னும் உள்ளீடின்மையின் மக்கட் பதடி என்றார்', எனக் காரணம் காட்டிப் பொருள் எழுதுகிறார். ஒருவன் இறந்தபிறகும் அவன் கால்வழியினர் இருப்பர். எஞ்சிநிற்பன பலவற்றையும் எச்சம் குறிக்குமாயினும், 'செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி, எச்சத்திற்கு ஏமாப் புடைத்து' (112) என்ற குறளில், எச்சம் என்பது புகழையோ, பிறவற்றையோ குறிக்காமல் கால்வழியினரைக் குறிக்கிறது. 'தானிறந்துழி எஞ்சி நிற்பதாகலின் எச்சம் என்றார்' எனப் பரிமேலழகர் விளக்கம் தருகின்றார். 'வண்ணகம்' என்ற சொற்குப் பொருள் எழுதவந்த பேராசிரியர் 'வண்ணித்துப் புகழ்தலின் வண்ணகம்' என எழுதக் காண்கிறோம். (பேரா. செய். 452)

**7. சான்று காட்டிப் பொருள் நிறுவுதல்**

தாம் சொல்லும் சொற்பொருளுக்குச் செய்யுள் வழக்கிலிருந்தோ, உலக வழக்கிலிருந்தோ ஒரு சான்றுகாட்டி, அங்ஙனம் பொருள் கொள்வது முறையானதே என நிறுவும் மரபும் நம் உரையாசிரியர்களிடம் காணப்படுகிறது. 'நட்பாடல் தேற்றாதவர்' என்பது (187) நட்பாடலை அறியாதார் எனத் தன்வினையாகவே பொருள்படும் என்பது பரிமேலழகர் கருத்து. 'கடியும் இடந்தேற்றாள் சோர்ந்தனள் கை' (கலி. 27) என்புழிப்

போலத் 'தேற்றாமை தன்வினையாய் நின்றது' என்பார் அவர். 'வினைப் பகை வீயாது பின்சென்று அடும்' (207) என்னும்போது, வீயாது என்பதற்கு நீங்காது எனப் பொருள் எழுதும் பரிமேலழகர் புறநானூற் றடியைக் காட்டி அதை நிறுவுகின்றார். 'வீயாது உடம்பொடு நின்ற உயிருமில்லை' என்புழியும் (புறம். 363) 'வீயாமை நீங்காமைக்கண் வந்தது', என்பது அவர் தரும் குறிப்பு. 'இலர் பலராகிய காரணம்' (270) என்ற குறளில், விளக்கவுரை எழுதும் போது, பரிமேலழகர் "செல்வம் நல்குரவு என்பன ஈண்டு அறிவினது உண்மை இன்மைகளையும் குறித்து நின்றன. என்னை? நுண்ணுணர்வின்மை வறுமை அஃதுடைமை - பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம் என்றாராகலின்" என நாலடியாரைக் காட்டி (251) நிறுவுகின்றார்.

கிளவி ஆக்கம் - வழுக்களைந்து சொற்களை ஆக்கிக்கொண்ட மையான் இவ்வோத்துக் 'கிளவி ஆக்கமா'யிற்று. ஆக்கம் அமைத்துக் கோடல், நொய்யும் நுறுங்கும் களைந்து அரிசி அமைத்தாரை அரிசி யாக்கினார் என்பவாகலின், இவ்வாறு உலக வழக்கைக்காட்டிச் சேனா வரையர் பொருள் கூறுகின்றார். (சொல். 1)

**8. இலக்கணத்துடன் பொருத்திப் பொருள் கூறுதல்**

சில இடங்களில் சொற்களுக்குப் பொருள் கூறும்போது இலக் கணத்துடன் பொருத்திக்காட்டி அதற்கேற்பப் பொருள் கூறுதலும் இலக்கண உணர்வோடு பொருள் தருதலும் காணப்படும். 'நத்தம் போல் கேடும்' (குறள். 235) என்பதற்குப் பரிமேலழகர் 'ஆக்கம்' ஆகும் கேடு எனப் பொருள் எழுதும்போது, "நந்து என்னும் தொழிற்பெயர் விகாரத்தான் நத்தென்றாய்ப் பின் அம்மென்னும் பகுதிப் பொருள் விகுதி பெற்று நத்தம் என்றாயிற்று", என இலக்கணம் சுட்டுகின்றார். நந்துதல் - பெருகுதல், வளர்தல், ஆதல், நந்து என்பதே நத்தம் ஆயிற்று. அஃது எவ்வாறென்பதைப் பரிமேலழகர் விளக்குகின்றார். "யாகாவா ராயினும்" (127) நாகாக்காவிட்டால் சோகாப்பர் - துன்புறுவர் என்பது பரிமேலழகர் உரை. இங்கு 'அல்லாப்பர் செம்மாப்பர் என்பனபோலச் சோகாப்பர் என்பது ஒருசொல்' என அவர் விளக்கம் தருகின்றார். சொல் வடிவம் பற்றிச் சிந்தித்தல் காணலாம்.

பல்சான்றீர் - பலராகிய சான்றீர் என்பது பல் சான்றீர் எனத் தொக்கது, 'பல்குட்டுவர்' என்பது போல, பலவாகிய குணங்களால்

அமைந்தீர் எனினும் அமையும், (புறம். 195) - இவ்வாறு புறநானூற்றுப் பழைய உரையாசிரியர் குறிக்கின்றார்.

'தென் புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்' என்ற குறளில் (45) பரிமேலழகர், "விருந்து என்பது புதுமை; அஃது ஈண்டாகு பெயராய்ப் புதியராய் வந்தார்மேல் நின்றது. அவர் இரு வகையர், பண்டறி வுண்மையின் குறித்து வந்தாரும் அஃதின்மையின் குறியாது வந்தாரு மென," என்று இலக்கணங்காட்டிப் பொருள் விளக்கம் தருகின்றார். விருந்தினரை வகைப்படுத்தியும் காட்டுகிறார்.

'காக்கபொருளா அடக்கத்தை' என்ற குறளில் (122) "உயிர் என்பது சாதியொருமை, அஃது ஈண்டு மக்கள் உயிர்மேல் நின்றது, அறிந் தடங்கிப் பயன்கொள்வது அதுவேயாகலின்," எனப் பரிமேலழகர் விளக்கம் தருகின்றார்.

பாதீடு - ஈத்தலும் ஈதலும் போலப் பாத்தலும் பாதலும் ஒன்றாதலின் பாதீடாயிற்று என்பது நச்சினார்க்கினியர் (தொல் பொருள். 58) கருத்தாகும்.

பூவா வஞ்சி என்றது கருவூர்க்கு வெளிப்படை (புறம். 32).

உடைமை - உடையனாம் தன்மை (குறள். 74). உடைமை - பொருளுடையனாம் தன்மை (குறள். 89). கேண்மை - கேளாந் தன்மை (குறள். 106). இவை இலக்கண உணர்வோடு விரிக்கப்படுதல் காண்க.

**9. உரைக்கு உரை கூறல்**

பாட்டுக்கு உரையெழுதுமிடத்துப் பயன்படுத்திய சொல்லுக்கு, மீண்டும் விளக்கவுரையில் பொருள் கூறுவதே இவண் உரைக்கு உரை எனப்படுகிறது. 'யான் எனது என்னும் செருக்கறுப்பான்" (குறள். 346) என்னும் குறளில் 'யான் எனது என்னும் மயக்கத்தைக் கெடுப்பான்' என உரையெழுதும் பரிமேலழகர், விளக்கவுரையில் மயக்கம் - அறியாமை என மேலும் தெளிவுறுத்துவர். 'அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும்' என்ற குறளில் (169) கோட்டத்தினைப் பொருந்திய மனத்தை யுடையவன தாக்கமும்' என உரையெழுதும் பரிமேலழகர் விசேட வுரையில் கோட்டம் ஈண்டு அழுக்காறு என அதிகாரப்பொருளை நினைவுபடுத்துவர்.

## 10. தொடர்புடைய சொற்களுக்கு ஒப்பிட்டும் உறழ்ந்தும் பொருள் தரல்

ஒரு பொருட்சொற்களைத் தருதல், ஒரு சொற்குப் பல பொருள் தருதல், தொடர்புடைய சொற்களைத் தந்து பொருள் வேற்றுமை காட்டுதல் எல்லாம் உரையாசிரியர்களிடம் காணப்படும் மரபுகளாகும்.

ஆராய்ச்சி என்பது ஒரு பொருளைக் குறித்து அதன் இயல்பு எத்தன்மைத்தென ஆராய்தல். ஆராய்தல் எனினும் தெரிதல் எனினும் தேர்தல் எனினும் நாடலெனினும் ஒக்கும்.

(இளம். மெய்ப். 256)

இளையோர் – வீரர், மகளிருமாம் (நச். சிறுபாண். 232)
எருவை – பஞ்சாய்க்கோரை, கொறுக்கைச்சியுமாம்

(நச். குறிஞ். 68)

### பொருள் வேறுபாடு காட்டல்

அன்பு – பயின்றார் மாட்டுச் செல்லும் காதல்
அருள் – எல்லாவுயிர்க்கும் அணிசெய்தல்

(இளம். மெய்ப். 256)

அன்பு – தன்னால் புரக்கப்படுவோர் மேலுளதாகிய காதல்
அருள் – ஒன்றின் துயர்கண்டால் காரணமின்றித் தோன்றும் இரக்கம்

(புறம். 5)

புலவி – அண்மைக் காலத்தது.
ஊடல் – அதனினும் மிக்கது.

(இளம். கற்பி. 15)

வேட்கை – பொருள்கள் மேல் தோன்றும் பற்றுள்ளம்
அவா – அப்பொருள்களைப் பெறவேண்டும் என்று மேன்மேல் நிகழும் ஆசை

(நச். எழுத். 288)

பேதைமை – அறிவின்மை
மடமை – பெரும்பான்மையும் கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை

(பேரா. மெய்ப். 252)

மடம் என்பதற்கும் பேதைமை என்பதற்கும் வேறுபாடு என்னையெனின் மடம் என்பது பொருண்மை அறியாது திரியக்கோடல்; பேதைமை என்பது கேட்டதனை உய்த்துணராது மெய்யாகக் கோடல்.

*(இளம். மெய்ப். 248)*

செலவு - செஞ்ஞாயிற்றுச் செலவும் - செலவென்றது செல்லப் படும் வீதியை. பரிப்பு - அஞ் ஞாயிற்றுப் பரிப்பும் - பரிப்பென்றது இத்துணை நாழிகைக்கு இத்துணை யோசனை செல்லும் என்னும் இயக்கத்தை, *(புறம். 30)*

குடிமையொடு பிறப்பிடை வேற்றுமை என்னையெனின் பிறப்பு என்பது குடிப்பிறத்தல்; அதற்குத் தக்க ஒழுக்கம் குடிமை எனப்படும்.

*(பேரா. மெய்ப். 273)*

அம்பல் என்பது முகிழ்த்தல், அஃது ஒருவர் ஒருவர் முகக் குறிப்பினால் தோற்றுவித்தல்; அலராவது சொல்லுதல்.

*(இளம். கள. 49)*

அம்பல், அலர் பற்றி இறையனார் அகப்பொருளில் வரும் நீண்ட விளக்கம் இங்குக் காணத்தக்கது. அம்பல் என்பது போது போல - மலரும் பருவத்தது. அலர் என்பது மலர்ந்துவிட்ட பூ. சிறிய அளவிலான ஊரார் தூற்றுதல் அம்பல் என்றால், அது முற்றிப்போய்ப் பழிச்சொல் பரவுதல் அலர் எனப்படும். இவற்றுள் எது அம்பல், எது அலர் என்பதில் கருத்து வேறுபடும். இரண்டும் ஒருபொருட் சொற்களே. முன்னது சிறிய அளவினது; பின்னது பெரிய அளவினது. எது பெரியது, எது சிறியது என்பதை நிலை நோக்கித்தான் அறியவேண்டும். இதை ஆங்கிலத்தில் சார்பு நிலைத் தொடர் (Relative term) என்பர். கூழுக்கு உப்பில்லை என்பதும் வறுமையே; பாலுக்குச் சீனி இல்லை என்பதும் வறுமையே, பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பார் போல பாலுக்குத் தேனில்லை என்பார்க்கும் வறுமையே. முன்பு அம்பலாய் இருந்தது அலராய்ப் பெருகும் என்பதே உண்மை. இதனை இறையனார் அகப்பொருள் 'அம்பலும் அலரும் களவு' (22) என்ற நூற்பாவில் நன்கு விளக்கு கின்றது:

*அம்பல் என்பது முகிழ்முகிழ்த்தல்*
*அலர் என்பது சொல் நிகழ்தல்*

*அம்பல் என்பது சொல் நிகழ்தல்*
*அலர் என்பது இல் அறிதல்*

*அம்பல் என்பது இல் அறிதல்*
*அலர் என்பது அயல் அறிதல்*

*அம்பல் என்பது அயல் அறிதல்*
*அலர் என்பது சேரி அறிதல்*

*அம்பல் என்பது சேரி அறிதல்*
*அலர் என்பது ஊர் அறிதல்*

*அம்பல் என்பது ஊர் அறிதல்*
*அலர் என்பது நாடு அறிதல்*

*அம்பல் என்பது நாடு அறிதல்*
*அலர் என்பது தேசம் அறிதல்*

அது பொருந்தாது; என்னை அம்பல் எனப்பட்டதே அலரும், அலர் எனப்பட்டதே அம்பலும் ஆயின. இஃது அம்பற்கு இலக்கணம் இஃது அலருக்கு இலக்கணம் என்று விசேடம் காட்டிற்றிலர், இவை இரண்டால் தம்முள் வேற்றுமை பெறப்படுமாகலான் என்பது.

மற்று என்னோ எனின் அம்பல் என்பது சொல்நிகழாதே முகிழ் முகிழ்த்துச் சொல்லுவதாயிற்று; இன்னதின் கண்ணது என்பது அறிய லாகாது என்பது.

அலர் என்பது இன்னானோடு இன்னாளிடை பட்டதென விளங்கச் சொல்லி நிற்பது.

அம்பல் என்பது பெரும்போதாய்ச் சிறிதுநிற்க அலரும் என நிற்பது. அலர் என்பது அப்பெரும்போது தாதும் அல்லியும் வெளிப்பட மலர்ந்தாற்போல நிற்கும் நிலைமை என வேற்றுமை சொல்லப் பட்டதாம்."

சொற்பொருள் தருதலில் உரையாசிரியர்கள் எந்த அளவிற்குச் சிந்தித்துள்ளனர் என்பதற்கு இது தக்க எடுத்துக்காட்டாகும்.

**11. தத்துவக் குறிப்பமைய உரை தரல்**

சொற்பொருள் தருமிடத்து இயல்பாக நாம் எண்ணும் பொருளை விட்டு, ஆழமாகவும் உயரிய தத்துவ உணர்வோடும் கூறப்படுவன

இதிலடங்கும். சமயஉணர்வோ, தத்துவ விளக்கமோ அமையுமென மயங்குதல் வேண்டாம். அவ்வுணர்வு சாரக் கூறப்படுவன இவை என்ற அளவில் பொருந்தும்; நீதியுரைபோல் காணப்படும்.

வறுமை - போகம் துய்க்கப் பெறாத பற்றுள்ளம் (ஆசைப்பட்ட உள்ளம் என்றும் வறுமைப்பட்டதுதான் என்று உணர்த்துகின்றதன்றோ?)

வேட்கை - பொருள்மேல் தோன்றும் பற்றுள்ளம்.

*(நச். பொருள். 53)*

இசைமை - இன்பமும் பொருளும் இறப்பப் பயப்பினும் பழி யொடு வருவன செய்யாமை.

கொடை - உயிரும் உடம்பும் உறுப்பும் முதலாகிய எல்லாப் பொருளும் தருதல். *(பேரா. மெய்ப். 257)*

திரு - திரு என்பது பொருளுடைமையும் பொருள் கொணர்ந்து துய்த்தலும் இன்றி எஞ்ஞான்றும் திருத் தகவிற்றாயதோர் உள் நிகழ்ச்சி; அது வினையுள் உடைமை எனவும்படும். (தீவினையால் வறுமையுற்ற காலத்தும் செல்வர்போல் மனத்தெம்புடன் முகமும் மனமும் மகிழ்ந்திருத்தல்).

*'மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார்...'*

சேர்தல் - இடைவிடாது நினைத்தல் *(குறள் 3)*

*'பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு...'*

புரிதல் - எப்பொழுதும் சொல்லுதல் *(குறள் 5)*

*'செந்தண்மை பூண்டொழுகலான்...'*

பூணுதல் - விரதமாகக் கோடல் *(குறள் 31)*

**12. புதுமை தோற்றப் பொருள் தருதல்**

சில சமயம் புதுமையாய்ப் பொருள்சொல்ல நினைத்துக் கூறுவது போன்ற பொருள் காணப்படுகின்றது.

நகை என்பது சிரிப்பு; அது முறுவலித்து நகுதலும் அளவே சிரித்தலும் பெருகச் சிரித்தலும் என மூன்றென்ப,

*(குறள்31)*

துஞ்சல் என்பது உறக்கம்; அது நடந்து வருகின்றான் கண்ணும் விளங்கத் தோன்றுதலின் அதுவும் மெய்ப்பாடெனப்பட்டது.

*(தொல். 260)*

தன்மை - சாதித்தன்மை. அவையாவன: பார்ப்பாராயின் குந்தி மிதித்துக் குறுநடைகொண்டு வந்து தோன்றலும் அரசராயின் எடுத்த கழுத்தொடும் அடுத்த மார்பொடும் நடந்து சேறலும் இடையராயின் கோற்கையும் கொடுமடியுடையும் விளித்த வீளையும் வெண்பல்லு மாகித் தோன்றலும் என்று இன்னோரன்ன வழக்கு நோக்கிக் கொள்க.

*(பேரா. மெய்ப். 260)*

அவையடக்கியல் - அவையை வாழ்த்துதல். அவையடக்குதல் என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகை; அடக்கியல் என்பது வினைத் தொகை. தான் அடங்குதலாயின் அடங்கியல் எனல் வேண்டும். அஃதாவது அவையத்தார் அடங்குமாற்றால் இனியவாகச் சொல்லி அவரைப் புகழ்தல். *(பேரா. செய். 423)*

**13. நுண்ணறிவு தோற்றப் பொருள் கூறுதல்**

உரையாசிரியர் புதுமையாய் உரை கூறுதலேயன்றி நுட்பமாய்க் கூறுமிடங்களும் உள. மதி - இளம்பிறை (புறம் 56) என்ற புறநானூற்றுப் பழைய உரைகாரர் கூற்றிலிருந்து, முழுமதி என்றாலும் திங்கள் என்றாலும் பூரண நிலவைக் குறிக்குமென்றும் மதி என்றால் பிறைமதியையே குறிக்கும் என்றும் பெறப்படுகிறது.

சிலம்பில் மாநாய்கன் - சிறப்புப் பெயர், மாசாத்துவான் - இயற் பெயர் என அடியார்க்கு நல்லார் சுட்டுவன, அவருடைய அறிவுக் கூர்மையைக் காட்டுகின்றன.

சிலப்பதிகாரத்தில் அரும்பதவுரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் கற்றுணர்ந்து கூறிய இசை நாடக இலக்கணங்கள் மிக நுட்பமானவை. அரங்கினை அமைக்க 'கோல்' அளவுகோலாகிறது. கோல் என்பது மூங்கில், உத்தமன் கைப் பெருவிரல் அளவு இருபத்து நான்கு கொண்டது ஒரு கோல் அளவாகும். "இதனுள் அணுமுதல் பெருவிரல் அளவு உயர்ந்து வருமாறு: அணு எட்டுக் கொண்டது தேர்த்துகள்; தேர்த்துகள் எட்டுக் கொண்டது இம்மி; இம்மி எட்டுக் கொண்டது எள்ளு; எள்ளு எட்டுக் கொண்டது நெல்லு; நெல்லு எட்டுக்

கொண்டது பெருவிரல் எனக்கொள்க". இனி, 'உத்தமன்' கைப் பெருவிரல் என்றால் உத்தமன் யார்? "உத்தமராவார் கழிய நெடுமையும் கழிய குறுமையுமில்லோர்." இவை பலதுறை அறிவைச் சாருமெனினும் அவற்றுள்ளும் நுட்பமாய்க் கூறல் பற்றி இவண் எடுத்துரைக்கப்பட்டன.

வினைச்சொல் காலங்காட்டும். காலத்தின் முப்பகுப்பை விளக்க வந்த இளம்பூரணர்: 'இறப்பாவது தொழிலது கழிவு, நிகழ்வாவது தொழில் தொடங்கப்பட்டு முற்றுப் பெறாத நிலைமை, எதிர்வாவது தொழில் பிறவாமை' எனச் (தொல். சொல். 197) சட்டவாசகம் போல் வகுத்துரைப்பர்.

பொச்சாப்பு என்பதற்கு மறத்தல் (மெய்ப். 256), தம்மைக் கடைப் பிடியாமை (மெய்ப் 270) என்பன இளம்பூரணருரைகள். பேராசிரியர் பொச்சாப்பு - அற்றப்படுதல். அஃதாவது பாதுகாத்துச் செல்கின்ற பொருட்கண் யாதானும் ஓர் இகழ்ச்சியான் இடையறவுபடுதல்' (மெய்ப். 260) என நுட்பமாக எழுதி வேறுபாடு காட்டுகிறார்.

தலைவன் தலைவியரிடம் இருத்தலாகாப் பண்புகளைப் பட்டியலிடும் தொல்காப்பியர் 'ஒப்புமை' எனவும் ஒன்று கூறினார். இதற்கு 'ஆண்பால ராயினும் பெண்பாலராயினும் தான் காதலிக்கப்பட்டாரைப் போல்வாரைக் கண்டவழி அவர் போல்வார் என ஆண்டு நிகழும் உள்ள நிகழ்ச்சி' என விளக்கம் எழுதினர். தலைவன் ஒரு பெண்ணைப் பார்த்து அவளைத் தன் மனைவியோடு ஒப்பிடலும் மனைவி போல்வாள் எனச் சிந்தித்தலும் எவ்வளவு தவறு? அது போலவே ஒரு பெண் ஓர் ஆடவனை எண்ணலும் தவற்றில் முடியும். உளவியல் தழுவிய இவ்வுரை நுட்பமானது.

தெறுதல் - அழல நோக்குதல் (இளம். கற்பு. 148), மெய்ப்பாடு தழுவிய இவ்விளக்கம் நுட்பமானது.

சொல் - என்பது 'எழுத்தோடு புணர்ந்து பொருள் அறிவுறுக்கும் ஓசை' என இவ்வாறு, நூல்கள் போலவே உரைகளிலும் இலக்கண வரையறைகள் கூறப்படுவது மிகவும் திட்பநுட்பம் செறிந்திருக்கும்.

**14. பலதுறை அறிவை**
**வெளிப்படுத்துமாறு பொருள் கூறுதல்**

வாயுறை வாழ்த்து, செவியுறை வாழ்த்து என்பன நன்மை பயக்கும் சான்றோர் வாழ்த்துக்கள். தொல்காப்பியம் இவற்றை நன்கு

விளக்குகிறது. பேராசிரியர் வாய் - வாய்மொழி, உறை - மருந்து எனப் பிரித்து உரை கூறுகிறார். உறை மருந்தெனப்படுவது நாட்டுப்புற வழக்கு. பேராசிரியர் எழுதுகிறார்: "வாயுறை என்பது சொன் மருந்தெனப் பண்புத் தொகையாம். இனி வாய்க்கட் தோன்றிய மருந்தென வேற்றுமைத் தொகையுமாம். மருந்து போறலின் மருந்தாயிற்று" என்று (செய். 432). இதன் மூலம் அவருடைய உலகியலறிவு புலனாகின்றது.

குறிஞ்சிப்பாட்டில் பெண்கள் தழையுடை அணிந்தமை பற்றிப் 'பைவிரி அல்குல் கொய்தழை தைஇ' என வருகின்றது (102). கொய்தழை - கொய்யப்பட்ட தழை என்றுதானே கூற நினைப்போம். நச்சினார்க்கினியர் 'மிக்க விடங்களை நறுக்கின தழை' என்கின்றார். தழை உடையாகத் தைக்கப்படுதலை நேரில் அறிந்தவர் போலும்.

*பாகல் - பலாவென்று உரைப்பாரும் உள்*

*(புறம். 16)*

*கராம் - முதலையுள் ஒரு சாதி*

*(புறம். 37)*

*இருநிலம் தீண்டா அரு - நீருட் கிடக்கும் அட்டை*

*(இளம். அகத். 71)*

*கோளி - பூவாது காய்க்கும் மரம்*

*(புறம். 58)*

*உழிஞை - கொற்றான், அது குடநாட்டார் வழக்கு*

*(புறம். 122)*

*நள்ளிருள் நாறி - இருவாட்சிப்பூ*

*(குறிஞ்சி. 94)*

இவை பயிரியல், உயிரியல் அறிவைப் புலப்படுத்துகின்றன.

*புதை - புதைத்தல்; போர்த்தல், மலைநாட்டு வழக்கு*

*(சிலம்பு. V-4)*

*கூலம் - பதினெண் கூலம் - 'பலசரக்கு என்பாரும் உள்'*

*(சிலம்பு. V-23)*

அடியார்க்கு நல்லார் இன்று நாம் பலசரக்கு என்று கூறும் வழக்கு அன்றும் இருந்ததை வெளிப்படுத்துகிறார்.

*சீரை - துலாக்கோல் தட்டு*

*(புறம். 44)*

*கணிச்சியைக் குந்தாலி என்றும் மழுவென்றும் கூறுவர்*

*(புறம். 42)*

ஒரு போகு என்பது பண்புத்தொகை, இடையீடில்லாத நிலத்தினை ஒரு போகு என்பவாகலின், அஃது ஒப்பினாகிய பெயர். (பேரா. செய். 460)

'குறியெதிர்ப்பாவது அளவு குறித்து வாங்கி அவ்வாங்கியவாறே எதிர்கொடுப்பது' என்பர் பரிமேலழகர். (குறள். 221)

விழவு - சிறுசோற்று விழவு (புறம். 33) இன்று சிறு சுற்றுலா என்பது போன்றது இது.

'மடங்கா விளையுள்' (புறம். 200). மடக்குதல் - போகம் ஒருக்குதல் (சுருக்குதல்).

பிணிமுகம் - மயிலாகிய ஊர்தி; பிள்ளையார் ஏறும் யானை என்றும் சொல்லும்.

*வாலியோன் என்றது நம்பி மூத்தபிரானை*
*இகழுநர் அடுநன் என்றது மாயோனை.*

*(புறம். 56)*

இவ்வாறு உலகியல், சமயம், கலைகள், மருத்துவம் போன்ற பலதுறை அறிவை, உரையாசிரியர்கள் வெளிப்படுத்துமிடங்கள் நூற்றுக் கணக்கிலுள.

**15. மரபுவழிப் பொருள் தருதல்**

சொற்களுக்குப் பொருள்கள் மாறுகின்றன. எனினும் முன்பு வழங்கிய பொருளையே கூறுதல், அச்சொல் இலக்கியத்தில் ஆளப்பட்ட காலத்தின் தன்மையைக் காட்டும். 'விளையாட்டு' என்பது 'யாறும் குளனும் காவும் ஆடிப் பதியிகந்து வருதல் முதலாயின' என்பர் பேராசிரியர் (மெய்ப். 250). சிறுவர் ஆடலைக் குறியாமல் இங்ஙனம் குறிப்பது முன்னைய மரபாகும். வன் புலம் - குறிஞ்சியும் முல்லையும்; மென்புலம் - மருதமும் நெய்தலும் (புறம். 42). சங்கப் பாடல்களின் ஆட்சி நோக்கியது இவ்விளக்கம். பார்ப்பான் - நன்றும் தீதும்

ஆராய்ந்து உறுதி கூறுவான் (செய். 501) என்ற பேராசிரியர் விளக்கம் முன்மரபு தழுவியது.

**16. தன் கருத்தினை ஏற்றிப் பொருள் சொல்லுதல்**

தமிழ்ச் சொல்லிற்கு வட சொல்லாற் பொருள் கூறுதல், தமிழ்ச் சொல் என நினைப்பதை வடசொல் எனக் கூறிப் பொருள் தரல், ஒரு சொல் தமிழ்ச்சொல்லே என நிறுவிப் பொருள் தரல், எல்லோரும் ஏற்கும் பொருளைக் கூறாது தான் கருதிய பொருளையே கூறுதல் என்பன இதில் அடங்கும்.

மங்கல அணி - மாங்கலிய சூத்திரம் (சிலம்பு. மங். 47. அரும்) சகடு - உரோகணி (ஷ. 49 அடியார்). இங்ஙனம் வடசொல்லால் விளங்க வைப்பது ஒரு சில இடங்களில் மிக்குக் காணப்படுதற்கு ஒரு பொருட் சொற்கள் தேடி உணர்த்த வேண்டிய இன்றியமையாமையே காரணமாம். மணிப்பிரவாள உரையிலேயே இது மிக்குக் காணப்படும்.

'படிமை என்பது ப்ரதிமா என்னும் வடமொழித் திரிபு. அது தேவர்க்கு ஒப்புமையாக நிலத்தின்கண் செய்தமைத்த தேவர்மேல் வந்தது' என்பது இளம்பூரணம் (அகத். 30). வடிவம் படிவம் படிமம் என்பனவெல்லாம் நோக்க இதனை ஏற்பதில் இடர்ப்பாடுள்ளது.

உலகம் என்பது மக்கள் தொகுதியையும் இடத்தையும் தனித்தனி உணர்த்துமென்றும் 'காலம், உலகம்' தமிழ்ச்சொற்களே என்றும் நச்சினார்க்கினியர் குறிப்பிடுவார் (தொல். எழுத்து. 58).

பரிமேலழகர் திருக்குறள் உரைப்பாயிரத்தில் 'அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கின ஒழிதலுமாம்; ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியம் முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற்கு ஓதிய அறங்களின் வழுவாது ஒழுகுதல்' என வடநூன் முறையைப் பின்பற்றி எழுதுகின்றார். இம் மரபை அவரிடம் பலவிடத்தும் காணலாம்.

முல்லை குறிஞ்சி முதலியன ஒழுக்கத்தின் பெயர்களே என்பது நச்சினார்க்கினியர் கருத்து. "முல்லை என்ற சொற்குப் பொருள் இருத்தலாயிற்று, 'முல்லை சான்ற முல்லையம் புறவின்' என்பவாகலின். 'மருதஞ் சான்ற மருதத் தண்பணை' என்புழி மருதமென்றது ஊடியும் கூடியும் போகம் நுகர்தலை... 'நெய்தல் பறையாவது இரங்கற் பறையா தலின், நெய்தல் இரக்கமாம்"... இனி இவ்வாறன்றி முல்லை முதலிய

பூவால் பெயர்பெற்றன இவ்வொழுக்கங்கள் எனின், அவ்வந் நிலங்கட்கு ஏனைப்பூக்களும் உரியவாகலின் அவற்றால் பெயர் கூறலும் உரியவெனக்கடாயினார்க்கு விடையின்மை அறிக." (தொல். பொருள். 5) இவ்வாறு தம் கருத்திற்கேற்ப வளைத்துப் பொருள் கூறும் திறம் இனியரிடம் காணப்படுவதுண்டு.

இவ்வாறு பதினாறு மரபாகத்தான் பகுக்க வேண்டுமென்பதில்லை. ஒன்று கூடினும் ஒன்று குறையினும் தவறின்று, சொல்லுக்குச் சிறப்புப் பொருள் தருங்கால் இங்ஙனம் பல்வேறு திறன்களின் அடிப்படையில், அச்சொல்லின் ஆட்சி, நேர்பொருள், நிழற்பொருள், உட்பொருள், இடப்பொருள்களின் அடிப்படைகளைக் கொண்டு, விளக்கங்கூற முயன்றுள்ளனர் என்பதே நினைவிற் கொள்ளத்தக்கதாம். அவர்களின் பரந்து பட்ட நூற்புலமையும் நுண்மாண் நுழைபுலமும் இவ்வொரு திறத்திலேயே வெளிப்பட்டு விடுகின்றன. எனவே வேறு நெறி முறை களைப் பற்றிக் கூற வேண்டுவதில்லை. சொல் வரலாற்றையும் சொல்லின் இலக்கணத்தையும் நன்கறிந்திருக்கின்றனர். எப்பொழுதும் புதுமையாய், நுட்பமாய், பல்துறையறிவுடன் சொல்ல வந்த கருத்தை விளக்கிவிட வேண்டும் என்ற ஆர்வம் அவர்கட்கு இருந்திருக்கின்றது.

இதனால் பயன் யாது? உரையாசிரியர்களின் சொற்பொருளாய்வு அகராதித் தொகுப்பிற்குப் பயன்படும். அகராதிச் சொற் பொருள் தொகுக்கும் விதத்தையே அது நமக்கு நல்குவதாயுளது. தமிழின் சொல்வளம் பெருகுதற்கு, இக்கல்வி பயனுடையதாகும். ஒருபொருட் சொற்கள், பலபொருள்கள், இணைச்சொற்கள், எதிர்ச் சொற்கள், தொடர்புடைய சொற்கள் எனப் பல தொகுதிகளை அறிதற்கும் ஆக்கு தற்கும் இஃது உதவும். தமிழில் கலைச் சொல்லாக்கத்திற்கு இதனால் நல்லதொரு வரன்முறை கிடைக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக, ஆராய்ச்சியின் வளர்ச்சிக்கு இத்திறனறி புலமையானது ஊட்டமும் ஊக்கமுமாய் அமைந்து சிறக்கச்செய்யும்.

**கலைச் சொல்லாக்கம்**

இலக்கியக் கலைச் சொல்லாக்கத்திலும் இலக்கணக் கலைச் சொல்லாக்கத்திலும் உரையாசிரியர்களுக்கு நிரம்ப இடம் உண்டு. தொல்காப்பியரே பல கலைச்சொல் வடிவங்களைத் தந்து வழி காட்டியவர். அவர் காலத்து வழக்காறுகள் தொல்காப்பியத்துள் இடம் பெற்றுள. தொல்காப்பிய உரையாசிரியர்களும் இறையனாரகப் பொருள்

உரையாசிரியரும் முன்னோடிகளாயமைந்து செறிவான கலைச் சொற் களைப் படைத்தளித்துள்ளனர். பத்துப்பாட்டு, எட்டுத்தொகையைத் தொகுத்தவர்கள் பாடல்களின் அடியில் தந்துள்ள துறைக் கூற்றுக் கொளுக்களில் மிகுதியான கலைச் சொற்களை ஆண்டுள்ளனர். பின்னர் வந்த இலக்கணக்காரர்களும் முன்னைய மரபுகளைப் பின்பற்றிக் கலைச்சொற்களை மிகுதியாக ஆண்டு சென்றுள்ளனர்.

இவை அனைத்தும் தொகுக்கப்பட்டுக் காலவரிசையில் அடுக்கப் பட்டால்தான் எவர் எவரினும் முன்னேற்றமாகச் செறிவுடைய சொல்லாக் கங்களைத் தந்துள்ளனர் என்ற உண்மை புலப்படும்.

அளபெடையைச் சார்பெழுத்தெனத் தொகைப்படுத்தாததால் 'உயிரளபெடை', 'ஒற்றளபெடை' போன்ற தொடர்களைத் தொல்காப்பியர் ஆளவில்லை. எழுத்துப் போலி பற்றிக் குறிப்பிடினும் 'எழுத்துப்போலி' என்ற சொல்லாக்கம் காணப்படவில்லை.

தொல்காப்பியர் மெய்ம்மயக்கு, உடனிலை, மெய்ந்நிலை மயக்கம் எனக் குறிப்பிட்டனவே மெய்ம்மயக்கம், உடனிலை மெய்ம் மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனத் தெளிவான பெயர்களை உரையாசிரியர்களிடம் பெற்றன.

பகைவயிற் பிரிவு பற்றித் தானே சேறலும், தன்னொடு சிவணி ஏனோர் சேறலும் என்று (29) தொல்காப்பியம் கூறும்; இளம்பூரணர் பகைதணி வினைப்பிரிவு, வேந்தற்குற்றுழிப் பிரிவு என இதைக் கலைச் சொல் வடிவப்படுத்துகிறார்.

'திணை மயக்குறுதல்' (958) என்பதே தொல்காப்பியம். உரை யாசிரியர் திணை மயக்கம் எனச் செறிவுடைய தொடராக அதை ஆள்கின்றனர்.

'அறன்' என்றும் (1060) 'அறத்தொடு நிற்கும் காலம்' (1152) என்றும் வரும் தொல்காப்பிய ஆட்சிகளே 'அறத்தொடு நிலை' என்ற துறைப் பெயரைத் தந்தன.

காமக்கூட்டம், காமப்புணர்ச்சி என்பனவே தொல்காப்பியத் தொடர்கள். இயற்கைப் புணர்ச்சி, தெய்வப்புணர்ச்சி, முன்னுறு புணர்ச்சி என்பன உரையாசிரியர்களின் தொடர்கள். (இறை. அகப் சூ. 2)

'பாங்கொடு தழாஅல்' என்பதே தொல்காப்பியம் (1422). 'குற்றங் காட்டிய வாயில் பெட்பினும்' (1048) என்பதோடு தொல்காப்பியர் நிறுத்திக்

கொண்டார். பாங்கற் கூட்டம், கழறல், கழற்றெதிர்மறை என்பன உரையாசிரியர்களும் அடிக்குறிப்பாளர்களும் தந்த கலைச் சொற்களாகும். எடுத்துக்காட்டாக, இறையனார் அகப்பொருள் உரை பாங்கற் கூட்டம், உற்றது வினாதல், உற்றது உரைத்தல், கழறியுரைத்தல், கழற்றெதிர் மறை, கவன்றுரைத்தல் என இவ்வாறு பற்பல கலைச் சொற்களைப் படைத்துத் தருகிறது. மேலும் 'எவ்விடத்து? எத்தன்மைத்து? நின்னாற் காணப்பட்ட உரு' என்பது பாங்கன் கூற்றாகவும் 'இன்னவிடத்து இத்தன்மைத்து என்னாற் காணப்பட்ட உரு' என்று தலைவன் கூறுவதாகவும் இரு துறைகளை இறையனார் அகப்பொருளுரை குறிப்பிடுகிறது. இவை பின்னர் 'இயல் இடம் கேட்டல்', 'இயல் இடம் கூறல்' எனச் சுருங்கிய வடிவம் பெறுகின்றன. எனவே 'கலைச்சொற்கள்' செறிவுடைய வடிவத்தைக் காலப்போக்கிலேதான் பெறுகின்றன. பயன்படுத்திப் பயன் படுத்திச் சொற் சுருங்கியும் பொருள் விரிந்தும் அமைகின்றன. மூல நூலுக்குக் காலந்தோறும் உரைஎழுதி வந்த உரையாசிரியர்களால் இம் முயற்சி எளிதின், இயல்பாக வெற்றிபெறுகிறது.

**இலக்கணம் கூறுதல்**

சொற்பொருள் கூறும்போது இலக்கணம் காட்டிக் கூறுவது. நூற் பாவினுள் வரும் சொற்களுக்கும் தொடர்களுக்கும் தாம் பொருள் விளக்கியதற்கேற்ற இலக்கணம் இருப்பதைச் சுட்டிக் காட்டுவது, அணி முதலியவற்றை எடுத்தெழுதி விளக்குவது, கலைச்சொற்களாவன வற்றிற்கு இலக்கணம் காட்டி விளக்கம் கூறுவது, பாடலின் பகுதிகட்கோ, முழுவதற்குமோ வினைமுடிபு காட்டி, 'மாட்டு' எனும் உறுப்பினை விளக்கி, அப்பாடலின் முழுமையை மனங்கொளச் செய்வது என இன்னோரன்ன இலக்கணக் கூறுகளை உரையாசிரியர்களிடமும் காணலாம். இப்பண்பு எல்லா உரையாசிரியர்களிடமும் காணப்படும் பொதுப்பண்பேயாயினும், பரிமேலழகரிடம் மேலோங்கிக் காணப் படுவதால் அவர் தம் திருக்குறள் உரை 'இலக்கணவுரை' என்றே பாராட்டப்பட்டதென்பர்.

ஆய்வு நெறிமுறையில் ஒரு கோட்பாட்டை வகுத்துக்கொண்டு அதை ஆயும் பொருளில் ஏற்றிப் பார்ப்பர். ஒரு பழங்கதை வெவ்வேறு இடங்களில் சிலபல மாற்றங்களோடு வழங்குகின்றதெனின், அதன் மூலவடிவத்தைக் காண்பது எவ்வாறு? கொள்கைச் சட்டகம், அளவு வரையறை (Formula) என்பன போன்ற சில அளவு கோல்களை வைத்துக்கொண்டு, இலக்கியத்தையோ, ஆய்வுப் பொருளையோ

அளந்து பார்க்கின்றோம். ஒரு வகை இலக்கியத்தில் நடப்பியல் உளதா; புனைவியல் உளதா என்பதைக் கண்டறிவது எவ்வாறு? அவ்விரு கோட்பாடுகளின் இலக்கணம் நன்கு தெரிதல் வேண்டும் முதற்கண்; பிறகு அதனை இலக்கியத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். படிமம் (Symbol) பற்றி ஆராய்பவர் படிமம் கோட்பாட்டை இலக்கணம் போல் நன்கு படித்துக்கொள்கின்றார். அதன் வரலாறு, வகைகள், வரையறை யாவற்றையும் பயின்ற பிற்பாடு இலக்கியத்தில் அதைப் பொருத்திப் பார்க்கின்றார்.

மேற்கண்ட ஆய்வுநெறியை ஒத்ததே, இலக்கியத்தை இலக் கணத்துடன் பொருத்திப் பொருள் கூறும் முறை. கலிப்பாவிற்குத் தொல் காப்பியர் கூறும் இலக்கணங்களை ஒருவர் தனித்துத் தொகுத்துக் கொள்கின்றார். பிறகு கலித்தொகையில் நச்சினார்க்கினியர் ஒவ்வொரு பாட்டிற்கும் இலக்கணம் கூறுவதையும் பிற்கால இலக்கணிகளும் உரை யாசிரியர்களும் கூறும் கருத்துக்களையும் மனத்தில் வாங்கிக்கொண்டு அக்கலித்தொகைப் பாடல்களில் பொருத்திப் பார்த்தால் கலிப்பாவின் தோற்றம் வளர்ச்சி வகைகளையெல்லாம் கண்டறியலாம்.

எனவே, இனியேனும் இலக்கணம் இலக்கணம் என்று கசப்பு மருந்தைப் பற்றிப் பேசுவது போல் பேசி, நம் தமிழார்வலர்களையும் மாணவர்களையும் வெகுதூரம் விரட்டிவிடாமல் அப்பழையவற்றில் உள்ள புதுமைகளைக் கண்டறிந்து கூறி ஈர்த்தல் வேண்டும். முன்பு இலக்கணம் ஒன்றுதான் அளவுகோலாக இருந்தது. இன்று பொருளிய லாயினும் சமூகவியலாயினும் தொன்மமாயினும் எல்லாவற்றையுமே அளந்தறிய அளவுகோல் கண்டுள்ளனர். அவையே அவற்றின் இலக்கணமாம். இவ்வுண்மையை முழுவதும் உணர்ந்தார். தமிழ் நூல்களிற் காணப்படும் இலக்கணக் குறிப்புக்களைப் புதுமையார் வத்தோடு நோக்குவர் என்பதுறுதி.

**இளம்பூரணம்**

*அவற்றுள்*
*நடுவண் ஐந்திணை நடுவணது ஒழிய*
*படுதிரை வையம் பாத்திய பண்பே*

*(தொல். பொருள். 2)*

முற்கூறிய எழுதிணையுள் நடுவணதாகிய பாலை ஒழிய, நடுநின்ற ஐந்திணை, ஒலிக்கும் கடலால் சூழ்ந்த உலகம் பகுக்கப்பட்ட இயல்பு என்பது இளம்பூரணரின் உரைக்கருத்தாகும். சிலர் ஐந்திணையின் பண்பு என்பது பயனற்ற முடிபு எனக்கொண்டு, படுதிரை வையம் பகுத்த பண்பு, நடுவணது ஒழிய (வாகும்) என முடிவு செய்வர். ஐந்திணை பாத்திய பண்பாகும் என்றால் ஒன்று போக நான்காகப் பகுத்த பண்பாகும்; அன்று, பகுத்த பண்பு நடுவணது ஒழியவாகும் என்பதே இன்னும் சிறப்பாகவுளது. இதையெல்லாம் சிந்திக்கும் இளம்பூரணர் உரை காண்க: "இச் சூத்திரத்துள் ஒழிய என்னும் வினைஎச்சம் எவ்வாறு முடிந்தது எனின், அது பாத்திய என்னும் பெயரெச்சத்தோடு, முடிந்தது. அப்பெயரெச்சம் பண்பு என்னும் பெயர்கொண்டு ஐந்திணை என்னும் எழுவாய்க்குப் பயனிலையாகி நின்றது என உரைப்ப.

"இவ்வாறு உரைப்பவே, ஐந்திணை பண்பு என வருஉம் காலத்துப் பயன்பட நில்லாமையின் அஃது உரையன்று என்பார் உரைக்குமாறு; ஒழிய என்பதனை எச்சப்படுத்தாது முற்றுப்படக் கூறி, 'படுதிரை வையம் பாத்திய பண்பு நடுவணது ஒழிய' எனப் பொருள் உரைப்ப, அஃதேல் வினையெச்ச வாய்பாட்டால் வரும் முற்றுளவோ எனின். 'வினை எஞ்சுகிளவியும் வேறுபல் குறிய' என்று முற்று வாய் பாட்டான் வினையெச்சம் வருதலின் வினையெச்ச வாய்ப்பாட்டான் முற்றுவரும் என்பதூஉம் அச்சூத்திரத்தின் அமைத்துக் கொள்ளப்படும் என்ப. இவ்வுரை இரண்டினும் ஏற்பது அறிந்து கொள்க.

தொல்காப்பியர் காலத்து 'வேறுபல் குறிய', 'நடுவணது ஒழிய' என்றாற் போன்ற வினைமுற்றுநடை இருந்ததென்பதையன்றோ இவ்விளக்கம் நமக்குக் காட்டுகிறது. இளம்பூரணர் காலத்திலேயே இவை எச்சம் போலவே ஒலிக்கத் தலைப்பட்டுவிட்டதால், பொருள் கூறுதலில் தடுமாற்றம் ஏற்படுகிறது. எனவே இந்த இலக்கணப் பொருத்தமெல்லாம் எதற்கு என்று கேட்பது தகாது, ஏனெனில் அவற்றாலும் சில உண்மைகள் கைவரப்பெறுதலின் என்க.

**பரிமேலழகர்**

'அழுக்காறென ஒரு பாவி' (168) என்பது திருக்குறள். அழுக்காறு ஒரு பண்பு. அது எவ்வாறு பாவியாகும்? பண்பு வேறு, பண்பை உடையது வேறு. பாவி பண்பை உடையது. அழுக்காறாகிய பண்பே, பண்பி (பண்பை உடையது) ஆகுமா? அழுக்காற்றை உடையவன்

பாவியாகலாம்; அழுக்காறே பாவியாகுமா? நுட்பமான கேள்வி. "பண்பிற்குப் பண்பி இல்லையேனும், தன்னை ஆக்கினானை இருமையும் கெடுத்தற் கொடுமைபற்றி, அழுக்காற்றினைப் பாவி என்றார், கொடியானைப் பாவி என்னும் வழக்குண்மையின்" என்ற பரிமேலழகர் விளக்கவுரை அவர்தம் நுட்பத்திறனைக் காட்டுகின்ற தன்றோ?

'பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர்' (187) என்பதற்குப் 'பகச் சொல்லிக் கேளிரையும் பிரிப்பர்' என உரையெழுதி, 'சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது' என்பர் பரிமேலழகர். பிரியுமாற்றால் புறஞ் சொல்பவர் நமக்கு வேண்டாதாரைப் பிரிப்பது பெரிதன்று; கேளிரையும் பிரிப்பதே பெரிது. அங்கு 'உம்' வருவதே பொருத்தம்.' 'வேண்டிய வரிடத்துக் கடன் கேட்காதே' என்றால் 'வேண்டியவரிடத்தும் கடன் கேட்காதே' என்று தானே கொள்ள நேரும். செய்யுளாதலின் அசை, சீர், தளைகட்கேற்பச் சொல், தொடர்களில் சில மாறி அமையும். இவற்றைச் செய்யுள் விகாரம் என்ப. 'பகச் சொல்லிக் கேளிரையும் பிரிப்பர்' என்று இரண்டாம் உருபும் உம் இடைச்சொல்லும் விரிக்க வேண்டும். அங்ஙனம் விரித்தால் குறட்பா உரைநடை போலாகிவிடும். எனவே செய்யுள் நடைக்கேற்ப உம் தொக்கதென்றார்.

'தோன்றின் புகழொடு தோன்றுக' (236) என்பதற்குப் பரிமேலழகர் 'மக்களாய்ப் பிறக்கின் புகழுக்கேதுவாகிய குணத்தோடு பிறக்க' என்று உரையெழுதிவிட்டு, 'புகழ் ஈண்டு ஆகு பெயர்' என்றார். பிறக்கும் போதே புகழோடு எவ்வாறு பிறக்க முடியும் என்ற கேள்விக்கு இங்கு விடை கிடைத்தல் காண்க.

*பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்*
*சால மிகுத்துப் பெயின்*

*(குறள் 475)*

'பீலி ஏற்றிய சகடமும் அச்சு முறியும் அப் பீலியை அது பொறுக்கு மளவின்றி மிகுத்தேற்றின்' என்பது பரிமேலழகர் உரை.

இதுவா திருக்குறள் சொல்ல வந்தது?

"உம்மை சாகாட்டது வலிச் சிறப்பேயன்றிப் பீலியது நோய்ம்மைச் சிறப்பும் தோன்ற நின்றது. 'இறும்' என்னும் சினை வினை முதன்மேல் நின்றது."

எளியரென்று பலரோடு பகை கொள்வான் தான் வலியனே யாயினும் அவர் தொக்கவழி வலியழியும் என்னும் பொருள்தோன்ற நின்றமையின் இது பிறிதுமொழிதல் என்னும் அலங்காரம் இதனை நுவலாநுவற்சி என்பாரும் ஒட்டென்பாரும் உளர்.

குறள் முழுவதும் இலக்கணத்தைப் பொருத்திப் பார்க்கும் அழகும் உட்பொருளை வெளிப்படுத்தும் போக்கும் கருதத்தக்கன. 'வலியறிதல்' என்னும் அதிகாரத்திற்கு ஏற்பப் பொருள் கொள்ளப்படுகிறது. இக் குறளையே வேறு ஓர் இடத்தில் வைத்துப் பார்த்தால் வேறு பொருள் கொள்ளவும் இடமுளது. எனவே திறனாய்வுக்கு வழிவிடும் இவ்வுரை நெறி மரபுகள் சிந்தனையைத் தூண்டுவனவாயுள்ளன.

**நச்சினார்க்கினியம்**

'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே' என்பது சொல்லதிகார முதல் நூற்பாத் தொடக்கம். இதில் மக்கட் சுட்டு என்பது என்ன? "மக்கட் சுட்டு என்பது மக்களாகிய சுட்டு என இரு பெயரொட்டுப் பண்புத் தொகை. சுட்டு - நன்கு மதிப்பு. அஃது ஆகுபெயராய் மக்கட்பொருளை உணர்த்தி நின்றது. சேனாவரையர் இதனைப் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை என்றாராலோ எனின் இரு பெயரொட்டு ஆகு பெயர்க்கும் அன்மொழித் தொகைக்கும் வேறுபாடு உணராமல் கூறினமையின் அது பொருந்தாது. 'என்னை வேறுபாடு' எனில் ஈண்டு ஆகுபெயராய் நின்ற நன்கு மதிக்கும் பொருளும் மக்களையே உணர்த்தி நிற்கும். அன்மொழித்தொகை அவ்வாறன்றி 'வெள்ளாடை' என்றால் வெண்மையும் ஆடையும் அன்றி உடுத்தாளையே உணர்த்தி நிற்கும். இது தம்முள் வேற்றுமை. 'அம்மொழி நிலையாது அன்மொழி நிலையலும்' என்புழி வெள்ளாடை என்புழித் தொக்க இருமொழி மேலும் நில்லாது உடுத்தாள் என்னும் அன்மொழிமேல் நின்றது என உதாரணம் காட்டினார் சேனாவரையரும் என்று உணர்க" இவை நச்சினார்க்கினியர் விளக்கம். ஒரு கலைச்சொல் பற்றிய ஆய்வு இது. இதைப் படிக்கும் போது அன்மொழித் தொகை பற்றிய நல்ல விளக்கம் கிடைக்கிறது. இத்தகைய விவாதங்களாலன்றோ, இலக்கணக் கோட்பாடுகள் நமக்கு ஓரளவேனும் நன்கு தெளிவுபட்டுள்ளன.

*உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு*
*பலர் புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு*

*ஓஅற இமைக்கும் சேண் விளங்கு அவிரொளி*
*(முருகு. 1-3)*

முருகனின் ஒளிமயமான தோற்றம் நீலக்கடலின்மிசை எழுதரும் ஞாயிற்றைக் கண்டது போல உளது. வினை, பயன், மெய், உரு என்ற அடிப்படைகளின்படி இஃது என்ன உவமம்? மனத்தால் நினைப்பார்க்கு மாயையாம் இருளைக் கெடுத்தலின் வினையுவமம். ஞாயிறு புற இருளைக் கெடுக்கிறது; முருகன் ஒளி அக இருளைக் கெடுக்கிறது. மயில்மீது வரும் முருகன் நீலக்கடல் மீது எழுகின்ற ஞாயிறு போல விளங்குதல் உருநிறம் - வண்ணம் பற்றிய உவமை. இதனைப் பொருத்திக் காட்டுகிறார் நச்சினார்க்கினியர் தம் உரையில். 'இது வினை எச்ச உவமம். விரவியும் வரூஉம் மரபின என்ப' என்பதனால் தொழிலுவமமும் வண்ணவுவமமும் கொள்ளக் கிடந்தமை காண்க." இத்தகைய உரைப் பகுதிகள் குற்றநற்றங்களைக் காட்டும் திறனாய்வுபோல் அமையா விட்டாலும், இலக்கியத்தில் கோட்பாடுகளை ஏற்றிப் பார்த்து விளக்கும் அளவில் செயற்படுகின்றன.

**மாட்டு - வினை முடிவுகள்**

ஒரு பாடலில் பல்வேறு அடிகளில் கூறப்பட்டுள்ள செய்திகளை ஒருங்கிணைத்துக் காட்டுவதை 'மாட்டு' என்பார் தொல்காப்பியர். பின்னாளில் அதைக் 'கொண்டு கூட்டு' என்றனர். வினையெச்சங்கள் பெயரெச்சங்கள் ஒன்றின் ஒன்று இணைந்து ஒரே பயனிலையில் போய் முடியும். பத்துப்பாட்டிலுள்ள பாட்டுக்கள் கூடுதலான அடியெண்ணிக்கை உடையவை. தமிழில் சிறு பாடலாக இருந்தாலும் அல்லது எவ்வளவு நெடும் பாடலாக இருந்தாலும் அஃது ஒரு கலவை வாக்கியம் போல அமையும் என்பதை வணக்கத்திற்குரிய அறிஞர் தனிநாயக அடிகளார் எடுத்துக் கூறியுள்ளார்.

சிறுபாணாற்றுப்படை 269 அடிகளைக் கொண்டது. வழி நடந்து வரும் பாணன் அழகிய விறலியுடன் வேனிலின் வெப்பம் தாங்காது நிழலில் இருப்பதைப் பார்த்துப் பரிசில் பெற்றுவரும் பாணன் அழைத்து,

வஞ்சி, மதுரை, உறந்தையாம், மூவேந்தர்களின் தலை நகரங்களும் வறிதாகும்படி, கடையெழு வள்ளல்கள் பூண்டிருந்த ஈகைச் செந்நுகத்தை - நுகத்தடியைத் தான் ஒருவனுமே தாங்கி விளங்கும் நல்லியக்கோடனை, நயந்து தாங்கள் சென்ற விதத்தைக் கூறுகின்றான்.

அவனிடம் பாடிச் சென்ற போது, அவன் பரிசில் தந்தான். நாங்கள் அவனிடமிருந்து வருகின்றோம். நீங்களும் சென்றால் எயிற் பட்டினத்தில் விருந்து பெறுவீர், வேலூரில் எயினர் விருந்து தருவர்; ஆமூரில் உழவர் விருந்து படைப்பர். அவன் ஊர் சேய்மைத்தன்று.

நல்லியக்கோடன் அவையில் இருப்பான். யாழ் வாசித்து அவனைப் பாடிய அளவில், உடை தந்து, உணவு படைத்து, பரிசில் தந்த அன்றே வழியனுப்பி வைப்பான்.

இவ்வாறு இரண்டு மூன்று சிறு தொடர்களால் ஆன, பெரியதொரு கலவை வாக்கியம் போல இஃதமைகிற விதத்தைக் கீழ் வருமாறு, இனியர் வினை முடிபு காட்டிப் பாட்டின் உரையிறுதியில் தெளிவுறுத்து கின்றார்:

முதுவாய் இரவல (40)

பெருமகன் (122) புரவலனாகிய (125) நல்லியக்கோடனை நயந்த கொள்கையோடே (126) முன்னாட் சென்றனமாக, இந்நாள் (129)

அழிபசி வருத்தம் வீட (140) யானையோடே தேரெய்தி (142) யாம் அவணின்றும் வருகின்றோம்; இனி நீயிரும் (143)

மூவேந்தரிடத்துச் செல்குவிராயின் (145) வஞ்சியும் வறிது; அதுவன்றி (50); மதுரையும் வறிது; அதுவன்றி (67) உறந்தையும் வறிது; அதுவன்றி (83) எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம் (113) ஒருதான் தாங்கிய (115) குறிஞ்சிக் கோமானாகிய (267) நல்லியக் கோடனை நயந்தனிர் செலின் (269) வழியிற் பெறுமவற்றை யாம் கூறக் கேண்மின்: பட்டினம் படரின் (153) வயின் வயின் பெறுகுவீர் (163); அதன் பின்னர் வேலூர் எய்தின் (173) அமைவரப் பெறுகுவீர் (177); அதன் பின்னர் அவன் ஆமூர் எய்தின் (188) கலவையொடு பெறுகுவீர் (195); அவற்றைப் பெற்ற பின், அவன் மூதூர் (201) சேய்த்துமன்று; சிறிது நணியதுவேயாயிருக்கும் (202); ஆண்டுச் சென்று முன்னர் அவன் கடைவாயிலைக் குறுகிப் (206) பின் அறிந்தோர் ஏத்த (209) வயவர் ஏத்த (212) அரிவையர் ஏத்தப் (215) பரிசிலர் ஏத்த (218) இருந்தோனை அணுகிப் (220)

பாடுதுறை முற்றுதற்கு (228) இன்னியத்தைப் (229) பண்ணிக் (230) கையினை என்றும் (231) மார்பினை என்றும் (232)

கோலினை என்றும் (233) வேலினை என்றும் (234) நீ சில மொழியா அளவை (235) அவன் (261)

நீ விரும்புவன பேணி (244)

உடீஇ (236)

நல்கி (237)

அடிசிலைக் (241) கலத்தே யிட்டுத் (244) தான் நின்று ஊட்டி (245) நிதியத்தோடே (249) பாகரோடே (258) வலவனோடே பாண்டிலையும் (260) பரிசிலையும் (261) தரீஇ (260) அன்றே விடுக்கும் (261)

என வினை முடிவு செய்து காட்டும் போது நூலைப் பற்றிய முழுமைக் காட்சி நமக்குக் கிடைக்கிறது. இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் எவ்வாறெல்லாம் பாட நினைத்துப் பாட்டுப் பொருளை அமைத்துள்ளார் என்பதை மேல்வரிச் சட்டகமாக (Skeleton) உணர இம்முறை உதவுகிறது. நச்சினார்க்கினியரின் கொண்டு கூட்டுதல் சற்றுக் கூடுதலாக இருக்கலாம். இரண்டொன்றைச் சிறிது மாற்றி முடிவு காட்ட நேரலாம். எனினும் பாட்டு முழுவதும் எங்கே தொடங்கி, எங்கெங்கு எச்சம் பெற்றுத் தொடர்ந்து, எங்கே பயனிலை கொண்டு முடிகிற தென்பதை உணர இது வழி செய்கிறது.

இங்ஙனம் உரையாசிரியர்கள் பாட்டுக்கட்டமைப்பையும் யாப்பமைப்பையும் காட்டுமிடங்கள் பலவாகும்.

4

# உவமையும் நயமும்

உவமை என்பது பொருள் புலப்பாட்டிற்கு உதவுவது என உரை யாசிரியர்கள் விளக்கம் தந்துள்ளனர். அதனால் அவர்களே தம் கருத்தைப் புலப்படுத்துவதற்கு உவமைகளைப் பொருத்தமுறப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் இங்ஙனம் உவமைகளை ஆளுமிடங் களை உற்று நோக்கினால், அவை அடிப்படை ஆராய்ச்சி நெறிமுறை களுக்கு ஏற்புடையவையாயுள்ளன என அறியலாம். உற்று நோக்குதல், உய்த்துணர்தல், ஒப்பிடுதல் என்ற நெறிகளின் பண்புகள் இவ்வுவமை களில் படிந்திருப்பதைக் கற்றறிதல் வேண்டும். வெறுமனே நம் உரை யாசிரியர்கள் உவமைகளைப் பயன்படுத்தியுள்ளனர் எனக் கூறின் போதாது.

நயம் காணுதல் என்பது மேற்போக்காகவே இதுகாறும் எண்ணப் பட்டு வருகிறது. இலக்கிய உரையாசிரியர்கள் இலக்கியத்திலுள்ள சொல் லாட்சிகள், அடைமொழிகள், தொடர்கள், அணிகள் போன்றவற்றிற்குக் காரணம் கண்டு, அவை இலக்கியத்தை அழகுபடுத்துவதை எடுத்துக் காட்டுகின்றனர் என்பது இதுகாறும் கூறப்பட்டு வரும் செய்தியாகும். எனவே இதனை வெறும் நயம் பாராட்டல் (appreciative criticism) என்றே பலரும் கருதி விடுகின்றனர். இந் நயங் காண் பகுதிகளில் 1. பொருட் சார்புடையவை, 2. அமைப்புச் சார்புடையவை, 3. அணிச் சார்புடையவை என மூன்றாகப் பகுத்துக் காண வாய்ப்புள்ளது.

தமிழில் 'நோக்கு' என்பதோர் உத்தி உளது. செய்யுளின் ஒவ்வோர் உறுப்பும் காரணம் கருதியே அமைக்கப்படுகின்றது என்பதை அது வலியுறுத்தும். அதனைத் திரும்ப எடுத்துப் பார்த்து, 'ஓ இது பொருத்த முடையதே' என ஏற்பதையே இஃதுணர்த்துகிறது. அங்கு நயம்

காணுதல் மட்டுமே கருத்தன்று. ஆயின் அப்பாடல்களில் உள்ள குறைகளை ஏன் சுட்டிக் காட்டிற்றிலர் என்பது பெரும் வினாவாக முன்னிற்கின்றது.

அரங்கேற்றம் பற்றியும் அப்போது புலவர்கள் எத்தனை கேள்வி கேட்பர் என்பது பற்றியும் தமிழில் கதைகள் பல வழங்குகின்றன. திருவள்ளுவருக்கே முதலில் சங்கப் பலகையில் இடமில்லை என்றனராம். ஔவையார் பரிந்துரை செய்ய, திருக்குறள் ஏட்டினைப் பொற்றாமரைக் குளத்தில் போட, அது மிதந்து பொற்றாமரை மீது சென்று அமர்ந்ததாம். அதன் பிறகே வள்ளுவர் நூல் தெள்ளிதின் ஏற்கப்பட்டது என்பர். இறையனாரின் குறுந்தொகைப் பாடல் 'கொங்குதேர் வாழ்க்கை' எனத் தொடங்குவது, சங்கப் பேரவையில் குற்றமுடையதென விவாதிக்கப்பட்டதாக வழங்கும் கதை உலகறிந்தது. தொல்காப்பியம் அரங்கேற்றப் படும்பொழுது, பாண்டியன் அவையில் அதங்கோட்டாசாற்கு 'அரில்தபத் தெரிந்து' குற்றமற்றது என நிறுவப்பட்ட பிறகே உலகம் ஏற்றது. இடைக் காலத்தும் கம்பர் தம் நூலை அரங்கேற்ற அரும்பாடுபட்டனர் என்பர். சடையப்ப வள்ளலை நூறுபாட்டிற்கு ஒரு முறை புகழ்ந்திருந்ததால் 'நர துதி' மிகுதி என ஏற்க மறுத்தனராம்; ஆயிரம் பாட்டிற்கு ஓர் இடம் என மாற்றிய பிறகே ஒப்பினராம். புகழேந்திப் புலவர் நளவெண்பாவை அரங்கேற்றிய பொழுது, 'மல்லிகையே வெண் சங்கா வண்டூத' என்ற பாடல் படிக்கப்பட்டபோது, புலவர்கள் இடைமறித்து, "அஃது எவ்வாறு? மல்லிகை மொட்டு செடியிலிருக்கும் போது, சங்கு தலைகீழாக இருப்பது போலவுளதன்றோ? அந்நிலையில் வண்டு எப்படி வாய் வைத்து ஊத முடியும்?" என்று வினவினராம். ஒரு கணம் திகைத்த புகழேந்திப் புலவர், "வண்டு தேனுண்ட மது மயக்கத்தில் இருக்கிறது; எது முன்புறம், எது பின்புறம் எனத் தெரியாமல் மாலைநேர மயக்கத்தில் ஊதுகிறது" என நகைச்சுவையோடு சமாதானம் கூற, மறுக்கமாட்டாத சபை அதனை ஏற்றதாகவும் ஒரு கதை உளது. இவை போல் வழங்குவனவற்றை எண்ணிப் பார்த்தால் உண்மை புலப்படும்.

நமக்குக் கிடைத்துள்ள இலக்கியம் எல்லாம் இங்ஙனம் தேர்ந்தெடுத்த இலக்கியம். கால வெள்ளத்தால் மறைந்தவை போக எஞ்சிய இலக்கியம். எனவே இவற்றின் நற்றிறன்களையும் பயன்பாட்டையும் எடுத்தோதுவதே உரையாசிரியர்கட்கு இயல்பாகப் போயிற்று. அவற்றையும் மேலோட்டமாகப் படித்துவிட்டு நலங் காண்பன எனக் கருதி விட்டு விடாமல், திறங்காண்பன எனக் கொண்டு, அத்திறன்களை நுனித்தறிய

முயல வேண்டும். அதற்கான வழிவகை ஒரு சிறிது இங்குக் கோடிட்டுக் காட்டப்படுகிறது.

**உவமைகள்**

இறையனார் அகப்பொருள் முதல் நூற்பாவில் 'ஐந்திணைக் களவு' என்ற சொல்லாட்சி வருகின்றது. இதனை உரையாசிரியர் 'ஐந்திணையுள் களவு' என ஏழாம் வேற்றுமையாக விரிக்கிறார். உடனே ஓர் ஐயம் வருகின்றது. குடத்துள் விளக்கு என்றால் குடம் வேறு விளக்கு வேறாவது போல் ஐந்திணை வேறு களவு வேறு என்று ஆதல் கூடுமே என மாணாக்கன் வினா எழுப்புகின்றான். 'அரங்கினுள் அகழ்ந்தான்' என்றால், அரங்கும் அகழ்கின்ற இடமும் ஒன்றேயன்றோ? இங்கு அது போலக் கொள்ள வேண்டும் என்று உரையாசான் விடை பகர்கின்றார். அப்பகுதி வருமாறு: "ஐந்திணையுள் களவு என்பதாயின், ஐந்திணையுள்ளும் களவு வேறாகாதோ. குடத்துள் விளக்கும் தடற்றுள் வாளும் அவ்விடத்தின் வேறாயது போல எனின், ஏழாம் வேற்றுமை இடத்தையும் இடத்து நிகழ் பொருளையும் வேறு உணரவும் நிற்கும், வேறன்றி உணரவும் நிற்கும்; அவற்றுள் வேறு உணர நின்ற வழிக் காட்டிக் கடாவினாய்; வேறன்றி உணர நின்ற வழிக் காட்டியக்கால் அது போலக் கொள்க. அரங்கினுள் அகழ்ந்தான், மாடத்தினுள் அகழ்ந்தான் என்றது போல, ஐந்திணையுள்ளும் களவு வேறன்று என்பது." இவ் வுதாரண உவமைகள் மிகவும் பொருத்தமுடையனவாயிருக்க வேண்டும். சிறிது மாறினும் பிழைபட்டுவிடும். கொண்ட கருத்தை விளக்குவதற்கும் வலியுறுத்துவதற்கும் பயன்பட வேண்டும். உற்று நோக்கி, உண்மையை நன்கு உய்த்துணர்ந்து பிறகு ஒப்பிடப்படுவதால் இவை ஆய்வு நெறி முறையினவாய் - ஒருவகை அணுகுமுறையாய் அமைவது புலப்படும்.

காதலனும் காதலியும் முன்பின் அறியாதாராயிருந்தும் ஊழ்வினை வயத்தால் ஒருவரை ஒருவர் காணுதல் நிமித்தமாய்த் தனியராகின்றனர். எதிர்பாராமல் இருவரும் தனியராய் எதிர்ப்படுகின்றனர். எப்பொழுதும் தோழரோடு இருக்கும் அவனும் தோழியரோடு 'பன்மீண் நாப்பண் பான்மதி போல' இருக்கும் அவளும் எவ்வாறு தமியராயினர்? எங்ஙனம் எதிர்ப்பட்டனர்? எவ்வாறு மனங் கலந்தனர்? முன்பே 'அமைந்து' கிடந்தமையால் இது நிகழ்ந்தது என்பது உரையாசிரியர் கருத்து.

*யாயும் ஞாயும் யாரா கியரோ?*
*எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?*

*யானும் நீயும் எவ்வழி அறிதும்?*

*(குறு.)*

மனங்கலந்த தலைமகன் ஒருவனின் மனமுவந்த கேள்வி. இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்துக்கொண்டதை இறையனாரகப் பொருளுரையாசிரியர், "அஃதியாங்ஙனமோ எனின், வடகடலிட்ட ஒரு நுகம் ஒரு துளை, தென்கடலிட்ட ஒருகழிசென்று கோத்தாற் போலவும், வெங்கதிர்க் கனலியும் தண்கதிர் மதியமும் தம் கதிவழுவித் தலைப் பெய்தாற்போலவும் தலைப்பெய்து, ஒருவர் ஒருவரைக் காண்டல் நிமித்தமாகத் தமியர் ஆவர்" என உவமை காட்டி விளக்குகின்றனர். 'வடகடலிட்ட' எனத் தொடங்கும் உவமை பிற்காலத்தே பலராலும் எடுத்தாளப்பட்டது. வேட்கை அவ்விருவரையும் கூட்டுவிப்பது பற்றி விளக்கும்போது, "அவ்வின்றியமையாது நின்ற வேட்கை எல்லா உணர் வினையும் நீக்கித் தானேயாய், நாண்வழிக் காசுபோலவும் நீர்வழி மிதவை போலவும் பான்மைவழி ஓடி இருவரையும் புணர்விக்கும் என்பது," என உவமைகள் காட்டுவார் அவர்.

**உய்த்துணர்தல்**

தலைமகனும் தலைமகளும் கண்டபின் தம்மைஇழப்பரா? அவர் தம்மை இழத்தற்குக் 'காட்சி' காரணமா? தம்மை இழந்து ஒருவரை ஒருவர் அடைதற்குரிய திரு முன்பே அமைந்து கிடந்ததா? அல்லது காட்சியின்பின் ஏற்பட்டதா?

காண்டலும் தம்மை இழத்தலும் ஒருங்கே நிகழுமா? முன்பின்னாக நிகழுமா? இக் கேள்விகள் அனைத்திற்கும் விடை கூறுமுகத்தான் பல உவமைகள் காட்டித் தருக்கநூன் முறையில் விவாதிக்கப்படுதலை இறையனார் அகப்பொருள் உரையில் காணலாம். உவமை காட்டும் நெறி ஆராய்ச்சிநெறி என்னும் கருத்து இதனான் மேலும் வலிவுறும். அப் பகுதி முழுமையும் வருமாறு:

"இனிக் காட்சியும் தம் உணர்வினர் அல்லராகலும் உடன் நிகழுமே எனின், காட்சி என்னும் காரணத்தால் தம் உணர்வினர் அல்லராதல் தன்மை நிகழற்பாற்றன்று. ஒரு காலத்து ஓரிடத்து ஒருங்கு தோற்றின பொருள் ஒன்றனை ஒன்று முடித்தன எனப்படாமை கொண்டும் ஆவிற்கு இரு கோடு போல என்பது. அதனால் மூன்று அல்லது நான்காவது காலம் இல்லை. இன்மையின் அவர் காட்சியானே தம் உணர்வினர் அல்லர் என்பது முடிக்கல் வேண்டும். எங்ஙனம் முடிக்கு

மாறு எனின் காணா முன்னே தம் உணர்வினர் அல்லராகற்றன்மை உடையர் ஆகலின் என்பது, என்னை? ஏனாதி மோதிரம் செறித்தல் திருவுடையான் ஒருவன், ஏனாதிமோதிரம் செறிக்கும் அத்திரு அவன் செறிக்கின்ற பொழுதே உண்டாயிற்றன்று; முதற்கொண்டு அமைந்து கிடந்தது. அரசு வீற்றிருந்த திருவுடையான் ஒருவன் அரசு வீற்றிருக்கும் அத்திரு அரசு வீற்றிருக்கின்ற பொழுதே உண்டாயிற்றன்று; முற்கொண்டு அமைந்துகிடந்தது. அது பின்னே ஒருகாலத்து ஓரிடத்து ஒரு காரணத்தான் எய்துவிக்கும். அதுபோல இன்னநாள் இன்ன பக்குவத்து இன்ன பொழுது இன்ன இடத்து இவள் காரணமாக இவன் தன் உணர்வினன் அல்லனாம் என்பதூஉம் இவன் காரணமாக இவள் தன் உணர்வினள் அல்லளாம் என்பதூஉம் முன்னே முடிந்து கிடந்தன. அது பின்னும் கொணர்ந்து எய்துவிக்கும். என்னை? 'ஒளிப்பினும் ஊழ்வினை ஊட்டாது கழியாது என்பதாகலான்."

தனிநிலையாய்வுபோல (case study) ஏனாதிமோதிரம் பெறல், அரசபதவி பெறல்போன்றவற்றை உவமைகூறி, முன்னரே திருவமைந்து கிடந்தார்க்கே இது வாய்க்கும் என்பது நிறுவப்படுகிறது. ஆவிற்கு இரு கோடு போலக் காட்சி வேறு, தம்மை இழத்தல் வேறு என வேறுபடுத்திக் காட்டுவது காட்சி அளவையான் நிறுவுதல் போலவுளது. அங்ஙனம் ஆயின் இதில் 'காட்சி'யின் பயன்தான் யாது? விவாதம் தொடர்கிறது:

"காட்சி துணைக்காரணம் அவ்வினை பயத்தற்கு; வித்து முளைத்தற்கு நிலனும் நீரும் இருதுவும் துணைக்காரணம் ஆயிற்றுப் போலவும், சோறாதல் இயல்பிற்றாகிய அரிசி சோறாதற்கு அடுவானைத் தொடக்கமாகவுடைய காரணம் துணைக்காரணம் ஆயிற்றுப்போலவும் என்பது. அஃதேயெனில் காட்சி துணைக் காரணம் பிற எனின், காட்சியின் முன் கிளர்ந்ததோ? உள்ளத்துத் தான் கிளர்கின்றது எனின் முன்னைக் கடா வந்து எய்துமால் என்னையோ எனின், காட்சியோடு உடனே கிளரும்; என்னை இருட்டகத்து விளக்குக்கொண்டு புக்கால் விளக்கு வாராத முன்னரும் இருள் நீங்காது; விளக்கு வந்த பின்னரும் இருள் நீங்காது; விளக்கு வருதலும் இருள் நீக்கமும் உடனே நிகழும். அது போல, காட்சியும் ஞானஒழுக்கக் குணங்களது தன்மையழிவும் உடனே நிகழும். விளக்கினைக் காட்சியாகக்கொண்டு, ஞான ஒழுக்கங்களை இருளாகக் கொள்க."

இவ்வாறு உரையாசிரியர்கள் உவமைகளைக் காட்சி, கருதல், ஆகமம் அனைய தருக்கமுறைகட்குப் பயன்படுத்திக்கொண்டமை ஆழச்

சிந்தித்தற்குரியதாகும். உவமை காட்டுதலும் ஓர் அளவையே - தருக்க முறையே - என்பது இவ்விரிந்த உவமையால் விளங்கும்.

குற்றியலிகரமும் குற்றிலுகரமும் குறுகினவிடத்தும் உயிரேயாகும் என்று சொல்ல வந்த இளம்பூரணர், "சந்தனக்கோல் குறுகினவிடத்துப் பிரப்பங் கோலாகாது. அதுபோல இகர உகரங்கள் குறுகினவிடத்தும் அவை உயிர் ஆகற்பாலன" என்றார் (தொல். எழுத்து. 2). இதுபோன்ற சில உவமைகள் பின்வந்த உரையாசிரியர்களால் வழிவழியாக எடுத்தாளப்பட்டு மரபுவமைகள் ஆயின. நச்சினார்க்கினியர் இவ் வுவமையை அவ்வாறே பயன்படுத்திக் கொண்டார்.

க என்ற உயிர்மெய் பிரித்தால் க்+அ என மெய் முன்னும் உயிர் பின்னுமாக வரும் (தொ. 18). இதை விளக்கவந்த இளம்பூரணர், "மெய்யும் உயிரும் முன்னும் பின்னும் பெறநிற்கும் என்றமையால் அக்கூட்டம் பாலும் நீரும்போல உடன்கலந்ததன்றி விரல்நுனிகள் தலைப்பெய்தாற் போல வேறுநின்று கலந்தனவல்ல என்பது பெறுதும்" என உவமை காட்டினார்.

ஈற்றில் நின்று பாலுணர்த்தும் விகுதிகள் பதினொன்று. அவை எழுத்தாய் மட்டும் எண்ணப் பட்டால் ஆறாய் அடங்கும். ன், ள், ர், ப், மார், து, று, டு, அ, ஆ, வ என்பன அவை. மார் ஈற்றை ரகர ஈறு எனலாம். ப, வ என்பன அ வில் அடங்கும். "என்னை? பளிங்கு செம் பஞ்சி அடுத்தால் செம்பளிங்கு எனப்படும்; கரும்பஞ்சி அடுத்தால் கரும் பளிங்கு எனப்படும். அது போலச் சார்ந்து வந்தவற்றது வேற்றுமை பற்றி வேறுபெயர் கொள்ளப்பட்டது என்பது", எனவரும் இளம்பூரணம் இதற்கான காரணத்தைத் தெளிவுபடுத்துகிறது.

கடுகடுத்தது, குறுகுறுத்தது என வரும் இரட்டைக்கிளவிகளை விளக்கவந்த சேனாவரையர் "ஈண்டு இரட்டைக்கிளவி என்றது மக்க ளிரட்டை விலங்கிரட்டை போல வேற்றுமையுடையனவற்றையன்றி இலை யிரட்டையும் பூவிரட்டையும்போல ஒற்றுமையும் வேற்றுமையுமுடையன வற்றை என்றுணர்க'' எனப் பொருந்திய விளக்கம் தருகின்றார். நச்சினார்க்கினியர் பிற்காலத்தே இதே உவமையைப் பயன்படுத்திக் கொண்டார்.

சுவை என்பது சுவைப்போனும் சுவைக்கப்படுபொருளும் இணையும்போது ஏற்படுவது, இதை விளக்க வந்த பேராசிரியர் "வேம் பென்னும் பொருளும் நாவென்னும் பொறியும் தலைப்பெய்த

வழியல்லது கைப்புச் சுவை பிறவாததுபோல, அப்பொருள் கண்ட வழியல்லது நகையும் அச்சமும் தோன்றா" என்றார் (மெய்ப். 1). தொடை பற்றி விளக்க வந்த பேராசிரியர் (செய். 406) "தொடை என்பன பூத் தொடைபோலச் செய்யுட்குப் பொலிவு செய்ய வேண்டும்" என்றார்; மேலும் செந்தொடையும் செய்யுட் பொலிவு செய்யுங்கால் கொன்றையும் கடம்பும்போல நின்றவாறே நின்று தொடைப்பொலிவு செய்யுமென்பதாம்" என்று விளக்கினார். எவ்விதமான தொடைநலனும் இன்றி வருவதே செந்தொடையாம். கொன்றையும் கடம்பும் சரம்சரமாய் மாலை போலப் பூக்கும். பிற பூக்களை எடுத்துக் கோத்துச் சரம் ஆக்குதல் வேண்டும். அதுவே பூத்தொடை. இயல்பாகத் தொடை எதுவுமின்றிக் கருத்தைத் தொடுப்பதை கொன்றை, கடம்பு சரமாய்ப் பூப்பதுபோல் அமைவதெனக் காட்டிய உவமை மிகவும் செவ்வியதாகும்.

உயிரளபெடைகள் எங்ஙனம் பிறக்கின்றன? நெடிலும் குறிலும் கலந்து நீட்டித்து ஒலித்த வழிப் பிறக்கின்றன; இவை கூட்டிச் சொல்லிய வழியே புலப்படும். இவ்வாறு விளக்க நச்சினார்க்கினியர் உவமை களைப் பயன்படுத்திக் கொள்கின்றார். "கோட்டு நூறும் மஞ்சளும் கூடிய வழிப் பிறந்த செவ்வண்ணம் போல நெடிலும் குறிலும் கூடிய கூட்டத்துப் பிறந்த பின்னர் பிளவு படா ஓசையை அளபெடை என்று ஆசிரியர் வேண்டினார். இவை கூட்டிச் சொல்லிய காலத்தல்லது புலப்படா. எள்ளாட்டிய வழியல்லது எண்ணெய் புலப்படாவாறு போல என்றுணர்க", என்று தமது கருத்தை நிறுவுவதற்கேற்ற உவமைகளைச் சேர்த்தெழுதுகின்றார்.

*அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
*பகவன் முதற்றே உலகு.*

*(குறள்)*

இம் முதற்குறள் உவமையை நச்சினார்க்கினியரும் நன்கு விளக்குகின்றார். 'இறைவன் ஒன்றேயாய் நிற்கும் தன்மையும் பல்லு யிர்க்கும் தானேயாய் அவற்றின் அளவாய் நிற்கும் தன்மையும் போல" என விளக்கி அதனை அகரத்திற்கு ஏற்றிக் காட்டுகின்றார். "அவ்வகரம் தனியே நிற்றலானும் பல மெய்க்கண் நின்று அவ்வம் மெய்கட்கு இசைந்த ஓசைகளைப் பயந்தே நிற்றலானும் வேறுபட்டதாகலின் ஒன்றே யாயும் பலவேயாயும் நிற்பதோர் தன்மையை உடைத்தென்று கோடும்."

உயிர்கள் மெய்களோடு கூடிய வழியும் ஒரு மாத்திரையும் இரண்டு மாத்திரையுமே பெறும்; தம் அளவிற் கூடாது என்பதை "நீர் தனித்து அளந்துழியும் நாழியாய் அரைநாழியுப்பிற் கலந்துழியும் கூடி ஒன்றரை நாழியாய் மிகாதவாறு போல்வதோர் பொருட்பெற்றி என்று கொள்வதல்லது காரணம் கூறலாகாமை உணர்க", என இனியர் விளக்குவர் (எழுத்து 10). இதுவும் மரபுவமையாய்ப் பலராலும் எடுத்தாளப்பட்ட ஒன்றேயாம். குற்றியலுகரம் மொழியின் இறுதியில் 'நிலத்தது அகலம் போல' சொல்லோடு சேர்ந்தே நிற்கும் என்பார் அவர் (மொழி மரபு. 36). அண்ணத்தை அணைந்து உரலாணியிட்டாற் போல யகாரம் பிறக்கும் என்பர் இனியர். உரலின் துளையை மறைக்க இடும் மரமே ஆணி எனப்படும். அதனைச் செறிவாக இடுவது பற்றி இவ்வாறு கூறுகின்றார்.

இலக்கணக் குறிப்புகளை விளக்க உவமை பயன்படுவது போல, இலக்கியக் கோட்பாடுகளை விளக்கவும் உவமை பயன்படுகிறது. 'அகத்திணை ஏழு என்பது போலப் புறத்திணையும் ஏழேயாகும்; புறத்திணை பனிரண்டு எனல் பொருந்தாது', என்பதை விளக்க வந்த நச்சினார்க்கினியர். "ஒழிந்தோர் பன்னிரண்டென்றாராதலின் புறத்திணை ஏழென்றது என்னையெனின், அகங்கை இரண்டுடையார்க்குப் புறங்கை நான்காகாது இரண்டாயவாறு போல அகத்திணை ஏழற்குப் புறத்திணை ஏழென்றலே பொருத்தமுடைத்தாயிற்று" என்று உவமை கூறி அதனை நிறுவும் திறம் காண்க. அது போல, அகப்பொருள் "இல்லதெனப் படாது உலகியலேயாம். உலகியலின்றேல் ஆகாயப்பூ நாறிற்று என்றுழி அது. சூடக் கருதுவாருமின்றி மயங்கக் கூறினான் என்று உலகம் இழித்திடப் படுதலின் இதுவும் இழித்திடப்படும்" என அதன் திறமுணர்த்தற்கும் ஒப்புமையுடைய ஒன்றையே இனியர் எடுத்துக்காட்டக் காண்கின்றோம்.

இக்காலத்தே ஆராய்ச்சி நெறிமுறை என்பது கொள்கை வரையறையும் ஏற்றிப் பார்த்தலும் அணுகுமுறைகளும் பொருளாய்வும் கள ஆய்வும் சான்று மூலத்தொகுப்பும் வினாநிரலும் பேட்டிகாணலும் என இவ்வாறு வளர்ந்துள்ளது. இத்தகைய நெறிமுறைகள் வளராத அக்காலத்தே, ஆய்வாளர்கட்கு உவமை ஓரளவு, பல நிலைகளில், கொண்ட கருத்தை நிறுவுவதற்குக் கைகொடுத்து உதவியிருக்கிறதென்று அறிகின்றோம்.

**நயம் காணுதல்**

சில ஆண்டுகளுக்கு முன்புவரை இளங்கலை வகுப்புகளில் செய்யுட் பொருள் திரட்டுதல் என்றும் செய்யுள் நயம் பாராட்டுதல்

என்றும் சில பகுதிகள் இடம்பெற்று வந்தன; இன்றும் பள்ளி வகுப்புக் களில் இது காணப்படுகிறது. ஒரு செய்யுளைக் கொடுத்து 'நலம் பாராட்டுக' என்றால், அழகாயிருக்கிறது, சொல்லாட்சி சிறப்பாகவுளது, அணிநலன் அற்புதமாக இருக்கிறது, இயற்கைப் புனைவு ஈடற்று விளங்குகிறது என இவ்வாறு பாராட்டு வாசகங்கள் அளவின்றிப் பயன் படுத்தப்பட்டன. முன்பு, நம் உரையாசிரியர்களும் சொற்பொழிவாளர் களும் இவ்வாறுதான் பாராட்டிக் கொண்டிருந்தனர் என ஒரு நினைவு அனைவருக்கும். உண்மையிலேயே நம் உரையாசிரியர்கள் கண்ணை மூடிக்கொண்டு நலம் பாராட்டினரா என்றால், அதுதான் இல்லை. ஊன்றிக் கல்லாதவர்களால் வந்த விளைவு இது.

உரையாசிரியர்கள் நயங்கண்டு கூறினரே தவிரக் குறை கண்டு கூறவில்லையே என்று கேட்கலாம். தொல்காப்பியர் சொல்லாது விடுத்த வற்றையோ, அவர் காலத்திலிருந்து பிறகு வழக்கிறந்தவற்றையோ பற்றிக் கூறுமிடத்து, 'இதற்கு வழக்கு இறந்தது' என்றோ, 'தொல்காப்பியர் காலத்து இவற்றிக்குக் காட்டுகள் இருந்தன போலும்' என்றோ கூறுவரே தவிர, தொல்காப்பியர் மீது தவறு காணமாட்டார்கள்.

நண்டு நான்கறிவுடைய உயிர் என்பது தொல்காப்பியம் (மரபு. 586). செவியுணர்வு ஒன்றே இல்லை என்பர். நண்டிற்கு முகர்தலாகிய மூக்குணர்வு உண்டோ என்ற ஐயம் பேராசிரியருக்கு ஏற்படுகிறது. அவ்வுணர்வு நண்டிற்கு இல்லையென்றே அவர் கருதுகின்றார். ஆயினும் "நண்டிற்கு மூக்குண்டோ எனின் அஃது ஆசிரியன் கூறலான் உண்டென்பது பெற்றாம்" என்று நூலாசிரியனுக்கு உரிய மதிப்புக் கொடுத்து அவர் எழுதுகின்றார். மயிலுக்குச் 'சேவல்' என்று ஆண்பாற் பெயர் கூறக் கூடாது என்பது தொல்காப்பியம். ஆனால் முருகனின் ஊர்தியாகிய மயில் ஆண்பாலதாகலின், அதனைச் சேவல் எனக் கூறலும் காணப்படுகின்றது. இதனைப் பற்றி ஆராயும் பேராசிரியர், "மாயிரும் தூவி மயில என்றதனான் அவை தோகையுடையவாகிப் பெண்பால் போலும் சாயலவாகலான் ஆண்பால் தன்மை இலவென்பது கொள்க; எனவே செவ்வேள் ஊர்ந்த மயிற்காயின் அதுவும் நேரவும் படும் என்பது" என்று பத்திமை உணர்வோடு பகர்கின்றார். இங்ஙன மெல்லாம் நூலாசிரியனுக்கு மதிப்பும் பத்தியும் உடையராய் விளங்கி னாலும் உரையாசிரியர்கள் வெறும் பாராட்டுரைகளைக் கண்ணை மூடிக் கொண்டு அடுக்கினார்கள் அல்லர். அவர்கள் நயம் காணும் திறம்

செவ்விய பண்புகளைத் தேடிக் காணும் ஒருவகைத் திறனாய்வேயாகும். அதில்

1. மேலும் மேலும் விளக்கம் தரும் முயற்சி
2. காரண காரியம் காட்டுதல்
3. சொல்லாட்சித் திறன் (Diction) உணர்த்தல்
4. குறிப்புப் பொருள் (Suggestion) வெளிப்படுத்தல்
5. நுட்பத்திறன் விளக்குதல்
6. இலக்கிய அனுபவ உணர்வை விளைவித்தல்

என்று ஆறு கூறுகள் அமையக் காணலாம். இவ்வளவும் அமைந்த ஒன்றை 'நயம் பாராட்டுதல்' என்றே கூறி ஒழிவதெவ்வாறு? 'அறம் பெருக அல்லவை தேயும்' என்பது போல, இத்தகு திறன்கள் எத்துணை அளவு எடுத்துக் காட்டப்படுகின்றனவோ, அத்துணை அளவு அவை சிறந்த பாடல்கள் என்றும் அவை குறையக் குறையப் பாடலின் தரமும் அந்த அளவு குறையுடையதே எனவும் இவ்வாறு எதுவும் எடுத்துரைக்க வியலாதவை கவிதைத் தன்மை அற்றவை என்றும் கொள்ள வேண்டும். உடன்பாட்டைச் சொல்வதன் மூலம் எதிர்மறையை உணர வைப்பதே தமிழ் நூல் மரபு.

சிலப்பதிகாரம் மங்கல வாழ்த்துப் பாடலில் கண்ணகி முதலிலும் கோவலன் பிறகும் அறிமுகப்படுத்தப் படுகின்றனர்.

*மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்*
*காதலாள் பெயர்மன்னும் கண்ணகி என்பாள் மன்னோ*

என்று அவளும்;

***கண்டேத்தும் செவ்வேள் என்று இசைபோக்கிக் காதலான்***
***கொண்டேத்தும் கிழமையான் கோவலன் என்பான் மன்னோ***
***(28-29, 38-39)***

என்று அவனும் அறிமுகப்படுத்தப்படுகின்றனர். இங்கு அரும்பதவுரை யாசிரியர் "இவளை முன் கூறிற்று கதைக்கு நாயகியாதலின்", என்றும் அடியார்க்கு நல்லார், "கண்ணகியை முற் கூறினார் பத்தினியை ஏத்துதல் உட்கோளாகலான்" என்றும் குறிப்பிடுகின்றனர். கண்ணகியை முற்கூறிய நுட்பம் இவ்வாறு புலப்படுத்தப்படுகிறது. அதற்கான

காரணமும் நன்கு எடுத்துக் காட்டப்படுகிறது. கண்ணகி காப்பியத் தலைவியாகலாம் என்பது புதிய செய்தி. இவ்வுரையாசிரியர்கள் காலம் தொட்டும் அதற்குச் சற்று முன்பிருந்தும் பெருங்காப்பிய இலக்கணம் பேசும் போது 'தன்னிகரில்லாத் தலைவனை' உடைமையே கருதப்பட்டது. இந்நிலையில் இளங்கோவடிகட்கே எவ்வுணர்வு இருந்ததெனத் தாமுணர்ந்து நமக்கு உணர்த்தியது போற்றத்தக்கதன்றோ? கண்ணகிக்கும் கோவலனுக்கும்,

*மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணகத்து*
*நீலவிதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்த்*

*(48-49)*

திருமணம் நடக்கின்றது. இங்குச் சிறப்புரை கூறவந்த அடியார்க்கு நல்லார் "நீல விதானம் கூறினார் முத்து ஒளி பெறுதல் நோக்கி; அஃது அக் காலத்து முத்து நோக்குவார் ஒப்புக்கு விரித்து நோக்குப" என்று குறிப்பிடுகின்றார். முத்துக்களை ஒப்பு நோக்கும்போது நீலநிறத் துணியை விரித்து அதில் அம்முத்துக்களைப் பரப்பிப் பார்வையிடும் பழக்கத்தை அவர் நினைவூட்டுவதால், நமக்கு மேலும் விளக்கம் கிடைக்கிறது. கண்ணகியுடன் நிலாமுற்றத்தில் இருந்த கோவலன், அவளைப் பலவாறு நலம் பாராட்டத் தொடங்குகின்றான். இங்கு 'கோவலன் கூறும் ஓர் குறியாக் கட்டுரை' (மனை. 37) என்று இளங்கோ வடிகள் குறிப்பிடுகின்றார். இதற்கு அடியார்க்கு நல்லார் 'தனது அறிவு முதலியனவற்றைக் குறியாத நலம் பாராட்டல் என்னும் பொருள் பொதிந்த உரையைக் கூறும்' என்றும் 'முன் கருதப்படாத கட்டுரை எனினும் பொருந்தும்' என்றும் பொருள் தருகின்றார். ஒரு காதலன் தன் காதலியைத் தனியே பாராட்டுவது மற்றவர் கேட்டால் சிரிப்பாக இருக்கும். மேலும் ஒரு காதலன் தன் காதலியை முன்பே இவ்வாறு பாராட்ட வேண்டும் என்று திட்டமிட்டுக் கொண்டு பாராட்ட முற்படுவதில்லை. 'குறியா' என்ற சொல் கருதாத, குறியாத என்று இருபொருளும்படும். எனவே, இங்கு அச் சொல்லாட்சியின் நுட்பத்தை வெளிக் கொணர் கின்றார் உரையாசிரியர் என்றுதான் கூறவேண்டும் அந்திமாலைச் சிறப்புச்செய் காதையில்,

*அறுகாற் குறும்பு எறிந்து அரும்பு பொதி வாசம்*
*சிறுகாற் செல்வன் மறுகில் தூற்ற*

*(17-18)*

என்றும்

*இளைய ராயினும் பகையரசு கடியும்*
*செருமாண்டதென்னர் குலமுதல் ஆதலின்*
*அந்தி வானத்து வெண்பிறை தோன்றின*

*(21-22)*

என்றும் வரும்பகுதிகட்குக் காட்டப்படும் திறன்மிக்க விளக்கங்கள் கருதத்தக்கன. அறுகாலாகிய வண்டினைக் 'குறும்பு' (இடைப்புகுந்து தாக்கிக் கொள்ளையடிக்கும் சிறுசிறு நிலத்தலைவர்கள்) எனல் ஏன்? தென்றல் பூப்பித்த மலரில் வண்டு புகுந்து தேனுண்டதால் அது குறும்பென உருவகிக்கப்பட்டதாம். அரும்பத உரைகாரர் எழுதுகிறார்; "குறும்பென்றார் தென்றல் தளிர்ப்பித்தும் பூப்பித்தும் செய்யத் தான் நடுவே புகுந்து உண்டலான்", என்று.

தென்னவராம் பாண்டியர் 'சந்திர குலத்தவர்', சந்திரன் குலத்திலே வந்தவர் தென்னவர் என்றால் சந்திரனுக்குப்பெருமை! தென்னவர்க்குக் குலமுதல் சந்திரன் என்றால் தென்னவர்க்குப் பெருமை. இன்னார் மகனென்றால் தந்தைக்குப் பெருமை. இன்னார் தந்தை என்றால் மகனுக்குப் பெருமை. வெண்பிறை வழிவந்தோர் தென்னவர் ஆதலின் என்று பிறைக்குப் பெருமை கொடுத்தும் அடிகள் பேசியிருக்கலாம். இருக்கவும் ஏன் இங்ஙனம் மாற்றிக் கூறினார். இவ்வாறு ஒரு கேள்வியை எழுப்பிக்கொண்டு அதற்கு விடை பகர்கின்றார் அடியார்க்கு நல்லார்.

"சோமகுலத் தென்னர் என்னாது தென்னர்குலச் சோமன் என்றார், அவன் அணியின் ஒத்து வலியினும் தெறலினும் ஒவ்வாமையானும் குறைவும் நிறைவும் மறுவுமுடைமையானும் இவர்க்கு அவை இன்மை யானும் உயர்ச்சி நோக்கி." இவ்வாறு ஒவ்வொன்றும் காரணம் கருதியே கூறப்பட்டிருக்க வேண்டும் என்பதும் அங்ஙனம் காரணம் கருதி உணருமாறு படைக்கப்படுவனவே இலக்கியம் என்பதும் காரணம் கருதாது - திட்டமிடாது கூறுவன இலக்கியமாகாது என்பதும் தமிழ் இலக்கியக் கோட்பாடாகும். எனவே இங்ஙனம் காரணம்கண்டு கூறுவன, நயம் பாராட்டலாகாது, திறனாய்வாக அமைகின்றன என்பதே பொருத்த முடையதாம்.

திருக்குறள் உரையின் விளக்கவிரிவுரைப் பகுதியில், முன் பொழிப்புரைக்கட் கூறியனவற்றுக்கு மேலும் தெளிவு தருவன ஒரு பகுதி; திருக்குறளின் சொல்லாட்சி, நடைச்சிறப்பால் போந்த பொருள், நவில் தொறும் கிடைக்கும் நூல்நயம் போல்வனவற்றைக் காரண காரிய நடையில் எடுத்துரைப்பன பிறிதொருபகுதி.

*நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்*
*பண்புடை யாளர் தொடர்பு*

*(குறள் 783)*

என்பது ஒரு நட்புத் திருக்குறள். இதில் 'நயம்' என்ற சொல் மிக ஆழமானது. நயம் என்றால் இன்பம் என்று கொண்டு 'நயத்தினைச் செய்தலான்' என்று எழுதுவர் பரிமேலழகர். 'நூல்நயம்' என்பது – நூலின் நன்மை, அதுதரும் இன்பம். அதிற் காணப்படும் சிறப்பு (Excellence), அழகுக்கூறு (Fineness) யாவற்றையும் குறிக்கும். ஒரு பாடலைத் திரும்பப் படிக்கப் படிக்கப் புதுப்புது 'நயம்' தோன்ற வேண்டும்; தோன்றும், நயம் வேறு; நலம் வேறு. பரிமேலழகர் இதன் இன்றியமை யாமை உணர்ந்தவராதலின் குறள்தோறும் மறவாமல் 'நயம்' காட்டிச் செல்கின்றார். ஒருசிலவற்றைக் காண்போம்.

*கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே*
*எடுப்பதூஉம் எல்லாம் மழை.*

*(குறள் 15)*

கெடுப்பதுவும் கெடுத்ததனை எடுப்பதுவும் என உலகின்மேல் வைத்துக் கூறாமல் கெட்டார்க்கு என மக்கள்மேல் வைத்து ஏன் கூற வேண்டும்?

கெடுப்பதும் எடுப்பதும் மழை என்றால் போதாதோ? கெடுப்பதும் எடுப்பதும் எல்லாம் மழை என்று ஏன் கூறவேண்டும்?

இவ்வாறெல்லாம் சிந்தித்து விடைகாண்பார் போலப் பரிமேலழகர் எழுதுகின்றமை காண்க: "கேடும் ஆக்கமும் எய்துதற்குரியார் மக்களா தலின் 'கெட்டார்க்கு' என்றார்; 'எல்லாம்' என்றது அம் மக்கள் முயற்சி வேறுபாடுகளால் கெடுத்தல் எடுத்தல்கள்தாம் பலவாதல் நோக்கி."

*கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி*
*அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.*

*(குறள் 130)*

இதில் 'செவ்வி' என்ற சொல்லின் சிறப்பு யாது?

*மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்*
*பிறப்புஒழுக்கம் குன்றக் கெடும்.*

*(குறள் 134)*

'மறப்பினும்' என உம்மை ஏன்?

*நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்*
*இல்லெனினும் ஈதலே நன்று.*

*(குறள் 222)*

'எனினும்' என இருமுறையும் கூறியதன் பொருள் யாது?

இங்ஙனம் கேள்வி கேட்குமுகத்தான் அமைந்த சொல்லாட்சி களுக்கு, விடைகாணும் முறையில் அமைந்த விளக்கங்கள் குறள் போலவே பயனுடையனவாயுள்ளன.

*"செவ்வி தன்குறை கூறுதற்கேற்ற மனம்மொழிமுகங்கள் இனியனாம் காலம்"*
*"மறந்தவழி (பார்ப்பான்) இழிகுலத்தானாம் ஆகலின் மறக்கலாகாது என்னும் கருத்தான் 'மறப்பினும்' என்றார்.*
*"எனினும் என்பது இருவழியும் அங்ஙனம் கூறுவாரின்மை விளக்கி நின்றது"*

இவை குறளில் கூறப்படாததை அதன்மேல் ஏற்றி உரைத்த மிகை உரைகளல்ல. குறளின் நடைப்போக்கில் தொனிக்கும் பொருள்களே. திருக்குறளில் இங்ஙனம் இடைச்சொற்களும் ஆற்றல் மிக்க பொருளை உணர்த்துவனவாயுள்ளன. எனவே 'பயனிலாச்சொல் சொல்லற்க' என்ற குறள் நெறிக்கு ஏற்பவே இவையும் அமைந்து உள்ளன.

*தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே*
*நாவினால் சுட்ட வடு.*

*(குறள் 129)*

ஒன்றைப் புண் என்றும் மற்றதை வடு என்றும் கூறுவானேன்? புண் தானே ஆறாது - ஆறிய பிறகும் மாறாது கிடக்குமாயின் வடு எனப்படுகிறது. திருவள்ளுவர் இரண்டையும் 'சுட்டபுண்' என்றே கூறியிருக்கலாமே?

*அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்*
*கேடும் நினைக்கப் படும்.*

*(குறள் 169)*

மனக் கோட்டமாம் அழுக்காறுடையவன் ஆக்கமுடையவனாகவும் செவ்வியுடையவன் வறியவனாகவும் உலகில் காணப்படுதலுண்டன்றோ? அங்கு இவ்வாறாதற்குக் காரணம் வேறு யாதோ எனச் சிந்திக்க வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். சிந்திப்பதென்பது எவ்வாறு?

இங்ஙனமெல்லாம் எண்ணிப்பார்க்கத் தக்கனவற்றிற்கு உரைகளில் தான் விடை கிடைக்கிறது. மூலநூல்களின் ஒளி உரைக் கண்களாலே தான் துலக்கமுறுகின்றது.

"ஆறிப்போதலால் தீயினால் சுட்டதனைப் 'புண்' என்றும் ஆறாது கிடத்தலால் நாவினால் சுட்டதனை 'வடு'வென்றும் கூறினார்" என்பது பரிமேலழகர் விளக்கம்.

"ஆக்கக் கேடுகள் கோட்டமும் செம்மையும் ஏதுவாக வருதல் கூடாமையின், அறிவுடையரால் இதற்கேதுவாகிய பழவினை யாதென்றா ராயப்படுதலின் 'நினைக்கப்படும்' என்றார்; 'இம்மைச் செய்தன யானறி நல்வினை, உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்துஇத் திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது' என நினைக்கப்பட்டவாறறிக", என்று இலக்கிய அனுபவ உணர்வையும் வாழ்க்கை அனுபவத்தையும் பின்னிப் பிணைந்து நம்மை உணரவைக்கின்றார் பரிமேலழகர்.

*சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்*
*கோடாமை சான்றோர்க்கு அணி.*

*(குறள் 118)*

இக்குறளில் சான்றோரைத் துலாக்கோலுவமையால் விளக்கு கின்றார் திருவள்ளுவர். ஆனால் சுருங்கச் சொல்லி விரிவாக விளக்கும் தம் திறத்திற்கு ஏற்பச் சமன்செய்தல், சீர் தூக்கல் இரண்டையும் உவமை அடைகளாகவும் அமைதல், கோடாமை இரண்டையும்

பொருளடைகளாகவும் சேர்த்துள்ளார். உவமை பொருளிடையே இவை நான்குமே பொதுத்தன்மைகளாகின்றன. அவ்வாறெனில் உவமை அடைகளைப் பொருட்கும் பொருளடைகளை உவமைக்கும் சேர்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் குறளின் பொருள் நிறைவுறும்.

| | |
|---|---|
| முன்னே தான் சமனாக நிற்றல்<br>தன்கண்வைத்த பாரத்தைத்<br>தூக்கி வரையறுத்தல் | **உவமை அடைகள்** |
| இவை பொருளடைகள்<br>ஆகும் போது | சான்றோர் தம் மனத்தை<br>நடுநிலையில் வைத்துக்<br>கொள்ளுதல். தொடை<br>விடைகள்ால் கேட்டவற்றை<br>ஊழான் உள்ளவாறுணர்தல் |
| (இலக்கணங்களால்) அமைதல்<br>ஒருபக்கத்துக் கோடாமை | பொருள் அடைகள்<br>(உவமேயம்) |
| இவை உவமையடைகள்<br>ஆகும்போது | துலாக்கோல் இலக்கணப்படி<br>அமைதல், ஒருபக்கம்<br>சாயாமை |

உவமை நான்கு பண்புகள் உடையதாகிறது: துலாக்கோல் முறைப்படி செய்யப்பட்டு யாவும் பொருத்தமுற அமைந்து, ஒரு பக்கம் கோடாமல், முன்னே தான் சமனாக நின்று, தன்கண் வைத்த பாரத்தைச் சீர்தூக்கி அறிவிக்கவேண்டும். அதுபோலச் சான்றோர்க்கும் நான்கு பண்புகள் உரியவாகின்றன: சான்றோர்க்குரிய பண்புகளான் நிறைந்து முன்னே தம் மனத்தை நடுநிலையில் வைத்துக்கொண்டு வழக்கில் வினா விடைகளால் கேட்டவற்றைத் தொகுத்து முறைப்படி பகுத்தாராய்ந்து, அவ்வுள்ளவாற்றை மறையாது யாவர்க்கும் பொதுப்படக் கூறவேண்டும்.

இங்ஙனம் விரித்தோதத்தக்க செய்திகள் இதில் உள்ளடங்கி யுள்ளன என்பதைப் பரிமேலழகர்தான் எடுத்துரைக்கின்றார்: "உவமை யடையாகிய சமன்செய்தலும் சீர்தூக்கலும் பொருட் கண்ணும் பொருளடையாகிய அமைதலும் ஒருபாற் கோடாமையும் உவமைக் கண்ணும் கூட்டி, சான்றோர் சீர்தூக்கலாவது தொடை விடைகளால் கேட்டவற்றை ஊழான் உள்ளவாறுணர்தலாகவும் ஒருபாற் கோடாமையாவது அவ்வுள்ளவாற்றை மறையாது பகை நொதுமல் நட்பென்னும் மூன்று

திறத்தார்க்கும் ஒப்பக் கூறுதலாகவும் உரைக்க. இலக்கணங்களான் அமைதல் இருவழியும் ஏற்பன கொள்க". இத்தகையவற்றையெல்லாம் வெறுமனே நலம் பாராட்டல் எனச் சொல்லி ஒழிந்தாற் போதுமா? திறனாய்வாகவன்றோ இவை அமைகின்றன.

சில குறள்களில் ஒவ்வொரு சொல்லுக்கும், ஒவ்வொரு தொடருக்கும் அவை பெய்து எழுதப்பட்டமைக்கான காரணத்தையும், அச்சொற்கள் உட்கொண்டுள்ள பொருளினையும் எடுத்துணர்த்துகின்றார் பரிமேலழகர். ஒரு கவிதையில் வெளிப்படு பொருளினும் உள்ளீடாயமைந்து மனத்தால் உணரப்படும் குறிப்புணர்வுப் பொருளே (suggestion) அக் கவிதையின் உயிரோட்டமாகி அமைகிறது. உரையாசிரியர்கள் அதனை வெளிக்கொணரவே முயல்கின்றனர். இவ்வாற்றால் உரைகள் சிறந்த பயிற்சிக்களமாய் அமைந்து, கவிதைகளை உணர்ந்து அனுபவிக்கவும் பயன்கொள்ளவும் உதவிசெய்கின்றன.

*தாம்இன் புறுவது உலகுஇன்புறக் கண்டு*
*காமுறுவர் கற்றறிந் தார்.*

*(குறள் 399)*

தாம் இன்புறுதலாவது நிகழ்வின்கண் சொற்பொருள்களின் சுவை நுகர்வானும், புகழ் பொருள் பூசை பெறுதலானும் எதிர்வின்கண் அறம் வீடு பயத்தலானும் அதனான் இடையறாத இன்பம் எய்துதல்.

உலகின்புறுதலாவது இம் மிக்காரோடு தலைப்பெய்து அறியாதன வெல்லாம் அறியப்பெற்றேம் என்றும் 'யாண்டு பலவாக நரையிலம்' ஆயினேம் என்றும் உவத்தல்.

கற்றறிந்தார் செல்வமாயின் ஈட்டல் காத்தல் இழத்தல் என்றி வற்றான் துன்புறுதலும் பலரையும் பகையாக்கலும் உடைத்தென அறிந்து அதனைக் காமுறாமையின் கற்றறிந்தார் என்றும்,

காமுறுவர் கரும்பயிறற்குக் கூலிபோலத் தாமின்புறுதற்கு உலகின்புறுதல் பிறவாற்றான் இன்மையின் அதனையே காமுறுவர் என்றும் கூறினார்.

திருவள்ளுவர் கருதியமைத்த சிந்தனைச் செல்வத்தைத் தோண்டி யெடுத்துத் தருவதுபோல் இவை அமைகின்றன. இவை பொருட்

பொருத்தமுடைய திறனாய்வுகள் அல்லவா என்பதை இன்றைய ஆய்வாளர்கள் சோதித்தறிய வேண்டும்.

*சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை*
*வெல்லும்சொல் இன்மை அறிந்து*

*(குறள் 645)*

*சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க*
*சொல்லிற் பயனிலாச் சொல்*

*(குறள் 200)*

என்பன திருவள்ளுவர் தமக்கும் இலக்கணமாக வகுத்துக் கொண்ட நெறிகள்; அவ்வாறே பரிமேலழகர் எழுத்துக்கு எழுத்துப் பின்பற்றிய முறைகள், மற்றவர்கள் இவற்றின் திறனறிந்து செயற் பட்டனரா என்பதுதான் இன்றளவும் கேள்விக்குறியாக நிற்கின்றது.

**பேராசிரியர்**

தொல்காப்பிய உரையாசிரியராம் பேராசிரியர் தாம் ஓர் இலக்கண உரையாசிரியர் என்றுமட்டும் காட்டிக்கொள்ளாமல், சிறந்த இலக்கிய உரையாசிரியருமாவார் என்பதைத் தொல்காப்பியப் பொருளதிகார உரையில் பல இடங்களில் புலப்படுத்துகின்றார். திருக்கோவையார்க்கு உரையெழுதியவர் பேராசிரியரே என்ற கருத்தும் உண்டு.

உவமவியலில் 'வேறுபட வந்த உவமத்தோற்றம்' (உவ. 307) என்ற நூற்பாவிற்கு உரை எழுதுமிடத்து 'வையங்காவலர்' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை எடுத்துக்காட்டி, அதிலுள்ள உவமையை விளக்குகின்றார். இளம்பூரணர் 'ஒரீஇக் கூறலும்' (306) என்ற நூற்பாவிற்கு இதே பாடலைக் காட்டியுள்ளார். புறநானூற்று உரையாசிரியர் இப்பாடலுக்கு உரை எழுதியுள்ளார். அவர்கள் இருவரும் காட்டாத விரிவான உவமைப் பொருத்தங்களைப் பேராசிரியர் சுட்டுகின்றார்.

*வையங் காவலர் வழிமொழிந்து ஒழுகப்*
*போகம் வேண்டிப் பொதுச்சொல் பொறாஅது*
*இடம்சிறிது என்னும் ஊக்கம் துரப்ப*
*ஒடுங்கா உள்ளத்து ஓம்பா ஈகைக்*
*கடந்தடு தானைச் சேரலாதனை*

*யாங்கனம் ஒத்தியோ விலங்குசெலல் மண்டிலம்*
*பொழுதென வரைதி புறக்கொடுத்து இறத்தி*
*மாறி வருதி மலைமறைந்து ஒளித்தி*
*அகவிரு விசும்பி னானும்*
*பகல்விளங் கலையால் பல்கதிர் விரித்தே.*

*(புறம். 8)*

இதில் சேரமான் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் இயன்மொழித் துறையில் சிறப்பித்துப் பாடுகின்றார். புறநானூற்றுப் பழைய உரையின்படி இது ஞாயிற்றோடு சேரனை உவமிப்பதாகும். தொல்காப்பியத்தில் பேராசிரியர் இதனைத் திங்களொடு உவமிப்பதாகக் கொள்கின்றனர். இதனை வேறுபட வந்த உவமத்திற்கு எடுத்துக்காட்டி, இப்பாடலின் 'முற்பகுதியும் பிற்பகுதியும் வேறுபடுதலின் வேறுபட வந்ததாயிற்று' என்று கூறி, 'கடந்தடுதானைச் சேரலாதனை என்னும் துணை உவமத்திற்கு வந்த அடையினைப் பொருட்கு மறுத்துக் கொள்ள வைத்தான்' என்றும் 'பொழுதென வரைதி என்பது தொடங்கிப் பாட்டு முடிகாறும் பொருட்குரிய அடையினை உவமத்திற்கு மறுத்துக்கொள்ள வைத்தான்' என்றும் விளக்குகின்றார் பேராசிரியர். இவ்வடை மொழிகள் எங்ஙனம் மாறிப் பொருள்கொள்ளத் தக்கனவாகின்றன என்பதைப் பேராசிரியர் மிகவிரிவாக எடுத்துக் காட்டியுள்ளார் அதன் கருத்து இவண் அறியற்பாலதாகும்.

சேரலாதன் பல நிறைகளையுடையவன்; அவையெல்லாம் மதியத் திடம் குறைகளாக உள்ளன. மதியத்திடம் பல குறைகள் உள்ளன; அவையெல்லாம் சேரலாதனிடம் நிறைகளாக உள்ளன. இங்ஙனமிருக்க, 'மதியமே அவனிடமிருப்பனவெல்லாம் நிறைகள், நின்னிடமிருப்பன எல்லாம் குறைகள், ஆதலின் நீ சேரலாதனை எவ்வாறு ஒப்புமை யுடையை ஆவாய்?' எனக் கேட்பதாகக் கருத்துரை அமைகிறது.

'யாங்கனம் ஒத்தியோ' என்பதற்கு முன்னால் நான்கடிகளில் சேரலாதனுக்குரிய உயர்வுகளைக் கூறி, அதற்குப்பின்னால் நான்கடிகளில் திங்களுக்குரிய தாழ்வுகளைக்கூறி - அதனால் பின்னதுமுன்னவனுக்கு ஒவ்வாதென்பதே இயல்பாகக் கிடந்தபொருள். பழைய உரையாசிரியரும், இளம்பூரணரும் அவ்வாறே கொண்டனர். ஆனால் இத்தனை சிறப்புடைய சேரலாதனுடன் என்று எண்ணும் போதே அச்சிறப்புக்கள் திங்களுக்கு இல்லையென்பதும் இத்தனை குறையுடைய மதியம் என்று

எண்ணும்போதே அவை சேரலாதனிடம் சிறப்பாக உள்ளன என்பதும் ‘இலை மறை காய்போல்’ ‘குறிப்புணர்வாகப்’ பெறப்படுகின்றன. அதனையும் உள்பொருள் (Suggestion) என்ற முறையில் வெளிக்கொணர்வதன்றோ திறனாய்வாளன் பணியாகும். பேராசிரியர் அப் பணியை நிறைவாகச் செய்து, நீண்ட ஒப்புமை விளக்கம் தருகின்றார். அதனை எளிய நடையில், கீழ்வருமாறு காணலாம்:

சேரலாதன் திங்கள் மண்டிலம் போன்றவன் என்றால் உவமை யணி. திங்கள் மண்டிலமே நீ எவ்வாறு சேரலாதனுக்கு ஒப்பாவாய் என்பதால் இது வேறுபட வந்த உவமை. இளம்பூரணர் கருத்துப்படி உவமையை ஒரீஇக் கூறியது.

சேரலாதனை உவமையாகக் கொண்டு கூறிய அடைமொழிகள் - அவனுக்கு நிறையாகவும் திங்களுக்குக் குறையாகவும் கொள்ளப் படுவன:

| சேரலாதன் | திங்கள் |
|---|---|
| வையங் காவலர்கள் சேர லாதனைப் பணிந்து வழிபடுவர் - அவனே அங்கு தலைமை | ஏனைய கோள்களும் ஒளியுடையனவாகும் - தானும் ஒளியுடையதாகும் திங்கள் |
| போகம் நுகர்ந்து, சிறப்பற்ற வார்த்தையைப் புனையான் | போகம் நுகர்ந்து, உரோகணி மேல் மிக்க காதல் கொண்டு சிறப்பற்ற பேச்சுக்கு ஆளாவான் |
| இடம் சிறிதென்று, அதனை விரிவுபடுத்தப் போரிடுபவன் | எஞ்ஞான்றும் தன் எல்லைக் கண்ணே சுற்றி வருவது |
| ஒடுங்காத உள்ளமுடையவன் | தேய்ந்தொடுங்குபவன் |
| ஓம்பாத ஈகையுடையவன் | ஒவ்வொரு கலையாகத் தருவதல்லது தன்னுடைமை எல்லாம் ஒரே சமயத்தில் தருவதில்லை |
| கடந்து அடு தானை உடையவன் | தாரகையாம் தானை பகைக்கதிராம் ஞாயிற்றுக்குத் தோற்று மறையும் |

அதுபோலத் திங்களுக்குக் கூறப்படும் குறைகளும் சேரலாதனுக்கு நிறைகளாகும் தகுதியுடையன:

| திங்கள் | சேரலாதன் |
|---|---|
| கடையாயினார் நெறியில் செல்லும் | தலையாயினார் நெறியில் செல்வான் |
| நாழிகை வேறுபட்டு நாள் தோறும் மதி தோன்றும் | எப்பொழுதும் ஒளிசெய்வான் |
| ஒளிமழுங்கிப் புறங்கொடுத்து மறையும் | சுடர்போலப் பிறர் தோற்றோட இவன் காய்வான் |
| திங்கள்தோறும் மாறிமாறிப் பிறக்கும் | இவன் நிலை பெற்றவன் |
| மலை சார்ந்த வழித் தோற்றாது | தன்னாட்டு மலை மக்களாலும் மீக்கூறப்படுபவன் |
| விசும்பிலேதான் விளங்கும் | உலகத்தில் நிலைபேறுடையான் |
| பகலில் ஒளி விளங்காது | இவன் இருபொழுதும் விளங்குவான் |

இங்ஙனம் பேராசிரியர் இப் பாடற்பொருளைப் பாகுபடுத்தி, இதில் வந்துள்ள உவமையை இருகூறாக்கி விளக்கி, அதிலுள்ள 'தொனி'ப் பொருளையும் உடன்சேரத் தருகின்றார்.

பேராசிரியரின் இத் திறனாய்வைப் படிக்குமுன்பைவிடப் படித்தபின் அப் பாட்டுப் பொருள் நம் உள்ளத்தில் விளைவிக்கும் உணர்வு கூடுதலாகவும் சிறப்பாகவும் அமைகிறது. இதனைக் கொண்டே இத் திறனாய்வின் சிறப்பை மதிப்பிடலாம்.

இதுபோலவே பேராசிரியர் நோக்கு எனும் உறுப்பினை விளக்கு மிடத்தும் 'முல்லை வைந் நுனை தோன்ற...' என்ற அகநானூற்று முல்லைப்பாடலை எடுத்துக்காட்டி, அதன் கட்டமைப்பு, பொருட்பகுப்பு, அவற்றுக்கு அதிலுள்ள சொல், அடைமொழி, தொடர், உவமை ஒவ்வொன்றும் துணையாதல் என அனைத்தையும் விளக்கி, நோக்குக் கோட்பாட்டை அதில் ஏற்றிக் காட்டுகிறார். அப்பகுதி சிறந்த திறனாய்வுக்குப் பொருந்தியதோர் எடுத்துக்காட்டாக இலங்குகிறது.

எனவே நயம் காணுதல் என்பது வெறுமனே நலம்பாராட்டுதல் அன்று என்பது உறுதிப்படும். பாடல்களைக் கற்பாரை, அப் பாடலுடன் ஒன்றி அனுபவிக்க வைக்கும் பயிற்சிக் களங்களே இவ்வுரைப் பகுதிகள். உற்றுநோக்கவும், உய்த்துணரவும், ஒப்பிடவும் உவமை களிலும் நயவுரைகளிலும் நிரம்ப அடிப்படைகள் உள. உவமைகள் அனைத்தையும் தொகுத்து, அவை எவ்வெவ்வாராய்ச்சி நெறிமுறைக்கு - அல்லது காட்சி, கருதல், ஆகமம் (நூல்) என்ற அளவை (தருக்கம்) கட்கு அடிப்படையாகின்றன என்று காணுதல் வேண்டுமென்று கருதியே இங்கு சில கோடிட்டுக் காட்டப்பட்டன. அதுபோலவே நயங்காண்டல் என்ற பகுதியும் ஒருவகைத் திறனாய்வாகவும் தமிழர் கண்ட நோக்குக் கோட்பாட்டின் விளக்கமாகவும் அமைதல் ஒருசிறிது காட்டப்பெற்றது. பரிமேலழகர் நயங்கூறும் பகுதிகளை முற்காட்டிய அடிப்படைகளில் பகுத்துணர்ந்தாலே, இவ்வுண்மை மேலும் செறிவுடையதாகும். உரை விளக்கம் தருதல், திறனாய்தல், ஆய்வுசெய்தல் என்று மூன்று நிலைகளிலும் உரையாசிரியர்கள் செயற்படுகின்றனர்.

5

# மரபும் திறனும்

உரைமரபு என்பது மிகவும் தொன்றுதொட்டதாகத் தோன்றுகிறது. இது மேலும் ஆராய்வதற்கு உரியதாகும். உரை மரபிற்கு வாய்மொழி யாகவே வழங்கிய காலம் என ஒன்றும் வரிவடிவில் எழுதப்பட்ட காலம் என ஒன்றும் இருந்துவந்துள்ளன. இடைக்காலத்தேதான் உரை களையும் மூலநூல்போல ஏட்டில் எழுதும் வழக்கம் ஏற்பட்டுள்ளது. முன்னர் வழங்கிய உரைகள் வாய்மொழியாகவே வழங்கி வந்துள்ளன. எனவே வாய்மொழி மரபுகள் நாட்டுப்புறப் பாடல்களில் காணப்படுவது போல், நாட்டுப்புறக் கதைகளில் காணப்படுவதுபோல் உரைகளிலும் காணப்படுகின்றன. உவமைகள் திரும்பவருதல், பொதுவான தொடர்கள் சில திரும்ப வருதல், சில நடைப்போக்குகள் திரும்பத்திரும்பக் காணப் படுதல், கருத்துக்கள் திரும்ப வருதல் என இன்னோரன்ன பண்புகளை ஆங்காங்குக் காணலாம். எழுதிவைக்கும் காலம் வந்தபோது, அங்ஙனம் எழுதிவைத்த ஆசிரியன் தன் தனித் தன்மையையும் அதில் பதியவைத்துள்ளான். எனினும் அவன் முன்னைய மரபுக்கு மிகவும் கடமைப்பட்டவன் என்பதை மறக்கக் கூடாது.

**தொல்காப்பியம்**

தொல்காப்பியர் நூல் என்பதற்கு இலக்கணம் கூறும்பொழுது 'உள்நின்று அகன்ற உரையொடு பொருந்தி' (478) என்றது முன்னரும் காட்டப்பட்டது. பேராசிரியர் 'அடங்கிநின்ற பொருள் விரித்துச் சொல்லப் பட்டு' என்று இதை விளக்குவார். பின்னர் உரையாப்பை விளக்கும் போது 'பாவின்று எழுந்த கிளவி' என (485) ஒருவகை குறிக்கப்படுகிறது. இதற்குப் 'பாட்டின்றிச் சூத்திரத்திற்குப் பொருள் எழுதுவன போல்வன' என்று பேராசிரியர் கூறும் உரையும் கருதத்தக்கது.

மரபியலில் தொல்காப்பியரே உரைவகை பற்றி விளக்குவனவாகச் சில நூற்பாக்கள் உள. 'ஏது நடையினும் எடுத்துக் காட்டினும்' வருவது உரையாகும். எதிர்மறுத்துக் கேட்டலும் விடையும் உடைத்தாதல் உரைப் பண்பு என்பதும் அங்கே குறிக்கப்படுகிறது.

**நன்னூல்**

உரையினது பொதுவிலக்கணம் பற்றி நன்னூல் குறிப்பிடும் போது 14 கூறுகள் குறிக்கப்படுகின்றன.

*பாடம் கருத்தே சொல்வகை சொற்பொருள்*
*தொகுத்துரை உதாரணம் வினாவிடை விசேடம்*
*விரிவு அதிகாரம் துணிவு பயனோடு*
*ஆசிரிய வசனம்என்று ஈரேழ் உரையே*

*(நன் 21)*

பாடம் - மூலபாடம். கருத்துரை, சொல்பிரித்தல், சொற்பொருள், தொகுத்துரைத்தல், உதாரணம் காட்டுதல், வினா விடைகளான் விளக்கல், விசேடவுரை, வேற்றுமையுருபு போன்ற தொகைகளை விரித்தல், அதிகாரம் (இடத்திற்குப் பொருந்தப் பொருள் கூறல்), துணிவு (ஐயமின்றிப் பொருள் தெளிவுறக் கூறல்), பயன்கூறல், ஆசிரிய வசனம் (பெரியோர் நூல்களிலிருந்து சான்று காட்டல்) - இவை பதினான்கும் உரைக் கூறுகளாகும். புறநானூற்றில் 'உரையியல்பு' பற்றி எழுதும் போது உ.வே. சாமிநாதையர் குறிப்பிடுவனவற்றை அறிந்தால், உரைக் கூறுகளை இப்பதினான்கில் அடக்குவது கடினம் என்பது உணரப்படும்.

காண்டிகையுரை என்பது சிறியவுரை. கருத்து, பதப்பொருள், காட்டு மூன்றுடன் வினாவிடை சேர்த்து அமைவது. சூத்திரத்துட் பொருளன்றி அதற்கு இன்றியமையாதவையும் விளங்கவுரைப்பது விருத்தியுரை.

**மயிலைநாதர்**

நன்னூல் உரையாசிரியராகிய இவர் நூலுரை, உரைவிரி என இரு தொடர்களாக எடுத்துக் காட்டி, ஒவ்வொன்றையும் ஆறு ஆறு விதமாகப் பகுக்கின்றார்.

நூலுரை: நூலை ஒக்கும் உரை, நூற்கு உரை, நூலது உரை, நூற்கண் உரை, நூலன்ன உரை, நூலும் உரையும் என்பன அதன் விரிகளாகும். நூலுக்கு உரையோடுள்ள தொடர்பை இதனால் அறியலாம்.

உரைவிரி: உரையை விரி, உரைக்கு விரி, உரையது விரி, உரைக்கண் விரி, உரைக்கும் விரி, உரை விரிவுடையது என்பன கருதத்தக்கன.

உரை மேன்மேலும் விரியும் இயல்புடையதென்பதை இதனால் உணரலாம்.

**பாட்டு வடிவ உரைகள்**

பழைய உரைகள் பலவற்றை உற்றுநோக்கினால் இடையிடையே அவற்றின் நடை அகவல் நடைபோல் நடத்தலைக் காணலாம். அகவற் பாக்களாலும் உரைகள் தோன்றியுள்ளன. சில வெண்பா நூல்கள் திருக்குறளை விளக்கும் நோக்கில் எழுந்தன. சிவஞான போதத்தில் பல உதாரண வெண்பாக்கள் உள்ளன.[1]

**குறிப்புரைகள்**

தொடக்கத்தில் சிற்சில குறிப்புக்கள் மட்டுமே உரையில் எழுதப் பட்டன. குறிப்புரை எனப்படும் இது பழந்தமிழ் நூல்கள் பலவற்றில் காணப்படுகின்றது. பின்னரே உரை முழுவதையும் எழுதிவைக்கும் பழக்கம் வளர்ந்தது.

**நூலாசிரியரே உரை எழுதுதல்**

நூலாசிரியரே உரையெழுதும் மரபும் காணப்படுகிறது. புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் ஐயனாரிதனார், தண்டியாசிரியர் போல்வார் இவ்வகையில் குறிப்பிடத்தகுந்தவர்கள். இலக்கண விளக்கம் எழுதிய வைத்தியநாத தேசிகரும் இலக்கணக் கொத்து எழுதிய சுவாமிநாத தேசிகரும் தத்தம் நூல்களுக்குத் தாமே உரையெழுதியுள்ளனர்.

**உரைக்கு உரை**

பரிமேலழகருக்குப் பல உரை விளக்கங்கள் வந்துள்ளன. திருமேனி இரத்தினக் கவிராயர் எழுதிய நுண்பொருள் மாலை, திருக்குறள்

---

1. மு. வை. அரவிந்தன், உரையாசிரியர்கள், சிதம்பரம், 1968.

பரிமேலழகர் உரைக்கு உரையாக எழுதப்பட்டது. யாழ்ப்பாணம் கணேச அய்யர் தொல்காப்பிய உரைகளுக்கு உரை எழுதியுள்ளார். இராமானுசக் கவிராயர், வை.மு. சடகோபராமாநுசாச்சாரியார், கோ. வடிவேல் செட்டியார், வை.மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார் போல்வார் பலர் பரிமேலழகர் உரைக்கு உரை எழுதியுள்ளனர்.

**பதிப்பாசிரியர் குறிப்புரை**

பழைய உரையோடு கூடிய நூல்களைப் பதிப்பித்த அறிஞர் உ.வே.சா. போன்றவர்கள், அப்பழைய உரைகளைத் தம் குறிப்புரை யாலும், அடிக்குறிப்பாலும் விளக்கமுறச் செய்துள்ளனர். தமிழறிஞர்கள் இளவழகனார், ஆ. பூவராகம்பிள்ளை, கு. சுந்தரமூர்த்தி, இரா. இளங்குமரன் போல்வார் பலர் பழைய உரைகளுக்கு விளக்கக் குறிப்பு எழுதித் தம் பதிப்புக்களில் துலங்கச் செய்துள்ளனர்.

**எளிய பொழிப்புரைகள்**

இக் காலத்திற்கு ஏற்பப் பழைய நூல்கட்கு எளிய பொழிப்புரைகள் எழுதி வெளியிடும் பழக்கம் பெருகி வருகிறது. திருக்குறளுக்கு டாக்டர் மு.வ. எழுதிய பொழிப்புரை இவ்வகையில் குறிப்பிடற்பாலது. பல நூறாயிரம் படிகள் விற்பனையான இந்நூல் இவ்வகையில் சிறந்த முன்னோடியாகும். புலியூர்க் கேசிகனின் சங்க இலக்கியப் பதிப்புகளும் இவ்வகையில் குறிப்பிடற்பாலன.

**உரைவளங்கள் - உரைக்களஞ்சியங்கள்**

ஒரு நூலுக்குத் தோன்றிய பல உரைகளைத் தொகுத்து, ஆராய்ச்சிக் குறிப்போடு தருவது ஒரு சிறந்த முறையாகத் தோன்றி வளர்ந்து வருகிறது. அறிஞர் ச. தண்டபாணி தேசிகரின் திருக்குறள் உரைவளப் பதிப்புக்களும் உரைக்களஞ்சியப் பதிப்புக்களும் குறிப்பிடற் பாலன. திருப்பனந்தாள் காசிமடம் வெளியிட்டிருக்கும் திருக்குறள் உரைக்கொத்தும் குறிப்பிடற்பாலது. அறிஞர் க. வெள்ளைவாரணனார் வெளியிட்டுள்ள தொல்காப்பியப் பொருளதிகார உரைவளப் பதிப்புக்கள் சிறப்புடையன.

**உரை வேற்றுமை நூல்கள்**

ஒரு நூலுக்குப் பல உரைகள் உளதாமிடத்து, அவ்வுரைகளிலுள்ள வேற்றுமைகளை மட்டும் சுட்டிக்காட்டும் உரை வேற்றுமை நூல்களும் ஆராய்ச்சிக்குப் பயன்படுவன. தமிழ்ப் பல்கலைக்கழகத் தமிழ்

இலக்கியப் பேராசிரியர் இரா. சாரங்கபாணியின் திருக்குறள் உரை வேற்றுமை நூல்கள் குறிப்பிடற்பாலன. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் ச.வே. சுப்பிரமணியனின் 'அடியார்க்கு நல்லார் உரைத்திறன்' நூலில் அரும்பதவுரை, அடியார்க்கு நல்லார் உரை ஆகிய இவற்றிடை யுள்ள உரைவேற்றுமை பற்றித் தனியியலாகத் தரப்பட்டுள்ளது.

**உரைகளிடையே தொடர்பும் வளர்ச்சியும்**

இலக்கண உரையாசிரியரே இலக்கிய உரையாசிரியராகவும் விளங்கியுள்ளார். இதில் நச்சினார்க்கினியர் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர். இலக்கண உரையாசிரியர் சித்தாந்தம் போன்ற சாத்திரநூல் உரையாசிரியராகவும் திகழ்ந்துள்ளமையைச் சிவஞான முனிவர் போன் றோரால் உணரலாம். ஒரே நூலுக்குப் பலர் உரையெழுதுதல், ஒருவரே பல நூல்களுக்கு உரையெழுதுதல், ஒருவரைப் பின்பற்றி மற்றொருவர் உரையெழுதுதல் பேன்றவற்றாலும் உரையாசிரியராக வேண்டுமெனில் தமக்கு முந்தைய உரைகளில் எல்லாம் நல்ல பயிற்சி இருக்கவேண்டும் என்ற ஒரு மனநிலை இருந்துவந்தமையாலும் உரையாசிரியர்கள் மிகவும் மரபைப் போற்றுபவர்களாக இருந்துவந்ததாலும் ஆசிரிய மாணாக்கர் வரிசையிலும் தந்தை மகன் கால்வழியிலும் சொத்துடைமை போலப் பாடம் சொல்லிக் கல்விச் செல்வத்தை ஒருவரிடமிருந்து ஒருவர் பெற்றுவந்த வழிவழி மரபிலேயே எழுதி வைக்கும் உரைமரபும் தோன்றியதாலும் உரையாசிரியர் அனைவரிடமும் உள்ளோட்டமான ஒரு தொடர்பு இருக்கக் காணலாம். ஒருவர் உரைத்த உவமை பொருத்த முடையதேல் பின்வந்தவர் அதை அவ்வாறே எடுத்துக்கொள்வார். முந்தைய உரைத்தொடரை அல்லது கருத்தைப் பொருத்தமுடையதேல் அவ்வாறே தம் உரையிலும் எடுத்துக்கொண்டுரைப்பது உண்டு. பரிமேலழகரிடம் இம் மரபை ஒருசில இடங்களில் காணலாம். ஒருவர் உரைத்த உரைவழிநின்று, அதனினும் சிறக்கப் பின்வந்தவர் உரைக்க வேண்டும் என்ற முயற்சி தொடர்ந்து காணப்படுகிறது. அரும்பதவுரை யாசிரியரை அடியார்க்கு நல்லார் எங்கெங்கு பின்பற்றுகிறார், எங்கெங்கு மேலும் சிறக்கச் செய்கிறார், எங்கெங்கு விரிக்கிறார் அல்லது மறுக்கிறார் என்பன ஒப்பிட்டு அறியற்பாலன.

ஆராய்ச்சி அறிவின் முன்னேற்றம் கருதியது; சமுதாயப் பயன் பாடுடையது. முன்னைய தொடர்புடைய ஆராய்ச்சி முழுவதையும் உணர்ந்து, புதிதாக வரும் ஆய்வேடு அதன்மேலும் ஒரு முன்னேற்றம் காட்டுவதாக அமைய வேண்டும். ஒரு தொடர்புடைய பொருள் பற்றிய

ஆய்வேடுகள் அனைத்திலும் ஒரு பொருட்தொடர்பும் வளர்ச்சியும் இருக்க வேண்டும். பழைய சிறந்தனவற்றை வைத்துக்கொள்ளுதலும் சிறந்தன அல்லாதனவற்றை விட்டுவிடுதலும் புதிய சிறப்புடையனவற்றைப் படைத் தளித்தலுமே ஆராய்ச்சியின் வளர்ச்சியாகும். இப் பண்புகளை யெல்லாம் தமிழ் உரையாசிரியர்களிடமும் காணலாம். இந் நூலில் அப் பண்புகள் பல உளவென்பது மட்டுமே சுட்டிக் காட்டப் பெற்றுளது. உரையாசிரியர்கள் பற்றிய தனித்தனி ஆய்வும் ஒப்பீட்டாய்வும் பெருகும் போதுதான் அவ்வுண்மைகள் புலனாகும்.

**உரையாசிரியர்கள் பற்றிய ஆய்வு**

எம்.ஃபில்., பிஎச்.டி. போன்ற பட்டங்களுக்குப் பலர் ஆய்வு செய்து உள்ளனர். நச்சினார்க்கினியர் பற்றி க. ஆறுமுகனார் ஆய்வு செய்து உள்ளார். சென்னைப் பல்கலைக்கழகவழி அவ்வாங்கில நூல் வெளி வந்துள்ளது. மா. நன்னன் 'பேராசிரியர்' பற்றி ஆய்வுசெய்துள்ளார். 'டாக்டர்' பட்டத்திற்கான அவ்ஆய்வேடு இன்னும் அச்சில் வெளிவந்திலது. திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பகுதிநேர ஆய்வாளர் பலர் பல்வேறு உரையாசிரியர்களை எடுத்துக்கொண்டு ஆய்வுரைகள் எழுதி உள்ளனர். திருக்குறள் காலிங்கர் உரை புறநானூற்றுப் பழைய உரை போன்றவற்றை, மதுரை காமராசர் பல்கலைக்கழக எம்.ஃபில், ஆசிரிய மாணவர்கள் ஆராய்ந்துள்ளனர்.

மு. அண்ணாமலை எழுதிய 'நச்சினார்க்கினியர்', மு.வை. அரவிந்தனின் 'உரையாசிரியர்கள்', மு. அருணாசலத்தின் 'இளம்பூரணர்' போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

**பாடம் கூறும் முறையும் உரையும்**

பாயிரம் என்னும் முற்பகுதி, பொதுப்பாயிரம் சிறப்புப்பாயிரம் என இரண்டாகப் பகுக்கப்பட்டு நூல்களின் முன்னர்ச் சேர்க்கப்பட்டது. இலக்கண நூல்களில் பொதுப்பாயிரம் என்ற பகுதி இன்றியமையாததாக இணைக்கப்பட்டது. இதனை உரையாசிரியர்களே எழுதி இணைத்தனர் என்ற கருத்துண்டு.

நூலினது இலக்கணமும், உரையினது இலக்கணமும் முன்னர்க் கூறப்படுகின்றன. பின்னர் ஆசிரியன் இலக்கணம், பாடம் சொல்லும் முறைமை, மாணாக்கனது இலக்கணம், பாடம் கேட்டலின் முறைமை ஆகியன கூறப்படுகின்றன. முன்பு பாடம் கூறிய ஆசிரியரது வழியிலேயே

உரையாசிரியர்வழி வளர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் நூலைப் பாடம் சொன்ன ஆசிரியனே உரையையும் சொன்னான். பெரும்பாலும் ஆசிரியன் சொன்ன உரையை மாணாக்கர் எழுதி வைப்பதுமுண்டு. இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், போல்வார் தத்தம் காலத்தே புகழ்பெற்ற ஆசிரியர்களாகத் திகழந்திருக்க வேண்டும். தம்மிடம் கற்கவந்த மாணாக்கர்கட்கு இலக்கிய இலக்கணங் களை உரைகூறிக் கற்பித்திருக்க வேண்டும். தாம் கேட்டுக் கற்ற உரையை அங்ஙனம் தாமும் பிறர்க்கு விரித்துரைத்தனர்.

உரையும் சேர்ந்ததே நூல் என்ற கருத்து நினைக்கற்பாற்று 'உள் நின்று அகன்ற உரை' என்றால், எழுதிவைக்கப்படாமல், உரை விரித்துச் சொல்லுமாறமைந்த நூலின் திறத்தையே தொல்காப்பியம் பேசுகிறது எனலாம். நன்னூலில் காண்டிகை, விருத்தி என்பனவற்றையும் உடையது நூல் என அதன் வகைகளை நூலொடு சார்த்தியே கூறப் படுகிறது. இதிலிருந்து "உரைநூல்களின்" தோற்றம், நன்னூலுக்கு முன்பே அமைந்துவிட்டது எனலாம்.

**மதம்**

மதம் என்பது கோட்பாடு. நூலாசிரியனுக்கு எனக் கோட்பாடுகள் உண்டு. அவன் தன் கோட்பாட்டை நிறுவுமுகத்தான் நூல் எழுது கின்றான். ஒரு மொழி பற்றி எத்தனையோ கருத்துக்கள் உள. சகரம் மொழிக்கு முதலில் வருமா? மொழி முதல் குற்றியலுகரம் உண்டா? மொழியிறுதிக் குற்றியலுகரத்திற்கும் புணர்ச்சியில் வரும் மொழியிடைக் குற்றியலுகரத்திற்கும் என்ன வேறுபாடு? இங்ஙனம் எத்தனையோ மொழிக் கூறுகளில் ஒவ்வொருவர் ஒவ்வொரு கருத்தை நினைக்கலாம். நூலாசிரியனுக்குக் கோட்பாடு இருப்பது போலவே உரையாசிரியனுக்கும் கொள்கை வேறுபாடு தோன்றியது. மூலநூல் தோன்றிய காலத்து, அவனது கருத்தே உரையாசிரியனின் கருத்துமாக இருந்திருக்கும். காலம் செல்லச் செல்ல மூலநூலின் பொருளைத் தத்தம் கருத்துக்கு ஏற்ப உரையாசிரியர்கள் விவரிக்கத் தொடங்கினர். அதனுடன் தமது கால வளர்ச்சி நிலைகளை முன்னைய நூல்களில் ஏற்றிப் பார்த்தனர். இதனால் உரையாசிரியர்களும் கோட்பாட்டாளர்களாக இன்று தோற்று கின்றனர்.

**குற்றம், அழகு**

தொல்காப்பியர் பத்துவகைக் குற்றங்களைக் கூறி, அக்குற்றங் கட்கு மறுதலையானவை பத்து அழகுகள் என்கின்றார். பிற்காலத்தார்

பத்துவகைக் குற்றங்களையும் பத்துவகை அழகுகளையும் விதந்தோதுவர். இவையெல்லாம் நூலிற்குச் சொல்லப்பட்டவையே; பிற்காலத்தில் உரைக்கும் பொருந்துவனவாயின. இவற்றிற்கும் இன்றைய மேனாட்டு ஆராய்ச்சி நெறிமுறை நூல்களில், ஆய்வேடுகளில் செய்தியை வெளிப்படுத்தி ஆய்வறிக்கை அல்லது ஆய்வேடு வரையும் பொழுது எவ்வாறு புலப்படுத்த வேண்டும் என்று கூறுவனவற்றிற்கும் பலவகையும் ஒப்புமைகள் உள்ளன.[1] நூல்களுக்கு மட்டுமேயன்றி உரைநூல்களுக்கும் இவை பொருந்துமாற்றைக் காட்டுவதே இங்கு நோக்கமாகும்.

குற்றம் நீங்கிக் குணத்தில் பொருந்துதல் எல்லா உரைகட்கும் பொருந்துமாயினும் பரிமேலழகர் உரைக்கு மிகவும் பொருந்தி வருகிறது எனலாம். திருக்குறளுக்குச் சுருங்கச் சொல்லல் முதலிய எல்லா அழகுகளும் அமைவது போலவே பரிமேலழகர் உரையிலும் அவை அமைகின்றன. உரையிலுள்ள ஒவ்வொரு சொல்லும்கூடக் காரணம் கருதியே எழுதப்படுகிறது.

முதற்கண் குறளுக்கு உரைவிரிக்கும் பரிமேலழகர், தாம் அங்ஙனம் உரைவிரித்ததற்கான காரணத்தை விசேடவுரையில் எழுதுவார். மேலும் விளக்கவேண்டிய சிறப்புடைப் பகுதிகளையும் விளக்குவார். குறளுக்கும் உரைக்கும் ஒரு காரண, காரிய இயைபு இருக்கும். கீழ்வரும் இரண்டு காட்டுகளால் இதை உணரலாம்.

*இனிய உளவாக இன்னாத கூறல்*
*கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.*

*(குறள் 100)*

அறம் பயக்கும் இனிய சொற்களும் தனக்குளவாயிருக்க அவற்றைக் கூறாது பாவம் பயக்கும் இன்னாத சொற்களை ஒருவன் கூறுதல், இனிய கனிகளும் தன் கைக்கண் உளவாயிருக்க அவற்றை நுகராது இன்னாத காய்களை நுகர்ந்ததனோடு ஒக்கும் என்பது பரிமேலழகர் உரை.

குறளில் இனிய, இன்னாத என இருப்பனவற்றிற்கு இனிய சொற்கள், இன்னாத சொற்கள் என விரித்தெழுதியுள்ளார். குறளில்

---

1. தமிழண்ணல், இலக்குமணன், ஆய்வியல் அறிமுகம். மதுரை, 1979, பக். 42-48.

வெறுமனே கனி என்றும் காய் என்றும் அடைமொழியின்றி இருக்கவும் இனிய கனிகள் என்றும் இன்னாத காய்கள் என்றும் உரை விரிக்கின்றனர். இங்ஙனம் தாம் உரை விரித்ததற்கான காரணத்தைக் கீழே சொல்லி, அவற்றை மேலும் தெளிவுபடுத்துவதைக் காண்க.

'கூறல்' என்பதனால் சொற்கள் என்பது பெற்றாம். பொருளை விசேடித்து நின்ற பண்புகள் (இனிய, இன்னாத என்பன) உவமைக் கண்ணும் சென்றன. இனிய கனிகளென்றது ஔவையுண்ட நெல்லிக் கனிபோல அமிழ்தானவற்றை; இன்னாத காய்கள் என்றது காஞ்சிரங் காய் போல நஞ்சானவற்றை, கடுஞ்சொல் சொல்லுதல் முடிவில் தனக்கே இன்னாதென்பதாம்.

*ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய*
*வழுக்கியும் வாயால் சொலல்.*

*(குறள் 139)*

ஒல்லா – முடியா என்பது பன்மை முடிபு. தீய என்பது தீய சொற்கள் எனப் பன்மையே. எனவே தீய சொற்களைச் சொல்லுவது ஒழுக்க முடையார்க்கு முடியாது என்று வரவேண்டும். ஆனால் குறளின்படி தீய சொற்களைச் சொல்ல – சொல்லுதல் – முடியா எனவுளது. இஃது எவ்வாறு பொருந்தும்? திருவள்ளுவர் எவ்வாறு கருதியிருப்பார்?

*தீய சொலல் ஒல்லா.*

சொலல்தானே எழுவாயாக முடியும். தீய, ஒல்லா என்பனவற்றிற்கு ஏற்பச் சொலல் என்பதனையும் பன்மை என்றே கொள்ள வேண்டும். நன்கு சிந்தித்த பரிமேலழகர் 'வாயாற் சொலல்' என்பதற்கு 'வாயால் சொல்லும் தொழில்கள்' என்று பன்மையாக உரையெழுதி, விசேட வுரையில் 'சொலல் – சாதியொருமை' என்றார். உரைகளுக்குரிய பனிரண்டு கூறுகளில் 'விரி' என்பதும் ஒன்றன்றோ? இங்ஙனமெல்லாம் விரிக்க வேண்டும் எனக் காட்டுவதால், திருக்குறளைப் படிப்பதற்கே இவ்வுரை இன்றியமையாததாகிவிடுகிறது. அது பாடலில் சொல் ஆளப் பட்டுள்ள தன்மைக்கும், வினை முடிபுக்கும், அணிக்கும் எனக் காரண காரியம் காட்டும்போது, அஃது அப்பாடலுக்கு இன்றியமையாததாகி விடுகிறது. இங்ஙனம் நூலுடன் ஒருங்கிணையும் பாங்குவரைக்கும் உரை தமிழில் வளர்ச்சி பெற்றுள்ளது எனலாம்.

**பாடம் உணர்த்தும் முறை**

பாடம் சொல்லும் நல்லாசிரியன், பாடம் கேட்கும் நன் மாணாக்கன் இவர்களது இலக்கணத்திற்கும் உரையாசிரியர் இயல்புக்கும் தொடர்பு காண வாய்ப்புள்ளது. 'தன் மகன் முதல் வழிபடுவோன் வரை' பலர்க்கும் பாடம் கூறலாம் என்கிறது நன்னூல். இறையனார்களவியலுரையில் உரை நடந்து வந்த வரலாற்றைக் கூறும்போது 'முதற்கண் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் கீரங்கொற்றனார்க்கு உரைத்தார்' என்று வருகிறது. நக்கீரன் என்ற புலவரின் பெயர் கீரன்; அவர் மகன் கொற்றன். கீரன் கொற்றன் என்பன தந்தை பெயரும் மகன் பெயருமாகின்றன. எனவே மகனுக்கு உரை சொல்லிப் பாடங் கூறிய மரபு வழியே உரை எந்த வழி என்பது உறுதிப்படுதல் காணலாம். ஆசிரியர் பெருஞ்சுவனார், மணலூர் ஆசிரியர், செல்லூர் ஆசிரியர், திருக்குன்றத்து ஆசிரியர், முசிறியாசிரியர் என இவ்வாறு உரை கேட்டு வந்தவர் பலரும் ஆசிரியர் என்றே குறிக்கப்படுதல் காண்க. மூல நூலாசிரியன் ஒரு முறைதான் தன் நூலைச் சொல்கின்றான். அந்த நூலைப் பாடம் செய்பவர்களோ, அதனைத் திரும்ப திரும்ப உரைத்து வருகின்றனர்.

பாடங்கேட்டல் பற்றிக் கூறும்பொழுது 'கேட்டவை கேட்டவை விடாது உளத்து அமைக்க வேண்டும்' என்பதும், பாடம் போற்றல், கேட்டவை நினைத்தல், ஆசானைச் சார்ந்து அவை அமைவரக் கேட்டல், அம் மாண்புடையோர் தம்மொடு பயிறல், வினாதல் வினாயவை விடுத்தல் என்பனவும் கூறப்படுகின்றன. ஒருகுறி கேட்டல், இருகுறி கேட்டல், முக்காற் கேட்டல், ஆசான் அமைத்தது அமைவரக் கொள்ளுதல், மாணவன் தான் கற்றதனைத் திரும்பச் செவ்விதின் உரைத்தல் என்பனவெல்லாம் பேசப்படுகின்றன. பாடங்கூறும் மரபே உரையாசிரியர் மரபு என்பதற்கு இவை எல்லாம் சான்றாக அமைகின்றன.

**பாட வேறுபாடு காட்டுதல்**

'செய்யாமல் செய்த உதவிக்கு' (101) என்ற குறளில், பரிமேலழகர், "செய்யாமைச் செய்த உதவி என்று பாடம் ஓதி, மறித்துதவமாட்டாமை உள்ளவிடத்துச் செய்த உதவி என்றுரைப்பாருமுளர்", என எழுதக்

காண்கின்றோம். பாடம்ஓதி, உரைப்பது என்பதனாலும் பாடங் கூறிய ஆசிரியர்களே உரையாசிரிய மரபின் முன்னோடிகள் என்பது துலங்குகிறது.

*துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்*
*என்னைகொல் ஏதிலார் மாட்டு.*

*(குறள் 188)*

இதன் விளக்கவுரையில், பரிமேலழகர், "என்னர்கொல் என்று பாடம் ஓதி எவ்வியல்பினர் ஆவர் என்று உரைப்பாரும் உளர்" என்று கூறுகின்றனர். இங்ஙனம், பலரும் பலவிடத்தும் கூறுகின்றமையை நோக்கப் பாடம் ஓதிவந்தபோது, பல்வேறு ஆசிரியர்களால் ஏற்பட்ட மாற்றமே பாடவேறுபாடுகள் என்பது புலனாகிறது. வடமொழியில் பிரதி பேதம் என்பது ஏடெழுதுவோர் பிரதி எடுக்கும் பொழுது ஏற்பட்ட மாற்றம் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. மாணாக்கன் படிக்கும்போது 'பாடம் போற்றல் வேண்டும்' எனப்பட்டது. அங்ஙனம் போற்றுமிடத்தும், நினைவிற் கொண்டு வழி வழியாகச் சொல்லி வருவனவாதலின் பாடம் வேறுபடவும் வாய்ப்புகள் ஏற்பட்டன. பிற்காலத்தில் எழுதும்போதும், எழுதுவோரால் பாட வேறுபாடுகள் கிளைத்தன.

உரையாசிரியர்கள் மூலமே இன்று 'மூலபாடத்தைக்' காண முயல வேண்டியுளது. மூலபாட ஆய்வுக்கு, உரையாசிரியர்கள் சிறந்த துணை யாகின்றனர் என்பதைப் பல்வேறு ஆய்வாளர்கள் இதுகாறும் ஆராய்ந்து உள்ளனர்.

**உத்திகள்**

தொல்காப்பியத்தின் இறுதியில் 32 உத்திகள் குறிக்கப்பட்டுள்ளன. பிற்கால ஆசிரியர்களும் சிற்சில வேறுபாட்டுடன் இவ்வுத்திகளைக் குறிப்பிட்டுள்ளனர். இவ்வுத்திகளை எடுத்தாண்டு உரை கூறும் உரை யாசிரியர்களும் பல்வேறு உத்திகளைத் தத்தமக்கு ஏற்றவாறு கூறியும் விளக்கியும் எடுத்துக்காட்டியும் சென்றுள்ளனர். பல்வேறு நூல்களில் காணப்படும் உத்தி வகைகள், விளக்கம் ஆகியவற்றைத் தொகுக்க வேண்டும். உரையாசிரியர்கள் அவற்றை எவ்வெவற்றுக்கெல்லாம் பயன்படுத்தியுள்ளனர் என்பதையும் கண்டுபிடிக்க வேண்டும்.

'யுக்தி' என்ற வடசொல்லின் திரிபே 'உத்தி' என்று கருதப்படுகிறது. அவ்வாறெனில் இதன் பழம்பெயர் யாதென விளங்கவில்லை. அருத்தா

பத்தி, அதிகாரப் பொருள், தாற்பரியம் என்றினைய வடமொழி உத்திகளும் உரையாசிரியர்களால் காட்டப்படுகின்றன. இதில் வடமொழித் தாக்குரவு எந்த அளவென்று காட்ட வேண்டும். பல உத்திகள் தமிழ் வடிவமாகவும் தமிழ் நூன் மரபிற்கு ஒத்தவையாகவும் தொல்காப்பியர் பின்பற்றிப் பின்வந்த உரையாசிரியர்களால் காட்டப்பட்டு வழிவழி வருவனவாகவும் காணப்படுகின்றன.

இவ்வுத்திகளை எடுத்துக்காட்டுவதன் மூலம் உரையாசிரியர்கள் மூல நூலின் சிறப்பையும், அதே சமயம் தம் உரையின் சீர்மையையும் புலப்படுத்துகின்றனர்.

ஒரு நூலாசிரியன் தன் கருத்தை எங்ஙனம் வெளிப்படுத்துகின்றான் என்பதையும் அந்நூலை எங்ஙனம் முதலும் முடிவும் மாறுகோளின்றிக் கட்டமைப்புச் செய்துள்ளான் என்பதையும் காட்டுவதற்கு இவ்வுத்திக் கோட்பாடு பெரிதும் பயன்படுகிறது. இவ்வுத்திகளில், சில வற்றிற்கு, இக்கால ஆய்வேட்டு நினைவுடன் விளக்கம் எழுதிப் பார்த்தால் உண்மை விளங்கும்.

| | |
|---|---|
| நுதலிப் புகுதல் | ஆய்வேட்டை அல்லது நூலைத் தொடங்கும் போது இந்நூலில் இன்னது கூறப்போகிறோம் என்று முன்னுரையில் கூறிவிட்டுப் பொருளினுட் புகுதல். |
| தொகுத்துச் சுட்டல் | கூறப்படுகின்றவற்றை முதலிலேயே தொகுத்துக் கூறுதல். |
| வகுத்துக் காட்டல் | ஒவ்வொன்றாக வகைப்படுத்தி எழுதி விளக்குதல் |
| உரைத்தும் என்றல் | இனிமேல் வரும் இயல்களில் கூறுவோம் எனல் |
| உரைத்தாம் என்றல் | முன்பு இதுபற்றிக் கூறிவிட்டோம் எனல் |
| எடுத்த மொழியின் எய்தவைத்தல் | சொன்னதிலிருந்து சொல்லாத சில விதிகளையும் பெற வைத்தல் |

இத்தகையன நூலின் அமைப்புப் பற்றியன எனலாம். வேறு சில நூலின் கருத்துப் பற்றியன.

ஒருதலை துணிதல் - ஐயமுள்ளவிடத்து ஒன்றைத் துணிதல்

இன்னதல்லது இதுவென மொழிதல் - இதுவன்று என ஒன்றை மறுத்து, மற்றதை ஏற்றல்

தன்குறி வழக்கம் மிகவெடுத்துரைத்தல் - தான் புதிதாகக் குறியிட்டாள்வதைத் திரும்பத் திரும்ப எடுத்தாள்தல்

ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல் - ஒன்றைக் கூறும் போது அதனோடு இயைபுடையதையும் கூறுதல்

தொல்காப்பியர் 'மொழிந்த பொருளோடு ஒன்ற அவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்தல்' என்றதை 'எடுத்த மொழியின் எய்த வைத்தல்' என்று பவணந்தியார் சுருக்கிக் கூறுகின்றார். இக்கால ஆய்வேடுகளிலும் இவை பயன்படுமாற்றை, ஆய்வுரை எழுதுவார் யாவரும் அறிவர். முதலிலிருந்து முடிவு வரை நினைவாற்றலோடு எழுதப்படுவதற்கும் ஆற்றலோடு கருத்தை வெளிப்படுத்துவதற்கும் இவை பயன்படுவன.

**நச்சினார்க்கினியர்**

தொல்காப்பியத்துள் உத்திகள் பயன்படுத்தப்பட்டுள்ளவாற்றை நச்சினார்க்கினியர் எங்ஙனம் எடுத்தியம்பியுள்ளார் என்பதனை, எழுத்ததிகாரத்திலிருந்து சில எடுத்துக்காட்டுகள் தந்து காண்போம்.

எழுத்திற்கு மாத்திரை கூறி, மாத்திரை என்பது கண்ணிமை நொடி அளவினது என்றார். கண்ணிமைக்கும் நொடிக்கும் அளவு என்ன? "கண்ணிமைக்கும் நொடிக்கும் அளவு ஆராயின் வரம்பின்றி ஓடுமென்று கருதி நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறு என்று முடிந்தது காட்டல் என்னும் உத்தி கூறினார். இஃது ஆணை கூறுதலுமாம்" என்பது நச்சினார்க்கினியம் (சூ. 7), நூன்மரபில் மட்டும் நச்சினார்க்கினியரால் கீழ்வரும் உத்திகள் சுட்டப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | நூற்பா | 7 | முடிந்தது காட்டல், ஆணை கூறல் |
| 2. | " | 13 | பிறன்கோட் கூறல் (மகரக்குறுக்கம்) |
| 3. | " | 14 | எதிரது போற்றல் (மகரம் உட்புள்ளி பெறல்) |
| 4. | " | 31 | தன்னினம் முடித்தல் (எகரம் வினாப் பொருள் உணர்த்தல்) ஒருதலை மொழிதலுமாம் |

5. நூற்பா 32 மொழிந்த பொருளோடு ஒன்ற அவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்தல் என்னும் உத்திக்கு இனம் (யாகார, ஆகாரமும் வினாவாய் வருதல்)

6. " 38 பிறன்கோட் கூறல் (இசையில் அளபிறந்து உயிர்த்தல்)

உரையாசிரியர்கள் உத்திகள் சுட்டுமிடங்களை மூலத்தோடு பொருத்திப்பார்த்து உண்மை காணுதல் தகும். எங்ஙனமாயினும் இதன் மூலம் உரையாசிரியர்கள் நூலின் சிறப்பை நமக்கு அறிவியலாய்வு போல, கோட்பாட்டை ஏற்றிப் பார்க்கும் முறையில் தெளிவுறுத்து கின்றார்கள்.

**இறையனார் அகப்பொருள் உரை**

உரையாசிரியர்களுக்கென கோட்பாடு - கொள்கை - 'மதம்' இருந்திருக்கிறது. ஓர் அறிவியல் ஆய்வாளன்கூட ஏதேனும் ஒரு கருது கோளுடையவனாயிருந்து, பிறகு அதைச் சோதித்து நிறுவச் சான்று களைத் தேடுகின்றான். வௌவால் கண்தெரியாத பகற்போதில் பறக்கும் போதும், சுவரில் மோதிக்கொள்ளாமல் திரும்பிவிடுகிறது. அதன் சிறகு களில் - உடலில் உள்ள ஊற்றுணர்வுமூலம் எதிரிலுள்ள பொருளைக் கண்ணின் துணையின்றியே அது கண்டுகொள்கிறது என்ற கருது கோளுடன் தொடங்கிப் பலகாலம் ஆராய்ந்தபின் ஓருண்மையை அவன் கண்டுபிடிக்கின்றான். இலக்கிய ஆய்வாளனுக்கும் இக் கருதுகோள்கள் உண்டு. அவை நிறுவப்பட்டால் கொள்கையாக மாறுகின்றன. மாணிக்க வாசகரின் திருவாசகத்தைப் படிக்கும்பொழுது, மூவர் தேவாரத்துக்கு அது முற்பட்டதாக இருக்கலாம் என்ற ஐயம் எழுகிறது. எல்லோரும் பிற் பட்டது என்று கூறினாலும், ஒரு சில ஐயத்திற்குரிய காரணங்களால் அதனை முற்பட்டது என்ற கருதுகோளை அவன் பெறுகின்றான். திருவாசகத்தில் ஆசிரியமும் வெண்பாவும் செல்வாக்குடன் இடம் பெற்றுள்ளன. விருத்த வடிவத் தேவாரத்திற்கு முந்தைய வளர்ச்சி நிலையை ஒத்தது இது. திருவாசகத்தில் நாட்டுப்புற யாப்பு வடிவங்கள் பெரிதும் இடம் பெறுகின்றன. அவையும் காலத்தால் முற்பட்ட வளர்ச்சியைப் பிரதிபலிப்பவையே. இப்படியே ஒருவன் சான்று மூலங் களைத் தொகுத்தால் ஒருவேளை 'முற்பட்டது' என்ற கருத்து நிறுவப் படலாம்; நிறுவப்படுதல் இயலாது என்ற நிலையும் ஏற்படலாம். இங்கு

நாம் கருதத்தக்கது: ஆய்வாளன் என்பவன் ஏதேனும் ஒரு கருத்துடையவன், கொள்கையுடையவன் என்பதேயாகும். அக்கருத்தின் வன்மை மென்மை பற்றி இங்கு பேசவில்லை.

உரையாசிரியர்களும் ஏதேனும் ஒரு கருத்துக் குழுவைச் சேர்ந்தவராய் அல்லது ஒரு கருத்துடையவராய் இருந்தார்கள் என்பதே இங்கு அறியத்தக்கது. ஏனெனில் ஓர் ஆய்வாளனுக்கு உரிய தகுதியை அது நல்குகிறது. ஓர் உரையாசிரியர் எக்கருத்துக் குழுவைச் சேர்ந்தவர் என்பதைக் கண்டறிவது சிறந்த ஆராய்ச்சியும் ஆராய்ச்சியின் வளர்ச்சிக்கு உதவுவதுமாகும்.

பாடல்களுள் பயின்றுவரும் அகப்பொருள் என்பது முற்றிலும் கற்பனையே என்பது, இறையனார் அகப்பொருள் உரையாசிரியர் கருத்தாகும். உலகில் இல்லாதது; ஆயினும் இனியது என்பதாலும் நல்லது என்பதாலும் புலவர்களால் நிலைநிறுத்தப்பட்ட ஓர் ஒழுக்கமாகும். இதனை முதற்சூத்திரவுரையில் "அவ் வெட்டும் (வடநூன் மணம் எட்டு) உலகியலில் உள்ளன; இஃது அன்னது அன்று; இல்லது இனியது நல்லது என்று புலவரால் நாட்டப்பட்டதோர் ஒழுக்கமாகலின்; இதனை உலக வழக்கத்தினோடு இயையான் என்பது", என்று அவர் குறிப்பிடுகின்றார்.

இரண்டாம் சூத்திரவுரையிலும், "அறியாது சொல்லுதி, இஃது உலகத்துள்ள பான்மை முன்னே கேட்டாயன்றே, இல்லது இனியது நல்லது என்று புலவரால் நாட்டப்பட்டது என நூல் எடுத்துக் கோடற் கண்ணே சொல்லிப்போந்து, இனி ஒருகால் உலகினோடு ஒவ்வாதெனல் வேண்டுமோ என்பது", என்று குறிப்பிட்டுச் செல்லக் காண்கின்றோம்.

தலைமகன் தான் வரும்வழி, இடையூறு முதலியவற்றிற்கு அஞ்ச மாட்டான் எனவும் அஞ்சுவானாயின் தலைமைக்கு இழுக்கு நேரும் எனவும் 31ஆம் நூற்பாவுரையில் விளக்கும் இவர், "இல்லதை இல்லையென வேண்டுவதில்லை; என்னை ஆகாயப் பூ இல்லை என வேண்டா, அதுபோல என்பது; என்றார்க்கு இல்லதனையே இல்லையென்றார். இவன் உலகத்துத் தலை மகனல்லன், புலவரால் நாட்டப்பட்ட தலைமகன் என்பதனை யாப்புறுத்தற்கு; உலகத்துத் தலைமகனாயின் இவையெல்லாம் இல்லை என்பது", என மீண்டும் தம் கருத்துக் கோட்பாட்டை எடுத்து மொழிகின்றார். அஃதாவது உலகத்துத் தலைமகனாயின் வரும் வழிக்கு அஞ்சியே தீருவான். வழியிலுள்ள விலங்கு

களுக்கோ பிற ஆபத்துக்களுக்கோ அச்சமே இல்லாத தலைமகனைப் புலவர்கள் படைத்து மொழிகின்றார்களே தவிர அத்தகையவன் உலகத்தில் இல்லை என்பது இவ்வுரையாசிரியர் கருத்தாகும்.

களவொழுக்கம் இரண்டு திங்களே நிகழும் என வரையறை செய்கிறது அகப்பொருள் (நூ. 32). இங்கு உரையாசிரியர் "இவ் வாற்றானும் இஃது உலகத்து இயல்பன்று என்பது பெற்றாம், உலகத்து ஒழுக்கத்திற்குக் காலவரையறை இன்மையான் என்பது'', எனக் கூறுமிடத்தும் தம் கொள்கைவழியை நினைவுபடுத்துதல் காணலாம். தலைவன் தலைவியர் மூப்புப்பிணி சாக்காடு அற்றவராய்ப் படைக்கப் படுதலும் 'இல்லதென்ற' கருத்துவழிப்பட்டதே என்பதை இவர் வேறுசில இடங்களில் சுட்டிச்செல்வர். எனவே தொடர்ந்து இந்நூலுரை முழுவதும் அகப்பொருள் என்பது முழுக்கற்பனையே என்ற கோட்பாட்டுடன் எழுதப் பட்டிருப்பது காணலாம். தலைவன் தலைவியர் ஒழுக்கம் பற்றிய விவாதங்களில் உளவியல் அடிப்படையைப் பயன்படுத்தும் இவ்வுரை யாசிரியர், பல இடங்களில் உலகியலை ஒட்டியே விளக்கங்கள் தந்தாலும் இதனைக் கற்பனையே அதுவும் அடிப்படையற்ற, உலகில் இல்லாத கற்பனையே என வற்புறுத்துவது மேலும் ஆராய்தற்கு உரியதாகும்.

**பேராசிரியரின் தமிழுணர்வு**

தொல்காப்பிய உரையாசிரியர்களுள் பேராசிரியர் பெரிதும் தமிழ் உணர்வுடையவராயிருக்கிறார். தமிழ் மரபிற்கு ஏற்பவே தொல்காப்பி யத்திற்கு விளக்கம் தரவேண்டும் என்று கருதுகின்றார். வடமொழி முதலிய பிறநூல் வழக்காறுகளை மனத்தில் வைத்துக்கொண்டு, தமிழிலுள்ள நூல்களுக்கு விளக்கம் கூற முற்படுவது தவறு என்பது அவர் கருத்து. அவர் தம் கோட்பாட்டை நேர்முகமாகவும் மறைமுக மாகவும் உணர்த்திச் செல்லும் இடங்கள் பலவும் இவண் தொகுத்தறியப் பட்டால் உண்மை விளங்கும்.

நகைச்சுவைக்கு ஆரியர் கூறும் தமிழையும் ஒரு பொருளாகக் காட்டுகிறார் (மெய்ப். 1). அகத்தியனாரால் செய்யப்பட்ட மூன்று தமிழினும் அடங்காமை பற்றியும் அகத்தியமும் தொல்காப்பியமும் நூலாக வந்த சான்றோர் செய்யுளுள் குற்றமின்மை பற்றியும் இவர் உவமவியலின் இறுதியில் பேசுகின்றார் (சூ. 37).

"தலை இடை கடைச் சங்கத்தாரும் பிற சான்றோரும் நாற்சீரடியான் வரும் ஆசிரியமும் வெண்பாவும் கலியுமே பெரும்பான்மையும்

செய்தார்; வஞ்சிப்பாச் சிறுவரவிற்றெனக் கொள்க" என்று சங்க காலம் பற்றி எழுதுகிறார் (செய். 347).

"அதனானே இவ்வெழுவகையானன்றி ஆரியர் வேண்டுமாற்றானும் பிறபாடை மாக்கள் வேண்டும் கட்டளையானும் தமிழ்ச்செய்யுள் செய்தல் மரபன்று என்றவாறு", என்று தமிழ் மரபை வற்புறுத்தக் காணலாம் (செய். 392).

'மற்று பிறபாடை விரவியும் வருவனவோ எனின், அவற்றுள்ளும் தமிழுரையாயின எல்லாம் 'பாட்டிடை வைத்த குறிப்பு' என ஈண்டடங்கும்; பிற பாடைக்காயின் ஈண்டு ஆராய்ச்சி இன்றென்பது" (செய். 485).

"தானே என்று பிரித்தோதினான் இவை தமிழ் மந்திரம் என்றற்கும்" (செய். 490). இவ்வாறு தமிழ் மந்திரம் வேறென உணர்த்துகின்றார்.

"தமிழ் நூலாதற்கு இலக்கணம் எவ்வாற்றானும் இதுவே என்றற்கும் ஈண்டுக் கூறினான் என்பது" (மரபு. 648).

"தமிழ் வழக்கமாகிய மரபினொடும் தமிழ் நூலொடும் மாறுபட நூல் செய்தானாகும்" (மரபு. 649).

மேலும் இவர் அகத்தியனார்பாலும் தொல்காப்பியனார்பாலும் வைத்திருந்த பெருமதிப்பு இப்பொருளதிகார உரையில் வெளிப்படுகிறது. உவமவியலின் முதல் நூற்பாவிற்கு விளக்கம் எழுதுமிடத்து இவர். அகத்திணை மரபிற்கு ஏற்ப உரைகூறக் காணலாம். செய்யுளின் அழகைப் பொருளுறுப்பாகப் பார்க்க வேண்டுமே தவிர, அலங்காரமாகப் பார்க்கக்கூடாது என்று இவர் உவமவியலின் இறுதியில் விவாதிக்கும் இடத்தும் தமிழ் நூன்மரபையே பின்பற்றக் காண்கிறோம்.

முதல், இடை, கடைச் சங்கங்கள் பற்றி அடிக்கடி நினைவு கூர்கின்றார். சங்கப் பாடல்களைச் சான்றோர் செய்யுள் எனப் பெருமையோடு சுட்டுகின்றார். வடமொழி வழக்காறுகளை ஒன்றிரண்டு இடங்களில் ஒப்பிட்டுக் காட்டுகின்றார். வேத வழக்குப் பற்றியும் நால் வகை வருணம் பற்றியும் பேசும் இவர், தமிழ் வழக்கென்பது தனித்தது என நினைவூட்டிக்கொண்டே செல்வதால், தம் காலச் சூழலுக்கு ஆட் பட்டாலும் உண்மை மறவாதவர் என்று தம்மை வெளிப்படுத்திக் கொள் கின்றார். இத்தகைய தமிழ் மரபுணர்வும் தமிழ்ப்பற்றும் உடைமை யினாலேயே இவர் உரை திறனாய்வுரையாகவும் சிறந்த இலக்கியக்

கொள்கை விளக்கவுரையாகவும் திகழ்கிறது எனலாம். சுருக்கமாகக் கூறுவதெனில், பரிமேலழகர் உரையை இலக்கண உரை என்றதுபோல இவர் உரையை 'இலக்கியக் கொள்கை விளக்கவுரை' எனலாம்.

**ஓர் ஆராய்ச்சி அணுகுமுறை**

உரையாசிரியர்கள் பல இடங்களில் ஆராய்ச்சி அணுகு முறைகளைப் பின்பற்றி உண்மை காண முயன்றுள்ளார்கள். முன்னரும் உவமை காட்டி நிறுவுமிடங்களில் அளவை வழி உண்மை காணும் போக்கு அமைந்திருப்பது சுட்டிக்காட்டப்பட்டது. இறையனார் அகப்பொருள் உரையில் முதற்சூத்திரத்தில் 'அன்பு' என்பது யாதென நிறுவ முடியுமா என்ற கேள்வியை எழுப்பிக்கொண்டு விடைகாண முயல்கின்றார், அதன் ஆசிரியர். உரையாசிரியர் எங்ஙனம் ஆய்வுப் போக்கில் மனங்கொண்டிருந்தனர் என்பதற்கு அஃது சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் ஓர் அமெரிக்கப் பெண்மணி 'அன்பு' என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்தார். மதுரையை அடுத்த ஒரு கிராமத்தை அவர் கள ஆய்வுக்கு இடமாக எடுத்துக்கொண்டார். பலரையும் பேட்டி காணுதல், தாலாட்டு ஒப்பாரி போன்ற பாடல்களைத் தொகுத்தறிதல், திருமணம், காதுகுத்து போன்ற சடங்குகளுக்குச் சென்று நடப்பை அறிதல் என இவ்வாறு அவர் பலவகை ஆய்வுகளை மேற்கொண்டார். அவரால் 'உண்மை அன்பை' யாண்டும் காண முடியவில்லை. குடும்பத்தை எவ்வாறு காப்பது, பொருள் வசதிக்கு என்ன செய்வது, உணவுக்கு வழி என்ன, பணம் எவ்வாறு கிடைக்கும் என இவை பற்றியே உறவுகள் சுழல்வதை அறிய முடிந்தது. ஒப்பாரியில் கூட, கணவனை இழந்ததால் உலகில் வாழ்வது எப்படி என்ற கவலையே பெரிதாகவும் உண்மையான அன்பு மிக அருகியுமே பேசப்படுவதை அவர் தம் ஆய்வில் சுட்டிக்காட்டினார்.

அவருடன் உரையாடியபின்பு ஒருநாள் இறையனாரகப் பொருள் உரையைப் படித்தபொழுது இவ்வுரையாசிரியர் பின்பற்றும் நெறியும் அதனோடொத்ததாய்க் காணப்பட்டது. அவர் ஆய்வின் கருத்துச் சுருக்கம் வருமாறு: "அன்பு என்பது நுண்பொருள்; வெளியில் காட்டலாகாது. அன்பின் குணம் ஆறு சாவிற்சாதல் முதலியன. இவையெல்லாம் உண்மையன்பின் வழிப்பட்டனவே என ஒருதலையாகக் கூற முடியாது. தலைவன் செத்தவுடனே சாகின்றவள், முன்பே நோய்வாய்ப்பட்டிருந்து, இதைக் காரணம் காட்டிச் சாகவும் கூடும்.

ஒருவர் நோவதற்காக மற்றவரும் நோவதென்பதும் உண்மையாகி விடாது. வேறு யாதேனும் ஒரு காரணத்தால் நோகவும் கூடும். அன்பில்லாமலே அன்புடையார் போல நடிக்கவும் கூடும். ஆகவே உண்மை அன்பென்பது மனத்திரிபில்லாதவிடத்து உளது என உய்த்துணரத்தக்கதாகும்."

இதனை உரையாசிரியர் சொற்களிலேயே காண்பது, அவர்தம் ஆராய்ச்சிப் போக்கை உணர மிகவும் பயன்படும்.

இறையனார் அகப்பொருள் 'அன்பின் ஐந்திணை' என்று தொடங்குகிறது. அதைப் படித்ததும் மாணவன் கீழ்வருமாறு கேட்ப தாகத் தொடங்கி உரையாசிரியர் விளக்கம் தருகின்றார்.

"அன்பின் ஐந்திணை என்றவிடத்து அன்பு அறிந்தேனாயினன்றே, அன்பினானாகிய ஐந்திணையும் அறிவது எனின் அது குடத்துள் விளக்கும்; தடத்துள் வாளும்போல இதுகாண் அன்பு என்று போதந் திறந்து காட்டலாகாது. அன்புடையரான குணங்கண்டவிடத்து இவை உண்மையான் ஈங்கு அன்பு உண்டென்று அனுமித்துக் கொள்ளற் பாற்று. அன்புடையரான குணம் யாவையோ எனின் சாவிற்சாதல், நோவின் நோதல், ஒண்பொருள் கொடுத்தல், நன்கினிது மொழிதல், புணர்வுநனி வேட்டல், பிரிவு நனி இரங்கல் என இவை; என்றார்க்கு இவை திரிபுடைய; என்னை இவை திரிபுடையவாறு எனின்,

(அன்பு என்பது பருப்பொருளன்று; அதைக் காட்சிப் பொருளாய்க் காட்ட முடியாது. அன்புடையவரது செயல்களைக் கொண்டு, இங்கு அன்பு உண்டென்று 'அனுமானிக்கலாம்'. அவ் வாறெனில் ஒருவர் அன்புடையர் என எவ்வாறு அவர் குணம், செயல் கொண்டு தீர்மானிப்பது? சாவிற்சாகின்றமை, நோவில் நோகின்றமை, பொருள் தரல், இனிதாகப் பேசல், சேர விரும்பல், பிரிய வருந்துதல் என ஆறையும் அன்பைக் கண்டுகொள்ளத்தக்க 'வாயில்'களாக உரை யாசிரியர் குறிப்பிடுகின்றார். இஃதோர் ஆய்வுப் போக்காதல் காண்க. பிறகு இதில் போலியும் உண்டாதலின் உண்மை கண்டு உணர வேண்டும் என அவர் விளக்குவது விரிவான ஆய்வாக உளது).

"சாவிற்சாதல் என்பது அன்பினானே நிகழ்வது அன்று, பிணி யுடையளாய் வாழ்க்கையை முனிந்து செல்வாள் இது தலைக்கீடாகச் சாவல் என்று சாவவும் பெறும்; 'கண்டீரன்றே குடுமிக் கூந்தலில் நறு நெய் பெய்து, கொண்டானிற் பின்னையும் இருந்து சோறு தின்று

வாழ்கின்றாள் ஓ கொடியளேகாண்' என்று நித்தல் பழி தூற்றப்பட்டிருந்து பின்னுமே ஒருநாட் சாவல் அதனான் இன்றே சாவல் எனச் சாவவும் பெறும்; அதுவன்றிப் புகழ் வேண்டிச் சாவவும் பெறும்; கணவனோடு செத்தார் சுவர்க்கம் புகுவர் என்னும் உரைகேட்டு அது வேட்கையானும் சாம்; அப்பரிசு அன்றி அன்பினானும் சாம்; அஃது ஒரு தலையா நிகழ்வதன்று என்பது."

(அஃதாவது உண்மை அன்பினாலே மட்டும் சாக விரும்புவார் மிகக் குறைவென்பது பொருள். வேறுபல காரணங்களையும் கருதிச் சாகின்றவர்களை அன்பினாலே மட்டும் செத்ததாகக் கூறுவது பொருந் தாதன்றோ?)

"இனி நோவில் நோதல் என்பது இன்னநோ என்று அறியலாகாது. அதுவும் திரிபுடைத்து, அன்பு உள்வழியும் அன்பு இல்வழியும் தோன்றும் என்று மறுக்கப்படும்.

ஒண்பொருள் கொடுத்தல் என்பது கணிகையர் கூட்டம் பொருளான் ஆம். ஆகலின் அதுவும் அன்பு அன்று.

நன்கினிது மொழிதல் என்பது நன்கினிது சொல்லி பகைவரும் தம் கருமம் முடிப்பர்; ஆகலின் அதுவும் அன்பு அன்று.

புணர்வு நனி வேட்டல் என்பது அச்சம் காரணத்தானும் புணர்வு வேட்டார் போலப் புணர்வர்; ஆகலின் அதுவும் திரிபுடைத்து.

பிரிவு நனி இரங்கல் என்பது நீரும் ஆடார், பூவும் சூடார்; சாந்தும் அணியாராய்ப் பிரிந்திருந்தாற்போல வாடியிருப்பர், அன்பு இல்லாதாரும் ஆகலின் அதுவும் திரிபுடைத்து.

இனித் திரிபின்றி இக்குணங்கள் நிகழ்ந்தவழி அன்பு உண்டு எனக் கொள்க. அஃது எங்ஙனம் நிகழுமோ எனின் அவன் இறந்து பட்டவாறே தானும் இறந்துபட்டவழி அன்பினானே ஆயிற்று எனக் கொள்க. அல்லாதனவும் இவ்வகையில் திரிபு இல்லன அன்பினானே ஆயிற்று எனக் கொள்க."

உண்மை அன்பு என்பதும் நடிப்பு அன்பு என்பதும் இரண்டுள. உண்மை அன்பே அன்பாகும். அதனை எங்ஙனம் ஆராய்ந்து கண்டுகொள்வது என்பதற்கு ஒரு நெறிமுறை காட்டியிருப்பது முற்றிலும் இக்கால ஆய்வுப் போக்கை ஒட்டியதாகும். இவ்வாறு உரையாசிரியர்கள்

தம் காலச் சூழலுக்கேற்பப் பல்வேறு நெறிமுறைகளைக் காட்டிப் போயுள்ளனர். அவற்றைத் தொகுத்துக் காண்பது நம் கடமையாகும்.

இவர்களைப் பற்றி டாக்டர் மு.வ. குறிப்பிடும்போது "உரைகளும் விளக்கங்களும் எழுதியவர்கள் இலக்கிய வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் நல்ல தொண்டு புரிந்தார்கள். அவர்கள் எல்லோரும் கற்றுத் தெளிந்த அறிஞர்கள். அவர்கள் எழுத்துகளிலேயே பழைய தமிழ் உரைநடையை இன்று காணமுடிகிறது'' என்று கூறுதல் காணலாம்.[1] முற்காலத்திலேயே கால்கொண்டு தோன்றி வளர்ந்து வரினும், இடைக்காலத்தில் பெருகித் தழைத்த இவ்விலக்கிய மரபு-தமிழ் உரைநடை வளர்ச்சிக்குப் பெருத்த தூண்டுகோலாக இருந்தது. தமிழ் இலக்கிய இலக்கணங்கள் எளிமைப் படுத்தப்பட்டன. அதனால் தமிழ் இலக்கியமும் இலக்கணமும் மக்கள் இடையே பரவின. பழைய நூல்களைப் பாதுகாத்தமையும் பரப்பியமையும் அன்றி, புதிய வளர்ச்சிகட்கும் இவை வித்திட்டன. எனவே தமிழ் மறுமலர்ச்சி என்பது உரை வளர்ச்சி என இடைக் காலத்திலேயே பெரும் மாற்றம் ஒன்று ஏற்பட்டுவிட்டது.

---

1. தமிழ் இலக்கிய வரலாறு, புதுதில்லி. 1980. ப. 193.

6

# நடையும் மொழியும்

இன்றைய ஆய்வேடுகளில் காணப்படும் பெருங்குறை ஒன்று அதன் மொழிநடையேயாகும். ஆராய்ச்சி எல்லாம் செய்தாகிவிட்டது. அதை வெளியிட வேண்டாமா? எவ்வாறு பிறரும் ஏற்குமாறு காரண காரியத்துடன் வெளியிடுவது? ஒரு சிறந்த ஆராய்ச்சி, வெளியிடும் திறன் இன்மையால் பிறரால் ஏற்கப்படாமல் போகக்கூடும். ஆராய்ச்சிக் கூறற்ற ஒன்று. வெளிப்படுத்தும் திறன் ஒன்றாலேயே சிறந்ததுபோல் தோற்றவும் கூடும். இவை இரண்டும் ஒன்றுபடுமிடத்திலேயே ஆய்வுத் துறை ஒளிவீசித் திகழ்கின்றது.

இக்கால ஆய்வாளர் பலர் ஆய்வுக்கேற்ற நடை என்பதையே அறியார். சிறுகதையும் புதினமும் படித்த போக்கில் ஏதோ தப்பும் தவறுமாக ஆய்வேட்டை எழுதி முடித்துவிடுகின்றனர். பேச்சுத் தமிழே அடிக்கடி ஊடாடுகிறது. ஓர் ஆய்வேட்டில் கொச்சைத் தமிழையும் கலந்துவிடுவதற்கு இவர்கள் தயங்குவதில்லை. மொழிப் பிழைகள் என்றாலோ, அவை கணக்கு வழக்கில் அடங்குவதில்லை. எழுத்துப் பிழை, சந்திப்பிழை, தொடர்ப்பிழை, ஒருமை பன்மைப்பிழை, இவற்றிற்கு எல்லாம் மகுடமிட்டது போன்ற தட்டச்சுப் பிழை யாவற்றையும் நோக்கினால் திருக்குறள் கதைதான் நினைவிற்கு வருகிறது. சீத்தலைச் சாத்தனார் என்னும் பெரும்புலவர் தாம் கேட்கும் நூல்களில் பிழையாயின கண்டவிடத்தெல்லாம் தம் தலையிலேயே குத்திக் கொள்வாராம். நியாயமாகப் பிழை செய்தார் எவரோ அவர் தலையி லன்றோ குத்த வேண்டும்? இத்தகைய சூழலில் இருக்க நேரிட்டதே என்று, தாம் செய்த பாவத்திற்காக அவர் தம் தலையில் குத்திக் கொண்டிருக்கிறார். இன்று இதழ்களில் கதை எழுதுவோர் உட்பட யாரையும் தேடிக் கண்டுபிடித்துத் தண்டனை கொடுக்க முடிவதில்லை.

எனவே, ஒருவர் இதையெல்லாம் பார்த்துப் பார்த்துத் தம் தலையில்தான் குத்திக் கொள்ள வேண்டும். முன்னாளிலும் அஃதொரு கற்பனைக் கதையே என்றாலும், உண்மையில்லாமலா அப்படி ஒரு கதை தோன்றுகிறது. அன்றைய போக்கை விட, இன்றைய போக்கிற்கு இக்கதை மிகவும் பொருத்தமாகவுளது. இல்லாவிட்டால் பட்டினத்தார் போல இறைவனிடம் வேண்டிக்கொண்டு மன அமைதி அடையலாம்.

*கல்லாப் பிழையும் கருதாப்*
*பிழையும் கசிந்துருகி*
*நில்லாப் பிழையும் நினையாப்*
*பிழையும் நின் அஞ்செழுத்தைச்*
*சொல்லாப் பிழையும் துதியாப்*
*பிழையும் தொழாப் பிழையும்*
*எல்லாப் பிழையும் பொறுத்தருள்*
*வாய்கச்சி ஏகம்பனே*

*(திருவேகம்ப மாலை)*

பட்டினத்தார் அடுக்குவதைவிட அதிகமான பிழைகள் ஆய்வுரை எழுதுவோரிடம் காணப்படுகின்றன. ஆய்வேடுகள் செறிவாக இருக்க வேண்டும். கட்டுரைகளுக்கெல்லாம் முன்மாதிரியாக இருக்க வேண்டும். படைப்பிலக்கியத் தமிழ் (நடை) வேறு; ஆட்சித்துறைத் தமிழ் (நடை) வேறு; ஆராய்ச்சியுரைத் தமிழ் (நடை) வேறு. இதை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். பிழையற்ற கட்டளைத் தமிழில் செவ்விய நடையில் ஆய்வேடுகளை எழுதி அளிக்க வேண்டும்.

*சந்திப் பிழையும் தொடரின்*
*பிழையும் ஒருமை பன்மைப்*
*பந்திப் பிழையும் வாக்கியப்*
*பிழையும் நற் றமிழை விட்டுச்*
*சிந்திச் சுமக்கும் கொச்சைப்*
*பிழையும் அச்சுப் பிழையும்*
*எந்தப் பிழையும் பொறுத்தருள்*
*வாய் எங்கள் தமிழ்த்தாயே*

என்று நாமும் தமிழ் ஏகம்பமாலை ஒன்று பாடலாம் போலவுளது. நாம் செய்யும் ஒரு சில தவறுகளை மனங்கொண்டால்தான், உரை

யாசிரியர்கள் காட்டியவழி எவ்வளவு பயனுடையது என்பது நமக்குப் புலனாகும்.

**நூற்கள்**

கால்கள், வேல்கள், நூல்கள் என்பதே பொருந்தும், யாரும் காற்கள் வேற்கள் என்பதில்லை. ஆனால், காதும் கைக்குமாறு நூற்கள், நூற்கள் என்று எழுதிக் கொல்லாமல் கொல்கின்றார்கள். நூற் சிறப்பு, நூற் பதிப்பு, நூற்பகுப்பு என்று கூறும் பழக்கத்தில் போலும் 'நூற்கள்' வந்துவிட்டது. நூல்+கள் சேர்ந்து நூல்கள் ஆகுமே தவிர நூற்கள் ஆகவே ஆகாது. ஒரு வேடிக்கை என்னவென்றால் மிகவும் செறிவான செந்தமிழில் எழுதுவதாக நினைப்பவர்கள்தான் 'நூற்கள்' என எழுதுகின்றார்கள்.

**எந்தன்**

எம்+தம் எனவும் என்+தன் எனவும் எழுதுதலே முறை. இவற்றை எந்தம் எனவும் என்றன் எனவும் புணர்த்துக்கூறுவர். இதனை மாற்றி எந்தன் என எழுதுகின்ற வழக்காற்றைக் கவிதைகளிலும் காண கின்றோம். இதுபோலவே தன்னலம் ஒருமை; தந்நலம் பன்மை எனப் பலர் அறிவதில்லை.

**மனது - மனம்**

மனம் என்பது வேற்றுமையுருபு சேரும்போது மனத்தில் என்றே வரும். மரம், உரம் முதலிய மகரவீற்றுச் சொற்கள் மரத்தை உரத்தை என அத்துச் சாரியை பெற்றே வரும். அது போல மனத்தை என ஆளாமல் மனசு, மனது, மனதை என எழுதுவன மிகத் தவறுபட்ட வழக்காறுகளாகும்.

**கம்பர் - தன் காப்பியத்தில்**

கம்பர் மிகச் சிறந்த சந்தங்களைத் தன் காப்பியத்தில் ஆள் கின்றார் எனவும் அவர் தன்னுடைய வீட்டிற்குச் சென்றார் எனவும் ஒருமை பன்மைகளை மயக்கி எழுதுதல் கற்றறிந்தவர்களிடத்தும் காணப்படுகின்றது. 'திருவள்ளுவர் தமது திருக்குறளில்' என இவ்வாறு தான் எழுதவேண்டும்.

இயல் இசை நாடகம் எனத் தமிழ் மூவகைப்படுகின்றன எனச் சிலர் எழுதுவர். இதில் மூவகை இருப்பதை நினைவிற் கொண்டு இவ்வாறு

எழுதுவர். உண்மையில் தமிழ் என்பதுதான் எழுவாய் என உணர்வ தில்லை.

பல பேருந்துகள் அவ்வழியாக ஓடுகின்றதென விளம்பரப் பலகையில் குறிப்பிட்டிருந்தது என எழுதுபவர் சிலர். இதில் ஓடுகின்றன என வரவேண்டும்.

ஒரு, ஓர் சொற்களை ஆள்வது; அது, அஃது சொற்களை ஆள்வதில் எல்லாம் பலர் வேறுபாடே காட்டுவதில்லை. ஆங்கிலத்தல் மட்டும் A, An என்பன இடம் மாறாமல் ஆளப்படுகின்றன. ஏன்?

கைமாறு வேறு, கைம்மாறு வேறு. மெய்மை வேறு, மெய்ம்மை வேறு. பொய்மை வேறு, பொய்ம்மை வேறு. செய் நன்றி, செய்ந்நன்றி என்பனவற்றில் முன்னது செய்த நன்மை; பின்னதே 'பிரதியுபகாரம்'. இந் நுட்பமான வேறுபாடுகளை எல்லாம் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும் அறிஞனாவது பின்பற்ற வேண்டாமா? பின்பு எவ்வாறு தமிழ் உயரும்? மேடையில் பேசிப்பேசியே உயர்த்திவிடமுடியுமா?

ஆங்கிலத்தைப் படித்துப் படித்து நமக்கு 'ஆங்கிலத் தமிழில்' எழுதியே பழகிப் போய்விட்டது. ஆராய்ச்சியாளர்கள் பெரிதும் ஆங்கில நூல்களைப் பயில வேண்டியிருக்கிறது. ஆங்கிலப் பகுதிகளை மேற் கோள் காட்ட வேண்டியிருக்கிறது. ஆங்கிலத்தில் சிந்தித்து, அதனை ஒட்டித் தமிழிலும் எழுத வேண்டியிருக்கிறது. இதனால் ஆங்கிலத் தமிழ்நடை இயல்பாகத் தம்மையும் அறியாமல் வந்துவிடுகிறது. இவற்றுள் சில புதுமையாகத் தமிழிலும் ஏற்கத்தகுந்தனவாக உள்ளன; சில அவ்வாறு இன்றி 'மதிக்கண் மறுப்போல்' காணப்படுகின்றன. "எல்லோரும் பங்கெடுத்துக் கொண்டு, முடிவெடுத்து, வருகை தந்து, ஆராய்ச்சியைச் செய்து கொண்டிருக்கும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்!" - இந்த வாக்கியத்தில் எத்தனை ஆங்கில மணம் என உங்களால் கண்டு பிடிக்க முடிகிறதா?

பங்கெடுத்துக்கொண்டு (To take part) - பங்குகொண்டு,
கலந்துகொண்டு எனில் போதுமே.

முடிவெடுத்து (to take decision) - முடிவு செய்து என்பர் முன்பு.

வருகை தந்து - வந்து எனத் தமிழில் எழுதி வந்தனர்.

ஆராயும்படி என்பதை ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கும்படி
(to do resarch) எனவும் கேட்டுக்கொள்கிறோம் என்பதைக்

கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் எனச் செயப்பாட்டு வினைப் படுத்தியும் எழுதத் தொடங்கியுள்ளோம்.

இவற்றுள் சில தமிழுக்குப் புதிய வடிவங்கள் தரும் வாக்கிய அமைப்புக்களாகிப் போய்விட்டன. எனினும் கூடுமானவரை தமிழ் மணம் பரப்பும் தமிழ்நடையே ஆராய்ச்சிக்கு அழகாகும்.

உரையாசிரியர்களிடம் நல்ல தமிழ் உரைநடைக்கான மூலங்களை நாம் கண்டு தெளியலாம். இன்றைய உரைநடை வளர்ச்சி புதுமை யானது. தமிழின் புதுமைப் பொலிவுக்கு ஏற்றம் தருவது. எனினும் பழைய உரைநடையை - உரையாசிரியர்களின் உரைநடையை நடையியல் அமைப்பில் நன்கு பாகுபடுத்தி ஆராய்ந்து பார்க்கவேண்டும். வெறுமனே உரைநடை நன்றாயிருக்கிறது என்று கூறி ஓய்தல் கூடாது.

**சில பொது நடையியல்புகள்**

ஆங்கிலக் கல்வியின் பயனாகத் தமிழில் தொடர்களில் நாம் இன்று நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்துகின்றோம். நிறுத்தக் குறிகள் பெற்றதால் வாக்கிய அமைப்பில் ஏற்பட்ட பல மாறுதல்கள் சிந்திக்கத் தக்கன.

தமிழ் நெறி விளக்க உரையில் கீழ்வரும் பகுதி காணப்படுகிறது.

"புறச் செய்கை உளதெனினும் மிகுதி வகையால் அகம் பற்றி நிகழ்தலின் இருதலையும் தீரா அன்பிற்றாகிய காமம் அகப்பொருள் என்பது அகநிகழ்ச்சி உளதெனினும் மிகுதி வகையால் புறச் செய்கை யால் நிகழ்தலின் குற்றப்பாடில்லா மறம் புறப்பொருள் என்பது அகமில்லா இன்பமும் புறமல்லாப் பொருள் செயல் வகையும் அறமும் அதன் பயனாகிய வீடும் இருவகை நிகழ்ச்சியும் நோக்கிக் கோடலின் அகப்புறப் பொருளெனப்பட்டன என்பது"

மேலே கண்ட பத்தியில் மூன்று வாக்கியங்கள் உள்ளன. அம் மூன்றும் 'என்பது' என்று முடிகின்றன. அவற்றை எடுத்து விட்டுப் படித்துப் பாருங்கள். வாக்கியம் சிதையாது. அவை ஏன் சேர்த்து எழுதப்பட்டன? மு. அருணாசலம் "மூன்றும் என்பது என்ற சொற் கொண்டு முடிகின்றன; என்பது முற்றுப்புள்ளிக்கு நேராகும். ஒன்பதாம்

நூற்றாண்டில் எழுதினோர் இவ்வாறு எழுதுவது ஒரு மரபாயிருந்தது என்று கருதலாம்," என்று கூறும் கருத்து மிகவும் ஏற்புடையது.[1]

'அலிமேற் செல்லாது என்க'

'செப்பினையும் வினாவினையும் வழுவாமல் போற்றுக என்றவாறு'

'இருமொழியல்லது புணர்ச்சியின்று என்றார் ஆயிற்று'

இங்ஙனம் வருவன வாக்கிய முடிபிற்குப் பயன்படுவனவெனினும் முற்றுப்புள்ளிக்கும் உதவின என்பதை, அவற்றை நீக்கி வாசித்தாலும் பொருள் முடிவது கொண்டு உணரலாம்.

காற்புள்ளி இல்லாத அக் காலத்து எண்ணேகாரங்களும் எண்ணும் மைகளும் அதற்கீடாகப் பயன்பட்டன.

கொலையே களவே வெகுளியே செருக்கே மானமே என்று இத் தொடக்கத்துக் குற்றம் நிகழும் என்பது.

'இனிக் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறுமேதாவியாரும் சேந்தம்பூதனாரும் அறிவுடையரனாரும் பெருங்குன்றூர் கிழாரும் இளந்திருமாறனும் மதுரை ஆசிரியர் நல்லந்துவனாரும் மதுரை மருதனிளநாகனாரும் கணக்காயனார் மகனார் நக்கீரனாரும் என இத் தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மர் என்ப.' இவ் வாக்கியத்தில் 'உம்மை' காற்புள்ளிக்கு ஈடாக நின்று நிறைவு செய்கிறது. என்ப என்பது கூட முற்றுப்புள்ளிக்கு ஈடாக உதவுதல் உணரலாம்.

"இச் சூத்திரம் என்னுதலிற்றோ எனின் முறையானே ஐந்தாம் வேற்றுமை உணர்த்துதல் நுதலிற்று." இன்று நிறுத்தக்குறிப் பழக்கம் வந்த பிறகு இவ் வாக்கியம் புதுமையுடையதாகி விட்டது. இச் சூத்திரம் ஐந்தாம் வேற்றுமை உணர்த்துகிறது என்றுதான் இன்றெழுதுவோம். 'என்னுதலிற்றோ எனின்' எனப் பாடம் சொல்லும் முறையில் தொடங்கி னாலும் ஐந்தாம் வேற்றுமை உணர்த்துகிறது என முடிக்க நினைப்போம். வினாக்குறி, விடை வாக்கிய முடிவு உணர்த்தும் குறி ஆகியன இல்லா அக்காலத்து இவை ஏட்டில் எழுதப்படும்போது, அவற்றின் அமைப்பே அக்குறிகட்கு ஈடாகவும் அமைதலை நுனித்தறியலாம்.

---

1. தமிழ் இலக்கிய வரலாறு, ஒன்பதாம் நூற்றாண்டு, முதல் பாகம், திருச்சிற்றம்பலம், 1975. ப. 346.

**பேச்சு நடை வழக்காறு**

இவை விவாத நடை, வினா-விடை நடை எல்லாம் உடையனவே. எனினும் இவை அனைத்தின் அடிப்படையில் உலகத்தில் மக்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வது போன்ற நடைப் போக்கையும் உணரலாம். இறையனாரகப்பொருள் உரை போன்றவற்றையும் பேராசிரியர் உரை போன்றவற்றையும் உற்று நோக்கும்போது முடிவற்ற பல தொடர்கள் இணைந்த நீண்ட தொடர்களாக வாக்கியங்கள் மேன் மேலும் நீண்டு கொண்டு போவதை உணரலாம். இவற்றை அடுத்துத் தரப்படும் மேற்கோள்கள் உணர்த்தும்.

நீண்டு கொண்டே செல்லும் தொடர்களில் செய்யுளின்பத்தைக் காண்கிறோம். செய்யுளின் தாக்குரவினாலேயே அவை அங்ஙனம் அமைகின்றன. இளம்பூரணர், பரிமேலழகர் போல்வார் செறிவான சிறிய தொடர்களை எழுதியுள்ளனர். இதிலிருந்து உரைநடையின் இரு வகை வளர்ச்சி நிலைகளை மதிப்பிடலாம். முன்னைய நிலை வாய் மொழித் தன்மை மிக்கது; செய்யுளின் தாக்குரவுடையது; நீண்டு கொண்டே செல்லும் தொடர்களாலாகியது. பின்னைய நிலை எழுதிப் பழகியபின் செறிவுடையதாகியது; உரைநடைத் தன்மை மிக்கது; சிறு சிறு செறிவுடைய தொடர்களாய்க் காணப்படுவது.

உரையாசிரியர்கள் பொதுவாகச் செந்தமிழ்ச் சொற்களையே எடுத்தாள்கின்றனர். பிறமொழிச் சொற்களை எவ்வாறு தமிழ்ப்படுத்தி ஆளவேண்டும் என்பதை அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளலாம். பிரமசரியம், பிரசாபத்தியம், இராக்கதம் என இவ்வாறு ஆள்வர்; பிற சொற்களுக்குத் தமிழ் மொழிபெயர்ப்புக்களையும் தருவர்.

**இறையனார் அகப்பொருள் உரை**

காலத்தால் முற்பட்ட உரைநடைக்கு இவ்வுரை சிறந்த காட்டாகும். காப்பியத்தில் இடம் நோக்கிப் பொருள் அல்லது உணர்வு மாற்றத்திற்கு ஏற்பப் பாட்டுச் சந்தத்தை மாற்றிக் கொள்வர். உரைநடையிலும் இங்ஙனம் நடையை வேறுபடுத்திப் பொருளை உணர்த்துவதை இவ்வுரையில் காண்கின்றோம்.

**பாடம் பகர் நடை**

ஒரு மாணவனுக்கு ஐயத்தை அகற்றிப் பாடம் சொல்லுவது போல நடை அமையும் இடம் உண்டு. அது வருமாறு:

"அஃதேயெனின் ஐந்திணை என்பதன் முன்னர்க் களவு என்னுஞ்சொல் எத்திறத்தான் வந்தது? ஒரு சொன்முன் ஒரு சொல் வருங்கால் பயனிலை வகையானும் தொகைநிலை வகையானும் எண்ணுநிலை வகையானும் என மூன்றினுள் ஒன்று பற்றியன்றே வருவது; அவற்றுள் இஃது எவ்வகையான் வந்ததோ எனின் தொகை நிலை வகையான் வந்தது என்பது. தொகைதாம் பல; அவற்றுள் இஃது எத்தொகையான் வந்ததோ எனின் வேற்றுமைத் தொகையான் வந்தது என்பது.

அவ்வேற்றுமைத் தொகைதான் பல. அவற்றுள் இஃது எவ் வேற்றுமைத் தொகையோ எனின் ஏழாம் வேற்றுமைத்தொகை என்பது.

அவ்வேழாம் வேற்றுமை உருபுதாம் பல; அவற்றுள் யாது தொக்கது எனின் உள் என்பது தொக்கது." (சூ. 1)

மேலும் பல்வேறு கருத்துக்களைச் சொல்லிப் பாடம் பகரும் முறையையும் அதே பகுதியில் காணலாம்.

"அஃதேயெனின் 'அன்பின் ஐந்திணைக் களவு அந்தணர் அருமறை' என அமையாதோ? 'எனப்படுவது' என்றது எற்றிற்கோ எனின் செய்யுளின்பத்தின் பொருட்டு வந்தது என்னும் ஒருவன், அற்றன்று, அதனான் ஒரு பொருள் உரைப்பல் என்னும் ஒருவன். அதனான் ஒருபொருள் உரைப்பான் பக்கம் வலியுடைத்து, அஃதியாதோ எனின் களவு என்றற்குச் சிறப்புடைத்து என்றவாறு. 'ஊர் எனப்படுவது உறையூர்' என்றவிடத்து பிறவும் ஊருண்மை சொல்லி, அவற்று ளெல்லாம் உறையூர் சிறப்புடைமை சொல்லும். இங்குப் பிறவும் களவுண்மை சொல்லி, அக் களவுகட்கெல்லாம் இக்களவு சிறப்புடைத்து சுவர்க்கம் வீடுபேறுகளை முடிக்குமாகலான், 'எனப்படுவது' எனச் சொல்லிச் சிறப்பிக்கப்பட்டது."

முன்னிற்பாரிடம் பேசுவதுபோலவும் மாணாக்கர்க்கு அறிவுறுத்துவது போலவும் இவை அமைந்துள. சொற்களும் உவமையும் தெளிவு படுத்தும் நடையும் இப்பத்தியின் சிறப்புக்களாகும்.

**கதை கூறுதல் அல்லது அந்தாதி அமைப்பு நடை**

பாட்டி குழந்தைக்குக் கதை கூறும்போதும் கிராமத்தார் ஒருவருக் கொருவர் கதைசொல்லி மகிழும்போதும் அதில் ஒருவித நடைப் போக்கைக் காணலாம். "அந்த இடத்துக்கு நரி வந்திரிச்சா. வந்ததும் அங்கே நின்ன ஆட்டைப் பாத்துச்சு, பார்த்ததும் அதுக்கு அடிமனத்திலே ஒரு

ஆசை பிறந்திச்சு. பிறந்ததினாலே வாயிலே எச்சிஊற அது ஆட்டைப் பார்த்துச்சு பார்த்து....'' இப்படியே கதை போகும். சூத்திரத்திற்குப் பொருள் எழுதும்போது பாடம் பகர் நடையைப் பின்பற்றும் அவர் பழங்கதை ஒன்றைக் கூறும்போது அதற்கேற்ற நடையில் கூறுகிறார்.

''அக் காலத்துப் பாண்டியனாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றது. செல்லவே பசி கடுகுதலும் அரசன் சிட்டரையெல்லாம் கூவி, வம்மின் யான் உங்களைப் புரந்தரகில்லேன். என் தேயம் பெரிதும் வருந்துகின்றது, நீயிர் நுமக்கு அறிந்தவாறு புக்கு நாடு நாடாயினஞான்று என்னை உள்ளி வம்மின் என்றான் என அரசனை விடுத்து எல்லாரும் போயின பின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்த பின்னர் நாடு மலிய மழை பெய்தது. பெய்த பின்னர் அரசன் 'இனி நாடு நாடாயிற்றாகலின் நூல்வல்லாரைக் கொணர்க' என்று எல்லாப்பக்கமும் ஆட்போக்க எழுத்ததிகாரமும் சொல்லதி காரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து 'பொருளதிகாரம் வல்லாரை எங்கும் தலைப்பட்டிலேம்' என்று வந்தார். வர அரசனும் புடைபடக்கவன்று என்னை எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே. பொருளதிகாரம் பெறேமேயெனின் இவை பெற்றும் பெற்றிலேம் எனச் சொல்லாநிற்ப மதுரை ஆலவாயில் அழல்நிறக் கடவுள் சிந்திப்பான் 'என்னை பாவம் அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று; அது தானும் ஞானத்திடையதாகலான் யாம் தீர்க்கற்பாலம்' என்று இவ்வறுபது சூத்திரத்தையும் செய்து மூன்று செப்பிதழகத்து எழுதிப் பீடத்தின் கீழ் இட்டான்.''

பெரும்பாலும் இந்நூற்கண் அகப்பொருட் காதலர்களின் செயல்கள் கதை போலக் கூறப்படுதலின், அங்கெல்லாம் இவ்வுரை யாசிரியர் அந்நடையையே கையாள்கின்றார். ''அச்சொற் கேட்டலும் இறந்துபட்டான் எனக் கருதிக் கவன்று நோக்கினாள். நோக்கி, உண்மை கண்டாள். கண்டாட்குக் கெடுத்துத் தேடும் நன்கலம் எடுத்துக் கொண்டாற், போன்று பெரியதோர் உவகை ஆயிற்று; ஆக அவ்வுவகை ஒரு மூரல், முறுவல் தோற்றிற்று. தோற்ற-'' இங்ஙனம் காதல் நிகழ்ச்சிகள் கூறப் படுகின்றன.

**வருணனை நடை**

காப்பியங்களில் வருணனை வருவதுபோல இக் காதல் நாடகத் திலும் இயற்கை வருணனை போன்றவற்றிற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. அங்கு இவர் நடையை மாற்றிக் கொள்ளும் அழகு கருதத்தக்கது.

தலைவி தனியே நின்றாள். எவ்வாறு?

"யாங்ஙனம் நிற்குமோ எனின் சந்தனமும் சண்பகமும் தேமாவும் தீம்பலவும் ஆசினியும் அசோகும் கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து, நாகமும் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங்கமழ்ந்து பாதிரியும் பாவை ஞாழலும் பைங் கொன்றையும் பிணியவிழ்ந்து, பொரிப்புன்கும் புன்னாகமும் முருக்கொடு முகை சிறந்து, வண்டறைந்து தேனார்ந்து வரிக்குயில்கள் இசைபாட, தண்தென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவு செய்யும் பொழிலது நடுவண் ஒரு மாணிக்கச் செய்குன்றின்மேல், விசும்பு துடைத்துப் பசும் பொன் பூத்து வண்டு துவைப்பத் தண்தேன் துளிப்பதொரு வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள்; கண்டு பெரியதொரு காதல் களி கூர்ந்து தன் செம்மலர்ச் சீறடிமேல் சிலம்பு கிடந்து சிலம்பு புடைப்ப, அம்மலர் அணிக்கொம்பர் நடை கற்பதென நடந்து சென்று நறைவிரி வேங்கை நாண்மலர் கொய்தாள்; கொய்தவிடத்து மரகதமணி விளிம்பு அடித்த மாணிக்கச் சுனை மருங்கினதொரு மாதவிவல்லி மண்டபத்துப் போது வேய்ந்த பூநாறு கொழுநிழற்கீழ்க் கடிக் குருக்கத்திக் கொடி பிடித்துத் தகடுபடு பசும்பொன் சிகரங்களின் முகடுதொடுத்து வந்து இழிதரும் அருவி, பொன்கொழித்து, மணிவரன்றி மாணிக்கத்தொடு வயிரம் உந்தி, அணிகிளர் அருவி ஆடகப் பாறைமேல் அதிர்குரல் முரசின் கண்ணிரட்ட, வண்டும் தேனும் யாழ் முரல, வரிக்குயில்கள் இசைபாடத் தண்தாது தவிசுபடப் போர்த்ததொரு பளிக்குப் பாறை மணித்தலத்துமிசை நீல ஆலவட்டம் விரித்தாற்போலத் தன் கோலக் கலாவம் கொளவிரித்து, முளை இளஞாயிறு இளவெயில் எறிப்ப, ஓர் இளமயில் ஆடுவது நோக்கி நின்றாள்." (சூ. 2)

மேற்கண்ட பகுதியில் இயற்கை வருணனை செம்மாந்த நடையில் கூறப்பட்டுள்ளது. காப்பியம் என்பதற்கொத்த கதை கூறும் போக்கும் கலந்துளது. இதனை இக்காலத்துப் புதுக்கவிதை எழுதுவார் போல இடம் விட்டுப் பதிப்பித்துப் படித்துப் பார்த்தால், அதன் எழில் நடை புலப்படும்.

*சந்தனமும் சண்பகமும் தேமாவும் தீம்பலவும்*
*ஆசினியும் அசோகும் கோங்கும் வேங்கையும்*
*குரவமும் விரிந்து*
*நாகமும் திலகமும் நறவும் நந்தியும்*
*மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங்கமழ்ந்து*

*பாதிரியும் பாவைஞாழலும் பைங்கொன்றையும் பிணியவிழ்ந்து*
*பொரிப்புன்கும் புன்னாகமும் முருக்கொடு முகைசிறந்து*
*வண்டறைந்து*
*தேனார்ந்து*
*வரிக்குயில்கள் இசைபாடத்*
*தண்தென்றல் இடைவிராய்த்*
*தனியவரை முனிவு செய்யும் பொழிலது நடுவண்.....*

இவ்வாறு எழுதிப் பார்த்தால் இதன் நடையழகும் தொடையழகும் நன்கு புலனாகும். பாட்டிடை வைத்த குறிப்பாக உரைநடை இருந்த போது இவ்வாறுதான் காணப்பட்டது. இதனை ஒத்த பகுதிகள் இவ்வுரைக் கண் பலவிடத்தும் காணப்படும்.

இங்ஙனம் இவ்விறையனார் அகப்பொருள் உரையில் காணப் படும் நடையியல்புகள் பலவாகும். இவற்றுட் காணப்படும் வாக்கிய அமைப்புக்களும் சிந்திக்கத்தக்கவை. சிறுசிறு தொடர்களான் ஆனவையும் உள; ஆனால் வாக்கிய அமைப்பு, வினைமுடிபு நீண்ட தன்மையுடையவாய் இருக்கும்.

*அவை நான்காகும் பால் தெளிதேன் பாகு பருப்பு என.*

*அவன் அங்குவந்துநிற்பன், ஆற்றாமை மீக்கூர்ந்த விடத்து.*

இவ்வாறு வாக்கிய அமைப்புக்கள் எச்ச நடையினவாய்க் காணப் படுகின்றன. “காட்சி காரணம் அன்று ஆயிற்றாம், தம் உணர்வினர் அல்லர் ஆதற்கு” - இப்போது தம் உணர்வினர் அல்லர் ஆதற்குக் காட்சி காரணம் அன்று என்றே எழுதுவோம். இங்ஙனம் பல்வேறு வாக்கிய அமைப்புகளை இந்நூலிற் காண்கிறோம். அவை எல்லாம் தமிழுக்கு வளமூட்டக் கூடியனவேயாம்.

**இளம்பூரணர்**

இளம்பூரணரும் காலத்தால் முற்பட்டவரே. ஆயின் அவர்தம் உரைநடை மிக்க எளிமையுடையதாய்ப் பெரும்பாலும் சிறுசிறு விளக்கத் தொடர்களால் ஆனதாய்க் காணப்படுகிறது.

பாடம் உணர்த்தும் நடை இவருடையது.

உரையாசிரியர்களுள் இவர் திரு.வி.க. போன்றவர். எளிமை, இனிமை, செறிவு, பாடம் உணர்த்தல் இவர் நடைப்பண்புகள்.

பொழுதுகள் திணைகட்குப் பொருந்துமாறு யாது என்பதை உணர்த்து மிடத்து இவர்தம் நடைப்போக்கைக் காண்க:

"அஃதற்றாக இவ்வறுவகைப் பருவமும் அறுவகைப் பொழுதும் இவ்வைந்திணைக்கு உரியவாறு என்னையெனின், சிறப்பு நோக்கி என்க. என்னை சிறந்தவாறு எனின், முல்லையாகிய நிலனும் வேனிற் காலத்து வெப்பம் உழந்து மரனும் புதலும் கொடியும் கவினழிந்து கிடந்தன. புயல்கள் முழங்கக் கவின்பெறுமாகலின் அதற்கு அது சிறந்ததாம். மாலைப்பொழுது இந்நிலத்திற்கு இன்றியமையாத முல்லை மலருங் காலம் ஆதலானும் அந்நிலத்துக் கருப்பொருளாகிய ஆனிரை வருங் காலமாதலானும் ஆண்டு தனியிருப்பார்க்கு இவை கண்டுழி வருத்தம் மிகுதலின் அதுவும் சிறந்தது ஆயிற்று.

இங்ஙனம் கூறுவதில் உள்ள ஆராய்ச்சிப்போக்குப் பொருள் பற்றியது. ஆனால், அதை உணர்த்தும் நடையழகே சிந்திக்கத்தக்கது. முன்னைய இறையனார் அகப்பொருள் உரையினும் இது வேறுபடுவது அறியத்தக்கது (தொல். பொருள். 12).

**பரிமேலழகர்**

செவ்விய உரைநடை பரிமேலழகருடையது. இளம்பூரணரிடம் எளிமை தலைதூக்கி நின்றால், இவரிடம் செவ்விய தன்மை மேலோங்கி நிற்கிறது. திருக்குறளில் ஒரு சொல்லை எடுத்துவிட்டுப் பிறிதொரு சொல்லைப் பெய்தெழுத முடியாது என்பர். பரிமேலழகர் மொழி நடைக்கும் அது பொருந்தும்.

வாய்மையதிலக்கணம் திருவள்ளுவரால் பேசப்படுவதைப் பரிமேலழகர் விளக்கவுரைப் பகுதியில் எடுத்து மொழிகின்றார். "எனப் படுவது என்பது 'ஊரெனப்படுவது உறையூர்' என்றாற் போல நின்றது. இதனான் நிகழ்ந்தது கூறல் என்பது நீக்கப்பட்டது. அது தானும் தீங்கு பயவாதாயின் மெய்ம்மையாம், பயப்பிற் பொய்ம்மையாம் என்பது கருத்து."

"குற்றந்தீர்ந்த நன்மை அறம்; அதனைப் பயத்தலாவது கேடாதல் சாக்காடாதல் எய்த நின்றதோருயிர் அச்சொற்களின் பொய்ம்மையானே அதனினீங்கி இன்புறுதல், நிகழாதது கூறலும் நன்மை பயவாதாயின் பொய்ம்மையாம் பயப்பின் மெய்ம்மையாம் என்பது கருத்து. இவை இரண்டு பாட்டானும் தீங்கு பயவாத நிகழ்ந்தது கூறலும் நன்மை

பயக்கும் நிகழாதது கூறலும் மெய்ம்மை யெனவும் நன்மை பயவாத நிகழாதது கூறலும் தீங்கு பயக்கும் நிகழ்ந்தது கூறலும் பொய்ம்மை எனவும் அவற்றதிலக்கணம் கூறப்பட்டது?

*வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்*
*தீமை இலாத சொலல்*
*பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த*
*நன்மை பயக்கும் எனின்.*

*(குறள் 291, 292)*

இக் குறள்களைப் படித்தபிற்பாடு, மீண்டும் மேலே காட்டிய விளக்கத்தைப் படித்தால் சட்ட வாசகம்போல் வாய்மைக்குப் பரிமேலழகர் தரும் இலக்கணம் புலப்படும். இக்காலத்தும் பொய்மை, மெய்மை என்றே எழுதுவார் இவற்றைப் படித்துச் சொல்லாட்சியிலும் திருந்துதல் வேண்டும்.

*கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேற்*
*செல்லாது உயிருண்ணும் கூற்று.*

*(குறள் 326)*

கொல்லாமை மேற்கொள்பவனைக் கூற்று நாடாது என்ற இக் குறளுக்கு விளக்கவுரை எழுதும்போது அஃது எவ்வாறு என்பதைக் கதை போலப் பரிமேலழகர் எடுத்துக் கூறுகிறார்.

"மிகப்பெரிய அறம் செய்தாரும் மிகப்பெரிய பாவம் செய்தாரும் முறையானன்றி இம்மை தன்னுள்ளே அவற்றின் பயன் அனுபவிப்ப ரென்னும் அறநூற்றுணிபுபற்றி, இப்பேரறஞ் செய்தான்தானும் கொல்லப் படான்; படானாகவே அடியிற்கட்டிய வாழ்நாள் இடையூறின்றி எய்து மென்பார் வாழ்நாள்மேற் கூற்றுச் சொல்லாதென்றார்; செல்லாதாகவே காலம் நீட்டிக்கும்; நீட்டித்தால் ஞானம் பிறந்து உயிர் வீடு பெறும் என்பது கருத்து."

இதில் இறையனாரகப்பொருளுரையில் வருவதுபோன்ற கதை கூறும் நடை அமையக் காணலாம். முற்கால உரையாசிரியர்களிடம் சொந்தத்திறன் நோக்கிய உரைநடையைவிடப் பொருள் நோக்கிய - உணர்வு நோக்கிய நடைக்குச் செல்வாக்கு இருந்தமை இவற்றால் அறியப்படும்.

*பொய்யாமை நன்றென்றார் முற்கூறியதில் பிற்கூறியது வலியுடைத்தாகலின்*

*(323)*

"தன்னை அது கொல்லினும் தான் அதனைக் கொல்லற்க வென்றது' பாவம் கொலையுண்ட வழித் தேய்தலும் கொன்றவழி வளர்தலும் நோக்கி."

இங்ஙனம் எச்சத்தில் முடியும், நிறைவுடைய வாக்கியங்கள் ஒன்றை வற்புறுத்திக் கூறுமிடத்துப் பயன்படுகின்றன.

"ஈவாரும் ஏற்பாருமின்றி எல்லாரும் ஒரு தன்மையராதலின் புத்தேள் உலகத் தரிதாயிற்று; யாவர்க்கும் ஒப்பது இதுபோல் பிறிதொன்றின்மையின் இவ்வுலகத்து அரிதாயிற்று."

(ஒப்புரவு. 213)

"புகழுடம்பான் இவ்வுலகும் புத்தேளுடம்பான் அவ்வுலகும் ஒருங்கே எய்தாமையின் புலவரைப் போற்றாது என்றார்."

(புகழ். 234)

இத்தகைய இடம் நோக்கிய அடுக்கு நடைகள், அறிஞர் அண்ணா இக்காலத்துப் பயன்படுத்திய நடையை நினைப்பூட்டுவன.

இங்ஙனம் கொள்க, அஃது உரையன்மை அறிக, மேல் உரைத் தாங்கு உரைக்க, என்பதாம் - என இவ்வாறு பாடம்பகர் முறையில், மாணாக்கரை முன்னிருத்திக் கூறுவார் கூறுதல் போன்ற நடைப்போக்கு களையும் இவரிடம் காணலாம். பிழையற்ற பல்வேறு வாக்கிய அமைப்புகள், சிதையாத சொல்லாட்சிகள், சந்திப் புணர்ச்சிகள் போன்ற வற்றை நன்கு தெரிந்து பயன்படுத்த விரும்புவார் பரிமேலழகரைப் பலகாற் பயில வேண்டும்.

**பேராசிரியர்**

பேராசிரியர் தாம் வாழ்ந்த காலத்தில் உண்மையிலேயே 'பேராசிரியராக' இருந்திருக்க வேண்டும். உரையாசிரியர், ஆசிரியர் என்று அழைத்தவர்கள்தானே பேராசிரியர் என்றும் அழைத்திருக்க வேண்டும்? இலக்கியப் பாடம் நடத்தும் ஆசிரியராகவும் இலக்கணப் பாடம் விளக்கும் ஆசிரியராகவும் அவர் திகழ்ந்திருக்க வேண்டும். எதையும் மிக விரிவாக, விளக்கமாக, நுட்பமாக அவர் விளக்குகின்றார்.

அதனால் அவரிடம் பயின்றவர்கள் இவர் சாதாரண ஆசிரியர் அல்லர்; பேராசிரியர் என்று பாராட்டியிருக்க வேண்டும்.

பேராசிரியரின் நடை விளக்க நடையும் விவாத நடையுமாம்.

முப்பத்திரண்டு என மெய்ப்பாட்டு விரி கூறுதல் எங்ஙனம் எனப் பேராசிரியர் நுட்பமாக, விரிவாக விளக்குகின்றார்.

சுவை எங்கே தோன்றும்? புலிகண்டவழி, கண்டானிடம் தோன்றுவதா? புலிகண்டானை மற்றொருவன் கண்டக்கால் தோன்றுவதா? சிலர் புலிகண்டு அஞ்சி ஓடி வருபவனைப் பார்ப்பவர்கட்கும் அச்சம் தோன்றும் என்றனர். பேராசிரியர் அதை மிகவிரிவாக, விவாதித்து மறுக்கின்றார்:

"வேம்பென்னும் பொருளும் நாவென் பொறியும் தலைப்பெய்த வழியல்லது கைப்புச்சுவை பிறவாததுபோல, அப்பொருள் கண்ட வழியல்லது நகையும் அச்சமும் தோன்றா. ஒழிந்த காமம் முதலியனவும் அன்ன, இக்கருத்தே பற்றிப் பிற்காலத்து நாடக நூல் செய்த ஆசிரியரும் 'இருவகை நிலத்தின் இயல்வது சுவையே' (செயிற்றியம்) என்றார் என்பது.

"இனி இருவகை நிலன் என்பன உய்ப்போன் செய்தது காண் போர்க்கு எய்துதலன்றோவெனின், சுவையென்பது ஒப்பினானாய பெயராகலான் வேம்பு சுவைத்தவன் அறிந்த கைப்பறிவினை நாவுணர் வினால் பிறன் உணரான், இவன் கைப்புச் சுவைத்தான் எனக் கண்ணுணர்வினான் அறிவதன்றி; அதுபோல அச்சத்துக்கு ஏதுவாகிய ஒரு பொருள் கண்டு அஞ்சி ஓடி வருகின்றான் ஒருவனை மற்றொருவன் கண்டவழி இவன் 'வள்ளெயிற்றரிமா' முதலாயின கண்டு அஞ்சினான் என்றறிவதல்லது, வள்ளெயிற்றரிமாவினைத் தான் காண்டல் வேண்டுவ தின்று. தான் கண்டானாயின் அதுவும் சுவையெனவே படும். ஆகவே அஞ்சினனைக் கண்டு நகுதலும் கருணை செய்தலும் கண்டோர்க்குப் பிறப்பதன்றி, அச்சம் பிறவாதாகலான் உய்ப்போன் செய்தது காண்போன் உய்த்த அறிவின் பெற்றியால் செல்லாதாகலின, இருவகை நிலமெனப் படுவன சுவைப் பொருளும் சுவைத்தோனும் என இருநிலத்தும் நிகழு மென்பதே பொருளாதல் வேண்டுமென்பது."

இங்ஙனம் மிக விரிவாக விளக்கும் நடைப்போக்கு, உரை யாசிரியர் போக்கிற்கு மறுதலையானது. ஒன்றை விளக்குமிடத்து, அதனை முற்றுப்பெற விளக்கவேண்டுமென இவர் கருதுவதால், இவர் நடையில் மிக நீண்ட வாக்கியங்களும் காரணகாரிய இயைபும் விவாதமும் அமையக் காணலாம்.

**சேனாவரையர்**

சேனாவரையரிடத்தும் விவாதநடையைக் காணலாம். 'காலம் உலகம்.....' என்று தொடங்கும் (தொல். சொல். 57) சூத்திரத்திற்கு அவர் எழுதும் விளக்கவுரையில், அவருடைய நடைப்போக்கை உய்த்து உணரலாம்:

"உயிரே உடம்பே எனப் பொதுவகையாற் கூறினாரேனும் மக்களுயிரும் உடம்புமே கொள்ளப்படும். என்னை? உயர்திணை முடிபு கொள்ளா என விலக்கப்படுவன அவையேயாகலின் என்பது. 'அஃறிணை என்மனார் அவரல பிறவே' என்புழி அஃறிணையாய் அடங்கி உயர்திணை முடிபெய்தாமையின் அவையும் விலக்கற்பாட்டிற் கேலாவெனின், அற்றன்று; மக்கட் சுட்டுடைமையான் அவை உயர்திணையேயாம் என்பது. யாதோ மக்கட்சுட்டுடையவாறெனின் அறஞ்செய்து துறக்கம் புக்கான் எனவும் உயிர் நீத்தொருமகன் கிடந்தான் எனவும் உயிருமுடம்பும் அவரின் வேறன்றி அவராக உணரப்பட்டு உயர்திணைக்கேற்ற முடிபு கொண்டு நிற்றலின் மக்கட்சுட்டுடைய என்பது. ஓர் ஆவை எம் அன்னை வந்தாளென்றும் ஓர் எருத்தை எந்தை வந்தான் என்றும் உயர்திணை வாய்பாட்டாற் கூறியவாறு போல உயிரும் உடம்பும் அவ்வாறு கூறப் பட்டன என்று கொள்ளாமோ எனின்; கொள்ளாம்; அவற்றான் வரும் பயன்நோக்கிக் காதலால் எம் அன்னை எந்தை என்றான் ஆண்டு; ஈண்டுக் காதல் முதலாயின இன்மையின் மக்கட்சுட்டுடைய என்பது."

இங்ஙனமே தொடர்ந்து வினாக்கேட்டு, விடைகூறி எழுதிப் போதல் இவர் மரபு. மறுப்புரைகளும் சேனாவரையரிடமே மிகுதியாகக் காணப் படுகின்றன. சிற்சில இடங்களில் இவர் தருக்க முறைப்படியும் விவாதிக் கின்றார்.

ஒருவன் தமிழ் உரைநடையில் சிறந்த பயிற்சி பெறவேண்டுமேல் உரையாசிரியர்களின் உரைநடைகளையும் - உரைகளையும் படித்தே ஆகவேண்டும். வாக்கிய அமைப்பு, மொழிச்செப்பம் இவற்றைப் பெற அவை துணைசெய்யும், உரையாசிரியர்களின் சிறந்த உரைநடைப் பகுதிகளைத் தொகுத்து, கவிதைத் தொகுப்புப்போல, உரை (நடை)த் தொகுப்பொன்று வெளியிட்டால் உரைநடையில் பயிற்சி பெறுவோர்க்கு அது பேருதவியாக இருக்கும்.

• • •

## தமிழில் புலமைபெற ஒளிதரும் விளக்கு
## உரை விளக்கு

தமிழ் இலக்கிய வகைகளில், தொன்றுதொட்டுப் பாடம் சொல்லி வந்த 'உரை' வகை இலக்கியம் என ஒன்றுண்டு.

இறையனாரகப் பொருள் உரை தொடங்கி, இன்றைய புது உரைநடை வகை வரை இது மிகப் பரந்துபட்டது, கணக்கற்றது.

உரையாசிரியர்கள் பழைய மூலநூல்களை அறிய - விளங்கிக்கொள்ள வழிகாட்டியவர்கள். அவர்களாலேதான் மூல நூல்களும் நிலைபெற்றன.

உரையாசிரியர்கள் மிகச் சிறந்த திறனாய்வாளர்களாக விளங்குமிடம் பல.

இவர்கள் சொற்களுக்கு இடம் நோக்கி, நிழற்பொருள் உட்பட, விளக்கம் தரும் திறன் பெரும் பேரகராதியாகத் தொகுக்கக்கூடியது.

உரையாசிரியர்களின் தனித் திறனை இந்நூல் சுட்டிக் காட்டுவதால், இது 'உரை'களின் சிறப்பறிய உதவும் ஒரு நுழைவாயில் போன்றது. அனைவருக்கும் பயன்படுவதுடன், மாணவர் களுக்கும் பாடநூலாகும் தகுதியுடையது.